www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# மேல்நிலை முதலாம் ஆண்டு

# பொதுத் தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

XI Std Tamil Introduction Pages.indd 1 29-01-2025 18:16:10

## தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2018*

திருத்திய பதிப்பு - *2019, 2020, 2021, 2022, 2023, 2025*

மறுபதிப்பு - *2024*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல்)


விற்பனைக்கு அன்று


## பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்



© SCERT 2018



## நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in


**ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)**

**குழந்தைத் திருமணம், குழந்தைத்
தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு
உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த
துன்புறுத்தலுக்கு
உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத்
தெரியாமல் பாதுகாக்கப்படும்**

CHILD LINE 1098 NIGHT & DAY

**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த
துன்புறுத்தலுக்கு அல்லது
அச்சுறுத்தலுக்கு
உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு
வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத்
தெரியாமல் பாதுகாக்கப்படும்**

14417 கல்வித் தகவல் மையம்

## முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் மாணவர்களின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!





XI Std Tamil Introduction Pages.indd 4 3/7/2025 11:55:48 AM

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



XI Std Tamil Introduction Pages.indd 5 29-01-2025 18:16:11

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமைவாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



XI Std Tamil Introduction Pages.indd 6 29-01-2025 18:16:12

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

பாடப்பகுதி இன்னவை
எனக் காட்டுதல்

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்குவதற்கு
அரிய, புதிய செய்திகளை
அறிந்துகொள்ளத்
தெரிந்து தெளிவோம்
தெரியுமா? . . . .

படிப்பின்
அகலமும் ஆழமும் தொடர
அறிவை விரிவு செய் . . .

ஆளுமை மிக்க
**ஆசிரியர்களுக்கும்**
ஆற்றல் நிறை
**மாணவர்களுக்கும்...**

பாடப்பகுதிகளின் தொழில்
நுட்பக் கருத்தை விளக்கத்
திட்பமும் நுட்பமும். . . .

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழியோடு விளையாடு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .

மாணவர்தம்
அடைவை அளவிட
நம்மை அளப்போம் . . . .

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...



XI Std Tamil Introduction Pages.indd 7 29-01-2025 18:16:13

# பணிவாய்ப்புத் தமிழ்



## வேலைவாய்ப்பு

- தமிழக அரசுப்பணிகளில் தமிழ்வழிக் கற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. (Persons Studied in Tamil Medium Act -2010)
- இந்திய ஆட்சிப் பணி (IAS) முதன்மைத் தேர்வில் கட்டாய இந்திய மொழித்தாள் வரிசையில் தமிழ் மொழித்தாள் இடம்பெற்றுள்ளது. கட்டாய மொழித்தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே ஐஏஎஸ் தேர்வரின் பிற தாள்கள் மதிப்பிடப்படும்.
- தமிழ்ப்பட்டதாரிகளும் பிற பட்டதாரிகளும் இந்திய ஆட்சிப்பணிக்கான முதன்மைத் தேர்வில் அனைத்துத் தாள்களையும் (கட்டாய ஆங்கில மொழித்தாள் நீங்கலாக) தமிழிலேயே எழுதி வெற்றி பெற முடியும். ஆளுமைத் தேர்விலும் தமிழிலேயே பதிலளிக்கலாம்.
- துணை ஆட்சியர் பதவிக்கான தொகுதி -1 தேர்வில் 300 மதிப்பெண் கொண்ட இரண்டாம் தாளில் 90 மதிப்பெண் வினாக்கள் 'தமிழ் மொழி மற்றும் பண்பாடு' என்ற பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன.
- ஆசிரியர் பணிக்கான TET, CTET மற்றும் TRB தேர்வுகளில் தமிழுக்கும் தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் வாய்ப்புள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV (கிராம நிருவாக அலுவலர் - விஏஓ, இளநிலை உதவியாளர் போன்ற பணிகள்) தொகுதி II A மற்றும் II (தலைமைச் செயலக உதவிப்பிரிவு அலுவலர், சார் பதிவாளர், வருவாய் உதவியாளர் உள்ளிட்ட பல சார்நிலைப் பணிகள்) எழுத்துத் தேர்வுக்கான 300 மதிப்பெண்ணில் செம்பாதி (50%) மதிப்பெண்ணுக்கான கேள்விகள் (150 மதிப்பெண்) பொதுத்தமிழ்ப் பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன. இந்தப் பாடத்திற்கு 6 ஆம் வகுப்பு முதல் 10 -ஆம் வகுப்பு வரையிலான பாடப்புத்தகங்களே அடிப்படை.
- மொழிபெயர்ப்புத்துறையிலும் படைப்புத்துறையிலும் ஆர்வத்துடன் தமிழ் பயின்ற தகுதி மிக்கவர்களுக்குப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- மொழிநடை திருத்துநர் (Copy Editor), கலைச்சொல் வல்லுநர், திரைத்துறையில் துணைத்தலைப்புகள், வசனங்கள் (Sub Title) எழுதுபவர் போன்ற பணிவாய்ப்புகளைத் தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிப்புலமை பெற்றவர்கள் பெறமுடியும்.
- நல்ல உச்சரிப்புத் திறன் கொண்டவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகலாம்.
- புத்தக வடிவமைப்பும் தமிழ், ஆங்கிலத் தட்டச்சும் கற்றவர்களுக்குப் பதிப்புத்துறையில் அதிகப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- தமிழ்க் கணினியம் (Tamil Computing), கலைச்சொல் உருவாக்கம், இணையத்திலும் இணையக் கலைக்களஞ்சியங்களிலும் கட்டுரை எழுதுதல், பிழைதிருத்துதல், பிழைதிருத்த மென்பொருள் உருவாக்கம் போன்ற பணி வாய்ப்புகள் உள்ளன.
- அரசுத்துறை நிறுவனங்கள், நீதிமன்றங்கள், பாடநூல் கழகம் முதலியனவற்றில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் பிழைதிருத்துநர் போன்ற பணிவாய்ப்புகள் இருக்கின்றன.
- விளம்பரத்தொடர் எழுதுதல், வணிகப்பொருள் பயன்பாடு குறித்த விவரக்குறிப்பு மொழிபெயர்ப்பு போன்ற பணிவாய்ப்புகளும் தமிழ் கற்றவர்களுக்குக் கிடைக்கும்.
- தமிழர்கள் வாழும் பிஜி, மாலத்தீவு போன்ற வெளிநாடுகளில் தமிழாசிரியர்களுக்கான வேலைவாய்ப்பு உள்ளது.



## கற்றது தமிழ்! பெற்றது புகழ்!

- தமிழிலும் வடமொழியிலும் புலமைபெற்ற உ.வே.சாமிநாதருக்கும் பண்டிதமணி கதிரேசனாருக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே ‘பெரும் பேராசிரியர்’ (மகாமகோ உபாத்யாயா) பட்டம் வழங்கப்பட்டது.
- தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார், கவிஞர் வைரமுத்து ஆகியோர் இந்திய அரசு வழங்கும் பத்ம பூஷண் விருது பெற்ற தமிழ் ஆளுமைகள்.
- சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களுள் பலர் தமிழில் முதுகலை / முனைவர் பட்டம் பெற்றவர்கள்.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC) திரைத்துறையில் சத்யஜித்ரே, இசைத் துறையில் எம். எஸ். சுப்புலட்சுமி ஆகியோருக்கு வழங்கிய தேசியப் பேராசிரியர் (National Professor) என்னும் தகுதியைத் தமிழ்த்துறையில் முனைவர் தமிழண்ணலுக்கு வழங்கியது.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப்பேராசிரியர்களாகப் பணியாற்றவும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றவும் வாய்ப்புகள் உள்ளன.
- 1984இல் இ.ஆ.ப தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற முதல் தமிழ் இலக்கிய மாணவர் ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. இவர், ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச்செயலாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர்.
- பொறியியல் / வேளாண்மைப் பட்டதாரியாக இருந்து இ.ஆ.ப. தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற இ.ஆ.ப. அலுவலர்கள் பலர் தற்போது தமிழகத்தில் பணியில் இருக்கிறார்கள்.
- இ.ஆ.ப. தேர்வில் தமிழை விருப்பப் பாடமாக எடுத்து, பட்டதாரிகள் பலர் ஆண்டுதோறும் வெற்றிபெறுகின்றனர்.
- திரைத்துறையில் சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது பெற்ற தமிழ்த் திரைப்பட இயக்குநரும் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஏழு முறை பெற்ற ஒரே இந்தியத் திரைப்படப் பாடலாசிரியர் என்ற சிறப்பைப் பெற்ற தமிழ்க்கவிஞரும் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டதாரிகளே.
- தமிழ் மொழியில் சரளமான பேச்சுத்திறனும் நகைச்சுவை உணர்வும் கொண்டவர்கள் தொலைக்காட்சித் தொகுப்பாளர்களாகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துநர்களாகவும் புகழ் பெற முடியும். அதன் வழியே திரைத்துறையில் நுழைந்து வெற்றி பெற்றவர்கள் பலர் உளர்.



XI Std Tamil Introduction Pages.indd 9 29-01-2025 18:16:14

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத்தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1 | மொழி, கலை | யுகத்தின் பாடல்* | 2 | ஜூன் |
| | என்னுயிர் என்பேன் | பேச்சுமொழியும் கவிதை மொழியும் | 4 | |
| | | ஒவ்வொரு புல்லையும் | 8 | |
| | | இசைத்தமிழர் இருவர் | 9 | |
| | | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 13 | |
| 2 | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | இயற்கை வேளாண்மை | 22 | ஜூலை |
| | மாமழை போற்றுதும் | ஐங்குறுநூறு | 26 | |
| | | மனோன்மணீயம் | 28 | |
| | | யானை டாக்டர் | 31 | |
| | | புணர்ச்சி விதிகள் | 37 | |
| | | திருக்குறள்* | 48 | |
| 3 | பண்பாடு | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 58 | ஆகஸ்டு |
| | பீடு பெற நில் | காவடிச்சிந்து | 62 | |
| | | குறுந்தொகை* | 64 | |
| | | வாடிவாசல் | 66 | |
| | | பகுபத உறுப்புகள் | 70 | |
| 4. | கல்வி, அழகியல், மனிதம் | தமிழ்நாட்டுக் கல்வி வரலாறு | 80 | அக்டோபர் |
| | கேடில் விழுச்செல்வம் | பிள்ளைக்கூடம் | 85 | |
| | | தொலைந்து போனவர்கள்* | 86 | |
| | | ஒரே நண்பன் | 88 | |
| | | கலைச்சொல்லாக்கம் | 94 | |
| | | திருக்குறள்* | 104 | |




XI Std Tamil Introduction Pages.indd 10 29-01-2025 18:16:14

| இயல் | பொருண்மை | பாடத்தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 5. | நாகரிகம், தொழில், வணிகம், ஆளுமை | ஆனந்தரங்கர் நாள்குறிப்பு | 110 | |
| | | சீறாப்புராணம் | 114 | |
| | | பதிற்றுப்பத்து | 117 | நவம்பர் |
| | நாளெல்லாம் வினைசெய் | செவ்வி | 120 | |
| | | ஆக்கப்பெயர்கள் | 124 | |
| 6 | நாடு, அரசு, சமூகம், நிருவாகம் | காற்றில் கலந்த பேரோசை | 134 | |
| | | புரட்சிக்கவி* | 137 | |
| | | அதிசயமலர் | 140 | டிசம்பர் |
| | வையத் தலைமை கொள் | அயல்நாட்டவரின் அருந்தமிழ்ப் பணி | 141 | |
| | | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 145 | |
| | | திருக்குறள் | 155 | |


( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

மின் நூல்

மதிப்பீடு



XI Std Tamil Introduction Pages.indd 11 29-01-2025 18:16:14

# மேல்நிலை
# முதலாம் ஆண்டு

# பொதுத் தமிழ்

இயல் 1

# என்னுயிர் என்பேன்

*மொழி, கலை*





## கற்றல் நோக்கங்கள்

- பேச்சுமொழி, கவிதைமொழி ஆகியவற்றின் தனித்தன்மைகளைப் படைப்புகள் பற்றிய கருத்துகளின்வழி புரிந்துகொள்ளுதல்.
- எளிய மக்களின் உணர்வுகளைக் கலைநயத்துடன் வெளிப்படுத்தும் திறனைப் பெறுதல்.
- வாழும் காலத்து ஆளுமைகளின் திறமைகளை உணர்ந்து முன்னோடிகளாகக் கொள்ளுதல்.
- மொழி முதல், இறுதி எழுத்துகள் எவை என்பதை அறிந்து பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் முயலுதல்.

## பாடப்பகுதிகள்

- செய்யுள் – யுகத்தின் பாடல்
- உரைநடை – பேச்சுமொழியும் கவிதைமொழியும்
- செய்யுள் – ஒவ்வொரு புல்லையும்
- துணைப்பாடம் – இசைத்தமிழர் இருவர்
- இலக்கணம் – மொழி முதல், இறுதி எழுத்துகள்



XI_Std_Tamil_Unit_1.indd 1 29-01-2025 18:07:50

கவிதைப்பேழை

# இயல் 1

# யுகத்தின் பாடல்

– சு. வில்வரத்தினம்

**நுழையும்முன்**

மொழி, மனித இனத்தின் முதல் அடையாளம். அது, பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு உருவானது. ஓர் இனத்தின் மைய இயக்கமாக விளங்குவதும் மொழியே. தமிழ் நம் அடையாளம். நம் தாய்மொழியாம் தமிழ்மொழி சங்ககாலம் தொடங்கி இன்றையகாலம் வரையும் உயர்தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கிறது.

1. *என் அம்மை,*

*ஒற்றியெடுத்த*

*நெற்றிமண் அழகே*

*வழிவழி நினதடி தொழுதவர்,*

*உழுதவர், விதைத்தவர்,*

*வியர்த்தவர்க்கெல்லாம்*

*நிறைமணி தந்தவளே,*

*உனக்குப் பல்லாண்டு பல்லாண்டு;*

*பல்லாயிரத்தாண்டு.*

2. *பாடத்தான் வேண்டும்!*

*காற்றிலேறி, கனைகடலை, நெருப்பாற்றை,*

*மலை முகடுகளைக் கடந்து*

*செல் எனச் செல்லுமோர் பாடலை.*

*கபாட புரங்களைக் காவு கொண்டபின்னும்*

*காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்*

*உரமெலாம் சேரப் பாடத்தான் வேண்டும்.*



**ஏடு தொடக்கிவைத்து என்னம்மை*

*மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த*

*விரல் முனையைத் தீயிலே தோய்த்து*

*திசைகளின்சுவரெலாம் எழுதத்தான்வேண்டும்*

*எழுகின்ற யுகத்தினோர் பாடலை.**

– *சு. வில்வரத்தினம்*



XI_Std_Tamil_Unit_1.indd 2 29-01-2025 18:07:52

### தெரியுமா?

**புதுக்கவிதை – விளக்கம்**

மரபு சார்ந்த செய்யுள்களின் யாப்புக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாத கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். புதுக்கவிதை படிப்போரின் ஆழ்மனத்தில் ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது. இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. புதுக்கவிதை வடிவம் எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது எனலாம்.

### நூல்வெளி

கவிஞர் சு. வில்வரத்தினம், யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக, 2001இல் 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டன. இவர் கவிதை இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். வில்வரத்தினத்தின் இரண்டு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடப்பகுதியில் இடம்பெறுகின்றன.

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை.

– இரசூல் கம்சதோவ்

**படித்துச் சுவைக்க ஒரு புதுக்கவிதை**

**உயிர்ப்பு**

*என் புன்னகையைக் கூட*
*மொழிபெயர்க்க முடியாத*
*அந்நிய தேசத்தில்*
*எனக்கு நானே அகதியானேன்.*
*உணர்வுகளைச் சொல்ல முடியாமலும்*
*உதற முடியாமலும்*
*குரலற்றுக் கிடந்தேன்*

*என் காயத்தை வருடிச் சென்றது*
*மின்னலெனக் கடந்த*
*தாய்மொழியின் அமுதிசை*
*துள்ளி உயிர்த்தெழுந்தேன்*
*பரவச வெளியில்*
*நானுமோர் பறவையானேன்.*

### கற்பவை கற்றபின்...

1. தாய்மொழியே முதன்மையானது – இக்கூற்றுக் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.
2. 'காலத்தை வென்ற மொழி' என்னும் தலைப்பில் கவிதை படைக்க.



XI_Std_Tamil_Unit_1.indd 3 29-01-2025 18:07:52

இயல் 1

# பேச்சுமொழியும் கவிதைமொழியும்

– இந்திரன்




கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு பிறக்கிறது; எழுத்துமொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப் பேசுகிறது இக்கட்டுரை.

கவிதை என்பது எது? கவிதை எழுதும் செயல்பாடு எப்படி நிகழ்கிறது? கவிதை எழுதுகிறபோது எழுதிக் கொண்டிருப்பவனுக்குள் என்ன நிகழ்கிறது? கவிதை எழுதி முடித்துவிட்ட பிறகு கவிஞனுக்கும் கவிதைக்கும் என்ன உறவு?

தொடரும் இந்தக் கேள்விகளுக்கான பதில்களை எண்ணற்ற அழகியல்வாதிகளும் தத்துவ ஞானிகளும் கலை விமர்சகர்களும் மொழியியல் அறிஞர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

## எனக்கு விளக்கும் மொழி

மொழி என்பது அறிமுகமாவதற்கு முன்னால் பொருள்களும் விலங்குகளும் பறவைகளும் வானும் நிலவும் சூரியனும் மரங்களும் செடிகளும் எனக்குள் இருந்திருக்கவே இல்லை. மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது.

> மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக்கொள்கின்றன.
>
> – எர்னஸ்ட் காசிரர்

மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன்தான் உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இமையிமையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது மொழி. இதன்மூலமாக எனக்குள் உலகத்தின் பல கதவுகள் திறக்கலாயின. மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கிறபோதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடிக்கத் தொடங்கினேன். அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்டத் தொடங்கினேன். அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

## வாளினும் வலிமை

மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின் மீது எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன். குழந்தையாக இருந்தபோது, "அம்மா, அம்மா" என்று அழைப்பேன். வேலையில் மூழ்கிய அம்மா, என்னைக் கவனிக்காதபோது திடீரென்று அவரது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன். அவர் திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறார்.

அப்போதுதான் என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.

தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன். இதுமட்டுமன்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது. இந்தத் திடநிலையை அடைந்த மொழி அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்துபோய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது.

### நேரடிமொழி

எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் மிகுதியாக உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது. எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

பேச்சுமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் உள்ளான். எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு. ஆனால், பேச்சு என்பது அப்படிப்பட்டதன்று. பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர். இதையே அவர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.

நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.

பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப் படுகிறபோது அதன் சொல், உடம்பின் மேல்தோல்போல் இயங்குகிறது. ஆனால், எழுத்துமொழியில் அதே சொல் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றது.

### பெருங்கவிஞர்களின் வாய்மொழி

பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உள்ளனர். முதல் வகையினர், வால்ட் விட்மனைப் போன்றவர்கள். இவர்களுடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லை விட முக்கியமானதாகி விடுவதில்லை. இக்கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச்சுருளைப் போன்று அல்லாமல் பேச்சுமொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை. இதில், பல நேரங்களில் கவிதை என்பது, நடனமாடிக் கொண்டிருப்பவன், அவ்வப்போது நடப்பதற்குத் தாவிவிடுவதுபோல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவிவிடும்.



XI_Std_Tamil_Unit_1.indd 5 29-01-2025 18:07:52

**வால்ட் விட்மன்**

வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்த கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய 'புல்லின் இதழ்கள்' (Leaves of Grass) என்ற நூல் உலகப்புகழ் பெற்றது.



கனவொன்று நான் கண்டேன்

உலகெலாம் திரண்டுவந்து ஒருசேரத் தாக்கினாலும்

தோற்காத பெருநகரம் ஒன்று கண்டேன்

நண்பர்கள் நகரம் என்றொரு புதுநகரம்

வந்தது என் கனவில்.

அன்பைவிடப் பெரிதென்ற ஒன்றும் அந்நகரில் இல்லை,

அன்பின் வழித்தடத்தில் மற்றெல்லாம் சென்றன அதன் பின்னே.

எந்நேரமும், மாந்தர் செய்வது எதுவென்றாலும்,

அன்பேதான் தெரிந்தது அங்கே அவற்றில் எல்லாம்,

மக்கள் தோற்றத்திலும் அன்பே,

அன்பேதான் அவர் மொழியும்.

*கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர். இவர்களுடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று. தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக்கொள்ளும் வகை. இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையும் பேசிக்கொள்கிறது.*

**ஸ்டெஃபான் மல்லார்மே**

ஸ்டெஃபான் மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்; ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரைப் புரிந்துகொள்வதன் மூலமே குறியீட்டியத்தையும் (Symbolism) புரிந்துகொள்ள முடியும்.



புத்தகங்களிலெல்லாம் படித்துவிட்டேன்

நான் தப்பிப் போகத்தான் வேண்டும் அங்கே

ஆனால் உடலோ சோகத்தில்! வானுக்கும்

முன்பின் தெரியாத கடல் நுரைக்குமிடையே

மயக்கத்தில் பறவைகள் பறப்பதை உணர்கிறேன்!

என் கண்களில் பிரதிபலிக்கும் பழைய பூங்காக்களோ

எழுதப்படாத தாளின் தூய வெண்மையின் மீது

என் விளக்கிலிருந்து வீசும் பயனற்ற ஒளியோ

தன் குழந்தைக்குப் பாலூட்டும் அவ்விளம்பெண்ணோ

எதுவும் தடுக்காது கடல்நீரில் நனையும் இந்நெஞ்சை.

நான் கிளம்பிச் செல்வேன்! பாய்மரங்களைத்

தூக்கியெறிந்து விட்டிருக்கும் நீராவிக் கப்பலே

புறப்படு, தொலைதேச இயற்கையை நோக்கி.

இரக்கமற்ற எதிர்பார்ப்புகளில் மனமுடைந்து

ஆடும் கைக்குட்டைகளின் மகத்தான வழியனுப்பலை

இன்னும் நம்பிக்கொண்டிருப்பது வேதனை!

அதோ, பாய்மரமின்றிப் போய்ச்சேரத் தீவுகளின்றி

மூழ்கிவிட்ட கப்பல்களின்மேல் சாய்ந்து

புயலை அழைக்கும் பாய்மரங்கள்தாமே அவை..

ஆனால், இதோ கேள் என் நெஞ்சே

மாலுமிகளின் பாடலை!



XI_Std_Tamil_Unit_1.indd 6 29-01-2025 18:07:52

மூன்றாவது வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள். இவர்களின் கருத்துப்படி ஒரு கவிதை, ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது. இதுபோன்ற கவிதை, எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவதுபோலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்துபோகிறது.

கவிதை என்பது எது? என்ற இந்தக் கேள்விக்கு எனக்குத் தற்சமயம் கிடைக்கும் விடை இதுதான். கவிதை என்பது ஒரு பொருளன்று; அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்துவிடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு. எனவே, கவிதை என்பதே மொழிதான். ஆதலால், எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சுவழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

**பாப்லோ நெரூடா**

பாப்லோ நெரூடா தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில்பிறந்தவர்.இலத்தீன்அமெரிக்காவின்மிகச் சிறந்த கவிஞர். தன்னுடைய கவிதைகளுக்காக 1971ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.



எத்துணைப் பெயர்கள்!
திங்கட்கிழமைகள்
செவ்வாய்க்கிழமைகளுடனும்
ஆண்டு முழுவதுடன் வாரமும் சிக்கிக் கொண்டுள்ளன.
களைத்துப்போன உம் கத்தரிக்கோலால்
காலத்தை வெட்ட முடியாது.
பகலின் பெயர்கள் அனைத்தையும்
இரவின் நீர் அழிக்கிறது.
இரவில் நான் உறங்குகையில்
என்னை என்னவென்று அழைக்கின்றனர்
அல்லது என்னவென்று அழைப்பதில்லை?
தூங்கும்போது நான் நானாக இல்லையெனில்
விழித்தெழுந்த பின் நான் யார்?



## நூல்வெளி

இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட இந்திரன் சிறந்த கலைவிமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர்; ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாலின் 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' என்னும் நூலின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்றுள்ளார்; முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் உள்ளிட்ட கவிதை நூல்களையும் தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்; வெளிச்சம், நுண்கலை ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

**பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள்**

- வால்ட் விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ. ஸ்ரீராம்
- பாப்லோ நெரூடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ.இரா. வேங்கடாசலபதி



## கற்பவை கற்றபின்...

1. பாரதியின் வசனகவிதைகளுள் உங்களுக்குப் பிடித்த கவிதையை வகுப்பறையில் படித்துக் காட்டுக.
2. கவிதை குறித்துத் தமிழ்க்கவிஞர்களின் கருத்துகளைத் திரட்டி ஒப்படைவாக்குக.



XI_Std_Tamil_Unit_1.indd 7 29-01-2025 18:07:52

கவிதைப்பேழை

இயல் 1

# ஒவ்வொரு புல்லையும்

– இன்குலாப்

## நுழையும்முன்

'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்னும் மகாகவி பாரதி கூற்றின் நீட்சியே, 'கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும்' என்னும் இன்குலாப்பின் குரலாகவும் ஒலிக்கிறது. தம் எழுத்துகள் எளிய மக்களுக்கானவை என்னும் உறுதியுடன் எண்ணம், சொல், செயல் என்ற மூவகையிலும் நின்று வாழ்ந்தவர். அவர், மொழியைக் கலைநயத்துடன் கையாண்டு படைத்த இக்கவிதையே அதற்குச் சான்று

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்
பறவைகளோடு எல்லை கடப்பேன்
பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும்
எனக்குத் தெரிந்த சொல்லால் விளிப்பேன்
நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கையிலும் நெஞ்சம் படரும்
எனக்கு வேண்டும் உலகம் ஓர் கடலாய்
உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்
கூவும் குயிலும் கரையும் காகமும்
விரியும் எனது கிளைகளில் அடையும்.

போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்
பொங்கும் சமத்துவப்புனலில் கரையும்!
எந்த மூலையில் விசும்பல் என்றாலும்
என் செவிகளிலே எதிரொலி கேட்கும்.
கூண்டில் மோதும் சிறகுகளோடு
எனது சிறகிலும் குருதியின் கோடு!
சமயம் கடந்து மானுடம் கூடும்
சுவர் இல்லாத சமவெளி தோறும்
குறிகள் இல்லாத முகங்களில் விழிப்பேன்
மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்!

– இன்குலாப்

## நூல்வெளி

'இன்குலாப்'பின் இயற்பெயர் சாகுல் அமீது. இவர் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு ஆகிய இலக்கிய வடிவங்களில் எழுதியவர். இவருடைய கவிதைகள் 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்...

1. மனிதநேயம் பேசும் கவிதைகள் எவையேனும் ஐந்தைத் திரட்டி வகுப்பில் பகிர்க.
2. இயற்கையும் மனிதனும் என்னும் தலைப்பில் வகுப்பறையில் கலந்துரையாடல் நிகழ்த்துக.



XI_Std_Tamil_Unit_1.indd 8 29-01-2025 18:07:52

விரிவானம்

இயல் 1

# இசைத்தமிழர் இருவர்




இசை, கலைகளின் மகுடம்! இசைமொழியை எழுதும் காற்றின் கவிஞர்களே இசைக்கலைஞர்கள். தமிழ்நாட்டின் காட்டிலும் மேட்டிலும் வயல் சேற்றிலும் தவழ்ந்த இசையைச் சீராட்டி, மெருகூட்டி உலகுக்குத் தந்து மகிழ்ந்தவர் இருவர். இவ்விருவரும் உலக இசைப்பேரேட்டில் தமிழ்நாட்டின் முத்திரைகள். அவர்கள், சிம்பொனித் தமிழர் இளையராஜா, ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். ரகுமான் ஆகியோர் ஆவர்.

## சிம்பொனித் தமிழர்

ஆசியக் கண்டத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு, சிம்பொனி இசைக்கோவையை உருவாக்கும் திறன் கைவராது என்பது மேற்கத்திய இசை வல்லுநர்களின் கருத்தாகும். இந்தக் கற்பனைவாதத்தை உடைத்து ராயல் ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு, சிம்பொனி இசைக்கோலத்தை அமைத்துக்காட்டியவர் இசைமேதை (Maestro) இளையராஜா. அவர், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். அவருடைய இயற்பெயர் இராசையா. தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும். அசைபோட்டு வளர்ந்த இசை மேதையாகத் திகழ்கிறார்.

இளையராஜா, 'அன்னக்கிளி' படத்தில் இசை அமைப்பாளராக அறிமுகமானார். அவரது, இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. அவர், பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் மனத்தை மயக்கும் வகையில் கலந்து தந்தார். அவர், திரையிசையில் கருநாடக இசை என்னும் பழந்தமிழ் இசையின் உன்னதத்தை உணர வைத்தவர்.



| பெற்ற விருதுகளுள் சில: |
| --- |
| இந்திய அரசு – பத்ம விபூஷண் விருது |
| சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது |
| சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது |
| தமிழ்நாடு அரசு – கலைமாமணி விருது |
| மத்தியப்பிரதேசம் – லதா மங்கேஷ்கர் விருது |
| கேரளம் – நிஷாகந்தி சங்கீத விருது |



XI_Std_Tamil_Unit_1.indd 9 29-01-2025 18:07:53

1970களின் தொடக்கத்தில் பிறமொழிப் பாடல்களைச் சுமந்து திரிந்த தமிழ்ச்செவிகள் விடுதலை பெற்று, தமிழ்ப்பாடல்களை நோக்கித் திரும்பியதற்கு இளையராஜாவே காரணம் எனலாம். எழுபது, எண்பதுகளில் மெல்லத் தோன்றிப் புது வேகம்கொண்ட சமூக மாற்றங்களின் குறியீடாக இளையராஜாவின் இசை திகழ்ந்தது. பின்னணி இசையிலும் பாடல் இசையிலும் விடுபட்டுப்போன வாய்மொழித் தன்மை, யதார்த்தம் ஆகியன பொதிந்த அவருடைய இசை, சாமானியரையும் ஈர்த்தது. அவர்களது வாழ்வின் தருணங்களில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றதோடு, அமைப்புக்கு அப்பாற்பட்ட இசை இயக்கமாகவும் மாறியது. அவர், திரைப்பாடல்களைச் செவியுணர் கனிகளாகவும் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாற்றிய பெருமைக்குரியவர்.

அவருடைய இசை, ஐவகை நிலப்பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுகளைக் கொண்டது. இன்றளவும் நெடுந்தொலைவுப் பயணங்களின் வழித்துணையாக அவரின் இசை இருப்பதற்கு இதுவுமொரு காரணம். மண் மணத்துடன் தம்மை இணைத்து அவர் இசையமைப்பதுதான், மக்கள் அவருடைய இசையில் ஒன்றுவதற்குக் காரணமாகும்.

இந்திய இசைமேதைகள் அனைவராலும் மதிக்கப்படுபவர் இளையராஜா. அவரின், 'எப்படிப் பெயரிடுவேன்?' (HOW TO NAME IT?), புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட 'காற்றைத் தவிர ஏதுமில்லை' (NOTHING BUT WIND) ஆகிய இரு இசைத்தொகுப்புகளும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன. நம்பிக்கை, இன்பம், துன்பம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை நிரூபித்தவர் இளையராஜா. அவற்றை 'இந்தியா 24 மணிநேரம்' (INDIA 24 HOURS) என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் அவர் இசையமைத்துள்ளார்; 'இராஜாவின் ரமணமாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' ஆகிய இரு தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்னும் பக்தி இசைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்; அத்துடன் ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கருநாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

தமிழ்நாட்டின் நாட்டுப்புற இசை வடிவத்தைத் திரையிசையில் தவழவிட்டவராகவே இசைஞானி இளையராஜா அறியப்படுகிறார்; ஆனால், மேற்கத்திய இசையை முறைப்படி பயின்ற காரணத்தால் நாட்டுப்புற இசையின் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார். இசைஞானி தம் தேடலின் மூலம் மேற்கத்திய இசையுடன் கருநாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தியிருக்கிறார்.

நாட்டுப்புறப் பாடலுக்குக் கருநாடக இசை வடிவமும் கல்யாணி இராகத்தின் ஆரோகண சுரங்களைக்கொண்டே (ஏறுவரிசைச் சுரங்கள்) 'கலைவாணியே உனைத்தானே' என்னும் பாடலுக்கு அவர் மெட்டமைத்திருக்கிறார்; மூன்றே மூன்று சுரங்களைக்கொண்டு ஒரு தெலுங்குப் பாடலுக்கு இசையமைத்தும் இருக்கிறார்; நான்கே இசைக்கருவிகளைக்கொண்டு ஒரு பாடலுக்கு இசையமைத்திருக்கிறார்; முழுத் திரைப்படத்துக்கும் அரை நாளில் பின்னணி இசையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார் (நூறாவது நாள் – திரைப்படம்). பிற நாட்டின் இசைவடிவத்தை நம் மண்ணுக்கேற்ற வகையில் மாற்றம் செய்வதோடு திரைப்படப் பின்னணி இசைக்கோவையைக்கூட உணர்வின் மொழியாக மாற்றித் தருவதே அவருடைய தனிச்சிறப்பாகும்.

பரிபாடலில் நோதிறம், பாலையாழ், காந்தாரம் முதலிய பண்கள் காணப்படுகின்றன. சைவத்திருமுறைகளில் காரைக்கால் அம்மையார் நட்டபாடையிலும் இந்தளத்திலும் பாடியுள்ளார்.

தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் உள்ளன. தேவாரத்தில் இல்லாமல் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள்: நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவை. சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.

மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான 'நம்ரதா கே சாகர்' என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப் பாடகர் அஜொய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை அவர் வெளியிட்டிருக்கிறார். ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி (Symphony) என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் அவரே.

தமிழ் மட்டுமன்றி இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி என நம் நாட்டின் பிற மொழிப்படங்களுக்கும் இசையமைத்திருக்கின்றார் இளையராஜா. அவர் இசைக்கலைஞர் மட்டுமல்லர்; சிறந்த ஒளிப்படக் கலைஞர்; கவிஞர்; பாடகர். அவர் 'பால்நிலாப் பாதை', 'வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது' உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார்.

## ஆஸ்கர் தமிழர்

அமெரிக்காவின் 'கோடாக்' அரங்கில் ஆஸ்கர் விருதுகள் அறிவிக்கும் தருணம். அடுத்த சில நிமிடங்களில் இசைக்கான விருதுக்குரியவர் அறிவிக்கப்பட இருக்கிறார். அவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து இசையமைப்பாளர்களும் தம்முள் விருதுக்குரியவர் யார்? என அறியும் ஆவலில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் நால்வர் அவ்விருதுக்குப் பலமுறை பரிந்துரைக்கப்பட்டவர்கள்; ஒருவர் மட்டுமே புதியவர். அப்புதியவருக்கே 2009ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான 'ஆஸ்கர் விருது' என்று அறிவிக்கப்பட்டது.

அரங்கத்தின் கரவொலி அடங்குவதற்கு முன்பே சிறந்த திரையிசைப் பாடலுக்கான விருதுக்கும் அவரின் பெயரே அறிவிக்கப்படுகிறது. இரண்டு ஆஸ்கர் விருதுகளும் ஒருவருக்கே! இரு கரங்களிலும் விருதுகளை ஏந்தியவாறு உரையைத் தொடங்கியவர், தம் தாய்மொழியான தமிழில் உரையை நிறைவு செய்கிறார். ஆம்! அவர்தான், உலக அரங்கில் சாதனை நாயகனாய்த் திகழும் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான்.

தம் இசைக்குக் கிடைத்த இரு விருதுகளையும் கையில் ஏந்திய நிலையில், கடந்து வந்த பாதை அவர் கண்முன்னே நிழலாடியது. அவருடைய தந்தை ஆர்.கே. சேகர் மலையாளத் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கிய இசைக்கலைஞர். இளம்வயதிலேயே ஏ.ஆர். ரகுமான் தம் தந்தையின் இசைப்பயணத்தில் இணைந்து கொண்டார். தந்தையைச் சூழ்ந்திருந்த இசைக்கருவிகள் அவருள் இசை வேட்கையைத் தூண்டின. இசைக்கலைஞர்கள் வியக்கும் வகையில் நான்கு வயதிலேயே ஹார்மோனியம் இசைப்பதில் திறமை பெற்றிருந்தார். இளம் வயதிலேயே தந்தையை இழந்து குடும்பப் பொறுப்புகளை ஏற்கும் சூழல் ஏற்பட்டதனால் பள்ளிப்படிப்புக்கு இடையூறு ஏற்பட்டது.

ஏ. ஆர். ரகுமான், 1992ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கினார். அவரின் இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. தம் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார். தம் இசைப்பங்களிப்பால் இளைஞர் உலகின் இசை ஆளுமையாக வளர்ந்தார். அடுத்தடுத்த படங்களில் அவர் வெளிப்படுத்திய மெல்லிசை, கேட்டவர் நெஞ்சங்களில் எல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்தது.

பிங்கல நிகண்டு என்னும் நூலில் 103 பண்கள் காணப்படுகின்றன. பண்கள், பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண், பொதுப் பண் என்று வகுக்கப்பட்டுள்ளன.



XI_Std_Tamil_Unit_1.indd 11 29-01-2025 18:07:53



**பெற்ற விருதுகளுள் சில:**

| | |
|---|---|
| இந்திய அரசு | – பத்ம பூஷண் விருது |
| தமிழ்நாடு அரசு | – கலைமாமணி விருது |
| கேரளம் | – தங்கப் பதக்கம் |
| உத்திரப்பிரதேசம் | – ஆவாத் சம்மான் விருது |
| மத்தியப்பிரதேசம் | – லதா மங்கேஷ்கர் விருது |
| மொரீஷியஸ் | – தேசிய இசை விருது |
| மலேசியா | – தேசிய இசை விருது |
| ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம் | – சர்வதேச இசை விருது |

தமிழ் யாப்பிலக்கணத்தின் நால்வகைப் பாக்களில் கலிப்பாவின் ஓசை, துள்ளல் ஓசையாகும். இந்தத் துள்ளலோசைக்கு மயங்காதவர்களே உலகில் இல்லை எனலாம். தோற்கருவியால் துடித்தெழும் இந்தத் துள்ளல் ஓசை, கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடு. தமிழ் மக்களின் நெடிய வாழ்வியல் மரபில், துள்ளல் ஓசைச் சாயல் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறது. இதனை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர். ரகுமான் தம் இசையின் மூலம் இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.

உலகை வெற்றிகொள்ளப் புறப்பட்ட தமிழர்களுடன் வலம்வந்த இசைத்தோழமை, ஏ.ஆர். ரகுமான். தொண்ணூறுகளில் தொழில்நுட்பக்கல்வி பயின்று உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களை இணைத்தது அவர்தம் இசை; இணைய வழியில் உலவும் இளைஞர்களின் கனவை, இசையாக மொழிபெயர்த்து ஒலிவண்ணம் தீட்டினார். அவர், உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக் குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டார்.

நாட்டுப்புற இசை, கருநாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய, உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்தார்; பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார்.

அவர் இசையமைத்த 'வந்தே மாதரம்', 'ஜன கண மன' என்னும் இசைத்தொகுதிகள், நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன. மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட பல தென்னிந்திய மொழிப்படங்களுக்கும் இசையமைத்ததோடு இந்தித் திரைப்பட உலகத்திலும் தம் இசை முத்திரையைப் பதித்தார்; மேலைநாட்டுத் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் இசையமைத்து உலக இசையமைப்பாளர்கள் வரிசையிலும் தம்மை நிலைநாட்டிக்கொண்டார். வெவ்வேறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்துடன் திரையிசையில் சூஃபி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் அவருக்குண்டு.

தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இன்றியமையாத இடமுண்டு. அதில், இளையராஜா, ஏ.ஆர். ரகுமான் ஆகியோரின் வருகை புகழ் மகுடமாக ஒளிர்கின்றது.

**கற்பவை கற்றபின்...**

தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தமிழில் பிறந்தநாள் பாடல் போன்றவற்றை நண்பர்களுடன் இணைந்து இசையுடன் பாடிப் பயிற்சி பெறுக.



XI_Std_Tamil_Unit_1.indd 12 29-01-2025 18:07:53

## இனிக்கும் இலக்கணம்

இயல் 1

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

சொற்கள் எழுத்தொலிகளால் ஆனவை. அவை நாம் ஒலிப்பதற்கு இனிமையாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும். இதற்குச் சொற்களின் முதலிலும் இறுதியிலும் ஒலிக்கும் எழுத்தொலிகள் காரணமாக அமைகின்றன. சொற்களின் புணர்ச்சியில், முதற்சொல்லின் இறுதி எழுத்தும் வரும் சொல்லின் முதல் எழுத்துமே சந்திக்கின்றன. அவ்வாறு சந்திக்கும் இடத்தில் வரும் எழுத்துகள் எவையெவையென அறிந்துகொள்ள வேண்டும்.

காவிரி, டமாரம், றெக்கை, பாவை, ராக்கி, கோதை, டப்பா போன்ற சொற்களில் தமிழ்ச்சொற்கள் எவை என்பதை அறிய முடிகிறதா?

இவற்றுள் காவிரி, பாவை, கோதை ஆகியவை தமிழ்மொழிச் சொற்களாக உள்ளன. டமாரம், றெக்கை, ராக்கி, டப்பா ஆகியவை பிறமொழிச்சொற்களாக உள்ளன. எனவே, சொற்களில் தமிழ்மொழிக்கு உரியவை, பிறமொழிக்கு உரியவை எவையெவை என்பதை அறிந்து பயன்படுத்த வேண்டும். இதற்குச் சொற்களில் எழுத்துகள் வரும் இடம் குறித்து அறிந்துகொள்ள வேண்டும்.

### மொழி முதல் எழுத்துகள் – 22

1. உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
2. மெய்யெழுத்துகள் தனிமெய் வடிவில் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன.
3. மெய்களில் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாகச் சொல்லின் முதலில் வரும். (ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்),
4. ட, ண, ர, ல, ழ, ள, ற, ன என்னும் எட்டு வரிசைகள் சொல்லின் முதலில் வருவதில்லை.
5. ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

> குறள் என்ற சொல்லை க் + உ + ற் + அ + ள் எனப் பிரிக்கலாம். சொல்லின் முதலில் உள்ள 'கு' என்னும் உயிர்மெய் எழுத்தை, க் + உ எனப் பிரிக்கும்பொழுது க் என்ற மெய்யெழுத்தே சொல்லின் முதலில் வருவதை அறியலாம்.

'ங்' என்னும் மெல்லின மெய் 'விதம்' எனப் பொருள் தரும் 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராது. அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்து அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று வரும். தற்காலத் தமிழில் இவற்றின் பயன்பாடு அரிதாகவே உள்ளது.

> உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழ்நாட்டில் வழக்கில் இல்லை. ஆனால், தமிழ் இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்விலக்கண வரையறைகள் அனைத்தும் எழுத்து மொழிக்கானவையே அன்றி, பேச்சு மொழிக்கானவை அல்ல. மேற்காட்டிய 22 எழுத்துகள் நீங்கலாக உள்ள பிற எழுத்துகள், சொல்லின் முதலில் வந்தால் அவை தமிழ்ச் சொற்களாக இருக்கமாட்டா; பிறமொழிச் சொற்களாகவோ, ஒலிபெயர்ப்புச் சொற்களாகவோ இருக்கின்றன.

| மொழிமுதல் எழுத்துகள் | உயிரெழுத்துகள் | மெய்யெழுத்துகள் | மொத்தம் |
|---|---|---|---|
| | 12 | 10 | 22 |



XI_Std_Tamil_Unit_1.indd 13 29-01-2025 18:07:53

## மொழி இறுதி எழுத்துகள் – 24

1. *உயிரெழுத்துகள்* பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
2. மெய்களில் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினோரெழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.
3. பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக்கொள்வர்.

   ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும், இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.
4. க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.

| மொழி இறுதி எழுத்துகள் | உயிரெழுத்து | மெய்யெழுத்து | குற்றியலுகரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 12 | 11 | 1 | 24 |

## புணர்ச்சி

நாம் பேசும்போது சில சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி ஒருசொல் போலவே பேசுகிறோம். எழுதும்போதும் அவ்வாறே எழுதுகிறோம். தமிழரசி, நாட்டுப்பண் ஆகிய இச்சொற்கள் ஒருசொல் வடிவம் உடையன. ஆயினும், இவை இரண்டு சொற்களின் சேர்க்கையாக உள்ளன.

தமிழ் + அரசி – தமிழரசி      நாடு + பண் – நாட்டுப்பண்

இவற்றில் முதலில் நிற்கும் சொல்லை 'நிலைமொழி' என்றும் அதனோடு வந்து சேரும் சொல்லை 'வருமொழி' என்றும் அழைப்பர். இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் புணர்ச்சி என்பர். நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்ச்சிக்கு உரியன ஆகும்.

## உயிரீறு, மெய்யீறு

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும். நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.

> மணி (ண் + இ) + மாலை = மணிமாலை – உயிரீறு; பொன் + வண்டு = பொன்வண்டு – மெய்யீறு

## உயிர்முதல், மெய்ம்முதல்

வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும். வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது 'மெய்ம்முதல்' எனப்படும்.

> வாழை+இலை = வாழையிலை– உயிர்முதல்; தமிழ் + நிலம்(ந்+இ) = தமிழ்நிலம் – மெய்ம்முதல்

## எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சி

சொற்புணர்ச்சியில் நிலைமொழி இறுதி எழுத்தாகவும் வருமொழி முதலெழுத்தாகவும் எழுத்துகள் சந்திக்கும் முறையை நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

| வ. எண் | ஈற்றெழுத்து முதலெழுத்து | எ.கா. | சந்திப்பு |
|---|---|---|---|
| 1 | உயிர் + உயிர் | மலை + அருவி | ஐ + அ |
| 2 | மெய் + உயிர் | தமிழ் + அன்னை | ழ் + அ |
| 3 | உயிர் + மெய் | தென்னை + மரம் | ஐ + ம் |
| 4 | மெய் + மெய் | தேன் + மழை | ன் + ம் |



XI_Std_Tamil_Unit_1.indd 14 29-01-2025 18:07:53

## சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி

இலக்கண வகையால் சொற்கள் நான்கு வகைப்படும். இவற்றுள் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்தே வருகின்றன. இவ்விரு சொற்களும் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் வந்தாலும் அவற்றின் புணர்ச்சி, எழுத்துகளின் புணர்ச்சியே ஆகும்.

| வ. எண் | நிலைமொழி + வருமொழி | எ.கா. |
|---|---|---|
| 1 | பெயர் + பெயர் | கனி + சாறு |
| 2 | பெயர் + வினை | தமிழ் + படி |
| 3 | வினை + வினை | நடந்து + செல் |
| 4 | வினை + பெயர் | படித்த + நூல் |

புணர்ச்சி என்பது எழுத்துகளின் சந்திப்பாகவும் சொற்களின் சந்திப்பாகவும் அமைகிறது. எனவே, எழுத்துகளும் சொற்களும், ஒலிக்கூறுகளாகவும் பொருள் கூறுகளாகவும் சந்திக்கும் நிகழ்வே புணர்ச்சி ஆகும்.

## குற்றியலுகர ஈறு

| | |
|---|---|
| வீடு + இல்லை = வீடில்லை | நெடில்தொடர்க் குற்றியலுகரம் |
| முரடு + காளை = முரட்டுக்காளை | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| அச்சு + பலகை = அச்சுப் பலகை | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு + கூடு = மார்புக்கூடு | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு + கம்பி = எஃகுக்கம்பி | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |

சார்பெழுத்துகளுள் ஆய்தம் சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது. குற்றியலுகரமும் (நுந்தை தவிர) குற்றியலிகரமும் இக்காலத்தில் சொல்லின் முதலில் வாரா. ஆயினும், குற்றியலுகரத்தின் ஆறு வகைகளும் சொல்லின் இறுதியில் வருகின்றன. குற்றியலுகர ஈற்றுடன் வரும் நிலைமொழி, குற்றியலுகர ஈறு அல்லது குற்றியலுகர நிலைமொழி எனப்படும்.

என் சொல்லுக்கு என்ன மரியாதை எனத்
தர்க்கம் பேசுவது இருக்கட்டும்
எங்கு இருந்தாலும்
நம் மொழிக்கு முதல் இடம்

ஏற்படுத்தச் சந்தியுங்கள்
இறுதியில்
தாய்மொழியை வளப்படுத்தும்
தனிவழியைச் சிந்தியுங்கள்.



**கற்பவை கற்றபின்...**

உங்கள் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் பெயர்கள் சிலவற்றின் முதல், இறுதி எழுத்துகளைத் தனித்து எழுதி நீங்கள் பயின்ற இலக்கணப் பகுதியுடன் ஒப்பிட்டு ஆய்க.

## இலக்கணத் தேர்ச்சிகொள்.

1. தவறான இணையைத் தேர்வு செய்க.

   அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்  இ) கடல் + அலை – உயிர் + மெய்

   ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்  ஈ) மண் + வளம் – மெய் + மெய்

2. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
3. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.
4. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.
5. உயிர்முதல், மெய்ம்முதல் – எடுத்துக்காட்டுடன் விவரிக்க.



XI_Std_Tamil_Unit_1.indd 15 29-01-2025 18:07:53

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.

அ ) மல்லார்மே – யுகத்தின் பாடல் ஆ) இன்குலாப் – ஒவ்வொரு புல்லையும்

இ) ஸ்டெஃபான் மல்லார்மே – புல்லின் இதழ்கள் ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதை மொழியும்.

அ) அ, ஆ ஆ) அ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, இ

2. கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" – அடி மோனையைத் தெரிவு செய்க.

அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள்

இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத

3. "மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது" எனக் கூறியவர்________

அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர்

இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாப்லோ நெரூடா

4. "திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்துவிடுகிறது". இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.

ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

5. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**குறுவினா**

1. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
2. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!

இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்து எழுதுக.



XI_Std_Tamil_Unit_1.indd 16 29-01-2025 18:07:53

3. "நீளும் கைகளில் தோழமை தொடரும் நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" – தொடை நயங்களை எடுத்தெழுதுக.

4. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் – இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?

5. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

### சிறுவினா

1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
2. கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.
3. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.
4. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
5. மொழி முதல் , இறுதி எழுத்துகள் யாவை ? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

### நெடுவினா

1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.
2. 'ஒவ்வொரு புல்லையும்' கவிதையில் வெளிப்படும் சமத்துவச் சிந்தனைகளைப் புலப்படுத்துக.
3. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்
(1815 – 1876)

தமிழ் இலக்கிய வரலாற்றில், 'புலமைக் கதிரவன்' எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். இவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூல் இவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே. சாமிநாதர், தியாகராசர்,

குலாம் காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

1. தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் – இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்பு தருக.
2. மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.
3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் – விடைக்கேற்ற வினாவை அமைக்க.
4. பத்தியில் மொழி முதல் எழுத்துகளைக்கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.
5. விளங்கினார் – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

**தமிழாக்கம் தருக.**

1. The Pen is mightier than the Sword.
2. Winners don't do different things, they do things differently.
3. A picture is worth a thousand words.
4. Work while you work and play while you play.
5. Knowledge rules the world.

**பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாடகை | மாதம் | போலீஸ் | நிச்சயம் | உத்திரவாதம் | சந்தோஷம் |
| சம்பளம் | ஞாபகம் | வருடம் | தேசம் | வித்தியாசம் | உற்சாகம் |
| விசா | பாஸ்போர்ட் | கம்பெனி | பத்திரிகை | கோரிக்கை | யுகம் |
| ராச்சியம் | சரித்திரம் | முக்கியத்துவம் | சொந்தம் | சமீபம் | தருணம் |

**கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்**

**'அரியன கேள் புதியன செய்' (திங்கள் கூடுகை)**

| நேரம்: 2.30 பிற்பகல் | இடம்: அரசு மேல்நிலைப் பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை – மாணவர் இலக்கியச்செல்வன் |
| 2.40 | தலைமையுரை – திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி |
| "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" | |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண். |

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.



XI_Std_Tamil_Unit_1.indd 18 29-01-2025 18:07:54

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே", மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுகளாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' – தொ. பரமசிவன்)

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?
5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.

**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.



## மொழியோடு விளையாடு

1. எண்ணங்களை எழுத்தாக்குக.



2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

(எ.கா.) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

அ) மயில் ஓர் அழகான பறவை.

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.

iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?



XI_Std_Tamil_Unit_1.indd 19 29-01-2025 18:07:54

3. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10)

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6)

ஈ) பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2)



4. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.

அ) வா ஆ) பேசு இ) தா ஈ) ஓடு உ) பாடு

(எ.கா.) வா – வேர்ச்சொல்
அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)
அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)
கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)
என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

## செய்து கற்போம்

தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் செய்திகள், கவிதைகள், படங்களைச் சேகரித்து எட்டுப் பக்க அளவில் தொகுப்பேடு உருவாக்குக.

## சொற்சுவை

**தகப்பன்:** தந்தை என்ற பொருளில் வருவது இச்சொல். தம் அப்பன் = தமப்பன் என்ற வடிவத்தில்தான் முதலில் இருந்தது. இவ்வடிவமே திரிந்து தகப்பன் என்றாயிற்று.

## நிற்க அதற்குத் தக

முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.

| முன்மாதிரியானவர் | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாமை |

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

Aesthetics – அழகியல்
Journalist – இதழாளர்
Art Critic – கலை விமரிசகர்
Book Review – புத்தக மதிப்புரை
Migration – புலம்பெயர்தல்
Philosopher – மெய்யியலாளர்

## அறிவை விரிவு செய்

- நல்ல தமிழ் எழுத வேண்டுமா? – அ.கி. பரந்தாமனார்
- உயிர்த்தெழும் காலத்துக்காக – சு. வில்வரத்தினம்
- நவீன கலையின் புதிய எல்லைகள் – இந்திரன்
- ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் – இன்குலாப்

இயல் 2

# மாமழை போற்றுதும்

*இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்*



## கற்றல் நோக்கங்கள்

- இயற்கை வேளாண்மை, நீர் மேலாண்மை ஆகியவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து தம் சமூகப் பங்களிப்பை நல்குதல்.
- இயற்கை மனிதனுக்கு உதவுவதையும் உணர்த்துவதையும் இலக்கியம்வழி அறிந்து மதிப்பளித்தல்.
- மரபுச் செய்யுள், குறும்புதினம் ஆகிய வடிவங்களின்வழி வெளிப்படும் கருத்துகளைப் படித்துப் பொருளுணர்தல்.
- மொழியைத் தவறின்றிக் கையாள்தல், பாடல்களைப் பொருளுணர்ந்து பிரித்தறிதல் ஆகிய படிநிலைகளை அறிதல்.
- அற இலக்கியங்களின் உட்பொருளை அறிந்து அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன் பெறுதல்

## பாடப்பகுதிகள்

- உரைநடை – இயற்கை வேளாண்மை
- செய்யுள் – ஐங்குறுநூறு
  மனோன்மணீயம்
- துணைப்பாடம் – யானை டாக்டர்
- இலக்கணம் – புணர்ச்சி விதிகள்
- திருக்குறள்

## உரைநடை உலகம்

## இயல் 2

# இயற்கை வேளாண்மை

### நுழையும்முன்

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியாரும் போற்றுகின்றனர். இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது இவ்வுரையாடல்.

*சொக்கலிங்கம் :* வா! மங்கை! என்ன ஊருக்கே திரும்ப வந்துவிட்டாயா? (உட்புறம் பார்த்து) மல்லிகா, இங்கே வா, மங்கை வந்திருக்கிறாள் பார்!

*மங்கை :* ஆமாம் சித்தப்பா, இங்கே வந்து இரண்டு நாள்கள் ஆகிவிட்டன! சுத்தமான காற்று, கிணற்றுத் தண்ணீர், அம்மா கைச்சமையல் வேறெங்கே கிடைக்கும்?

*மல்லிகா :* வாம்மா மங்கை! குழந்தைகள் நல்லாருக்காங்களா? உன் கணவர் எப்படி இருக்கிறார்?

*மங்கை :* எல்லோரும் நல்லா இருக்காங்க. நீங்க நல்லா இருக்கீங்களா?

*மல்லிகா :* நல்லா இருக்கோம்மா.

*மங்கை :* நான் இனிமேல் நம்ம கிராமத்தில்தான் இருக்கப் போகிறேன். அப்பாவின் நிலத்தில், நம்மாழ்வார் ஐயாவின் வழியைப் பின்பற்றி இயற்கை முறையில் வேளாண்மை செய்யலாம்னு இருக்கேன்.

*மல்லிகா:* நல்ல முடிவுதான் எடுத்திருக்கிறாய் மங்கை! நமக்கெல்லாம் அவர்தானே வழிகாட்டி.

*சொக்கலிங்கம்:* சொல்லம்மா, நான் என்ன உதவி செய்யணும்?

*மங்கை :* இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்ற ஆசை மட்டும் எனக்கு இருக்கிறது! ஆனா, அதைப் பற்றி ஒண்ணும் தெரியாது. நீங்கதான் படிப்படியாக எனக்குச் சொல்லித்தர வேண்டும்.

*சொக்கலிங்கம்:* சொல்றேன்மா. வா, நம்ம பண்ணைக்குப் போய் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபடி பேசுவோம்....

(மல்லிகா இரண்டு குவளைகளில் மோருடன் வருகிறார். இருவரும் மோர் குடிக்கின்றனர்)

*மங்கை :* இப்படி வெண்ணெயோடும் வாசனையோடும் மோர் குடித்து எத்தனை நாளாச்சு? எங்க வாங்குறீங்க?

*மல்லிகா:* மோரை வாங்குவாங்களா? கொல்லையில இருக்குற நம்ம மாட்டோட பால்தான் இவ்வளவு வாசம்.

*மங்கை :* அப்படியா? எனக்குப் பால், மோர் எல்லாம் நெகிழிப் பையில் வாங்குற பழக்கம். அதான் கேட்டேன்.

(உள்ளிருந்து சொக்கலிங்கம் கிளம்பி வருகிறார். அவருடன் மங்கையும் மல்லிகாவும் கிளம்புகிறார்கள்)

*மங்கை :* இது என்ன சித்தப்பா, பனைமரம் வளர்க்கிறீங்களா?



XI_Std_Tamil_Unit_2.indd 22 29-01-2025 18:08:31



சொக்கலிங்கம்: ஆமாம்மா, பனைமரம் நம்ம தமிழ்நாட்டோட மாநில மரம். பனங்கொட்டய மூன்றடிக்கு மூன்றடி இடைவெளி விட்டு நட்டு வச்சிருக்கேன். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் ஆகுது! இன்னும் ஏழு ஆண்டுல பலன் தரும்.

மங்கை: பனைமரத்துனால என்ன பயன் சித்தப்பா?

சொக்கலிங்கம்:என்னம்மா,இப்படிக்கேட்டுட்ட, பனைமரம் ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லலாம்; சிறந்த காற்றுத் தடுப்பானும்கூட; ஆழத்தில் நீர்மட்டம் குறையாம நீரைச் சேமிச்சு வைக்கிற தன்மையுடையது. இதனால நிலத்தடி நீர்மட்டம் குறையாது. பனை வளர, அதிக அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை; இன்னும் ஏழு ஆண்டில் காய்க்கத் தொடங்கிடும். நுங்கு, பதநீர் மட்டுமல்ல அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டுன்னு மதிப்புக்கூட்டுப் பொருள்களையும் உருவாக்கலாம். நம்முடைய 'மருதம்' பண்ணையைச் சுற்றிலும் மொத்தமாக 50 பனைமரம் வெச்சிருக்கேன். வாம்மா, உள்ளே போவோம்!

மங்கை: சித்தப்பா, நீங்க மதுரையில வேலை பார்த்தப்ப பழைய முறையில்தானே வேளாண்மை நடந்திருக்கும். இன்றைக்கு உரம், பூச்சிக்கொல்லி என்று மண்ணே நஞ்சாகிப் போயிருக்கு.

சொக்கலிங்கம்: ஆமா, மங்கை! நிலத்தைச் சரிசெய்வதுதானே முதல் வேலை! அதற்கு முதல்ல அறுவடை முடிந்த பிறகு வைக்கோலைச் சமமாகப் பரப்பி, மடியச் செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும்.

மங்கை: வைக்கோலை மடியச் செய்து உழ வேண்டுமா?

மல்லிகா: ஆமாம் மங்கை. இந்த வைக்கோல் மென்மையானதாகவும் லேசானதாகவும் தெரிகிறது. இந்த வைக்கோலின் உண்மையான மதிப்பை மக்கள் அறிந்துகொண்டால் உலகம் ஒருமுறை குலுங்கும். நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது, உரச்செடிகளை வளர்ப்பது, நிலத்தில் இருந்து கிடைக்கும் குப்பை கூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது போன்ற செயல்கள் நெற்பயிரும் மாரிக்காலப் பயிர்களும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

சொக்கலிங்கம்: பரவாயில்லையே, மல்லிகா! இவ்வளவு தெளிவாக வைக்கோலின் மகத்துவம் பற்றி அறிந்துவைத்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகோகா. இவர் 1978ஆம் ஆண்டு, "ஒற்றை வைக்கோல் புரட்சி"



## தெரியுமா?

பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன்மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை **மதிப்புக் கூட்டுப்பொருள்** என அழைக்கின்றனர்.

"இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட. நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்"

– மசானபு ஃபுகோகா



XI_Std_Tamil_Unit_2.indd 23 29-01-2025 18:08:31

என்னும் நூலை எழுதியவர். உழப்படாத நிலம், வேதியியல் உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர். வைக்கோலை மடக்கி உழுவதோடு மட்டுமல்லாமல் பருவம் வந்தவுடன் நீரைத் தேக்கி உழுதல் வேண்டும். உழும்போது தொழு உரம் இடவேண்டும். ஆனா, ஒரே ஆண்டில் நிலத்தின் நஞ்சு நீங்காது, ரெண்டு மூன்று ஆண்டுகள் ஆகும்.

மங்கை : சித்தப்பா, தொழு உரம் என்றால்?

சொக்கலிங்கம்: தொழு உரம்னா, வேற ஒன்றுமில்லை, மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்க வேண்டும். இது நஞ்சை நிலத்துக்கு! புஞ்சைன்னா, காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். சாம்பல்னா எங்காவது போய், தொழிற்சாலைக் கழிவை எடுத்துவந்து போடக்கூடாது! ஆடு, மாடு முதலிய கால்நடைகளின் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும்.

(இருவரும் பேசியபடி சரிவான பகுதிக்கு வருகிறார்கள்)

மங்கை : என்ன இது? முன்பு உங்கள் நிலத்தில் இப்படி ஒரு குளம் இல்லையே!

சொக்கலிங்கம்: ஆமாம் மங்கை, இந்த மருதம் பண்ணைக்கு வளமே, இந்தக் குளம்தான். பழைய கிணத்துல தண்ணீர் அதிகம் இறங்கிருச்சும்மா! நான் இங்கு வந்து இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்று நினைத்தபோது செய்த முதல்வேலை, நிலத்தில் இருக்குற நச்சுத்தன்மையை நீக்கியது. அடுத்த வேலை, நீர்வளத்தை அதிகப்படுத்தியது.



நம்மாழ்வார்

மங்கை : அப்படின்னா, எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் வந்தது! பழைய குளத்தையே, ஆழமாக்கினீங்களா? புதுசா வெட்டினீங்களா?

சொக்கலிங்கம்: அந்தத் தப்பை நான் செய்யவில்லை! சின்னச்சின்னதா வாய்க்கால் வெட்டினேன். பழைய கிணத்தைச் சுற்றிச் சின்னச்சின்ன மரக்கன்றுகளை நட்டேன். என் நல்ல நேரம், நல்ல மழை பெய்தது. வாய்க்கால் மூலமா வந்த தண்ணீர் இந்தக் குளத்துல தேங்குச்சு! தண்ணீரே இல்லாத பழைய கிணத்திலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது!

மங்கை : இந்த இடத்துல சில்லுன்னு நல்லாக் காற்று வருது. இது மரத்துல மோதி வருகிற காற்றா? நீரில் மோதி வருகிற காற்றா? என்ன சிலிர்ப்பு! வெயிலே தெரியவில்லை!

மல்லிகா : மங்கை, பண்ணையத்துக்கு வெயிலும் ரொம்ப முக்கியம்மா! மழைநீர்ச் சேகரிப்பால நமக்குக் கிணத்துத் தண்ணீர் மட்டம் உயர்ந்திருச்சு!

மங்கை: சித்தப்பா, நம்ம பண்ணையில் என்னவெல்லாம் விளைகின்றன? நிறைய மரங்கள் இருக்கின்றன. இதென்ன, இந்தப் பயிர் புதுசா இருக்கு?

சொக்கலிங்கம்: மங்கை, இது உளுந்து. நெல்லுக்கு ஊடுபயிராகப் போடுவது! இதை அறுவடை செய்தபின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும்.

மங்கை: சரி! ஆனால்? பூச்சி விழுந்தா நாம பூச்சிக்கொல்லியத்தானே பயன்படுத்த வேண்டும்.



XI_Std_Tamil_Unit_2.indd 24 29-01-2025 18:08:31

மல்லிகா: அதுதான் மங்கை, நாம கவனிக்க வேண்டியது. பூச்சிக்கொல்லி பயிரில் இருக்குற பூச்சிய மட்டும் கொல்லல, விளையற பயிருக்குள்ளயும் ஊடுருவுகிறது. அதச் சாப்பிடுகிற மக்களுக்கு நெறய நோய் வருது! புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத் தன்மை, இன்னும் என்னென்னவோ சொல்றாங்க!

மங்கை : அது சரி! அப்புறம் எப்படிப் பயிரில் விழுகிற பூச்சிய விரட்டுறது? விளைச்சல் குறையாதா?

சொக்கலிங்கம்: ஏன் குறையப் போகுது? இயற்கை வேளாண்மைன்னா, ஒட்டு மொத்தமா விதைக்கிறதுல இருந்து விளைச்சல் முடிகிற வரைக்கும் வேதிக்கலப்பே இருக்கக் கூடாதும்மா!

மங்கை: வேதிக்கலப்பு இல்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?

சொக்கலிங்கம்: நம்ம முன்னோர்கள் எந்த வேதியியல் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துனாங்க? சொல்லு பார்ப்போம்? வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாத்தையும் நல்லா இடிச்சுக் கோமியத்துல ஊற வச்சு அதைத் தெளிச்சா போதும்மா! பூச்சியெல்லாம் போயிரும்!

மங்கை : உண்மைதானா? சித்தப்பா!

சொக்கலிங்கம் : ஆமா மங்கை! அப்படித்தான் நாங்க செய்யறோம். பூச்சிகள் வருவது படிப்படியாக் குறையுது. அதோட நிலத்துல இருக்குற மண்புழு போன்ற சின்ன உயிர்கள் அழியறது தடுக்கப்படுது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்துனால, மண்ணும் தன்னோட வளத்தை இழக்கிறதில்ல.

மங்கை: பூச்சிக்கொல்லி சரி? உரத்துக்கு என்ன பண்ணுறீங்க!

சொக்கலிங்கம்: ஏராளமான உரங்கள் போட்டால் விளைச்சல் கூடும்னு நினைச்சோம், மொதல்ல விளைச்சல் கூடுற மாதிரி இருந்தது! அப்புறம் நாளாக நாளாக மண்ணு நஞ்சாகி விளைச்சல் குறைந்தது! அதனால் இப்போதெல்லாம் உரத்தையும் இயற்கையாகவே உருவாக்குகிறோம்.

மங்கை: நாம் பயன்படுத்துற உரம், மருந்து எல்லாமே இயற்கையா நம்மிடம் இருப்பது, சுற்றுச்சூழலைக் காப்பதற்கான வழி இல்லையா?

சொக்கலிங்கம்: ஆமாம்மா, நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல்... மண் சத்து வீணாகாமல் நிலமும் நல்லா இருக்கும்.

மங்கை : அப்படின்னா, விடாமல் மாறிமாறிச் சாகுபடி செய்யலாமா சித்தப்பா?

சொக்கலிங்கம்: இல்லை மங்கை! நிலத்தை ஆறப்போடணும், சரியான கால இடைவெளியில் மாறிமாறிப் பயிரிடணும். இதைப் பற்றியெல்லாம் இன்னும் நீ நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குச் சுற்றியுள்ள பண்ணைகள் சிலவற்றைப் பார்வையிடலாம். அரசும் வேளாண்மை அலுவலகம் மூலம் நிறைய வழிமுறைகளைச் சொல்கிறது; பயிற்சிகளையும் தருகிறது. அவற்றில் நீ கலந்துகொண்டு நல்ல வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளலாம்.

மங்கை: ஆடிப்பட்டத்துல உழவைத் தொடங்குகிறேன். பேசிக்கிட்டு இருந்ததுலே நேரம் போனதே தெரியல. வாங்க, வீட்டுக்குப் போவோம்.



**கற்பவை கற்றபின்...**

1. மாடித்தோட்டம் அமைக்கும் முறையை இணையத்தளம் மூலம் அறிந்து வகுப்பில் கலந்துரையாடுக.
2. பள்ளியில் செயல்படும் தேசியப் பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றம் ஆகியவற்றின் வாயிலாக மரக்கன்றுகள் நடப்பட்டு வளர்ப்பதில் உங்களின் பங்களிப்பு குறித்து உரை நிகழ்த்துக.



XI_Std_Tamil_Unit_2.indd 25 29-01-2025 18:08:31

கவிதைப்பேழை

இயல் 2

# ஐங்குறுநூறு

– பேயனார்

நுழையும்முன்

இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொருள் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிச் சங்கப் பாடல்கள் பேசுகின்றன. சங்க கால மக்களின் இயற்கை வாழ்வோடு மலர்கள் பின்னிப் பிணைந்திருந்தன. அவை, பிரிந்து சென்ற தலைவரின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடல் இது.

## ஆடுகம் விரைந்தே

*காயா கொன்றை நெய்தல் முல்லை*
*போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்*
*பூவணி கொண்டன்றால் புறவே*
*பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே*

(கிழவன் பருவம் பாராட்டும் பத்து –412 )

– பேயனார்

*திணை* – *முல்லை*

*துறை* – *பருவங் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமையை உணர்த்த, தலைவிக்கு உரைத்தது.*





XI_Std_Tamil_Unit_2.indd 26 29-01-2025 18:08:33

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் | – மழைக்கால மலர்கள் |
| போது | – மொட்டு |
| அலர்ந்து | – மலர்ந்து |
| கவினி | – அழகுற |

## பாடலின் பொருள்

[பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன். அவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான். வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே தான் வந்துவிட்டதை உணர்த்த நினைக்கிறான்.] "பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, விரைந்து வா" (என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.)

## இலக்கணக்குறிப்பு

ஆல் – அசைநிலை

கண்ணி – அண்மை விளிச்சொல்

ஆடுகம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

## பகுபத உறுப்பிலக்கணம்

**அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ**

அலர் – பகுதி

த் – சந்தி, (ந் ஆனது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

## மழைக்கால மலர்கள்


காயா


கொன்றை


நெய்தல்


முல்லை


தளவம்


பிடவம்

### நூல்வெளி

ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல். திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது. ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்: குறிஞ்சித்திணை – கபிலர், முல்லைத்திணை – பேயனார், மருதத்திணை – ஓரம்போகியார், நெய்தல் திணை – அம்மூவனார், பாலைத்திணை – ஓதலாந்தையார். ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

பேயனார் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

### கற்பவை கற்றபின்...

தமிழ் இலக்கியங்கள் காட்டும் பூக்கள் குறித்த செய்திகளைத் திரட்டி, தகவல் பலகையில் காட்சிப்படுத்துக.



XI_Std_Tamil_Unit_2.indd 27 29-01-2025 18:08:33

கவிதைப்பேழை

இயல் 2

# மனோன்மணீயம்

– பெ.சுந்தரனார்



**நுழையும்முன்**

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய 'மனோன்மணீயம்' தமிழன்னை பெற்ற நல் அணிகலனாகும். நாடகத்துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினைத் தீர்க்க வந்த மனோன்மணீயம் என்னும் இந்நாடக நூல், காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக விளங்குகிறது. இயற்கையில் ஈடுபாடுகொண்டு, அதனில் தோய்ந்து இணையில்லாத ஊக்கமும் அமைதியும் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதைக் கூறுவதாக உள்ளது இந்நூலின் பகுதி.

சுந்தர முனிவர் தனது அறையிலிருந்து ஆசிரமம் வரை யாரும் அறியாவண்ணம் சுரங்கம் அமைக்கும் பணியை நடராசனுக்கு அளித்திருந்தார். நடராசனும் அப்பணியை ஓரளவு முடித்துவிட்டான். 'இன்னும் சிறுபகுதி வேலை ஆசிரமத்தில் செய்ய வேண்டியுள்ளது; அதுவும் இன்றிரவு முடிந்துவிடும்' என்று எண்ணிக்கொண்டு காலை வேளையில் ஊரின் புறமாக நடராசன் தனித்திருந்தான். அப்போது தனக்குத்தானே பேசிக்கொள்கிறான்.

**மூன்றாம் அங்கம், இரண்டாம் களம்**

இடம் : ஊர்ப்புறம் ஒரு சார்

காலம் : எற்பாடு (பிற்பகல்)

**நடராசன் (தனிமொழி)**

**இலக்கு வேண்டும்**

*காலையில் கடிநகர் கடந்து நமது*
*வேலை முடிக்குதும், வேண்டின் விரைவாய்*
*இன்று இரா முடுக்கினும் முடியும்...*

அடிகள் : 1 – 3

*எவ்வினை யோர்க்கும் இம்மையில் தம்மை*
*இயக்குதற்கு இன்பம் பயக்கும்ஓர் இலக்கு*
*வேண்டும்; உயிர்க்கு அது தூண்டுகோல் போலாம்.*
*ஈண்டு எப்பொருள்தான் இலக்கற்று இருப்பது?*

அடிகள் : 9 – 12



**சொல்லும் பொருளும்**

கடிநகர் – காவல் உடைய நகரம்



XI_Std_Tamil_Unit_2.indd 28 29-01-2025 18:08:33

### புல்லின் பரிவு

*இதோ ஓ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்*
*சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி;*
*அதன்சிறு பூக்குலை அடியொன்று உயர்த்தி*
*இதமுறத் தேன்துளி தாங்கி ஈக்களை*
*நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்*
*பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து*
*ஆசுஇலாச் சிறுகாய் ஆக்கி, இதோ! என்*
*தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே*
*"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்*
*தழைப்பதற்கு இடமிலை; சிறார்நீர் பிழைப்பதற்கு*
*ஏகுமின், புள்ஆ எருதுஅயத்து ஒருசார்*
*சிக்கிநீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்*
*புக்கவிட் டிருக்கும்இப் புல்லின் பரிவும்*
*பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும்*
*சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு*
*தோற்றுபே ரழகும் ஆற்றல்சால் அன்பும்*
*போற்றுதம் குறிப்பிற்கு ஏற்றதோர் முயற்சியும்*
*பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப,*
*ஆர்த்தெழும் அன்பினால் அனைத்தையுங் கலந்துதம்*
*என்பெலாம் கரைக்குநல் இன்பம் திளைப்பர்*

*அடிகள் : 13–32*

### சொல்லும் பொருளும்

காண்டி – காண்க; பூம்பராகம் – பூவில் உள்ள மகரந்தம்; ஆசு இலா – குற்றம் இலாத; தோட்டி – துறட்டி; அயம் – ஆடு, குதிரை; புக்க விட்டு – போகவிட்டு.

### நாங்கூழ்ப்புழுவின் பொதுநலம்
### (நாங்கூழ்ப் புழுவை நோக்கி)

*ஓகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு*
*ஓவாப் பாடே. உணர்வேன்! உணர்வேன்!*
*உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழின்மிகும்*
*உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ.*
*எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை*
*விடுத்தனை இதற்கா, எடுத்தஉன் யாக்கை.*
*உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய*
*விழுமிய சேறாய் வேதித்து உருட்டி*
*வெளிக்கொணர்ந் தும், புகழ் வேண்டார் போல*
*ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால்!*
*இப்புற் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்*
*எப்படி உண்டாம்? எண்ணாது உனக்கும்*
*குறும்புசெய் எறும்பும் கோடி கோடியாய்ப்*
*புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை?*
*ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?*
*(நாங்கூழ்ப்புழு குழிக்குள் மறைதலை நோக்கி)*
*விழுப்புகழ் வேண்டலை. அறிவோம். ஏனிது?*
*துதிக்கலம். உன்தொழில் நடத்துதி. ஆ! ஆ!*
*எங்கும் இங்ஙனே இணையிலா இன்பும்*
*பங்கமில் அன்பும் தங்குதல் திருந்தக்*
*காணார் பேணும் வாணாள் என்னே?*

*அடிகள் : 66–85*

*– பெ.சுந்தரனார்*

### சொல்லும் பொருளும்

நாங்கூழ்ப்புழு – மண்புழு; ஓவா–ஓயாத; பாடு–உழைப்பு; வேதித்து – மாற்றி.

### இலக்கணக்குறிப்பு

கடி நகர், சாலத் தகும் – உரிச்சொற்றொடர்கள்; உருட்டி – வினையெச்சம்; பின்னிய, முளைத்த – பெயரெச்சங்கள்; இளமுகம், நல்லூண், சிறுபுல், பேரழகு, முந்நீர், நன்மண் – பண்புத்தொகைகள்; பூக்குலை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை; ஆசிலா, ஓவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்; ஏகுமின் – ஏவல் பன்மை வினைமுற்று; பார்த்துப் பார்த்து, நில் நில், உழுதுழுது – அடுக்குத் தொடர்கள்; புழுக்களும் பூச்சியும் – எண்ணும்மை; தங்குதல் – தொழிற்பெயர்.

### பகுபத உறுப்பிலக்கணம்

**முளைத்த – முளை + த் + த் + அ**

முளை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.



XI_Std_Tamil_Unit_2.indd 29 29-01-2025 18:08:33

**ஏகுமின் – ஏகு + மின்**

ஏகு – பகுதி, மின் – ஏவல் வினைமுற்று விகுதி.

**விடுத்தனை – விடு + த் + த் + அன் + ஐ**

விடு – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

### புணர்ச்சி விதி

**உழுதுழுது – உழுது + உழுது**

**விதி:** 'உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும்' உழுத் + உழுது

**விதி:** 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உழுதுழுது.

**பேரழகு – பெருமை + அழகு**

**விதி:** 'ஈறு போதல் – பெரு + அழகு

**விதி:** 'ஆதி நீடல் – பேரு + அழகு

**விதி:** 'இனையவும்' – பேர் + அழகு (உகரம் கெட்டது)

**விதி:** 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – பேரழகு

### தமிழ் நாடக இலக்கண நூல்கள் சில

1. அகத்தியம்
2. குணநூல்
3. கூத்தநூல்
4. சந்தம்
5. சயந்தம்
6. செயன்முறை
7. செயிற்றியம்
8. முறுவல்
9. மதிவாணனார் நாடகத் தமிழ் நூல்
10. நாடகவியல்

### நூல்வெளி

மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி' (The Secret Way) என்ற நூலைத் தழுவி 1891இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார். இஃது எளிய நடையில், ஆசிரியப்பாவால் அமைந்தது. இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது. இந்நூலின் தமிழ்த்தாய் வாழ்த்தே தமிழ்நாட்டு அரசின் மொழி வாழ்த்துப் பாடலாக ஏற்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சுந்தரனார் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855இல் பிறந்தார். திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார். சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு, இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியுள்ளது.

### கற்பவை கற்றபின்...

1. "இப்புல்லின் பரிவும் பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது" என்னும் பாடல் அடிகளுடன்,

   "ஆயிரம் மிதிபடல்களிலும்
   நிமிர்ந்து நிற்கும்
   புற்களே உன்
   வழிகாட்டி" – என்ற புதுக்கவிதை வரிகளை ஒப்பிட்டு உங்கள் கருத்துகளை உரைக்க.

2. நாங்கூழ்ப்புழு நடராசனிடம் பேசியிருந்தால்... – ஒருபக்க அளவில் உரையாடலை உருவாக்குக.



XI_Std_Tamil_Unit_2.indd 30 29-01-2025 18:08:33

விரிவானம்

இயல் 2

# யானை டாக்டர்

– ஜெயமோகன்

நுழையும்முன்

காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் 'காட்டின் மூலவர்' என்பர். மனிதர்கள் அல்லாத உயிரினங்களில் தன்னை அறியும் ஆற்றலைப் பெற்றதும் மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டதுமான யானைகள் நமது பண்பாடு, கலைகளின் பிரிக்க முடியாத கூறாக விளங்குகின்றன. அவற்றுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நாம் பல்வேறு துன்பங்களைச் செய்கிறோம். வானத்து நிலவும் மண்ணுலகத்துக் கடலும்போல் என்றும் அலுக்காத யானைகளின் பேருருக் காட்சியைக் காண அவற்றின் தடத்தைப் பின்தொடர்வோம்.

டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, வனத்துறையின் மிருக டாக்டராக முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் டாப் ஸ்லிப்புக்கு வந்தவர். டாக்டர் கே. என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், காட்டு மிருகங்களுக்கும் பழக்கப்படுத்தப்பட்ட மிருகங்களுக்கும் மருத்துவ உதவி அளிப்பதைப் பணியாகக் கொண்டவர். ஆனால், மெல்ல மெல்ல யானைகளுக்குரிய சிறப்பு மருத்துவராக அறியப்பட்டார்.

தமிழ்நாட்டு வனத்துறையில் யானைகளைப் பற்றி நன்கறிந்தவர் என்று ஆன பின்னர் எங்கே யானைக்கு என்ன பிரச்சனை என்றாலும் அவர்தான் செல்ல வேண்டுமென்ற நிலை வந்தது. இந்தியாவில் மட்டுமல்ல, ஒரு கட்டத்தில் உலகத்தின் பல நாடுகளில் உள்ள யானைகளுக்கும் அவர்தான் மருத்துவ ஆலோசகர். டாக்டர் கே. யானைகளின் உடல்நிலையைப் பேணுவதற்காக உருவாக்கிய விதிமுறைகள்தான் இந்திய வனவியல் துறையின் கையேடாக இன்றும் உள்ளது.

ஒருமுறை முதுமலையில் ஒரு யானைக்குக் கால் வீங்கி அது காட்டில் அலைவதாகத் தகவல் வந்தபோது டாக்டர் கே. யுடன் நானும் வனத்துறை அதிகாரி என்ற முறையில் சென்றேன். காட்டுக்குள் அந்த யானை இருக்குமிடத்தைக் குறும்பர் ஏற்கெனவே கண்டு வைத்திருந்தார்கள். அவர்களை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு காட்டுக்குள் நுழைந்தோம். அது பழங்காலக் குதிரைப்பாதைதான். நெடுந்தூரம் சென்றபின் ஜீப்பை நிறுத்திவிட்டு நானும் டாக்டரும் காட்டுக்குள் சரிவில் இறங்கிச் சென்றோம். துப்பாக்கியுடன் இரு வனக்காவலர்களும் மற்ற பொருள்களுடன் இரு குறும்பர்களும் எங்களுடன் வந்தார்கள். உடலை அறுக்கும் வேய்மூங்கில் இலைகளை அகற்றி டாக்டர் கே. முன்னால் சென்று கொண்டே இருந்தார். தரையிலுள்ள வேர் முடிச்சுகள் என் கால்களைத் தடுக்கின.

எழுபதை நெருங்கினாலும் டாக்டர் கே. மிகக் கச்சிதமான உடல் கொண்டவர். காடு அவருக்கு மீனுக்குக் கடல்போல.





XI_Std_Tamil_Unit_2.indd 31 29-01-2025 18:08:34

கொஞ்ச நேரத்தில் காட்டில் யானைகளின் நெடி மெலிதாக வர ஆரம்பித்தது. யானைகள் ஏற்கெனவே எங்களைக் கவனித்துவிட்டன என்று தெரிந்தது. யானையின் மெல்லிய உறுமல்கள் கேட்டன. இன்னும் கொஞ்சம் இறங்கிச் சென்றபோது புல்வெளியில் பன்னிரண்டு யானைகள் கூட்டமாக நிற்பதைக் கண்டோம். எங்கள் கண்களை ஓட்டியபோது மேலும் ஆறு யானைகள் மூங்கில் புதர்களுக்குள் மேய்ந்துகொண்டிருந்தது தெரிந்தது. அவற்றின் அருகே நான்கு குட்டி யானைகளும் நிற்பது தெரிந்தது.

டாக்டர் கே. தன் கருவிகளை எடுத்துப் பொருத்திக் கொண்டார். சிறிய துப்பாக்கி போன்ற ஒன்று. அதில் மாத்திரையே குண்டாக இருக்கும். யானையைக் கூர்ந்து தொலைநோக்கியால் கவனித்தார். அதன் எடையை அவதானிக்கிறார் என்று தெரிந்தது. எடைக்கு ஏற்பத்தான் அந்த யானைக்கான மயக்க மருந்தின் அளவைத் தீர்மானிக்க முடியும். அவர் முழுமையாகத் தனக்குள் மூழ்கி வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கருவிகளைப் பொருத்திக் கையில் எடுத்துக்கொண்டு, "நீங்க இங்க இருங்க, நான் போய்ப் பார்க்கிறேன்" என்றார். அவரிடம் எதுவும் சொல்ல முடியாதென்று ஏற்கெனவே நான் நன்றாக அறிந்திருந்தேன்.

"அந்த யானை, பெரிய மரத்தடிக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கு. கீழே விழுந்தா அடிபட்டிரும். அதக் கொஞ்சம் சதுப்புப் பகுதிக்குக் கொண்டு வரணும். மத்த யானைகள் விவரம் புரியாம ரெஸிஸ்ட் பண்ணும்" என்றார். "யானைகளுக்குத் தெரியுமா, இந்தக் காயத்துக்குக் காரணம் மனுசங்கதான்னு" என்று கேட்டேன். "கண்டிப்பா... ரொம்ப நல்லாத் தெரியும்" என்றார். மனிதனின் கீழ்மைகள் நாள்தோறும் வளர்வதன் சாட்சியாக யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன. சுற்றுப்பயணம் என்ற பெயரில் காட்டுக்கு வரும் வசதியானவர்களும் படித்தவர்களும் குடித்துவிட்டு வெறியுடன் காட்டு மரத்தின் மீது வீசி எறியும் மதுக்குப்பிகள் மிகவும் ஆபத்தானவை. மற்ற எந்த மிருகத்தை விடவும் யானைகளுக்கு மிக அபாயகரமானவை. யானையின் அடிக்கால், மணல் மூட்டை போன்றது. மரத்தடியில் கிடக்கும் குப்பியின் பாகங்கள் அதன் மகத்தான எடை காரணமாகப் பாதங்களுக்குள் முழுக்கப் புகுந்துவிடும். நடக்க நடக்க உள்ளே செல்லும். அதன்பின் யானையால் நடக்கமுடியாது. காயம் சீழ் வைக்கும். குருதிப் பாதைகளையோ எலும்பையோ சீழ் தொட்டுவிட்டதென்றால் அதன்பின் யானை உயிருடன் எஞ்சாது.

"ஆனால், உயிர் போற வலி இருந்தாலும் யானை அலறாது, துடிக்காது. கண் மட்டும் நல்லாச் சுருங்கி இருக்கும். உடம்பு அங்கங்க அதிரும். யானை சம்மதிச்சா அதுக்கு மயக்க மருந்தே கொடுக்காமக்கூட அறுவைச் சிகிச்சை பண்ணலாம். அந்த அளவுக்குப் பொறுமையா ஒத்துக்கிட்டு நிக்கும். என்ன ஒரு படைப்பு. கடவுள் அவரோட நல்ல மனநிலையில் படைச்சிருக்கார்" என்று சொல்லிக்கொண்டே டாக்டர் கே. ஓடையைக் கடந்து இறங்கினார்.

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்**

| | |
|---|---|
| 1. கயம் | 12. அரசுவா |
| 2. வேழம் | 13. அல்லியன் |
| 3. களிறு | 14. அனுபமை |
| 4. பிளிறு | 15. ஆனை |
| 5. களபம் | 16. இபம் |
| 6. மாதங்கம் | 17. இரதி |
| 7. கைம்மா | 18. குஞ்சரம் |
| 8. வாரணம் | 19. வல்விலங்கு |
| 9. அஞ்சனாவதி | 20. கரி |
| 10. அத்தி | 21. அஞ்சனம். |
| 11. அத்தினி | |



XI_Std_Tamil_Unit_2.indd 32 29-01-2025 18:08:34

யானைகளை நெருங்கியபோது நடுவே நின்ற பெரிய பிடி யானை உரக்கப் பிளிறியது. அதைக் கேட்ட மற்ற யானைகளும் பிளிறின. அவை டாக்டர் கே. யை நோக்கித் திரும்பின. பிடி யானையின் காதுகள் வேகமாக அசைந்தன. தலையை வேகமாகக் குலுக்கியபடி டாக்டரை நோக்கி வந்தது. டாக்டர் கே. அசையாமல் நின்றார். அது மேலும் தலையைக் குலுக்கி எச்சரிக்கை விடுப்பதுபோலப் பிளிறிக்கொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது. யானை தலையைக் குலுக்கினால் அது எச்சரிக்கிறது, 'தாக்குவேன்' என்றுதான் அர்த்தம். என் இதயத்துடிப்பை என் காதுகளில் கேட்டேன். டாக்டர் கே. அசையாமல் சில நிமிடங்கள் நின்றார். யானையும் அசையாமல் நின்றது. டாக்டர் கே. மேலும் முன்னே சென்றார். இப்போது அந்த யானை நெருங்கி வந்தது. ஆனால், தலையைக் குலுக்கவில்லை. மத்தகத்தை நன்றாகத் தாழ்த்தியது. அதுவும் எச்சரிக்கை அடையாளம்தான். பல மணி நேரம் நீடித்த இக்காட்சியின் முடிவில் அந்தப் பிடி யானை பின்வாங்கியது. அதனைப் பின்பற்றி அனைத்து யானைகளும் மூங்கில் கூட்டங்களுக்குள் சென்றன.

டாக்டர் கே. கையைத் தூக்கி எங்களை வரும்படி சைகை காட்டினார். நானும் பிறரும் ஓடைக்குள் இறங்கினோம். வனக்காவலர்கள் பின்னால் தங்கிவிட நானும் குறும்பர்களும் முன்னால் சென்றோம். பாதிக்கப்பட்ட யானை சட்டென்று சாய்ந்திருந்த மரம் அதிர நிமிர்ந்து எங்களை நோக்கி வந்தது. அதன் பின்னங்கால் வீங்கி மற்ற கால்களைவிட இருமடங்காக இருந்தது. அதைக் கிட்டத்தட்ட இழுத்துத்தான் அது முன் நகர முடிந்தது.

விலங்குகளுள் யானை அதிக நாள்கள் வாழும் தரைவாழ் விலங்கு ஆகும். வேட்டை விலங்குகளாகவும் காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையில் உள்ளவையாகவும் இருக்கின்ற சிங்கம், புலி முதலியனவும் நெருங்க அஞ்சும் வலிமை கொண்டவை யானைகள். இவை குடும்பமாக வாழும்; மிகுதியான நினைவாற்றல் கொண்டவை. யானைகளுள் மூன்று வகைகள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள் ஆகியனவாகும். பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள்வரை உயிர் வாழ்கின்றன.



அது நாலடி முன்னால் வந்ததும் டாக்டர் அதைச் சுட்டார். மாத்திரை அதன் தோளுக்கு மேல் பதமான சதையில் புதைந்ததும் யானை உடல் அதிர்ந்து அப்படியே நின்றது. காதுகளை அசைப்பது நின்றது. அதன் அசைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. முன் காலைக் கொஞ்சம் வளைத்து ஆடியது. சட்டென்று பக்கவாட்டில் சாய்ந்து சேற்றை அறைந்து புல் மேல் விழுந்தது. துதிக்கையின் நுனியால் எங்களை வாசம் பிடித்தபின் யானை அசைவிழந்தது.

டாக்டர் கே. யானையின் அருகே அமர்ந்து சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினார். நான் அவருக்கு உதவினேன். காடுகளுக்குள் மற்ற யானைகள் எங்களையே கூர்ந்து நோக்கிக்கொண்டு நிற்பதை உணர்ந்தேன். யானையின் காலில் பாதி கண்ணாடிக்குப்பி ஒன்று முழுமையாக உள்ளே ஏறி இருந்தது. அதைச் சுற்றிச் சீழ் கட்டிப் பொருக்கோடியிருந்தது. கத்தியால் டாக்டர் கே. அந்தப் பொருக்கை வெட்டிச் சீழ்பட்ட சதையை முழுக்க, சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டியெடுத்தார். ஆழப் பதிந்திருந்த கண்ணாடிக்குப்பியை எடுத்தெறிந்தார். "ஒரு வாரம்கூட ஆகலை, பொழைச்சுது" என்றார்.



XI_Std_Tamil_Unit_2.indd 33 29-01-2025 18:08:34



தலையணை அளவுக்குப் பஞ்சை எடுத்து, அதில் மருந்தை நனைத்து, உள்ளே திணித்து இறுக்கி வைத்துப் பெரிய துணியொன்றால் சுற்றிக் கட்டினார். அதன் பசை இறுக்கமாக ஒட்டிக்கொண்டது. அதன் காலில் கூடாரத் துணி போன்ற தோலின் மீது சிறிய எவர்சில்வர் கிளிப்புகளைக் குத்தி இறுக்கி அதனுடன் துணியைச் சேர்த்து ஒட்டிக்கட்டி இறுக்கி முடித்தார். அதன் மேல் கீழே கிடந்த கரிய சேற்றை அள்ளி நன்றாகப் பூசி மூடினார். யானையின் காதில் அதைத் திரும்பவும் கண்டுபிடிப்பதற்கான சிக்னலர் கம்மலைக் குத்தி அணிவித்துவிட்டு எழுந்தோம். மறைந்திருந்த யானைகள் ஒவ்வொன்றாகத் தரையில் கிடந்த யானையைச் சூழ்ந்துகொண்டன. துணியைத் துதிக்கையால் தடவிப் பரிசோதனை செய்து பெரிய யானை மெல்லப் பிளிற, மற்ற யானைகளும் அதனைத் தொடர்ந்து பிளிறின. ஒரு குட்டி யானை மட்டும் மஞ்சணத்தி மரத்தடியில் நின்று காதுகளை முன்னால் தள்ளி எங்களையே பார்த்தது.

"துணிக்கட்டை அவுத்திராதுல்ல?" என்றேன். அதுக்குத் தெரியும். ஆனா யானைக்குப் பொதுவா வெள்ளை நிறம் பிடிக்காது. சேறு பூசலையன்னா நிம்மதியில்லாம காலை நோண்டிக்கிட்டே இருக்கும் என்றார். "குணமாயிடுமா" என்றேன். "அனேகமா பதினஞ்சு நாளிலே பழையபடி ஆயிடும். யானையோட ரெஸிஸ்டென்ஸ் பயங்கரம். சாதாரண ஆண்டிபயாட்டிக்கூட அபாரமா வேலை செய்யும்" என்றார். மீண்டும் டாப் ஸ்லிப்புக்குக் காரில் திரும்பும்போது டாக்டர் கே., "என்ன ஒரு அற்புதமான படைப்பு. என்னிக்காவது தமிழ்நாட்டிலே யானை இல்லாமப் போனா அப்புறம் நம்ம பண்பாட்டுக்கே என்ன அர்த்தம்?" என்றார்.

அடுத்தமுறை அவரை யானை முகாமில் சந்தித்தேன். அவர் வந்ததும் நாற்பத்தெட்டுத் துதிக்கைகள் தலைக்குமேல் எழுந்து அவரை வரவேற்றன. அவர் அவற்றுடன் கொஞ்சியபடி, குலவியபடி வேலைகளில் மூழ்கினார். ஒவ்வொரு யானையாகப் பார்த்துப் பரிசோதனை செய்து அறிக்கைகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். நடுவே ஷெல்லி, கொஞ்சம் கம்பன், கொஞ்சம் பரணர் பற்றிப் பேசினார். வனத்துறை அதிகாரி என்பதை மறந்த நான், மெல்ல மெல்ல அவரின் உதவியாளராகவும் ரசிகராகவும் மாணவராகவும் மாறிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் அவர் வீட்டுக்குச் சென்றதுமே அவர் எழுதி வைத்திருந்த பெரிய ஆய்வேட்டை எடுத்து நீட்டினார். "படிச்சுப் பாரு" என்றார். அவருடன் பேசிக்கொண்டே இருந்ததில் இருட்டிவிட்டது. "கௌம்பறியா.. வேணுமானா இங்கேயே தங்கிக்கோ" என்றார். அசதியாக இருந்ததால் நான் படுத்துக்கொண்டே படித்தேன். டாக்டர் இரவு உணவை அரைமணி நேரத்தில் சமைத்தார். இருவரும் அமைதியாகச் சாப்பிட்டோம். கோவில் யானைகளைக் காட்டுக்குள் கொண்டு வந்து பராமரித்துத் திருப்பி அனுப்புவதற்குண்டான செயல் திட்டத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். இரவு பத்து மணிக்குக் களைப்புக் காரணமாக நான் படுத்துத் தூங்கிவிட்டேன்.

மீண்டும் விழித்தபோது அறையில் வெளிச்சம் இருந்தது. டாக்டர் கம்பளிச்சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தார். "வெளியே ஏதோ சத்தம் கேக்குது... யானை வாசமும் அடிக்குது" என்றார். "யானைக்கூட்டம் வந்திருக்குமோ" என்றேன். "வழக்கமா இந்தப் பக்கம் வராது. ஏதோ காரணம் இருக்கணும்" என்று டார்ச்சை எடுத்துக் கொண்டார். நானும் கிளம்பினேன். ஆனால் அதற்குள்ளாகவே டாக்டர் கே. யானையைப் பார்த்துவிட்டிருந்தார். "குட்டி.. இரண்டு வயசுக்குள்ள இருக்கும்" என்று அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் சில கணங்களுக்குப் பின் நானும் அந்த யானைக்குட்டியைக் கண்டேன். "இந்த வயசிலே தனியா வராதே" என்றார் டாக்டர். "வா, பாப்போம்." இருட்டில் வெளிச்சத்தை அடித்தால் அதன் பின்சூழலைப் பார்க்க முடியாது என்பதால் இருட்டுக்குள்ளேயே சென்றோம்.

யானைக்குட்டி மெல்லப் பிளிறியபடி துதிக்கையைத் தூக்கி மோப்பம் பிடித்தது. "ஈஸி ஈஸி" என்றார் டாக்டர். யானைக்குட்டி மெல்ல முன்னால் வந்தது. அது நொண்டுவதுபோல் இருந்தது. "காயம் பட்டிருக்கு" என்றேன். யானைக்குட்டி மீண்டும் நின்று ஜெர்ஸி பசு கத்தும் ஒலியில்

யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாட்டின் காட்டியல் வல்லுநர்களுள் முக்கியமானவர். யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர்; உலகப்புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர். வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான 'வேணுமேனன் ஏலீஸ்' விருதினை 2000ஆம் ஆண்டில் பெற்றார்; தமிழ்நாட்டுக் கோவில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின்மூலம் செயல்படுத்தியவர்.

பிளிறியது. மீண்டும் தள்ளாடியபடி முன் நகர்ந்தது. டாக்டர் என்னிடம், "நில்லு" என்று சொல்லிவிட்டு அருகே சென்றார். அது துதிக்கையை ஊசல்போல் வீசித் தலையை வேகமாக ஆட்டி அவரை வரவேற்றது. அவர் அந்தக் குட்டி யானையைத் தட்டித்தட்டி அமைதியாக்கினார். "இவனைப் படுக்க வைக்கணும். இப்பச் சொல்லிப் புரிய வைக்க முடியாது. போய் என்னோட கிட்டை எடுத்துட்டு வா" என்றார். நான் அறைக்குள் ஓடிச்சென்று அவரது பெரிய மருத்துவப் பெட்டியைக் கொண்டு வந்தேன்.

டாக்டர் கே. அதன் வாயில் ஊசி போட்டார். துதிக்கையை முன்னங்கால்களுக்கு நடுவிலிருந்து முன்பக்கம்வரை ஊஞ்சல்போல ஆட்டி முன்னும் பின்னும் உடலை அலைத்தது. ஆட்டம் தளர்ந்து மெல்லப் பக்கவாட்டில் சரிந்து உட்கார்ந்து விழுந்து கால்களை நீட்டிப் படுத்தது. "விளக்கு" என்றார். நான் காட்டினேன். மறுபடியும் மதுக்குப்பி. குட்டி யானையின் கீழ் நுனிக் கால்களுக்கு வெளியே நீட்டித் தெரிந்தது. யானை அதிக எடையில்லாததனாலும் அதிக நாள்கள் ஆகாமல் இருந்ததனாலும் அது உள்ளே செல்லவில்லை. டாக்டர் அதைப் பிடித்து இழுத்து உருவினார். குருதி அவர் கையை நனைத்தது. கையை உள்ளே விட்டு மதுக்குப்பியின் பாகம் ஏதும் இல்லையென்பதை உறுதி செய்து, பஞ்சை மருந்தில் நனைத்து உள்ளே செலுத்திக் கட்டினார்.



XI_Std_Tamil_Unit_2.indd 35 29-01-2025 18:08:34

"ஒரு மணி நேரத்தில எந்திரிச்சுடுவான்... காலையிலே முதுமலைக்குத் திரும்பிப் போயிடுவான்" என்றார் கே. "முதுமலைக்கா?" என்றேன். "ஆமா, அங்கே இருந்துதானே வந்திருக்கான். நீயும் இவனைப் பாத்திருக்கே. ஒண்ணரை வருசம் முன்னாடி நாம முதுமலையிலே ஒரு யானைக்கு இதேமாதிரி மதுக்குப்பி எடுத்தோமே, அப்போ அந்தப் பெரிய மஞ்சணத்தி மரத்தடியில நின்னது இவந்தான். அப்ப ரொம்பச் சின்னக்குட்டி" என்றார். "எப்படித் தெரியும்?" என்றேன். "ஏன், அங்க பார்த்த ஒரு மனுசனை உன்னால திரும்பிப் பாத்தா சொல்லிட முடியாதா?" என்றார். பின்னர் டாக்டர் கே. எழுந்து கைகளைப் பஞ்சால் அழுத்தித் துடைத்துக் காகிதப் பைக்குள் போட்டார். "அவ்வளவு தூரம் உங்களைத் தேடியா வந்திருக்கான்.. ஆச்சரியம்!" என்றேன். "பாவம், நல்ல வலியிருந்திருக்கு. யானைகள் அடையாளங்களைக் கண்டுகொண்டு தேடிச் செல்வதைப் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கேன். முந்நூறு கிலோ மீட்டர் தூரம்கூட யானைகள் தேடிச் செல்வது உண்டு. அவை சிறு தகவலைக்கூட மறப்பதில்லை" என்றார். இருந்தாலும் ஜீப்பில் திரும்பிய எங்களை ஒரு குட்டி யானை அத்தனை தூரம் தேடி வந்தது, என்னைப் பிரமிப்பூட்டியது.

நாங்கள் மீண்டும் வீட்டுப் படியை அடைந்ததும் டாக்டர் கே. காட்டை உற்றுப் பார்த்தார். இருளுக்குள் மெல்லிய இருளசைவுகள் உருவாகின. பெரிய யானைக்கூட்டமே அங்கே நிற்பதைக் காண முடிந்தது. நான் விளக்கை அடிக்கப் போனேன். "வேண்டாம்" என்றார். என்னால் அந்தக் கால் ஊனமான யானையை அதன் மெல்லிய கோணல் கொண்ட நடையை வைத்து அடையாளம் காண முடிந்தது. அவை முன்னால் வந்து அரை வட்டமாகக் காதுகளை அசைத்துக்கொண்டு நின்றன.

"வந்து கூட்டிக்கொண்டு போயிடும், வா" என்று டாக்டர் சொல்லிக்கொண்டே திரும்பியபோது சட்டென்று இருபதுக்கும் மேற்பட்ட யானைப் பிளிறல்கள் ஒன்றாக இணைந்து பேரொலி எழுப்பின. என் உடல் சிலிர்த்துக் கூசிக் கண்கள் பொங்கி நிறைந்து வழிந்தன. நெஞ்சடைக்கக் கை கூப்பியபடி ஒரு சொல் மிச்சமில்லாமல் மனமிழந்து நின்றேன். யானைக்கூட்டம் துதிக்கைகளைத் தூக்கி வீசிச் சேர்ந்து மீண்டும் மீண்டும் பிளிறின.

என்னை "வா" என்று சொல்லி உள்ளே சென்றார் யானை டாக்டர்.

**(யானை டாக்டர் குறும்புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்.)**

## நூல்வெளி

ஜெயமோகன், நாகர்கோவிலைச் சேர்ந்தவர். விஷ்ணுபுரம், கொற்றவை உள்ளிட்ட பல புதினங்களோடு சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவர் இயற்கை ஆர்வலர்; யானையைப் பாத்திரமாக வைத்து ஊமைச்செந்நாய், மத்தகம் ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார். இந்தக் குறும்புதினம் 'அறம்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

## கற்பவை கற்றபின்...

1. காட்டுவளமும் காட்டுயிர்களும் பாதுகாக்கப்படுதல் – உயிர்ச்சங்கிலி உயிர்ப்புடன் அமைதல் இரண்டு கருத்துகளுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் கருத்தாடல் நிகழ்த்துக.
2. நீங்கள் அண்மையில் படித்த சிறுகதை ஒன்றை வகுப்பறையில் கூறுக.



XI_Std_Tamil_Unit_2.indd 36 29-01-2025 18:08:34

இனிக்கும் இலக்கணம்

இயல் 2

# புணர்ச்சி விதிகள்

சொற்புணர்ச்சியின்போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர். மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்துகொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

## உயிரீற்றுப் புணர்ச்சி

### அ) உடம்படுமெய்ப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துகளாய் இருந்தால், உச்சரிப்பின்போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும். எனவே, உடன்படாத அவ்விரு சொற்களையும் சேர்த்துப் புணர்க்க வரும் மெய், உடம்படுமெய் ஆகும். பதினெட்டு மெய்களுள் ய், வ் ஆகிய இரு மெய்கள் மட்டும் உடம்படுமெய்களாக வரும்.

| | | | |
|---|---|---|---|
| காட்சியழகு | - | காட்சி + ய் + அழகு | (இகர ஈறு) |
| தீயணைப்பான் | - | தீ + ய் + அணைப்பான் | (ஈகார ஈறு) |
| கலையறிவு | - | கலை + ய் + அறிவு | (ஐகார ஈறு) |
| மாவிலை | - | மா + வ் + இலை | (ஆகார ஈறு) |
| பூவழகு | - | பூ + வ் + அழகு | (ஊகார ஈறு) |
| சேயிழை | - | சே + ய் + இழை | ஏகார ஈறு யகர, வகர உடம்படுமெய்கள் பெற்று வருகின்றன |
| சேவடி | - | சே + வ் + அடி | |

| | |
|---|---|
| இ ஈ ஐவழி யவ்வும் ஏனை<br>உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்<br>உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்<br>( நன்னூல் – 162 ) | இ, ஈ, ஐ – ய்<br>பிற உயிர்கள் – வ்<br>ஏ – ய், வ் |

### ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

i) குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.



XI_Std_Tamil_Unit_2.indd 37 29-01-2025 18:08:35

மாசற்றார் – மாசு + அற்றார்

மாசு(ச்+உ) + அற்றார் – 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

மாச் + அற்றார் – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

> உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் ( நன்னூல்–164 )

ii) ட், ற் என்னும் இரு மெய்களோடு ஊர்ந்துவரும் நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும்போது ஒற்று இரட்டித்துப் புணரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வீடு + தோட்டம் | – | வீட்டு + தோட்டம் | – | வீட்டுத்தோட்டம் |
| காடு + மரம் | – | காட்டு மரம் | | |
| முரடு + காளை | – | முரட்டு + காளை | – | முரட்டுக்காளை |
| பகடு + வாழ்க்கை | – | பகட்டுவாழ்க்கை | | |
| சோறு + பானை | – | சோற்று + பானை | – | சோற்றுப்பானை |
| ஆறு + நீர் | – | ஆற்றுநீர் | | |
| வயிறு + பசி | – | வயிற்று + பசி | – | வயிற்றுப்பசி |
| கயிறு + வண்டி | – | கயிற்றுவண்டி | | |

> நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
> டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே. (நன்னூல்–183)

## இ) முற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதியில் உள்ள முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலவே தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

வரவறிந்தான் – வரவு + அறிந்தான்

வரவு (வ் +உ) + அறிந்தான் – 'முற்றும் அற்று ஒரோவழி' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது.

வரவ் + அறிந்தான் – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வரவறிந்தான்' எனப் புணர்ந்தது.

> முற்றும் அற்று ஒரோவழி (நன்னூல்–164 )

## ஈ) இயல்பீறு, விதியீறு – புணர்ச்சி

இயல்பீறாகவோ விதியீறாகவோ வரும் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உயிரெழுத்துடன், க ச த ப என்னும் வல்லின மெய்களை முதலில்கொண்ட வருமொழிச்சொல் சேரும்போது அவற்றிடையே வல்லொற்று மிகுந்து புணரும்.

> இயல்பீறு என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம்
> பள்ளி + தோழன் – பள்ளித்தோழன்
> விதியீறு என்பது புணர்ந்தபின் நிற்கும் சொல்லின் வடிவம்
> நிலம்+ தலைவர் – நில + தலைவர் ( விதியீறு ) – நிலத்தலைவர்

*திரைப்படம் – திரை + படம்*

*திரை + ப் + படம் – 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்னும் விதிப்படி' திரைப்படம்' எனப் புணர்ந்தது.*

*மரக்கலம் – மரம் + கலம் – மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்னும் விதியின்படி*

*மர + கலம் – 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்னும் விதிப்படி 'மரக்கலம்' எனப் புணர்ந்தது.*

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
க ச த ப மிகும்; விதவாதன மன்னே. ( நன்னூல்–165)

## உ) பூப்பெயர்ப் புணர்ச்சி

*பூ என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க வருமொழியின் முதலில் வல்லின மெய்யெழுத்துகள் வரும்போது வல்லினமெய் மிகுந்து புணர்வது மட்டுமன்றி, அவற்றிற்கு இனமான மெல்லின மெய் மிகுதலும் உண்டு. எனினும், மெல்லின மெய் மிகுதலே பெருவழக்காக உள்ளது.*

*பூ + கொடி – பூக்கொடி, பூங்கொடி  பூ + சோலை – பூச்சோலை, பூஞ்சோலை*

*பூ + தொட்டி – பூத்தொட்டி, பூந்தொட்டி  பூ + பந்து – பூப்பந்து, பூம்பந்து*

பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும் (நன்னூல்–200)

## ஊ) மெய்யீற்றுப் புணர்ச்சி

*நிலைமொழியீற்றின் இறுதி எழுத்து, மெய்யெழுத்தாக நிற்க வருமொழியின் முதலாக வரும் உயிரெழுத்துடனும் மெய்யெழுத்துடனும் சேரும் புணர்ச்சியை மெய்யீற்றுப் புணர்ச்சி என்பர்.*

*வாயொலி – வாய் + ஒலி – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'வாயொலி' எனப் புணர்ந்தது.*

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன்னூல் – 204)

*மண் + மகள் – மண்மகள் என்பதில் நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் மெய்யெழுத்தாக நிற்க இயல்பாகப் புணர்ந்தது.*

## எ) தனிக்குறில்முன் ஒற்று – புணர்ச்சி

*நிலைமொழி தனிக்குறில் சார்ந்த மெய்யெழுத்தாக நின்று, வருமொழியின் முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.*

*கல் + அதர் – கல்லதர் – தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்*

*கல்ல் + அதர் – உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி கல்லதர் எனப் புணர்ந்தது.*

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன்னூல் – 205)



XI_Std_Tamil_Unit_2.indd 39 29-01-2025 18:08:35

### ஏ) மகர ஈற்றுப் புணர்ச்சி

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்.

- மகரமெய் கெட்டுப் புணரும்
- மகரமெய் கெட்டு இன மெல்லெழுத்துத் தோன்றிப் புணரும்.
- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.

பாடம் + வேளை – பாடவேளை – மகரமெய் கெட்டுப் புணர்ந்தது.

பழம் + தோல் – பழ + தோல் – பழத்தோல்

– மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

காலம் + கடந்தவன் – காலங்கடந்தவன்

– வருமொழி முதலெழுத்துக்கேற்ப மகரமெய் திரிந்து புணர்ந்தது.

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் (நன்னூல்–219)

### ஐ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

பண்புப்பெயர்ச்சொல் நிலைமொழிச் சொல்லாக நின்று வருமொழிச்சொல்லுடன் புணரும்போது பின்வரும் மாற்றங்களை அடையும்.

1. நிலைமொழியின் இறுதியில் உள்ள மை கெட்டுப் புணரும்.

பெருவழி – பெருமை + வழி – 'ஈறுபோதல்' விதிப்படி 'மை' விகுதி கெட்டுப் பெருவழி எனப் புணர்ந்தது.

2. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாகத் திரியும்.

பெரியன் – பெருமை + அன்

பெரு + அன் – ஈறுபோதல்

பெரி + அன் – இடை உகரம் இய்யாதல்

பெரி + ய் + அன் – உடம்படுமெய் 'ய்' இடையில் தோன்றும்

பெரியன் – (ய்+அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

3. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள குறில் எழுத்து நெடில் எழுத்தாய் மாறும்.

மூதூர் – முதுமை + ஊர்

முது + ஊர் – ஈறுபோதல்

மூது + ஊர் – ஆதிநீடல்

மூத் + ஊர் – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

மூதூர் – (த்+ஊ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

4. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல்லின் முதலில் உள்ள அகரம் ஐகாரமாக மாறும்.

பைந்தமிழ் – பசுமை + தமிழ்



XI_Std_Tamil_Unit_2.indd 40 29-01-2025 18:08:35

பசு + தமிழ் – ஈறுபோதல்

பைசு + தமிழ் – அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தமிழ் – இனையவும் 'சு' கெட்டது

பைந்தமிழ் – (ந்) இனமிகல் என்னும் விதிப்படி.

5. மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.

நெட்டிலை – நெடுமை + இலை

நெடு + இலை – ஈறுபோதல்

நெட்டு + இலை – தன்னொற்றிரட்டல்

நெட்ட் + இலை – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

நெட்டிலை – (ட்+இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் தன்னொற்றிரட்டல் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

வெற்றிலை – வெறுமை + இலை – வெற்று + இலை – வெற்றிலை எனப் புணர்ந்தது.

6. ஈறுபோதல் விதியின்படி மை கெட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் 'முன் நின்ற மெய் திரிதல்' விதியின்படி புணரும்.

செந்தமிழ் – செம்மை + தமிழ்

செம் + தமிழ் – ஈறுபோதல்

செம் + தமிழ் – (ம்–ந்) முன் நின்ற மெய் திரிதல்

7. ஈறுபோதல் விதியின்படி மை விகுதி கெட்டு, நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாய் இருந்து வருமொழி வல்லின மெய்யாக இருப்பின் 'இனமிகல்' விதியின்படி புணரும்.

கருங்கடல் – கருமை + கடல்

கரு + கடல் – ஈறுபோதல்

கரு + கடல் – (ங்) இனமிகல்

8. மை விகுதி கெட்டு நிற்கும் நிலைமொழியின் இறுதி எழுத்து மேற்சொன்ன எவ்விதியிலும் பொருந்தாதிருப்பின் 'இனையவும்' என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

பைந்தளிர் – பசுமை + தளிர்

பசு + தளிர் – ஈறுபோதல்

பைசு + தளிர் – அடி அகரம் 'ஐ' ஆதல்

பை + தளிர் – இனையவும்

பை + தளிர் – (ந்) இனமிகல்

ஈறுபோதல் இடைஉகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்
தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே (நன்னூல்–136)



XI_Std_Tamil_Unit_2.indd 41 29-01-2025 18:08:35

கற்பவை கற்றபின்...

புணர்ச்சி விதிகள் ஏன்? இவற்றிலிருந்து நீங்கள் பெறும் பயன்களைப் பற்றிக் கலந்துரையாடல் செய்க.

## இலக்கணத் தேர்ச்சிகொள்.

1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
3. புணர்ச்சி விதி தந்து விளக்குக :

   புலனறிவு, வில்லொடிந்தது, வழியில்லை, திரைப்படம், ஞாயிற்றுச்செலவு.

4. விதி வேறுபாடறிந்து விளக்குக:

   தன்னொற்றிரட்டல் – தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

   இனமிகல் – வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.

## 5. பொருத்தி விடை தேர்க.

அ) அடி அகரம் ஐ ஆதல் – 1) செங்கதிர்

ஆ) முன் நின்ற மெய் திரிதல் – 2) பெருங்கொடை

இ) ஆதிநீடல் – 3) பைங்கூழ்

ஈ) இனமிகல் – 4) காரிருள்

அ) 4, 3, 1, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 2, 1, 3, 4

## 6. கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறுபோதல்' என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

i) அ, ஆ, இ சரி, ஈ தவறு ii) அ, இ, ஈ சரி, ஆ தவறு



XI_Std_Tamil_Unit_2.indd 42 29-01-2025 18:08:35

## தெரிந்து தெளிவோம்

### மெய்ம்மயக்கம்

சொல்லின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவது மெய்ம்மயக்கம் எனப்படும். இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இரண்டு வகைப்படும்.

### உடனிலை மெய்ம்மயக்கம்

சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம். தமிழில் க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்துகள் தம் எழுத்துகளுடன் மட்டுமே சேரும். இந்த எழுத்துகளின் அருகில் அவற்றுக்குரிய எழுத்து வரிசை மட்டுமே வரும். பிற எழுத்துகள் வாரா. அவ்வாறு வந்தால் அச்சொல் தமிழ்ச்சொல்லாக இருக்காது.

எ.கா. பக்கம் என்ற சொல்லில் (ப + க் + க் + அ + ம்) க் என்னும் மெய்யெழுத்து தொடர்ந்து இருமுறை வந்துள்ளது.

| | |
|---|---|
| அச்சம் | எச்சம் |
| மொத்தம் | சாத்தன் |
| அப்பம் | கப்பம் |

### வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம். தமிழில் ர், ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகள் தம் வரிசை எழுத்துகளுடன் சேர்ந்து வராமல் பிற மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும். இவ்விரு மெய்யெழுத்துகளும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரியவை.

| | |
|---|---|
| ர் | – தேர்தல், உயர்வு |
| ழ் | – வாழ்பவன், சூழ்க |

க், ச், த், ப், ர், ழ் ஆகிய ஆறனையும் தவிர்த்த ஏனைய பன்னிரண்டு மெய்களும் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ளன. இவற்றையும் மெய்ம்மயக்கம் என்றே கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| ட் – பட்டம், காட்சி | ம் – அம்மா, அம்பு |
| ற் – வெற்றி, பயிற்சி | ன் – மன்னன், இன்பம் |
| ங் – அங்ஙனம், தங்கம் | ய் – செய்யலாம், வாய்மை |
| ஞ் – விஞ்ஞானம், மஞ்சள் | ல் – நல்லவன், செல்வம் |
| ண் – தண்ணீர், நண்பகல் | வ் – இவ்விதம், தெவ்யாது |
| ந் – செந்நெறி, தந்தம் | ள் – உள்ளம், கொள்கை |

### ஈரொற்று மெய்ம்மயக்கம்

தனிச்சொற்களிலோ கூட்டுச்சொற்களிலோ சொற்களின் இடையில் ய், ர், ழ் ஆகிய மெய்கள் ஈரொற்றாய் வரும். (மூன்று மெய்களாக மயங்கி வரும்) இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர்.

| | | |
|---|---|---|
| ய் – காய்ச்சல், நாய்க்கால், | ர் – உயர்ச்சி, தேர்க்கால் | ழ் – வீழ்ச்சி, காழ்ப்புணர்ச்சி |



XI_Std_Tamil_Unit_2.indd 43 29-01-2025 18:08:35

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருத்தமான இலக்கிய வடிவத்தைத் தேர்க.

   அ) ஒற்றை வைக்கோல் புரட்சி – மரபுக் கவிதை    ஆ) மனோன்மணீயம் – சிறுகதை

   இ) யானை டாக்டர் – குறும் புதினம்    ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________

   அ) மண்புழு    ஆ) ஊடுபயிர்    இ) இயற்கை உரங்கள்    ஈ) இவை மூன்றும்

3. 'போது' என்ற சொல் உணர்த்தும் பொருள் ________

   அ) போதும்    ஆ) காடு    இ) மொட்டு    ஈ) மேகம்

4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ________

   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்    ஆ) நேரடிப்பொருள்கள்

   (i) அ– மட்டும் சரி    (ii) ஆ – மட்டும் சரி    (iii) இரண்டும் சரி    (iv) அ – தவறு, ஆ – சரி

5. பிழையான தொடரைக் கண்டறிக.

   அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

   ஆ) காயா, கொன்றை, பிடவம் ஆகிய மலர்கள் முல்லை நிலத்தில் பூக்கக்கூடியன.

   இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

   ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

**குறுவினா**

1. தமிழ்நாட்டின் மாநிலமரம் – சிறு குறிப்பு வரைக.
2. "உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ" – தொடரின் பொருள் யாது?
3. ஐங்குறுநூறு – குறிப்பு வரைக.
4. அலர்ந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
5. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை ?

**சிறுவினா**

1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
2. குறித்த காலத்திற்கு முன்பாக ஊர் திரும்பிய தலைவன் கூறுவனவற்றை ஐங்குறுநூறு கொண்டு விளக்குக.
3. "இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில் தழைப்பதற்கு இடமிலை" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.



XI_Std_Tamil_Unit_2.indd 44    29-01-2025 18:08:35

## நெடுவினா

1. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.
2. புல், நாங்கூழ்ப் புழுவை நோக்கி நடராசன் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.
3. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



ஆபிரகாம் பண்டிதர்
(1859 – 1919)

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம்கொண்டு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவற்றின் நுட்பங்களைப் பயின்றார்; திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார்; சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதைவிடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார்; தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர்; பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று, 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கி, தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார்; அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்'. எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

### வினாக்களுக்கு விடையளிக்க

1. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
2. வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
3. உடனிலை மெய்ம்மயக்கமாகவும், வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி, மெய்களை அடிக்கோடிடுக.
4. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.
   அ) சங்கீதம் ஆ) வித்தியா இ) மகாஜனம் ஈ) சாகரம்
5. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) பயின்றார் ஆ) தொடங்கினர்

### தமிழாக்கம் தருக.

1. Just living is not enough. One must have sunshine, freedom and a little flower - Hans Anderson
2. In nature, light creates the colour. In the picture, colour creates the light - Hans Hofmann
3. Look deep into nature and then you will understand everything better – Albert Einstein
4. Simplicity is nature's first step, and the last of art - Philip James Bailey
5. Roads were made for journeys not destinations – Confucius



XI_Std_Tamil_Unit_2.indd 45 29-01-2025 18:08:36

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

1. உலை, உளை, உழை    2. வலி, வளி, வழி    3. கலை, களை, கழை
4. கனை, கணை    5. குரை, குறை    6. பொரி, பொறி

(எ.கா.) உலை, உளை, உழை

மன **உளை**ச்சல் தீரவும் வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழை**க்க வேண்டும்.

## கீழ்க்காணும் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க

உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!!

இயற்கை உணவுத் திருவிழா

நாள் : தை 5 முதல் 11 வரை நேரம் : மாலை 6 – 10 மணி இடம் : தீவுத்திடல், சென்னை



| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல.....

## இலக்கியநயம் பாராட்டுக.

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"

– கம்பர்

## படித்துச் சுவைக்க

விழுந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறது
அடடா. . . வண்ணத்துப்பூச்சி.

– மோரிடாகே

ஓர் அழகு போனாலும் மற்றொரு அழகு, அதன் இடத்தை நிரப்பும் என்பது இதன் உட்கருத்து.




## மொழியோடு விளையாடு

எண்ணங்களை எழுத்தாக்குக.



**புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.**

1. ஐந்தெழுத்துக்காரன்
முதலிரண்டோ
பாட்டெழுதுபவரின் பட்டம்
இரண்டும் மூன்றுமோ
பசும்பால் என்பதன் பின் இறுதி
கடைசி இரண்டெழுத்தோ
மானினத்தில் ஒரு வகையாம்
இரண்டும் ஐந்துமோ
பொருளை விற்கத் தேவையாம்
அது என்ன ?

2. இறுதி இரண்டெழுத்தோ
பழத்தின் முந்தைய பச்சை நிலை
தமிழ்க்கடவுளின் முற்பாதியை
முதலிரு எழுத்தில் வைத்திருக்கும்
நடுவிலோ ஓரெழுத்து ஒருமொழி
அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம்
சேர்த்தால் காயாவான்
பிரித்தால் நிலைமொழியில் மரமாவான்
ஏழெழுத்துக்காரன் அவன் யார்?

**இவைபோன்ற சிறுசிறு புதிர்க் கவிதைகளை எழுதிப் பழகுக.**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்பு குறித்த முழக்கத்தொடர்கள் எழுதிக் காட்சிப்படுத்துக.**

*(எ.கா.) 1. விதைப்பந்து எறிந்திடுவீர்! பூமிப்பந்து காத்திடுவீர்!*
*2. சிட்டுக்குருவிக்குக் கொஞ்சம் அரிசியிடு! உலக உயிர்களுக்கு உன் கருணையிடு!*

## செய்து கற்போம்

வேளாண்மை தொடர்பான சொல் விளக்க அகராதி ஒன்று உருவாக்குக.



## நிற்க அதற்குத் தக

| கோபம் வரும்போது... | உடலில் நிகழும் மாற்றங்கள் | மனதில் நிகழும் மாற்றங்கள் | நான் செய்யவேண்டியது |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன் |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

### படிப்போம்; பயன்படுத்துவோம்!

Organic Farming – இயற்கை வேளாண்மை
Chemical Fertilizers – வேதி உரங்கள்
Shell Seeds – ஒட்டு விதை
Farmyard Manure – தொழு உரம்
Root Nodes – வேர்முடிச்சுகள்
Harvesting – அறுவடை
Value Added Product – மதிப்புக்கூட்டுப் பொருள்

### அறிவை விரிவு செய்

- இயற்கை வேளாண்மை – கோ. நம்மாழ்வார்.
- பனைமரமே பனைமரமே – ஆ. சிவசுப்பிரமணியன்.
- யானைகள் – அழியும் பேருயிர் – ச. முகமது அலி, க. யோகானந்த்.
- Elephants: Majestic Creatures of the Wild – Shoshani. J.



XI_Std_Tamil_Unit_2.indd 47 29-01-2025 18:08:38

வாழ்வியல் இலக்கியம்

இயல் 2

# திருக்குறள்



## அடக்கமுடைமை

1) *நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.*

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

2) *யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்கவேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

3) *தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு.**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.

**அணி : வேற்றுமை அணி**



XI_Std_Tamil_Unit_2.indd 48 29-01-2025 18:08:38

## ஒப்புரவறிதல்

4) *தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தல் பொருட்டு.**

விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

5) *ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.*

உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப்போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.

6) *மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்.*

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம், தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

**அணி : உவமை அணி**

## புகழ்

7) *ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
*பொன்றாது நிற்பதொன்று இல்.*

இணையற்ற உயர்ந்த புகழைப்போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.

8) *தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று.**

தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்றுக! இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.

9) *வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய*
*வாழ்வாரே வாழா தவர்.*

பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்; புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர்.

## தவம்

10) *வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்.*

விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இங்கேயே முயன்று பார்க்கலாம்.

11) *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.*

புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**அணி : உவமை அணி**



XI_Std_Tamil_Unit_2.indd 49 29-01-2025 18:08:39

## நிலையாமை

12) *நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்.*

நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும்முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

13) *நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*

*பெருமை உடைத்துஇவ் வுலகு.**

நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமை உடையது இவ்வுலகம்.

14) *ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப*

*கோடியும் அல்ல பல.*

ஒரு பொழுதுகூட வாழ்வின் நிலையாத் தன்மையைச் சிந்திக்காதவர்கள் எண்ணும் எண்ணங்கள் கோடி அல்ல; இன்னும் மிகுதி.

## துறவு

15) *யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*

*அதனின் அதனின் இலன்.**

ஒருவன், எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ அந்தந்தப் பொருள்களால் வரும் துன்பத்தை அவன் அடைவதில்லை.

16) *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*

*பற்றுக பற்று விடற்கு.**

பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**அணி : சொல் பின்வரும் நிலையணி**

## அவா அறுத்தல்

17) *இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்*

*துன்பத்துள் துன்பம் கெடின்.*

பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்துபோனால் இன்பத்தை இடைவிடாமல் பெறலாம்.

18) *ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*

*பேரா இயற்கை தரும்.*

ஒருபோதும் நிறைவுசெய்ய முடியாத இயல்புடைய ஆசையை விட்டொழித்தால், நிலையான இன்பம் இயல்பாய் வரும்.



XI_Std_Tamil_Unit_2.indd 50 29-01-2025 18:08:39

## வலியறிதல்

19) *வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*

*துணைவலியும் தூக்கிச் செயல்.**

செயலின் வலிமையையும் தன் வலிமையையும் பகைவனின் வலிமையையும் துணையாளர் வலிமையையும் சீர்தூக்கிச் செயல்படுக.

20) *அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை*

*வியந்தான் விரைந்து கெடும்.*

மற்றவருடன் ஒத்துப்போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவாகக் கெடுவான்.

21) *பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*

*சால மிகுத்துப் பெயின்.*

மயிலிறகுதான் என்றாலும் அளவுக்கு மிகுதியாக ஏற்றினால், ஏற்றிய வண்டியின் அச்சும் முறியும். (எனவே வலிமைக்கேற்பச் செயல்படுக)

அணி : பிறிது மொழிதல் அணி

22) *அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*

*இல்லாகித் தோன்றாக் கெடும்.**

தன் வருமானத்தின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை, உள்ளதுபோலத் தோன்றிக் கெடும்.

## காலமறிதல்

23) *அருவினை யென்ப உளவோ கருவியான்*

*காலம் அறிந்து செயின்.*

உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை.

24) *ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*

*கருதி இடத்தால் செயின்.**

உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

25) *காலம் கருதி இருப்பர் கலங்காது*

*ஞாலம் கருது பவர்.*

உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்குக் காத்திருப்பர்.

26) *எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே*

*செய்தற்கு அரிய செயல்.*

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், அப்போதே முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடித்துவிடுக.



XI_Std_Tamil_Unit_2.indd 51 29-01-2025 18:08:39

| பால் | அதிகாரம் – எண்ணிக்கை | இயல் – எண்ணிக்கை | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் (04)<br>இல்லறவியல் (20)<br>துறவறவியல் (13)<br>ஊழியல் (01) |
| பொருள் | 70 | 3 | அரசியல் (25)<br>அமைச்சியல் (32)<br>ஒழிபியல் (13) |
| இன்பம் | 25 | 2 | களவியல் (07)<br>கற்பியல் (18) |
| | 133 | 09 | |

## நூல்வெளி

திருக்குறள், உலகப் பொதுமறை என்று போற்றப்படும் தமிழ் இலக்கியமாகும். இஃது உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் அவ்வாறு போற்றப்படுகிறது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் வாழ்வியல் நூல்; 1330 குறட்பாக்களால் ஆனது.

உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் அனைத்தும் குறள் வெண்பா என்னும் பா வகையால் ஆனவை. பாவின் வகையைத் தன் பெயராகக்கொண்டு உயர்வு விகுதியாகத் 'திரு' என்னும் அடைமொழியுடன் திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது. ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறளுக்குப் பத்துப் பேருடைய உரை இருப்பதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது. அவர்கள் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர். நாளது வரையிலும் பலர் உரை எழுதும் சிறப்புப் பெற்றது இந்நூல். திருக்குறளின் சிறப்பினை விளக்கப் புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலே திருவள்ளுவ மாலை.

தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் திருவள்ளுவரைப் பற்றிய அறுதியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

## வேற்றுமை அணி

**அணி விளக்கம்**

இரு பொருள்களுக்கிடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறி, பின்னர் அவற்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**சான்று**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

**அணிப்பொருத்தம்**

இக்குறளில் நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும் தன்மை உடையவை என்று முதலில் கூறப்படுகிறது. பின்னர், நெருப்பினால் சுட்ட புண் ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண் ஆறாது என வேறுபடுத்துவதால், இது வேற்றுமை அணிக்குப் பொருத்தமாயிற்று.

## உவமை அணி

**அணி விளக்கம்**

செய்யுளில் உவமானமும் உவமேயமும் இடம்பெற்று உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்

**சான்று – 1**

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**அணிப்பொருத்தம்**

உவமானம் : மருந்து மரத்தின் எல்லா உறுப்புகளும் பயன்தரும்
உவமேயம் : பெருந்தகையானிடம் உள்ள செல்வம் பயன்தரும்
உவம உருபு : அற்று

**சான்று – 2**

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

**அணிப்பொருத்தம்**

உவமானம் : சுடச்சுடரும் ஒளிவிடும் பொன்
உவமேயம் : துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்
உவம உருபு : போல்

இவ்வாறு, உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து, உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால், இது, உவமையணி அணிக்குப் பொருத்தமாயிற்று.

## சொல் பின்வருநிலை அணி

**அணி விளக்கம்**

செய்யுளில் ஒரு சொல் பலமுறை வந்து, வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வருநிலை அணி ஆகும்.



XI_Std_Tamil_Unit_2.indd 53 29-01-2025 18:08:39

**சான்று**

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.*

**அணிப்பொருத்தம்**

இக்குறளில் 'பற்று' என்னும் சொல் பலமுறை வந்து பின்பற்றுதல், ஆசையில்லாதவன் இறைப்பற்று, உலகப்பற்று என வெவ்வேறு பொருள்களைத் தருவதால், இது, சொல் பின்வருநிலை அணிக்குப் பொருத்தமாயிற்று.

## பிறிது மொழிதல் அணி

**அணி விளக்கம்**

உவமையைக் கூறி, அதன் மூலம் பொருளைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.

**சான்று**

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்.*

**அணிப்பொருத்தம்**

மயிலிறகு மென்மையானது என்றுகருதி அளவுக்கு மீறி ஏற்றினால், எடை தாங்காமல் வண்டியின் அச்சு முறியும் என்ற உவமையைக் கூறி, வலிமையற்ற பலர் ஒன்று கூடினால் வலிமைமிக்க அரசனையும் வென்றுவிடலாம் என்ற பொருளைப் பெறவைத்திருப்பதால், இது பிறிது மொழிதல் அணிக்குப் பொருத்தமாயிற்று.



## கற்பவை கற்றபின்...

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. துன்பப்படுபவர் ___________

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

***மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்***
***தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்***
***துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்***
***எஞ்சினார் இவ்வுலகத் தில்.***



XI_Std_Tamil_Unit_2.indd 54 29-01-2025 18:08:39

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

*பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்*
*புழுங்குகிறது யோசனை*
*பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்*
*நசுங்குகிறது அறம்*
*இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்*
*போராட்டத்தில் வெடிக்கின்றன*
*வெளியில் குண்டுகளும்*
*வீட்டில் சண்டைகளும்....*
*ஆசை அறுத்தல் எளிதல்ல!*
*முயன்று பார்க்கலாம் வா!*

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5. ஒப்புரவு என்பதன் பொருள் _________

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

6. பொருத்துக.

| | |
|---|---|
| அ) வாழ்பவன் | 1) காத்திருப்பவன் |
| ஆ) வாழாதவன் | 2) ஒத்ததறிபவன் |
| இ) தோன்றுபவன் | 3) புகழ் தரும் பண்புடையவன் |
| ஈ) வெல்ல நினைப்பவன் | 4) இசையொழித்தவன் |

அ) 1 3 2 4 ஆ) 2 3 4 1 இ) 2 4 3 1 ஈ) 4 1 2 3

7. இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) சுடச்சுடரும் ஆ) சுடச்சுடரும் பொன் இ) சுடச்சுட

8. விரைந்து கெடுபவன் _________

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்



XI_Std_Tamil_Unit_2.indd 55 29-01-2025 18:08:39

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

9. பற்றுநீங்கியவனுக்குஉண்டாவது _ _ _ _ _ _ பற்றற்றவனைப்பற்றுவதால்உண்டாவது _ _ _ _ _ _

அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்

இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்

10. அருவினை – புணர்ச்சி விதி கூறுக.

## குறுவினா

1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?

2. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

   பெருந்தகை யான்கண் படின். – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

3. எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?

4. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?

5. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

## சிறுவினா

1. "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

   நாவினாற் சுட்ட வடு." – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

2. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.

3. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

   பெருந்தகை யான்கண் படின்." – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

4. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

   "வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

   துணைவலியும் தூக்கிச் செயல்."

5. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

## நெடுவினா

1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.

2. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

3. நிலையாமையும் அவாஅறுத்தலும் நல்வாழ்க்கைக்கான வழிகாட்டுதல் என்பதனை வள்ளுவரின் வாய்மொழி வாயிலாகத் தெளிவுபடுத்துக.



XI_Std_Tamil_Unit_2.indd 56 29-01-2025 18:08:39

இயல் 3

# பீடு பெற நில்

பண்பாடு




## கற்றல் நோக்கங்கள்

- தமிழர்களின் வாழ்விடச் சிறப்புகளைக் கள ஆய்வுகளின்வழி அறிந்து பெருமிதம் கொள்ளுதல்.
- இலக்கியங்கள்வழி தமிழர் பண்பாட்டுக்கூறுகளை அறிந்து தமதாக்கிக்கொண்டு வாழ்தல்.
- வீட்டிலும் சமூகத்திலும் பின்பற்றப்படும் பண்பாட்டு நிகழ்வுகளைப் போற்றிப் பின்பற்றுதல்.
- தமிழ் மண்ணுக்கே உரிய வீர விளையாட்டுகளின் தொன்மைச் சிறப்பை அறிதல்.
- சொற்களைப் பொருள்புரிந்து காலத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- உரைநடை – மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு
- செய்யுள் – காவடிச்சிந்து
  குறுந்தொகை
- துணைப்பாடம் – வாடிவாசல்
- இலக்கணம் – பகுபத உறுப்புகள்



XI_Std_Tamil_Unit_3.indd 57 29-01-2025 18:09:28

உரைநடை உலகம்

இயல் 3

# மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு

– ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. (ப.நி.)




மலை, மனித சமூகத்தின் முதல் வாழ்நிலமாகும். தமிழ் அக இலக்கணம், மலையும் மலை சார்ந்த பகுதியையும் குறிஞ்சி என்று குறிக்கிறது. குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு தொடர்புடைய தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசுகின்றன. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை மலையாய்வியல் (OROLOGY) என்ற கலைச்சொல்லால் அழைப்பர். தமிழர் வாழ்வில் மலைகள் பெறும் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார் கமில் சுவலபில் (Kamil Zvelebil). "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம். "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை. மேற்குறிப்பிட்டுள்ள பாடல் அடிகள் தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்புபடுத்தும் பண்டைய பதிவுகளாக விளங்குகின்றன.



பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர். பெருநிலப் பகுதிகளை ஆண்ட முடிமன்னர்களுக்குக்கூட வழங்காத பெருமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் இக்குறுநிலத் தலைவர்களுக்கு அளிப்பதைப் பரக்கக் காணலாம்.

## திராவிடர்களின் மலைப்பெருமிதம்

இந்தியாவில் தற்போது வாழும் பல்வேறு திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்கள் அப்பழங்குடியினரின் மலை சார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன. கீழ்க்காணும் இனக்குழுப்பெயர்கள் 'மலை' என்ற சொல்லை அடிப்படையாகக்கொண்டு உருவாகியுள்ளன.

| | |
|---|---|
| மால் பஹாடியா | ஜார்கண்ட் |
| மல அரயன் | மேற்குத்தொடர்ச்சி மலைகள் – கேரளம் |
| மல குறவன் | நெடுமங்காடு – கேரளம் |
| மல மூத்தன் | எர்நாட் – கேரளம் |
| மல பணிக்கர் | வட கேரளம் |
| மலயன் | பாலக்காடு – கேரளம் |
| மல வேடா | இடுக்கி – கேரளம் |
| மலேரு | தட்சிண கன்னடா – கர்நாடகம் |

இதைப் போலவே,

| | |
|---|---|
| கோட்டா | நீலகிரி, தமிழ்நாடு |
| கொண்டா தோரா | ஆந்திரப்பிரதேசம் |
| கோண்டு, கொய்ட்டெர் | ஒடிஸா |

ஆகிய திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்களும் 'மலை', 'குன்று' என்ற



XI_Std_Tamil_Unit_3.indd 58 29-01-2025 18:09:28

பொருள் தரும் சொற்களையே அடிப்படையாகக்கொண்டு ஆக்கம் பெற்றுள்ளன.

### மலைக்குடியிருப்புகள்

திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.

பழங்குடியினர், ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள். எனவே, அவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகளில் இருந்து நீரெடுத்துப் பருகுகிறார்கள்.

நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே, அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர். அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.



குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்றசொல்அதன்உயரமான, மேடான அமைப்பை விளக்குகின்றது. ஆந்திராவிலும் ஒடிஸாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிடப் பழங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் மலை உச்சிகளில் அமைந்துள்ளன. பழங்குடித் தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது. உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

### வடமேற்குப் பகுதிகளில் திராவிட மலைப்பெயர்கள்

திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது. மேலும், வடமொழியில் 'மலய' என்ற சொல் மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே குறிக்கிறது.

தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும் 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள்படுவனவாகும். மலை, குன்று என்னும் இரண்டு சொல்லாட்சிகளும் வெளிக்கொணரும் உயர வேறுபாட்டை வடமேற்குப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மலை சார்ந்த இடப்பெயர்கள் உறுதிசெய்வது வியப்பளிக்கின்றது.

இதைப்போலவே தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. நுனி முதல் அடி வரை மற்றும் அடி முதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.



XI_Std_Tamil_Unit_3.indd 59 29-01-2025 18:09:29

திராவிட நிலப்பகுதிகளின் மலை தொடர்பான சொற்கள், சிந்துவெளிப் பண்பாட்டு நிலப்பகுதிகளில் தற்செயலாக வழங்கப்படவில்லை. அவை, காரணம் கருதியே வழங்கப்பட்டன. சிந்துவெளி மற்றும் திராவிட மலைவாழ் மக்கள் அன்றாடம் புழங்கும் சொற்களில் காணப்படும் இத்தொடர்ச்சி சிந்திக்கத்தக்கது. இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு மாநில இடப்பெயர்களில் திராவிட இடச்சொற்களின் நேரடித் தொடர்பு இன்றுவரை நீடிப்பதை, கீழுள்ள அட்டவணை உறுதிப்படுத்தும்.

| திராவிடச் சொற்கள் | மாநிலம் | மாவட்டம் |
|---|---|---|
| மலை | உத்தரகாண்ட் | சமோலி |
| | ஜார்கண்ட் | கும்லா |
| | உத்திரப் பிரதேசம் | ஜவுன்பூர் |
| வரை | குஜராத் | வல்ஸட் |
| | மஹாராஷ்ட்ரா | தாணே |
| | ஹிமாசலப் பிரதேசம் | காங்க்ரா |
| மலா | பஞ்சாப் | ஜலந்தர் |
| | ராஜஸ்தான் | அஜ்மீர் |
| | கர்நாடகம் | உடுப்பி |

### தென்னிந்தியாவில் 'மலை' என்ற இடப்பெயரின் சிறப்பிடம்

தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம்பெறுகின்றது. ஆந்திர மாநிலத்தில் 'மல்' என்ற வேர்ச்சொல் ஐகார ஈறு பெற்று மலை என வழங்கப்படுவதற்கு மாறாக ஆகார ஈறு பெற்று 'மலா' என்று வழங்கப்படுகிறது.

கர்நாடகத்தில் மலை என்ற வடிவம் 'தோணிமலை' என்னும் இடப்பெயரில் ஒரே ஒரு முறை பயன்படுத்தப்படுகிறது. மலையைக் குறிக்கும் மற்றொரு சொல்லான 'மலே' 15 இடப்பெயர்களில் இடம்பெறுகிறது.

கேரள மாநிலத்தில் பத்து 'மலை' விகுதி இடப்பெயர்கள் உள்ளன. மேற்சொன்ன மலை, மலா, மலே எனப்படும் சொற்கள், தென்னிந்தியாவின் எந்த ஒரு மாநிலத்திலும் முன்னொட்டாகவோ பின்னொட்டாகவோ வருகின்றனவே அன்றி, தனிச்சொல்லாக வழங்கப்படவில்லை.

தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது. திராவிட வேர்ச்சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

| தமிழ் | கோட்டை, கோடு |
|---|---|
| மலையாளம் | கோட்ட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |

இவ்வாறு, எழுத்து வழக்குக் கொண்ட திராவிட மொழிகளில் மட்டுமல்லாமல் திராவிடப் பழங்குடி மொழிகளிலும்கூட கோட்டை என்ற சொல்லாக்கத்தின் வேர்களை இனங்காண முடிகிறது. இந்தியாவில் 'கோட்டை' என்று முடியும் 515 இடப்பெயர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சொல் செயற்கையான காப்பரண்களான கோட்டைகளைக் கட்டியெழுப்பிய நகர நாகரிகத்தின் பின்னணியில் தோன்றியது என்பதைவிட அதற்கும் தொன்மையான மலை சார்ந்த வாழ்வியல் சூழலில் உருப்பெற்றிருக்கும் என்பதுதான் உண்மையாகத் தோன்றுகிறது. ஏனெனில் 'கோடு' என்ற தமிழ்ச்சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருள்களும் உண்டு. மலையரண், காட்டரண் போன்ற இயற்கை அரண்கள், மதில் சுவர்களால் அமைந்த செயற்கையான கோட்டைகளை விடவும் தொன்மையானவை. இதைப் போலவே



XI_Std_Tamil_Unit_3.indd 60 29-01-2025 18:09:29

### கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT COMPLEX)




கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல், மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை. சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும். இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை. சங்ககாலத் தமிழ் மன்னர்களின், குறுநிலத் தலைவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன. கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT COMPLEX) காட்டும் பொதுத்தன்மைகள் மிக முக்கியமானவை. இவை, கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள்.

'கோடை' என்னும் தமிழ்ச்சொல் 'மலை' என்னும் பொருளில் வழங்குவதையும் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

திராவிடர்களின் மலைப் பெருமிதத்தின் நீட்சியாக விளங்கும் இடப்பெயர்கள் வடமேற்கு நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் நெடுமலைகளின் பெயர்களோடு பொருந்திப் போகும் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. இச்சான்றுகள், அப்பகுதிகளில் திராவிடர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களை உறுதி செய்வதோடு மலை இடப்பெயர் ஆய்வுகளின் இன்றைய வளர்ச்சிப்போக்கினை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

### நூல்வெளி

இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளரான ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. (ப.நி.) 30 ஆண்டுகளுக்கு மேலாக, இடப்பெயராய்வில் ஈடுபட்டு வருகிறார். இவர், வடமேற்கு இந்தியாவில் இன்றுவரை வழக்கிலுள்ள 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகின் கவனத்திற்குக் கொண்டுவந்தவர்; தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும் கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும் தீவிரப் பங்காற்றியிருக்கிறார்; ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை, அணிநடை எருமை, ஓர் ஏர் உழவன், தமிழ் நெடுஞ்சாலை உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார்; 1984ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணித் தேர்வை, முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றவர்; ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் அம்மாநிலத்தின் வளர்ச்சி ஆணையராகப் பொறுப்பில் இருந்தார். இப்பாடப்பகுதி 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்னும் இவரது நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

### கற்பவை கற்றபின்...

1. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள, உங்களுக்குத் தெரிந்த மலைகளின் பெயர்க் காரணத்தை அறிந்து வகுப்பில் பகிர்ந்துகொள்க.
2. மலை குறித்த வேறு சொற்களையும், அவை சார்ந்த கலைச்சொற்களையும் திரட்டிப் பட்டியல் உருவாக்குக.

## கவிதைப்பேழை

இயல் 3

# காவடிச்சிந்து

**நுழையும்முன்**

காவடி எடுத்தல் தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி தூக்கிச் செல்வோர், அதைச் சுமையாக உணராமல் இருக்கப் பாடியவாறே செல்வதற்குப் புலவர்கள் வழிநடைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

### கோயில் வளம்

*சென்னி குளநகர் வாசன் – தமிழ்*
*தேறும் அண்ணாமலை தாசன் – செப்பும்*
*செகமெச்சிய மதுரக்கவி*
*அதனைப்புய வரையில்புனை*
*தீரன்; அயில் வீரன்.*
*வன்ன மயில்முரு கேசன் – குற*
*வள்ளி பதம்பணி நேசன் – உரை*
*வரமேதரு கழுகாசல*
*பதிகோயிலின் வளம்நான்மற*
*வாதே சொல்வன் மாதே!*
*கோபுரத் துத்தங்கத் தூவி – தேவர்*
*கோபுரத் துக்கப்பால் மேவி – கண்கள்*
*கூசப்பிர காசத்தொளி*
*மாசற்று விலாசத்தொடு*
*குலவும் புவி பலவும்.*
*நூபுரத் துத்தொனி வெடிக்கும் – பத*
*நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் – அங்கே*
*நுழைவாரிடு முழவோசைகள்*
*திசைமாசுணம் இடியோ என*
*நோக்கும் படி தாக்கும்.*



*சந்நிதி யில்துஜஸ் தம்பம் – விண்ணில்*
*தாவி வருகின்ற கும்பம் – எனும்*
*சலராசியை வடிவார்பல*
*கொடிசூடிய முடிமீதிலே*
*தாங்கும்; உயர்ந் தோங்கும்.*
*உன்னத மாகிய இஞ்சி–பொன்னாட்டு*
*உம்பர் நகருக்கு மிஞ்சி – மிக*
*உயர்வானது பெறலால் அதில்*
*அதிசீதள புயல்சாலவும்*
*உறங்கும்; மின்னிக் கறங்கும்.*
*அருணகிரி நாவில் பழக்கம் – தரும்*
*அந்தத் திருப்புகழ் முழக்கம் –பல*
*அடியார்கணம் மொழிபோதினில்*
*அமராவதி இமையோர்செவி*
*அடைக்கும்; அண்டம் உடைக்கும்.*
*கருணை முருகனைப் போற்றித்–தங்கக்*
*காவடி தோளின்மேல் ஏற்றிக் – கொழும்*
*கனல்ஏறிய மெழுகாய்வரு*
*பவர்ஏவரும் இகமேகதி*
*காண்பார்; இன்பம் பூண்பார்.*

*–சென்னிகுளம் அண்ணாமலையார்.*

### காவடிச் சிந்து

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக முதல் நாட்டார் வழக்கில் இருக்கும் இசைமரபே காவடிச் சிந்து எனலாம். முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருள்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து எனும் பாவடிவம் தோன்றியது.



XI_Std_Tamil_Unit_3.indd 62 29-01-2025 18:09:30

## சொல்லும் பொருளும்

புயம் – தோள்; வரை – மலை; வன்னம் – அழகு; கழுகாசலம் – கழுகு மலை; துஜஸ் தம்பம் – கொடி மரம்; சலராசி – கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள்; விலாசம் – அழகு; நூபுரம் – சிலம்பு; மாசுணம் – பாம்பு; இஞ்சி – மதில்; புயல் – மேகம்; கறங்கும் – சுழலும்.

## பாடலின் பொருள்

சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலைதாசன் ஆகிய நான் பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலைபோன்ற அகன்ற தோளில் சார்த்திக்கொள்கிறான் முருகன். அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன். கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகை விட உயர்ந்து ஒளி வீசுகிறது. அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது. பெண்ணே! கடலில் வாழும் மீன், சுறா போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் பறக்க, முருகன் கோவில் காட்சியளிக்கிறது. காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியை அடைக்கிறது. கழுகுமலை நகரின் கோட்டை மிகவும் உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன. அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன. தமது நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அவன் அருளைப் பெறுவர்; இன்பம் அடைவர்.

## இலக்கணக்குறிப்பு

தாவி – வினையெச்சம்; மாதே – விளி

## பகுபத உறுப்பிலக்கணம்

**வருகின்ற – வா (வரு) + கின்று + அ**

| | | |
|---|---|---|
| வா | – | பகுதி, வரு எனத் திரிந்தது விகாரம் |
| கின்று | – | நிகழ்கால இடைநிலை |
| அ | – | பெயரெச்ச விகுதி |

## புணர்ச்சி விதி

**திருப்புகழ் – திரு + புகழ்**

**விதி:** 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்'.

திருப்புகழ்

**உயர்ந்தோங்கும் – உயர்ந்து + ஓங்கும்**

**விதி:** 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' உயர்ந்த் + ஓங்கும்.

**விதி:** 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' உயர்ந்தோங்கும்.

### நூல்வெளி

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும். இப்பாடலின் மெட்டு அண்ணாமலையாரால் அமைக்கப்பட்டதாகும். தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால், காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார்; 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார். இவர், இந்நூல் தவிர வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. எந்தெந்த நாடுகளில் காவடி ஆட்டம் இன்றளவும் நிகழ்த்தப்படுகிறது? அதற்கான காரணங்களைத் திரட்டி, கலந்துரையாடல் நிகழ்த்துக.
2. நீங்கள் விரும்பும் தலைப்பில் எதுகை, மோனை, சந்தநயம் கொண்ட பாடல் ஒன்றை எழுதிக் காட்சிப்படுத்துக.



XI_Std_Tamil_Unit_3.indd 63 29-01-2025 18:09:30

கவிதைப்பேழை

இயல் 3

# குறுந்தொகை

– வெள்ளிவீதியார்

**நுழையும்முன்**

அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வைத் தலைவி விரும்புகிறாள். இரு மனம் இணையும் திருமணத்தை உறுதிசெய்ய இரு வீட்டாரும் முனைகின்றனர். இதனை, அகத்திணை இலக்கணத்தின் இலக்கியமாய் விளங்கும் குறுந்தொகைப் பாடல் ஒன்று காட்சிப்படுத்துகிறது.

*அம்ம வாழி தோழி நம்மூர்ப்*
*பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ*
*தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்*
*நன்றுநன் றென்னும் மாக்களோடு*
*இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.** (146)

– *வெள்ளிவீதியார்*



**திணை:** குறிஞ்சித்திணை

**துறை:** தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவு நாடுவதை நமர் ஏற்றுக்கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

**துறை விளக்கம்:** தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின்



XI_Std_Tamil_Unit_3.indd 64 29-01-2025 18:09:30

விருப்பத்தைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

### சொல்லும் பொருளும்

சிதவல் – தலைப்பாகை, தண்டு – ஊன்றுகோல்

### பாடலின் பொருள்

(ஊர் மக்களின் அவையில் முன்பு பலமுறை தலைவனின் குறைவான பரிசப் பொருள்கள் திருப்பி அனுப்பப்பட்டன. போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருள்களை இன்று கொண்டுவந்து அவைமுன் வைத்துள்ளான்) "தலைவி! தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத் தலைவன் மணம் பேசச் செய்துள்ளான். அவையில் இருந்த நம்முடைய உறவினரும் கண்டு, 'நன்று நன்று' என்று கூறி மகிழ்ந்தனர். நம்முடைய ஊரில் முன்பெல்லாம் பரிசத்தொகை போதவில்லை என்பதற்காகப் பிரித்துவிடப்பட்ட தலைவன் தலைவியரைச் (போதிய பரிசத்தொகை கிடைத்தவுடன்) சேர்த்து வைப்பார்கள்தானே?" ஆகவே அஞ்சவேண்டாம் என்று தோழி கூறுகிறாள்.

**பாவகை:** நேரிசை ஆசிரியப்பா

### இலக்கணக்குறிப்பு

பிரிந்தோர் – வினையாலணையும் பெயர்

நன்றுநன்று – அடுக்குத்தொடர்

### பகுபத உறுப்பிலக்கணம்

பிரிந்தோர் – பிரி + த்(ந்) + த் + ஓர்

பிரி – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

தண்டுடை – தண்டு + உடை

விதி: 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்'

தண்ட் + உடை

விதி: 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'

தண்டுடை

### நூல்வெளி

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; கடவுள் வாழ்த்து நீங்கலாக, அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது. "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது; உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல். ஆதலால், இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

வெள்ளிவீதியார் சங்ககாலப் பெண்புலவர்களுள் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் இவரால் பாடப்பட்ட 13 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### கற்பவை கற்றபின்...

திருமணங்களில் மணக்கொடை கேட்பது குற்றமே – விவாதிக்க.



XI_Std_Tamil_Unit_3.indd 65 29-01-2025 18:09:30

விரிவானம்

இயல் 3

# வாடிவாசல்

– சி.சு. செல்லப்பா

நுழையும்முன்

ஒத்தைக்கு ஒத்தையாகக் களத்தில் இறங்கும் மிருகத்துக்கும் மனிதனுக்கும் நடக்கும் போட்டிக்கு இரண்டிலொரு முடிவு காணும் இடம் வாடிவாசல். அந்த வாடிவாசலில் மனித இரத்தம் சிந்தலாம்; காளை உடலில் ஒரு சொட்டு இரத்தம் காணக்கூடாது. மனிதன் இதை விளையாட்டாக நினைத்தாலும் மிருகத்துக்கு இது விளையாட்டன்று. இதுதான் ஜல்லிக்கட்டு!

வாடிபுரம் காளை!

வாடிவாசலையும் தொழுவத்தையும் பிரித்து நிற்கும் ஆள் உயர வேலி அடைப்பின்மீது உட்கார்ந்து இருந்த ஒரு பையன் கத்தினான்.

"வாடிபுரம் காளை!"

"கருப்புப் பிசாசு!"

கத்திய அத்தனை குரல்களிலும் ஒரு நடுக்கம், திகில் வெடித்துப் பரவியது. வாடிவாசல் அமர்க்களப்பட்டது. சில வினாடிகளில் வாடிவாசலிலே முண்டியடித்து எக்கி நின்ற கூட்டம் போன இடம் தெரியவில்லை. காரிக்கொம்புக்கு எட்டாதபடி எப்படியெல்லாம் பாதுகாத்துக் கொள்வதென்று தவித்து அவனவன் அங்கும் இங்கும் ஓடிப் பதுங்கப் பார்த்தான். திட்டிவாசலைச் சுற்றிக் குழப்பமின்றி விஸ்தாரமாக இருந்தது. அதிலேயும் இரண்டொருத்தன்தான் துணிந்து நின்று காளை உள்ளே அவிழ்க்கப்படுவதைப் பார்த்தான்.

தொழுவத்தில் அதன் அலங்காரங்கள் கலைக்கப்பட்டு உள்வாடிக்குக் கொணரப்பட்ட காளை ஒரு தடவை முக்காரமிட்டுவிட்டு ஒரு சிறுவன்



பிடிகயிற்றுக்கு அடங்கிப் பரம சாதுவாக அடைப்புக்குள் ஆடி அசைந்து வந்தது.

"மருதா" என்று உஷார்படுத்திக் கொண்டு பிச்சி, லங்கோட்டை ஒருதரம் இறுக்கிவிட்டு, வயிற்றை எக்கிக் கொடுத்து ஒரு முழு மூச்சு இழுத்தான். குனிந்து இரு கைகளையும் தரையில் தேய்த்து, பிடி வழுக்காமல் இருக்கச் சுரசுரப்பாக்கிக் கொண்டான்.

"கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்!"

"பய செத்தான்!"

"செல்லாயி வாடியிலே அவனுக்கு முடிவு போட்டிருக்கு!"

"குருத்துப் பையன், அநியாயமா...!"

"பட்டு உருமாவுக்கு ஆசைப்பட்டு உசிரை இந்தான்னு கொடுக்கிறானே பாவி!"

"ரெண்டு பவுனுத் தங்கம் கண்ணுல உறுத்துமுல்லே!"

ஆளுக்கொரு அபிப்ராயமாகக் கூட்டம் பரிமாறிக் கொண்டது.

மேடை ஆசனத்திலிருந்து முன்சாய்ந்து குறுக்குக் கம்பியின்மீது கை வைத்து ஆர்வத்துடன் பார்க்கும்போது அவர் பக்கமாகத் திரும்பிய பிச்சியின் பார்வையை ஜமீன்தார் சந்தித்துவிட்டார்.

"ஹூம், பிடி!" என்று சொல்வதுபோலத் தன்னை அறியாமலேயே தலையை ஆட்டி விட்டார்.

"பார்த்தியா, காளை வரவும் கிழக்கத்தியான் பம்மிட்டான்."

"அவ்வளவுதான் பய!"

"சும்மா ஆர்ப்பாட்டக்காரனுங்க!"

தன்னைச் சுற்றி எழுந்த இந்தக் கேலி வார்த்தைகளைக் கேட்ட ஜமீன்தார்,

**கலித்தொகையில் ஏறுதழுவல்**

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆய மகள்
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய – உயிர்துறந்து
நைவாரா ஆய மகள் தோள்.

– கலி. 103 : 63–67

"உளறாமே பாத்துக்கிட்டிருங்க," என்று சுருக்கெனச் சொல்லி அடக்கினார். "அவன் ஒரு பிறவி! எந்த மாட்டு மேலே எப்படி விழணும்னு அவனுக்குச் சுபாவத்திலேயே ஊறிக் கிடக்கும்!" கண்டன வாய்கள் மூடிக் கொண்டன.

திட்டி வாசலில் காரி ராஜாங்கமாக நின்றது. அதன் புடைத்த பளீரிடும் கருந்திமில் நெஞ்சுயர மரக்கட்டை அடைப்புக்கு மேலாக எடுப்பாகத் துருத்திக்கொண்டு வாடிவாசலில் வந்து நின்றது.

"ராஜாளி மாதிரி வந்து நிக்குது பாரு!"

"நின்னுகுத்திக் காளைன்னா இதுதான்!"

"இதையா கிழக்கத்தியான் பிடிக்கப் போறான்!"

நின்ற காரி, வாடிவாசலில் தன் மீது கை போடும்படி சவால் விட்டமாதிரி இருந்தது. அதன் மூச்சு தரையில் பட்ட இடங்களில் மண் சிதறிப் பறந்தது. ஒருதரம் செறுக்கடித்தது. மறுபடியும் தரையை முகர்ந்துகொண்டிருந்தது.

'அப்பன் ஆசைக்கு மட்டுமன்றி உசிருக்கே உலை வைத்த காரி, அதன் கொம்பில் இன்னும் அப்பன் ரத்தம் வழிந்துகொண்டிருப்பது' போன்ற பிரமை ஏற்பட, அவனுக்கு நேரெதிரில் வந்து நின்றபோது அந்தக் கிழக்கத்திய வாலிபனான பிச்சி, அதன் கொம்புக்கு நேராகவும் மருதன் அதன் வால் பக்கமாகவும் அசையாமல் நின்றார்கள். பிச்சியின்



XI_Std_Tamil_Unit_3.indd 67 29-01-2025 18:09:31

முகத்தையே சமிக்ஞைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மருதன். காளைக்கு மேலாகப் பார்த்துப் பிச்சி மருதனுக்குச் சமிக்ஞை செய்ததுதான் தாமதம்...

"டுர்ரீ!"

மருதன் குரல் வாடிவாசல் முணுமுணுப்பைக் கிழித்துக்கொண்டு எழுந்தது. கூவிக்கொண்டே முன் வந்த காளையின் வாலை ஜாடையாகத் தொட்டுவிட்டு வட்ட விளிம்போரமாகப் பின்னரித்தான். மருதன் கைபடவும் காளை அவன் மீது பாய, சடக்கெனத் திரும்பியது. அது பிச்சியை விட்டுவிட்டு ஒரு சிறு கோண அளவுக்குத் திரும்பி இருக்கும்.

சில்வண்டு மாதிரி அட்டத்திலிருந்து பாய்ந்து அதன் திமிலில் இடது கையைப் போட்டு நெஞ்சோடு நெருக்கி அணைத்துக் கழுத்தோடு தன் உடலை ஒட்டிக்கொண்டு அதன் வலக்கொம்பில் கை போட்டான் பிச்சி.

எதிர்பாராத இந்தப் பாய்ச்சல் காளைக்கு எடுத்த எடுப்பில் பிந்திவிட்ட பாதகமாகப் போய்விட்டது. ஆனாலும் அதனுடைய சுபாவமான மிருக குணம் மறுகணத்தில் சமாளிப்பைக் கொடுத்தது. முழு வேகத்துடன் கொம்பை அலைத்துப் பிச்சியைப் பின்னால் குத்தப் பார்த்தது. காளையின் தலை, கீழ்நோக்கி அழுத்தப்படவே காளை உத்தியை மாற்றி ஒரு எகிறு எகிறி நான்கு கால்களையும் உயரே தூக்கித் தவ்வியது. பிச்சியும் அதோடு உயரே போனான்.

"அட! விராலு மாதிரித் துள்ளுதுடா!"

"குதிரை கணக்கா எறியப் பாக்குது!"

"செத்தாண்டா பய ஊட்டி திருகி விழுந்து!"

"தூக்கிப் போட்டுப் பட்டையுரிச்சிடப் போகுது!"

மருதன் கத்தினான். "பிடியை உட்டிராதே, பிச்சி!"



ஆள் உயரத்துக்கு மேல் எழும்பிய காளை அந்தரத்தில் முதுகு குவிந்து தலை உள்ளடக்கிக் கால்களைத் தரையில் அடித்துக்கொண்டு கீழே இறங்கியது. பிச்சியும் பிடி விடாமல் கூடவே இறங்கி, கால்களைத் தரையில் பதித்து நிலைக்கத் துழாவினான். ஆனால், அவன் நிலைக்கு முன்பே மறுபடியும் காளை எம்பித் தவ்வி விட்டது.

"பிடியை விட்டிராதே! விட்டிராதே!" கூட்டத்திலிருந்து பதறின ஆர்ப்பரித்த கத்தல்கள்.

"ஒரு தவ்வுக்கு நின்னுட்டாண்டா!"

"இரண்டாவது தவ்வுல உருட்டிடும்!"

"கிழக்கத்தியான் கை அந்தா சளைக்குதுடா!"

"ஓ! இரண்டு தவ்வுக்கு நின்னுட்டான்!"

"வாடிபுரம் காளை பிடிபட்டுப் போச்சு!"

"பிச்சி, பிச்சி! விட்டுராதே, இந்த ஒரு தவ்வுதான்!"

"காளையும் சளைக்குதுடோய்! மூன்றாவது எம்புல உரமில்லே!"

ஒரு தவ்வு, இரண்டு தவ்வு, மூன்றாவது தவ்வுக்கும் அவன் நின்றுவிட்டான். மூன்று தடவையும் காளை அவனை உருட்டி எறிந்து கிழித்திருக்க வேண்டும்.



XI_Std_Tamil_Unit_3.indd 68 29-01-2025 18:09:31

இந்த நாடகத்தின் கடைசி அங்கம் இருக்கிறது என்பது தெரிந்தும் அடக்க முடியாத களிவெறி கொண்ட கூட்டம் எம்பி எம்பிக் குதித்துக் கத்தியது. "வாடிபுரம் காளை வாயப் பிளந்துடுச்சுடா!"

கிழக்கத்தியான் வெண்டெடுத்துட்டான்!

பிச்சி, காளையின் நெற்றித்திட்டில் கை போட்டு, கொம்புக்குக் கொம்பு மாறி மாறிச் சுற்றிக் கட்டியிருந்த உருமாப் பட்டைக்கு அடியில் கை கொடுத்து ஒரு இழு இழுத்தான். மெடல், அலங்காரச் சிறு தங்க நகைகள் கோர்த்திருந்த சங்கிலியுடன் பட்டுத்துணி அவன் கைக்குக் கொத்தோடு வந்துவிட்டது. அப்படியே வாயில் கவ்விக் கொண்டான். தரையில் பதித்த கால்களை அழுத்தித் திமிலைச் சேர்த்து, காளையை ஒரு தம் கொடுத்து எதிர்ப்பக்கமாகத் தள்ளிவிட்டு எகிறிப் பின்னால் பாய்ந்தான்.

ஆர்ப்பரித்த வாடிபுரம் கூட்டத்துக்குள் நெக்கி வரமுடியாமல் திணறி, பிச்சியைப் பார்க்கத் தவித்துக்கொண்டிருந்த கிழவன், "இந்தா மவனே" என்று உணர்ச்சிப்பெருக்கால் பிச்சியைப் பார்த்து, "உசிலனூர் அம்பிலியின் பேரைக் காப்பாத்திட்டேடா. நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது!" என்று உருமாப்பட்டையை நீட்ட, பிச்சியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

(வாடிவாசல் குறும்புதினத்தின் சுருக்கப்பட்ட வடிவம்.)

### தெரிந்து தெளிவோம்

அளவில் சிறுகதையைவிட நீளமாகவும் புதினத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும் கதை குறும்புதினம். இதனைக் குறுநாவல் என்றும் சொல்வர். சிறுகதைக்கும் புதினத்துக்கும் இடைப்பட்ட வடிவம் என்று கொள்ளலாம்.

### நூல்வெளி

- சி.சு. செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.
- இவர் சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்; 'எழுத்து' இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்.
- இவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள்: வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.
- இவருடைய 'சுதந்திர தாகம்' புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

### கற்பவை கற்றபின்...

நீங்கள் கண்டுகளித்த ஏறு தழுவுதல் நிகழ்வின் காட்சிகளை வகுப்பில் நேர்முக வருணனை செய்துகாட்டுக.



XI_Std_Tamil_Unit_3.indd 69 29-01-2025 18:09:31

## பகுபத உறுப்புகள்

தமிழ்மொழியில் சொல்லுக்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று பதம் என்பதாகும். இலக்கண வகையில் அமைந்த சொற்கள் நான்கனுள், பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரித்துப் பொருள்தரும் நிலையில் இருத்தலால் இவற்றைப் பகுபதங்கள் என்பர். (இடைச்சொற்கள் உரிச்சொற்கள் பகாப்பதங்கள் ஆகும்) இவற்றுள் பெயர்ப்பகுபதச் சொற்களைக் காட்டிலும் வினைப்பகுபதச் சொற்களே வழக்கில் மிகுதியாக உள்ளன.

சொற்களைப் பொருள்நோக்கிலும் பிரித்து எழுதுவர். ஒவ்வொரு சொல்லிலும் உள்ள உறுப்புகள் எவையெவை என்ற வகையிலும் பிரித்து எழுதுவர். அவ்வாறு பிரித்து எழுதும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் என்பர். பொதுவாக அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என ஆறு வகைப்படும்.

ஒரு வினைப்பகுபதத்தில் பகுதியும் விகுதியும் அடிப்படை உறுப்புகளாக உள்ளன. சில சொற்களில் பகுபத உறுப்புகள் ஒன்றோ இரண்டோ குறைந்தும் வரும். சில சொற்கள் ஆறு உறுப்புகள் பெற்றும் வரும். ஒரு பகுபதத்தில் பகுதி, விகுதி, இடைநிலை என்பவையே பொருள் தரும் உறுப்புகளாகும். பகுதி பெரும்பாலும் சொற்பொருளையும் விகுதி, இடைநிலை ஆகியன இலக்கணப் பொருண்மைகளையும் தருகின்றன. இவை மூன்றும் இணையும்போது ஏற்படும் புணர்ச்சி மாற்றங்களே சந்தி, சாரியை, விகாரம் ஆகும்.

### பகுதி

- ஒரு சொல்லின் அடிச்சொல்லே பகுதியாகும். இதை முதனிலை என்றும் கூறுவர்.
- இது, விகுதி பெறாத ஏவல் வினையாக வரும்.
- மேலும், இது பகுதி விகுதி எனப் பிரிக்க இயலாததாய் இருக்கும்.
- பாடினான் என்னும் வினைமுற்றை, பாடு + இன் + ஆன் எனப் பிரிக்கலாம். இதில் 'பாடு' என்பது பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது. இது போலவே படி, ஆடு, செய், எழுது, நட, ஓடு போன்றவை பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினைகளாகவும் இருக்கின்றன.
- அறிஞர் என்னும் பெயர்ச்சொல்லை அறி + ஞ் + அர் எனப் பிரிக்கலாம். இதில் 'அறி' என்பது பகுதியாகவும் விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது.
- பகுதி சில சொற்களில் ஒற்று இரட்டித்துக் காலம் காட்டும்.

### விகுதி

- ஒரு வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்பு விகுதி எனப்படும்.

  கொடுத்தான் – கொடு + த் + த் + ஆன் படித்தாள் – படி + த் + த் + ஆள்

  நடந்தது – நட + த்(ந்) + த் + அ + து
- இவற்றுள் ஆன், ஆள், து என்பவை விகுதிகளாகும். 'ஆன்' என்னும் விகுதி உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கைஇடம் என்பனவற்றையும் 'ஆள்' என்னும்



XI_Std_Tamil_Unit_3.indd 70 29-01-2025 18:09:32

விகுதி உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கைஇடம் என்பனவற்றையும் 'து' என்னும் விகுதி அஃறிணை ஒன்றன்பால், படர்க்கைஇடம் என்பனவற்றையும் வெளிப்படுத்துகின்றன.

வியங்கோள், தொழிற்பெயர், பெயரெச்சம், வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கணப் பொருண்மைகளை உணர்த்தவும் விகுதி பயன்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எழுதுக | – | எழுது + க | உரைத்த | – | உரை + த் + த் + அ |
| செய்தல் | – | செய் + தல் | படித்து | – | படி + த் + த் + உ |

## இடைநிலை

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் உறுப்புக்கு இடைநிலை என்று பெயர்.
- வினைப் பகுபதத்தில் வரும் இடைநிலையைக் கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை என இருவகைப்படுத்துவர்.
- பெயர்ப் பகுபதத்தில் வரும் இடைநிலையைப் பெயர் இடைநிலை என்பர்.

## கால இடைநிலை

- ஒரு வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் காட்டும் உறுப்பு கால இடைநிலை அல்லது காலம் காட்டும் இடைநிலை எனப்படும். செய்தான் – செய் + த் + ஆன்; செய்கிறான் – செய் + கிறு + ஆன்; செய்வான் – செய் + வ் + ஆன்.
- இவற்றுள் த், கிறு, வ் என்பன கால இடைநிலைகளாகும். இவை முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவற்றை உணர்த்துகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | – | த், | ட், | ற், | இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | – | கிறு, | கின்று, | ஆநின்று | |
| எதிர்கால இடைநிலைகள் | – | ப், | வ், | க் | |

## எதிர்மறை இடைநிலை

- எதிர்மறை வினைச்சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து எதிர்மறையை உணர்த்தும் இடைநிலை, எதிர்மறை இடைநிலை ஆகும்.
- ஆ என்னும் எதிர்மறை இடைநிலைக்கு அடுத்து உயிர்மெய் வரின் கெடாமல் வரும். உயிரெழுத்து வரின் தன் பொருளை நிறுவிக் கெட்டு வரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓடாது | – | ஓடு + ஆ + து | காணலன் | – | காண் + அல் + அன் |
| பேசான் | – | பேசு + (ஆ) + ஆன் | எழுதிலன் | – | எழுது + இல் + அன் |

| | | | | |
|---|---|---|---|---|
| எதிர்மறை இடைநிலைகள் | – | ஆ, | அல், | இல் |

## பெயர் இடைநிலை

ஓர் ஆக்கப்பெயர்ச்சொல்லில் பெயர்ப்பகுதியை விகுதியோடு இணைப்பதற்கு வரும் இடைநிலை, பெயர் இடைநிலை ஆகும். ச், ஞ், ந், த், வ் ஆகிய மெய்கள் பெயர் இடைநிலைகளாக வரும்.

தமிழச்சி – தமிழ் + அ + ச் + ச் + இ; இளைஞர் – இளை + ஞ் + அர்; ஓட்டுநர் – ஓட்டு + ந் + அர்; ஒருத்தி – ஒரு + த் + த் + இ; மூவர் – மூன்று + வ் + அர்



XI_Std_Tamil_Unit_3.indd 71 29-01-2025 18:09:32

## சந்தி

- சந்தி என்பதற்குப் புணர்ச்சி என்று பெயர்.
- பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றும் உறுப்பு, சந்தி எனப்படும்.
- சந்தி, பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது பெருவழக்காகும்.
- புணர்ச்சியின்போது ஏற்படும் விகாரங்களான தோன்றல், திரிதல், கெடுதலைச் சந்தி என்றும் சொல்வர். ஓர் எழுத்து தோன்றுதலைச் சந்தி என்றும், மற்றைய திரிதலையும் கெடுதலையும் விகாரம் என்றும் வழங்குவர்.
- பெரும்பாலும் த், ப், க் என்னும் மூன்று எழுத்துகளுள் ஒன்று சந்தியாக வரும்.
- உடம்படுமெய்கள் (ய், வ்) சந்தியாக வருவதுண்டு.

அசைத்தான் – அசை + த் + த் + ஆன் காப்பார் – கா + ப் + ப் + ஆர்

படிக்கிறார் – படி + க் + கிறு + ஆர் வணங்கிய – வணங்கு + இ(ன்) + ய் + அ

பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு எழுத்துப்பேறு எனப்படும். சாரியை வரவேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப்பேறு எனக் குறிப்பிடல் வேண்டும். விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப்பேறு ஆகும். எழுத்துப்பேறு காலம் காட்டாது.

பாடுதி – பாடு + த் + இ மொழியாதான் – மொழி + ய் + ஆ + த் + ஆன்

இச்சொற்களில் 'இ' என்னும் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிக்கு முன்னும் 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலைக்குப் பின்னும் வரும் 'த்' என்பது எழுத்துப்பேறாகும்.

## சாரியை

- பகுதியோடு இடைநிலையும் இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு, சாரியை ஆகும்.
- பெரும்பாலும் சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

  பார்த்தனன் – பார் + த் + த் + அன் + அன்

  இச்சொல்லில் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் 'அன்' என்பதே சாரியையாகும்.
- சந்தி வரவேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனைச் சாரியை என்று குறிப்பிடல் வேண்டும்.

  தருகுவென் – தா(தரு) + கு + வ் + என்

  இச்சொல்லில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் 'கு' என்பதே சாரியையாகும்.
- சாரியைக்குப் பொருள் இல்லை.

அன் என்பது விகுதியாக வரும்போது அன் என்பதே சாரியையாக வரும்.

ஆன், ஆள், ஆர் ஆகிய விகுதிகள் வரும்போது அன் சாரியையாக வராது.

## விகாரம்

- பகுதி விகுதி இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம், விகாரம் எனப்படும்.



XI_Std_Tamil_Unit_3.indd 72 29-01-2025 18:09:32

- ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்தும் கெட்டும் நெடில் குறிலாகவும் மாற்றம் பெறும். இத்தகைய மாற்றமே விகாரம் எனப்படும்.

நின்றான் – நில்(ன்) + ற் + ஆன் – 'நில்' என்னும் பகுதியில், 'ல்' 'ன்' ஆகத் திரிந்தது. வணங்கிய – வணங்கு + இ (ன்) + ய் + அ – இ(ன்) என்னும் இடைநிலையில் னகரம் கெட்டது. கண்டான் – காண் ( கண் ) + ட் + ஆன் – காண் என்னும் பகுதி கண் எனக் குறுகியது. எழுதினோர் – எழுது + இன் + ஓர்(ஆர்) – ஆர் என்னும் விகுதி ஓர் என நின்றது.

**நினைவில் கொள்க.**

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன் கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள், |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று, டு |
| படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ, இ, ... |

தமிழ் ஓர் ஒட்டுநிலை மொழி. ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள் இருப்பினும் தமிழில் உள்ள எல்லா எழுத்துகளும் சொல்லாவதில்லை. ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்தே சொல்லாகின்றன. அவ்வாறு சொற்கள் புதிது புதிதாகத் தோன்றுவதற்கு ஒரு மொழியியல் நுட்ப அடிப்படை உள்ளது.

பகுதி ஒருமொழியின் அடிப்படையான வேர்ச்சொல்லாகும். புதிய சொல்லாக்கத்திற்கு வேர்ச்சொற்களின் வருகை, அவற்றின் சேர்க்கை பற்றிய மொழியியல் நுட்ப அறிவு இன்றியமையாதது. இதன்மூலம் துறைதோறும் புதிய கலைச்சொற்களை உருவாக்க முடியும்.

திணை, பால், எண், இடம் உணர்த்தும் சிறப்புள்ள மொழி தமிழ்மொழி. இச்சிறப்புக்குக் காரணம் சொல்லின் விகுதி ஆகும். இவ்வாறு வேறு வேறு உறுப்புகளை இணைத்துச் சொற்களை உருவாக்க முடியும். இச்சொற்களை வேண்டும்போது பிரித்துக் கொள்ளலாம்; மறுபடியும் சேர்த்துக் கொள்ளலாம். பிரித்தாலும் சேர்த்தாலும் பொருள் மாறாது.

பகுபதத் தன்மை உள்ள மொழியைக் கற்றுக்கொள்வது எளிது. பிற மொழியினர் தமிழை எளிமையாகக் கற்றுக்கொள்ள இதுவுமொரு காரணம் ஆகும். மேலும், இப்பகுபதத் தன்மையால் எண்ணற்ற சொற்கள் உருவாகின்றன. இது மொழியின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் இன்றியமையாதது ஆகும்.



XI_Std_Tamil_Unit_3.indd 73 29-01-2025 18:09:32

கற்பவை கற்றபின்...

உரைநடைப் பகுதியில் அமைந்துள்ள எவையேனும் பத்துச் சொற்களுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## இலக்கணத் தேர்ச்சிகொள்.

1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
2. காலம்காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?
4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
5. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | | | | | | |
| பார்த்தான் | | | | | | |
| தோன்றி | | | | | | |
| வருகிறார் | | | | | | |
| செய்க | | | | | | |
| நடந்தனன் | | | | | | |
| கொடுத்த | | | | | | |

6. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.

அன் – வந்தனன் இன் – முறிந்தது கு – காண்குவன் அன் – சென்றன

7. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




8. வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.






XI_Std_Tamil_Unit_3.indd 74 29-01-2025 18:09:32

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. கூற்று – 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   விளக்கம் – கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி; விளக்கம் தவறு   ஆ) கூற்றும் சரி; விளக்கமும் சரி
   இ) கூற்று தவறு; விளக்கம் சரி   ஈ) கூற்றும் தவறு; விளக்கமும் தவறு

2. காவடிச் சிந்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ________
   அ) பாரதிதாசன்   ஆ) அண்ணாமலையார்   இ) முருகன்   ஈ) பாரதியார்

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) வெள்ளிவீதியார் | – | 1) தமிழ் நெடுஞ்சாலை |
| ஆ) அண்ணாமலையார் | – | 2) வாடிவாசல் |
| இ) சி.சு.செல்லப்பா | – | 3) குறுந்தொகை |
| ஈ) ஆர். பாலகிருஷ்ணன் | – | 4) காவடிச்சிந்து |

   (i) 3 1 2 4   (ii) 2 4 1 3   (iii) 3 4 2 1   (iv) 3 4 1 2

4. 'முழவோசை' – இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.
   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
   ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
   இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
   ஈ) முன் நின்ற மெய் திரிதல், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் ________
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை   இ) பகுதி, சந்தி, விகாரம்   ஈ) பகுதி, விகுதி

**குறுவினா**

1. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
2. காவடிச்சிந்து என்பது யாது ?
3. கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் – குறிப்பு வரைக.
4. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

**சிறுவினா**

1. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்களுக்கும் மலைக்கும் உள்ள தொடர்பிற்கு எடுத்துக்காட்டுத் தருக.
2. தமிழ்ப்பண்பாட்டின் ஓர் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
3. கழுகுமலைத் தலத்தின் சிறப்புகளைக் காவடிச்சிந்து கொண்டு விளக்குக
4. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.
   அ) வருகின்றாள்   ஆ) வாழ்வான்   இ) காண்பிப்பார்   ஈ) பிரிந்த
5. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது; அதுபோல இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தன்மையை ஒப்பிட்டு விளக்குக.



XI_Std_Tamil_Unit_3.indd 75    29-01-2025 18:09:32

### நெடுவினா

1. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க.
2. காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.
3. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## மொழியை ஆள்வோம்

### வை.மு. கோதைநாயகி (1901–1960)

### சான்றோர் சித்திரம்

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. ('வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்') ஆவார்.



வை.மு. கோதைநாயகி (1901–1960)

இவர் 'ஜகன் மோகினி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின்மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.

### வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.
2. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.



XI_Std_Tamil_Unit_3.indd 76 29-01-2025 18:09:32

4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

## தமிழாக்கம் தருக.

1. Education is the most powerful weapon, which you can use to change the world.
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
3. Culture does not make people. People make culture.
4. People without the knowledge of their past history and culture are like trees without roots.
5. A nation's culture resides in the hearts and in the soul of its people.

## கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.

### தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு

| | |
|---|---|
| ஜனவரி – 13, மதுரை. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும் தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் 'பண்பாடுகளால் வாழும் தமிழர்' என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்துகொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

## மொழியோடு விளையாடு

## கட்டுரை எழுதுக.

"பண்பாட்டைப் பாதுகாப்போம்
பகுத்தறிவைப் போற்றுவோம்" – என்னும் பொருள்பட ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

## உடன்பட்டும் மறுத்தும் பேசுக.

### ஆங்கிலேயர் வருகை (உடன்படல்)

ஆங்கிலேயர் வருகையால் இந்தியா முழுவதும் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. தொலைத்தொடர்பு வசதி அவர்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நமது நாட்டின் மிகப்பெரிய அலுவலகக் கட்டடங்கள் அவர்கள் கட்டுமானத்தால் ஆனவையே. மேலும், நமது தொழில்துறையை மேம்படுத்தியதும் அவர்களே. அவர்களின் காலம், வளர்ச்சிப் படிநிலையின் விடியற்காலம்.

### ஆங்கிலேயர் வருகை (மறுத்தல்)

ஆங்கிலேயர் இந்தியாவில் இரயில் பாதைகளைத் துறைமுகங்களோடு இணைத்து அதன் வழியாக நமது அரிய செல்வங்களையும் உற்பத்திப் பொருள்களையும் பிரிட்டனுக்குக் கொண்டு சென்றது அவர்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்காகவே. தொலைத்தொடர்பு வசதிகளையும் பெரிய கட்டடங்களையும் இந்தியர்களுக்காகச் செய்து கொடுக்கவில்லை. அவர்களின் ஆட்சிமுறைத் தேவைகளுக்காகவே செய்துகொண்டனர். எனவே, ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செய்த காலம் நம்மை நாமே தொலைத்திருந்த இருள்காலம்.



XI_Std_Tamil_Unit_3.indd 77 29-01-2025 18:09:32

மேலும்,

- தொழில்நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே/ வீழ்ச்சியே,
- தற்போதைய உணவுமுறை நல்வாழ்வை வளர்க்கிறது / குறைக்கிறது.
- தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள் / தள்ளி வைத்திருக்கிறார்கள் ஆகிய தலைப்புகளில் பேசவும் எழுதவும் செய்க.

## செய்து கற்போம்

உங்களின் பெற்றோர் அல்லது முன்னோர்களிடம் தமிழ்ப்பண்பாடு மற்றும் புழங்கு பொருள்கள் குறித்துக் கேட்டறிந்து ஒப்படைவு தயார் செய்க.

(எ–கா.) பண்பாடு - ஏறுதழுவுதல், கார்த்திகை தீபம்...

புழங்குபொருள்கள் - தாழி, அம்மி...

## நிற்க அதற்குத் தக

| வேலைகள் | ஆண் | பெண் | இருவரும் | ஆண் / பெண் இருவருள் ஒருவரை மட்டும் தேர்வு செய்தால் அதற்கான காரணத்தை எழுதுக. |
|---|---|---|---|---|
| பூத்தொடுத்தல் | | | | |
| கணினியில் பணி | | | | |
| காவலர் | | | | |
| சமைத்தல் | | | | |
| மருத்துவம் | | | | |
| வழக்கறிஞர் | | | | |
| வீட்டின் தூய்மை | | | | |
| தொழில் முனைவோர் | | | | |

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

Ethnic Group – இனக்குழு

Earth Environment – புவிச்சூழல்

Etymological Dictionary – வேர்ச்சொல் அகராதி

Prefix – முன்னொட்டு

Suffix – பின்னொட்டு

Cultural Elements – பண்பாட்டுக்கூறுகள்

### அறிவை விரிவு செய்

- ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை – ஆர். பாலகிருஷ்ணன்.
- காவடிச் சிந்து – அண்ணாமலையார்.
- வாடிவாசல் – சி.சு. செல்லப்பா.
- எழுத்து இதழ்த் தொகுப்பு – தொகுப்பாசிரியர் – கி.அ. சச்சிதானந்தன்.



XI_Std_Tamil_Unit_3.indd 78 29-01-2025 18:09:33

இயல் 4

# கேடில் விழுச்செல்வம்

*கல்வி, அழகியல், மனிதம்*



## கற்றல் நோக்கங்கள்

- காலந்தோறும் கல்வியின் வளர்நிலை வரலாற்றை அறிந்து கற்பதோடு, கல்லாத மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுதல்.
- செய்யுள்களின்வழி வெளிப்படும் கல்விமுறைகளையும் விழுமியங்களையும் போற்றிப் பின்பற்றுதல்.
- சிறுகதை இலக்கியத்தின் மையக்கருத்தை உணர்ந்து திறனாய்வு செய்யும் முறைகளை அறிதல்.
- சொல்லாக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்து புதிய சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துதல்.
- அற இலக்கியங்களின் உட்பொருளை அறிந்து அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன் பெறுதல்

## பாடப்பகுதிகள்

- உரைநடை – தமிழ்நாட்டுக் கல்வி வரலாறு
- செய்யுள் – பிள்ளைக்கூடம்
  தொலைந்து போனவர்கள்
- துணைப்பாடம் – ஒரே நண்பன்
- இலக்கணம் – கலைச்சொல்லாக்கம்
- திருக்குறள்

# இயல் 4

## தமிழ்நாட்டுக் கல்வி வரலாறு




கல்வியின் நோக்கம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும்; பன்னெடுங்காலமாக முன்னோர்களால் வளப்படுத்தப்பட்ட அறிவாற்றலையும் அனுபவத்தையும் ஒவ்வொரு தனிமனிதனும் பெறுமாறு செய்வதுமாகும். ஒருவரின் வாழ்க்கை முழுவதும் தொடர் நடைமுறையாகத் திகழும் கல்வியானது சமூக மாற்றத்தின் இன்றியமையாக் காரணியாகவும் விளங்குகிறது. கல்வியின் முதன்மை நோக்கமான, 'தனிமனிதனைச் சமுதாயத்துக்கு ஏற்றவனாக மாற்றுதல்' என்னும் சீரிய பணியில் தமிழகம் கடந்து வந்த பாதை போற்றுதலுக்குரியது.

வாழ்க்கையை நடத்துவதற்கான அடிப்படைத் திறன்களை வளர்ப்பதற்கு ஒவ்வொரு சமூகத்திலும் வயதில் மூத்தவர்களால் கதைகள், கருத்துகள்வழி வாழ்க்கை நெறிகள் மற்றும் உலகப்பார்வை சார்ந்த கருத்துகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அவை கற்பவர் மனத்தில் ஆழப் புதைந்துள்ள திறன்களைத் தோண்டி வெளிக்கொண்டு வருவதால் 'கல்லுதல்' என்ற பொருளின் அடிப்படையில் 'கல்'வி என வழங்கலாயிற்று. 'கல்வியில் சிறந்த தமிழ்நாட்டில்' காலந்தோறும் மக்களின் தேவைகளுக்கேற்பக் கற்றலும் கற்பித்தலும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ந்துள்ளன.

### தமிழ் இலக்கியங்களில் கல்வி

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை ஓதற்பிரிவு (தொல். அகத். 25) எனக் குறிப்பதோடு எண்வகை மெய்ப்பாடு பற்றிக் கூறும்போது கல்வியின் பொருட்டு ஒருவருக்கு, 'பெருமிதம்' தோன்றும் (தொல்.மெய்.9) என்றும் கூறுகிறது. தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன.

சங்க இலக்கியங்களும் கல்வியின் சிறப்பைப் பெரிதும் போற்றுகின்றன. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!" (புறம். 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்) என்ற புறநானூற்று அடிகள் பொருள் கொடுத்தும் தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்றதைச் சிறப்புடன் குறிக்கின்றன.

> **கல்வியின் சிறப்பு**
>
> துணையாய் வருவது தூயநற் கல்வி – திருமந்திரம்.
>
> கல்வி அழகே அழகு – நாலடியார்
>
> இளமையில் கல் – ஔவையார்.

சங்க காலத்தவர் குடும்பம், அரசு, சமூகம் என்ற மூன்று நிலைகளிலும் சிறப்பினைப் பெறக் கல்வி தேவை என்பதனை உணர்ந்து கற்றனர்.

"சங்ககாலத் தமிழகத்தில், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்னும் மா. இராசமாணிக்கனாரின் கருத்து,



XI_Std_Tamil_Unit_4.indd 80 29-01-2025 18:10:16

தமிழகத்தில் அன்று நிலவிய கல்விமுறையின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது.

சங்கம் என்ற அமைப்பு, பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையது. இதுதவிர, மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம், சமணப்பள்ளி, பௌத்தப் பள்ளி போன்ற அமைப்புகள் சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்து வந்துள்ளன. மன்னராட்சிக் காலத்தில் போர்ப்பயிற்சிகளைத் தருவதும் முக்கியமான கல்வியாகக் கருதப்பட்டது.

கற்பிக்கும் ஆசிரியர்கள் மூவகையினராக இருந்தனர்.

| | |
|---|---|
| 1. கணக்காயர் | எழுத்தும் இலக்கியமும் உரிச்சொல்லும் (நிகண்டு) கணக்கும் கற்பிப்போர். |
| 2. ஆசிரியர் | இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர். |
| 3. குரவர் | சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர். |

### சமண, பௌத்தப் பள்ளிகள்

கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் முதன்மையான அறங்களாகும். சமணத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் கற்பித்தனர். அவ்விடங்கள் பள்ளிகள் எனக் குறிப்பிடப்பட்டன. 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். அங்குச் சென்று மாணவர்கள் கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று. 'பள்ளி' என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.

வந்தவாசி அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். பட்டினிக்குரத்தி என்னும் சமணப் பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளியொன்றை நிறுவியிருந்தார். இவை, சமணப் பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் 'பெண் பள்ளிகள்' என்று அழைக்கப்பட்டன.



தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்த சீனப்பயணி யுவான் சுவாங், அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றியிருக்கிறார் என்ற செய்தி பௌத்தமும் சமணமும் தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும்பங்கினை விளக்குகிறது.

கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று பெரிய திருமொழியும் 'ஓதும் பள்ளி' என்று திவாகர நிகண்டும் 'கல்லூரி' என்று சீவக சிந்தாமணியும் குறித்துள்ளன. கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகளை ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல், நூல் எனப் பல பெயரிட்டு அழைத்தனர். முன்மூன்றும் ஓலைக்கற்றையையும் பின்னிரண்டும் உட்பொருளையும் சிறப்பாகக் குறித்தன.



XI_Std_Tamil_Unit_4.indd 81 29-01-2025 18:10:16

கற்றவர்கள் விவாதிக்கும் அவைகள் சங்க காலத்திலிருந்தே இருந்தன. தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக்கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்ற கலைவடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது. பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது. 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று அந்நூல் பேசுகிறது.

### கல்விக் களம்

| | |
|---|---|
| பள்ளிகள் | கலைகள், கல்வி போன்றவற்றைக் கற்பிக்கும் இடங்களாக விளங்கின. |
| மன்றம் | கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடமாகத் திகழ்ந்தது. |
| சான்றோர் அவை | செயல்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அவையாக இருந்தது. |

## மரபுவழிக் கல்வி முறைகள்

### (அ) குருகுலக் கல்விமுறை

இம்முறையில் மாணவர்கள், ஆசிரியர்களை அணுகி அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக



வாழ்தல் என்ற அடிப்படையில் இக்குருகுலக் கல்விமுறை அமைந்திருந்தது. இது வாழ்வியலைக் கட்டமைப்பதில் சிறப்பானதாக விளங்கியது.

### (ஆ) திண்ணைப் பள்ளிக் கல்விமுறை

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஊர்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன. அவற்றினைத் தெற்றிப் பள்ளிகள் என்றும் அழைத்தனர். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கணக்காயர்கள் என்றே அழைக்கப்பட்டனர். அக்காலக் கல்விமுறை, திண்ணைப் பள்ளிமுறை என்றே தமிழகத்தில் அழைக்கப்பட்டது.

இப்பள்ளிகள் ஒரேமாதிரியான வரன்முறையுடன் செயல்படவில்லை. எனவே, ஆங்கிலேயர்கள், திண்ணைப் பள்ளிகள், பாடசாலைகள், மக்தாபுகள், மதரஸாக்கள் போன்ற கல்வி அமைப்புகளை நாட்டுக்கல்வி (Indigeneous Education) என்று அழைத்தனர். இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும்முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன.

சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே

**தெரியுமா?**

'ரெவரெண்ட் பெல்' என்ற ஸ்காட்லாந்து பாதிரியார் தமிழகத் திண்ணைப் பள்ளிக் கல்விமுறையைக் கண்டு வியந்தார். இம்முறையில் அமைந்த ஒரு பள்ளியை ஸ்காட்லாந்தில் 'மெட்ராஸ் காலேஜ்' என்னும் பெயரில் நிறுவினார். அங்கு இக்கல்விமுறை மெட்ராஸ் சிஸ்டம், பெல் சிஸ்டம் மற்றும் மானிடரி சிஸ்டம் என்றும் அழைக்கப்பட்டது.



XI_Std_Tamil_Unit_4.indd 82 29-01-2025 18:10:17

**தமிழ்நாட்டில் விடுதலைக்கு முன் கல்வி வளர்ச்சி**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1826 | சென்னை ஆளுநர் சர். தாமஸ் மன்றோ ஆணைக்கிணங்கப் பொதுக்கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1835 | சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இரண்டு மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்று. |
| 1840 | சென்னை மாநிலக் கல்லூரி தொடங்கப்பட்டது. |
| 1854 | பொதுக்கல்வித் துறை நிறுவப்பட்டு முதல் பொதுக்கல்வி இயக்குநர் (DPI) நியமிக்கப்பட்டார். |
| 1857 | சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. |
| 1859 | 1794இல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆஃப் சர்வே என்ற நிறுவனம், 1859இல் கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது. |
| 1910 | தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1911 | பள்ளியிறுதி வகுப்பு – மாநில அளவிலான பொதுத்தேர்வு நடைமுறைக்கு வந்தது. |

காணப்பட்டது என்றும் தாமஸ் மன்றோ காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### (இ) உயர்நிலைக் கல்விமுறை

தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் முறை உயர்நிலைக் கல்வி முறை என்ற வகைமைக்குள் அடங்கும். திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதர் இம்முறையில்தான் பாடம் பயின்றார்.

### தமிழ்நாட்டில் ஐரோப்பியர்களின் கல்விப்பணி

1453ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜெர்மனி நாட்டவரான ஜான் கூட்டன்பர்க் (Johannes Gutenberg) வடிவமைத்த அச்சு இயந்திரம், கல்வி பரவலாகக் காரணமாயிற்று. பொ.ஆ. (கி.பி.) 1706 இல் டச்சுக்காரர்களின் சமயப் பரப்புச் சங்கம் தமிழ்நாட்டில் முதன்முதலாகக் கல்விப் பணியில் ஈடுபட்டது. தரங்கம்பாடியில் முதன்முதலில் அச்சுக்கூடத்தை ஏற்படுத்தி, மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களை அச்சடித்தனர். இந்தியாவில் முதன்முதலில் அச்சேறிய மொழி தமிழே ஆகும். டச்சுக்காரர்கள் அறப்பள்ளிகளை (Missionary Schools) நிறுவியதோடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் அமைத்தனர்.

1813ஆம் ஆண்டு சாசனச் சட்டப்படி லண்டன் பாராளுமன்றம், இந்தியர்களின் கல்விக்காக ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியது.

1835ஆம் ஆண்டில் மெக்காலே கல்விக்குழு உருவாக்கப்பட்டது. இதன் அறிக்கை இந்தியக் கல்வி முறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.



XI_Std_Tamil_Unit_4.indd 83 29-01-2025 18:10:17

1854ஆம் ஆண்டு சார்லஸ் உட் தலைமையிலான குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, தற்காலக் கல்வியும் தேர்வுமுறையும் உருவெடுத்தன. சார்லஸ் உட்டின் அறிக்கை, 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுகிறது. பொ.ஆ. (கி.பி.) 1882ஆம் ஆண்டு உருவான ஹண்டர் கல்விக்குழு சீருடை முறை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது. மேலும், புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கும் வழங்கப் பரிந்துரைத்தது.

ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த 19ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவரின் எண்ணிக்கை 15 விழுக்காடாக இருந்தது. நாடு விடுதலை பெற்றவுடன் இந்நிலையை மாற்றக் கருதிய நம் அரசு இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 45இன் கீழ் நாட்டிலுள்ள 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

> கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
> மூத்தோரை இல்லா அவைக்களனும் – பாத்துண்ணும்
> தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
> நன்மை பயத்தல் இல் (திரிகடுகம் – 11)

சட்டம் இயற்றியதுடன் அக்குறிக்கோளை நிறைவேற்ற ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் விளைவாக நாடெங்கிலும் கல்விநிலையில் வளர்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக, தமிழகத்தில் கல்விநிலை தீவிரமாக முன்னேற்றம் கண்டது. மேலும், அரசு வளர்ந்து வரும் காலத்திற்கேற்ற கல்விமுறையில் மாற்றமும் ஏற்றமும் கொண்டுவரப் பல குழுக்களை அமைத்தது.

> ஓர் ஆசிரியர் என்பவர், நீண்டகாலத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்துகிறார். அந்தத் தாக்கத்தின் விளைவு எக்காலம் வரை இருக்கும் என அவராலேயே கூற இயலாது.
>
> – ஹென்றி ஆடம்ஸ்

குருகுலக் கல்விமுறை, திண்ணைப் பள்ளி, கல்வி நிலையம் என்னும் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்ட கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் கல்வித்துறை பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. அதன் விளைவாக, நம் கல்விமுறை மாற்றமும் ஏற்றமும் பெற்று, தமிழ்நாடு நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக விளங்குகிறது.



**கற்பவை கற்றபின்...**

1. தமிழ்நாட்டின் பண்டைக் கல்விமுறைகள் குறித்துச் செய்திப்படக் கட்டுரை ஏடு ஒன்றை உருவாக்குக.
2. தமிழ்நாட்டின் விடுதலைக்குப் பிறகு கல்விமுறையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி முடிவுகளைப் பதிவு செய்க.



XI_Std_Tamil_Unit_4.indd 84 29-01-2025 18:10:17

கவிதைப்பேழை

இயல் 4

# பிள்ளைக்கூடம்

– இரா. மீனாட்சி




இளமையின் சிறகை முறிக்காத இனிய சூழலில், பிள்ளைகளுக்குப் பிடித்த பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றொரு கனவு அனைவருக்கும் இருக்கும். அந்தக் கனவை ஓர் ஓவியர் வரைந்து காட்டலாம்; ஒரு பாடகர் பாடிக் காட்டலாம்; இங்கொரு கவிஞர் எழுதிக் காட்டுகிறார்.

*சொந்தமொழி கற்பிக்கும்*
*இந்தப் பள்ளிக்கூடம்*
*மிகவும் பிடித்துப் போய்விட்டது.*

*இங்கே, ஐம்பதாண்டு வேம்பு*
*கோடையில் கொட்டும் பூக்களை*
*எண்ணச் சொல்கிறார்கள்.*

*வேலி ஓணான்*
*கருங்கல் தூணில் வந்து அமர்ந்து*
*தியானிக்கும் நேரத்தைக்*
*குறித்து வைக்கச் சொல்கிறார்கள்.*

*வெட்டவெளியில்*
*தட்டுக்கூடையில்*
*சர்க்கரைப்பண்டம் வைத்தவுடன்*
*எங்கிருந்தோ வந்து சேரும்*
*எறும்புகளின் வேகத்தை*
*அளக்கச் சொல்லுகிறார்கள்*

*மழை பெய்ய ஆரம்பித்தால்*
*வட்டரங்க நடுமேடையில்*
*வீழ்ந்து வழியும்*
*துளிகளின் வடிவத்தை*
*ஓவியமாய்த் தீட்ட,*
*செம்மண்தாளும்*
*வண்ணக்குச்சிகளும் தருகிறார்கள். மேலும்,*

*காலையில் மயிலுடன் நடக்க வேண்டுமாம்.*
*மாமரக் குயிலுடன் இசைக்க வேண்டுமாம்.*
*வண்ணத்துப்பூச்சியுடன் பறந்து*
*ஆடித்திரிய வேண்டுமாம்.*

*மாலையில் மரங்களின் முதுகினைச்*
*செல்லமாய் வருடிவிட வேண்டுமாம்.*
*குறுஞ்செடிகளுடன் உற்சாகமாய்ப்*
*பேச வேண்டுமாம்.*

*இந்தப் பள்ளியில்*
*சேர்ப்பார்களா*
*என்னைப் பெற்றவர்கள்?*

*தாய்மொழியிலே பயின்று*
*யாதும் ஊரென*
*உலகின் உறவாகவே*
*விரும்புகிறேன் நான்.*

*– இரா. மீனாட்சி*

## நூல்வெளி

இரா. மீனாட்சி, 1970களில் எழுதத் தொடங்கி நெருஞ்சி, சுடுபூக்கள், தீபாவளிப்பகல், மறு பயணம், வாசனைப்புல், உதயநகரிலிருந்து, கொடி விளக்கு உள்ளிட்ட கவிதைத்தொகுப்புகளைப் படைத்துள்ளார். இவர் பாண்டிச்சேரி ஆரோவில்லில் வாழ்ந்து வருகிறார்; ஆசிரியப்பணியிலும் கிராம மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்டவர். 'கொடி விளக்கு' என்னும் நூலிலிருந்து இக்கவிதை எடுத்தாளப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்...

தாய்மொழிவழிக் கல்வி பற்றிய உங்கள் எண்ணங்களைக் கவிதையாக்குக.



XI_Std_Tamil_Unit_4.indd 85 29-01-2025 18:10:17

கவிதைப்பேழை

இயல் 4

# தொலைந்து போனவர்கள்

– அப்துல் ரகுமான்

**நுழையும்முன்**

மானுட சமுதாயத்தின் விழிகள் ஒளியிழந்து கிடப்பதைத் தம் கவிதையில் உணர்த்துகிறார் கவிஞர்; அவ்விழிகளுக்கு ஒளியூட்ட விரும்புகிறார். நடக்காததை நடந்ததாகக் கருதிக்கொண்டு மாயையில் வாழும் மக்களுக்கு உண்மையைக் காட்டும் தத்துவமாக இக்கவிதை அமைந்துள்ளது.

*விடிந்ததென்பாய் நீ அனுதினமும் – வான்*
*வெளுப்பது உனது விடியலில்லை*
*முடிந்ததென்பாய் ஒரு காரியத்தை – இங்கு*
*முடிதல் என்பது எதற்குமில்லை.*

*கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்*
*காகிதம் தின்பது கல்வியில்லை*
*பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? – வெறும்*
*பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல.*

*குளித்தேன் என்பாய் யுகயுகமாய் – நீ*
*கொண்ட அழுக்கோ போகவில்லை*
*அளித்தேன் என்பாய் உண்மையிலே – நீ*
*அளித்த தெதுவும் உனதல்ல.*

*உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்*
*உடலுக் கணிவது உடையல்ல*
*விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு*
*வினாவாய் நீயே நிற்கின்றாய்.**

*தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்*
*தின்னும் பசிகளுக் கிரையாவாய்*
*வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்*
*வெற்றியிலே தான் தோற்கின்றார்.**

*'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும்*
*நாடக வசனம் பேசுகிறாய்*
*ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த*
*ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.**

**பா வகை: சிந்து**

*– அப்துல் ரகுமான்*





XI_Std_Tamil_Unit_4.indd 86 29-01-2025 18:10:17

*ஆப்கானிஸ்தானில் பிறந்த மௌலானா ரூமி, ஆன்ம ஞானியாக மாறி சூஃபி பிரிவைத் தழுவினார். அவருடைய மஸ்னவி என்ற உலகப்புகழ் பெற்ற பாரசீக ஞான காவியம் குறிப்பிடத்தக்கது. அப்துல் ரகுமான் இது பற்றி எழுதியிருக்கிறார். புல்லாங்குழலை ஆன்மாவாகக் குறியீடு செய்து கவிதை படைத்திருக்கிறார் ரூமி.*

என்னை
மூங்கிற்காட்டிலிருந்து
வெட்டி வீழ்த்திப்
பிரித்ததற்காக
நான் எழுப்பும்
கூக்குரல் கேட்டு
ஆடவர் பெண்டிர் யாவரும்
அழுது புலம்புகின்றனர்.

*இதை, "தீய குணங்கள் என்ற கறைகள் படியாத தூய உலகம் அது. அப்போது ஆன்மா இறைத்தரிசனம் என்ற பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது. இத்தகைய நிலையிலிருந்த ஆன்மாவைப் போர், பொறாமை, பூசல், அகந்தை, கள்ளம், கபடம், பேராசை, சினம், காமம் நிறைந்த சடவுலகுக்கு அனுப்பினால் அது அழாமல் என்ன செய்யும்?"*

*என ரகுமான் விளக்குகிறார்.*

## இலக்கணக்குறிப்பு

கற்றேன் – தன்மை ஒருமை வினைமுற்று; உடை அணிந்தேன் – இரண்டாம் வேற்றுமைத்தொகை; உரைத்தாய் – முன்னிலை ஒருமை வினைமுற்று

## பகுபத உறுப்பிலக்கணம்

**வென்றேன் – வெல்(ன்) + ற்+ஏன்**

வெல் – பகுதி (ல், ன் எனத் திரிந்தது விகாரம்)

ற் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**நிற்கின்றாய் – நில்(ற்)+ கின்று+ ஆய்**

நில் – பகுதி (ல், ற் எனத் திரிந்தது விகாரம்)

கின்று – நிகழ்கால இடைநிலை

ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**பெற்றேன் – பெறு(பெற்று) + ஏன்**

பெறு – பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது)

ஏன்– தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**அணிந்தேன் – அணி+த்(ந்)+த்+ஏன்**

அணி – பகுதி

த் – சந்தி (த், 'ந்' எனத் திரிந்தது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

### நூல்வெளி

அப்துல் ரகுமான் புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக்கவிதை எனக் கவிதையின் பல்வேறு வடிவங்களிலும் எழுதியுள்ளார். இவர் வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பால்வீதி, நேயர்விருப்பம், பித்தன், மின்மினிகளால் ஒரு கடிதம் முதலிய கவிதை நூல்களை எழுதியுள்ளார். பாரதிதாசன் விருது, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது, ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது முதலானவற்றைப் பெற்றுள்ளார். இப்பாடல் 'சுட்டுவிரல்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

### கற்பவை கற்றபின்...

தமிழ்க் கவிதைகளுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிஞர்களின் பட்டியலைத் திரட்டி, நூலின் பெயர், ஆண்டு போன்ற விவரங்களோடு அட்டவணை உருவாக்குக.



XI_Std_Tamil_Unit_4.indd 87 29-01-2025 18:10:18

விரிவானம்

இயல் 4

# ஒரே நண்பன்

– ஜெயகாந்தன்

நுழையும்முன்

மனிதர்களின் நடத்தை மாற்றங்களில் அவரவர் நண்பர்களுக்குப் பெரும்பங்கு உண்டு. அதனால்தான் நல்ல நண்பர்களைத் தேர்தெடுத்துப் பழகவேண்டும் என்பர். ஒவ்வொரு மனிதனுக்கும் சரியான நண்பர்கள் அமையும்போதுதான் அவர்களின் வாழ்க்கை சிறப்படைகிறது. வள்ளுவரும் 'இடுக்கண் களைவதாம் நட்பு' என நட்பின் மேன்மையை நயம்பட உரைக்கிறார். மேலும், நட்பின் சிறப்புகளைக் கூறாத இலக்கியங்களே இல்லை எனலாம். இவ்வாறு நட்பின் பரிணாமங்கள் பலவற்றைப் பேசுகின்றது இச்சிறுகதை.

மதுரைக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்த வேணு பட்டணத்துக்கு வந்து படிக்கவேண்டும் என்ற ஆசையினால் ஹாஸ்டலில் தங்கியிருந்தான். சந்திரனும் அவனும் ஒரே வகுப்பு, ஒரே ரூம்.

சந்திரன், கல்லூரியில் சேர்ந்த முதலாண்டிலேயே அவனது படிப்புக்கும் வளர்ப்புக்கும் பொறுப்பாயிருந்த மாமாவையும் இழந்துவிட்டு, கல்லூரிப் படிப்பையே நிறுத்திவிடுவதாக இருந்தான்.

மாமாவின் மரணத்துக்குப்பின், தான் கல்லூரியிலிருந்து நின்றுவிடப் போவதாகத் தனக்கு நெருங்கிய நண்பர்களிடம் சோர்வும் சோகமும் நிறைந்த குரலில் சொல்லி விடை பெற்றுக்கொண்ட பின், ரூம் நண்பனிடம் தன் நிலைமையைச் சந்திரன் தெரிவித்தபோது வேணு பதறிப்போனான்.

"சந்துரு! நீ என்னோடு இந்த ரூம்லே இருக்கிறதிலே எனக்கு எவ்வளவு சந்தோஷம்.... பெருமை தெரியுமா? நீ படிப்பை விட்டுட்டுப் போறது எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. நீ இங்கேயே தொடர்ந்து படிக்கறதுக்காக ஏதாவது நான் செய்ய முடியும்னா நிச்சயம் சந்தோஷமா அந்த உதவியைச் செய்வேன்" என்று வேணு கூறுகையில் சந்திரன் முதலில் வியந்தே போனான்.

"வேணு, உன் அன்பைத் தெரிஞ்சுக்காம இவ்வளவு நாள் இருந்துட்டேன்; உன் அன்புக்கு ரொம்ப நன்றி. என்ன உதவி கேக்கறதுன்னு எனக்குப் புரியல்லே... இவ்வளவு நாள் எங்க மாமாவுக்கு ஒரு சுமையாக இருந்தேன்.. அவரும் போய்விட்டார். இன்னொருத்தர் சுமக்க வேண்டிய சுமை நான். நட்புங்கிறது சுமையில்லே வேணு.." என்று கண் கலங்கினான் சந்திரன்.

"சந்துரு.. உதவ சக்தியுள்ளவனுக்கு உதவி செய்யறது சுமையாகாது. நீ என் உதவியை ஏத்துக்கத்தான் வேணும்" என்று வேணு சொல்லும்போது, சந்திரனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அதன் பிறகு வேணுவும் சந்திரனும் சக வகுப்பினர் என்பது மட்டுமில்லாமல் எல்லா விதங்களிலும் சமமான ஒத்த தரத்தவர் ஆயினர்.

ஒருமுறை கைக்கடிகாரத்துக்காக வேணுவுக்கு ஊரிலிருந்து நானூறு ரூபாய் அனுப்பியிருந்தார்கள். ஆனால், இருநூறு ரூபாய் விலையில் இரண்டு கடிகாரங்கள் வாங்கினான் வேணு. அதில் ஒன்றைச் சந்திரனுக்கு அவன் தந்தபோது 'இதெல்லாம் அதிகம்' என்று தயங்கினான் அவன். எனினும் வேணுவின் அன்புக் கண்டிப்பை அவனால் மீற முடியவில்லை.



XI_Std_Tamil_Unit_4.indd 88 29-01-2025 18:10:18

படிப்பு முடிந்து கல்லூரியைவிட்டு வெளியே வந்தபோது வேணுவை, அவனது தகப்பனார் மதுரையில் புதிதாக ஏற்படுத்தியிருந்த தொழிற்சாலை வரவேற்றது.

சந்திரன், உலகம் எப்படி இருக்கிறது என்று சொல்லத்தான் அவனுக்குத் தெரியுமே அல்லாது உலகத்தில் எப்படி வாழ்வது என்று அவனுக்குத் தெரியாது. அவன் தயக்கத்தைப் புரிந்துகொண்ட வேணு, "உதவி கேட்பது நட்பின் உரிமை. இதில் கேவலம் என்று நினைக்கவோ, வெட்கப்படவோ நியாயமில்லை. அப்படியிருந்தால் அந்த நட்பு முழுமையாய் இன்னும் வளரவில்லை என்றுதான் அர்த்தம்" என்றான்.

சில நாள்களுக்குப் பிறகு, வேணு உற்சாகத்தோடு சந்திரனிடம் சொன்னான்: "எங்கப்பாவுக்கு சிநேகிதர் ஒருத்தரை இன்னக்கி தற்செயலாகப் பார்த்தேன். அவர் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கலாம்னு பெரிய அளவிலே முயற்சிகள் பண்ணிக்கிட்டிருக்கார். உனக்குத் தகுந்த வேலை பத்திரிகை ஆசிரியன் தொழில்தான்னு எனக்குத் தோணிச்சு, கேட்டுவெச்சேன். இந்த மாசமே உனக்கு வேலை கிடைச்சுடும்" என்று வேணு தன் முயற்சியின் வெற்றியைக் குதூகலத்துடன் தெரிவித்ததைக் கேட்கும்போது சந்திரனுக்கு முதலில் ஒருவித பயமும், அதே சமயத்தில் தான் ஓர் எழுத்தாளனாகவும் பத்திரிகையாசிரியனாகவும் மாறப்போகும் மகிழ்ச்சியும் பிறந்தது.

அதன் பிறகு இந்த ஐந்து வருஷ காலத்தில் நண்பர்கள் இருவரும் மாதத்திற்கு ஓரிருமுறை கடிதம் எழுதிக்கொள்வார்கள். வேணு, சந்திரனின் கதை கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்து பாராட்டி எழுதுவான். தொழில் விஷயமாக சென்னைக்கு வரும்போதெல்லாம் சந்திரனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு சுற்றுவான். சந்திரன் வேண்டாமென்றாலும் கேட்காமல் நூறும் இருநூறும் செலவுக்குத் தந்து செல்வான்.

ஆனால், வேணு அனுபவிக்கும் வசதிகளையெல்லாம் எவ்விதப் பொறுப்பும், சிரமங்களும் இல்லாமல் தான் அவனது நண்பனாய் இருப்பதால் மட்டும் அனுபவித்துக் கொண்டிருப்பதாய்ப் பலமுறை எண்ணி இருக்கிறான் சந்திரன்.

****

போன மாதம் பத்திரிகை உரிமையாளருக்கும் சந்திரனுக்கும் கடுமையான அபிப்ராய பேதம் பிறந்தது.

"ஸார் போதும்! எழுத்தாளர்களைப் பற்றியும் எழுத்தைப் பற்றியும் உங்க மேலான அபிப்பிராயத்தைத் தெரிஞ்சிக்கிட்டேன். இந்தாங்க, என் ராஜினாமா" என்று மனக்கொதிப்புடன் கிறுக்கிய ராஜினாமா கடிதத்தை அவர் கையில் திணித்துவிட்டு வெளியேறினான் சந்திரன். அதெல்லாம் எந்த தைரியத்தில்?

வேலையை விட்டபின் இரண்டு கடிதங்கள் எழுதினான் வேணுவுக்கு. அந்த இரண்டு கடிதங்களுக்கும் அவன் பதில் பெறாதது ஓர் அதிசயந்தான். பிறகு கையிலிருந்த பதினைந்து ரூபாயுடன் மதுரைக்குப் புறப்பட்டான்.

****

மதுரை ஜங்ஷனை விட்டு வேணுவின் வீட்டிற்குப் போகாமல், நேரே அவனது ஆபீசுக்கே போனான் சந்திரன். வரவேற்பறையில் இருந்த பத்திரிகையைப் புரட்டிக்கொண்டு வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். பிறகு ஒரு பியூன் வந்து அழைத்தான்.

மனசில் ஏற்பட்ட சலனங்களை மறைத்துக்கொண்டு நட்பு முறையில், "என்னப்பா வேணு. என் ரெண்டு லெட்டருக்கும் நீ பதிலே போடலியே? அதான் நேரிலேயே வந்து உன்னைத் திகைக்க அடிக்கணும்னு வந்துட்டேன்" என்று செயற்கையாய் வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன் கூறினான் சந்திரன்.

"ஓ! எனக்கு நேரமே இல்லை" என்று மிடுக்குடன் தோளைக் குலுக்கி 'டை' யைச் சரிசெய்து கொண்டான் வேணு. பேசும்போதுகூட அவன் சந்திரனின் முகத்தைப் பார்க்கவில்லை. இந்தப் புதிய மாற்றத்தைச் சந்திரனால் புரிந்துகொள்ள முடியவில்லை.



XI_Std_Tamil_Unit_4.indd 89 29-01-2025 18:10:18

இருவரும் மௌனமாய் அமர்ந்திருந்தனர். சந்திரன் வேணுவைப் பற்றியே யோசித்தான். மனித குணங்கள்தான் எத்தனை ஆச்சரியமாகத் திடீர் மாற்றமுறுகின்றன! அவன் ஏன் என்னைப் பார்க்கக்கூட இல்லை!' மௌனத்தைக் கலைத்துப் பேச ஆரம்பித்தான் சந்திரன்.

"வேணு… நான் அந்த வேலையை விட்டுவிட்டது உனக்குத் தெரிஞ்சிருக்கும்.."

"உம்… எழுதியிருந்தியே…"

"புத்தியைக் கொண்டு வேலை செய்கிறவன் யந்திரமாகிவிட முடியுமா?" என்று படபடத்தான் சந்திரன்.

"ஓ!" என்று உதட்டைப் பிதுக்கினான் வேணு. "சரி சந்துரு, இது உன் சொந்த விஷயம். ஒண்ணரை மணிக்குள் நான் வீட்டிற்குப் புறப்படணும். வந்த காரியத்தைச் சொல்" என்று கைக்கடிகாரத்தைப் பார்த்தான் வேணு. அவன் தன்னை அலட்சியப்படுத்துவதும், 'சொந்த விஷயம்' என்று ஒதுங்கிப்போவதும் சந்திரனின் மனத்தை உறுத்திற்று.

"எனக்கு ஒரு இருநூறு ரூபாய் பணம் வேணும்" என்று பாதிப் புன்னகையோடும் பாதி முகம்சிவந்தும் கேட்டுவிட்டான் சந்திரன்.

"என்கிட்டே இப்ப பணம் இல்லை, இன்னொரு சமயம் – பார்க்கலாம்" என்று கூறி, இருக்கையினின்றும் எழுந்தான் வேணு. இருவரும் வெளியே வந்தனர். ஒரு காக்கிப் பையுடன் வந்து கொண்டிருந்த சந்திரனுக்கு உலகமே ஒரு வெளி மயக்காய்த் தோன்றியது.

காரில் ஏறிக்கொண்ட வேணு, சந்திரனின் முகத்தைப் பார்க்காமலேயே பர்ஸிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக் காருக்கு வெளியே நிற்கும் சந்திரனிடம், "ஊருக்குப் போகப் பணமிருக்கா?" என்று கேட்டவாறு நீட்டினான்.

"ரொம்ப தாங்க்ஸ்" என்று உறுமிவிட்டு அங்கிருந்து வேகமாக நடந்தான் சந்திரன். ஆனால், என்றோ அவன் வாங்கித்தந்த கைக்கடிகாரத்தை விற்றுவிட்டுச் சென்னை வந்து சேர்ந்தான்.

அவன் நினைத்ததுபோல் 'ஒரு வேலை' என்பது அவ்வளவு சுலபமானதாக இல்லை. ஒரு மாதம் ரொம்பவும் சிரமப்பட்டான். ஒன்றும் நடக்கவில்லை. அவனது சிரமத்தைக் கேள்விப்பட்ட மாஜி முதலாளி, பொதுவிருந்து ஒன்றில் தற்செயலாகச் சந்திப்பதுபோல் அவனைக் கண்டு பேசினார்.

"வங்காளத்திலே உழைக்கும் பத்திரிகையாளர்கள் தங்களுக்கு ஒரு தனிப் பத்திரிகை நடத்தறாங்க. தாங்கள் வேலை செய்யும் பத்திரிகையில் எழுதிய நிர்ப்பந்தங்களைத் தவிர்த்தும் அதே விஷயங்களை மறுத்தும்கூட அதில் நாலு எழுதுவார்கள். நீயும் அப்படிச் செய்யலாமே! ஆனால் இங்கே உன்னைத் தவிர வேறு எவனுக்குச் சொந்தக் கருத்துகளும், லட்சியங்களும் இருக்கு? உன்னை மாதிரி பத்துப்பேர் கூடத் தேற மாட்டாங்களே.." என்று இவனது போக்குக்கு அவர் அனுதாபம் தெரிவிக்கும்போதே, மற்றவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டது, சுருக்கென்று தைத்தது அவனுக்கு.

இப்போது அவன் மீண்டும் பழைய இடத்தில் வேலைக்கு அமர்ந்தபின், தன்னைப் போன்ற பலரையும் சந்தித்துப் பேசி, வங்காளத்தில் இருப்பதுபோலத் தங்களுக்கும் ஒரு பத்திரிகைக்கான முயற்சிகள் பல செய்து வருகிறான்.

ஆ! லட்சியங்கள்தான், பேசும்போது எவ்வளவு சுலபமாக இருக்கின்றன..

****

மாலை ஆறு மணிக்கு மேல் ரூமுக்கு வந்தான் சந்திரன். பூட்டியிருக்கும் அறைக்கதவின் முன்னே ஒரு ஸ்டூலில் அமர்ந்திருந்த வேணு எழுந்து,

"ஏய், நீ ரொம்ப இளைச்சுப்போயிட்டேப்பா…" என்று அவன் தோள்மீது கை வைத்தான். மௌனமாய் அவன் கையை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தான் சந்திரன்.



XI_Std_Tamil_Unit_4.indd 90 29-01-2025 18:10:18

"சந்துரு, உனக்கு என் மேலே ரொம்பக் கோபம், இல்லை? " என்று புன்னகையோடு கேட்டான் வேணு.

"சந்துரு.. இப்பத்தான் ஞாபகம் வருது. 'நட்பு'ன்னு எழுதியிருந்தியே ஒரு கதை, ரொம்ப நல்லா இருந்தது. என்னை நினைச்சு நீ எழுதியிருந்தாலும் அந்தப் பணக்கார நண்பனின் பாத்திரம் ரொம்ப நல்லா இருந்தது... ஒருத்தனைத் தப்பாய்ப் புரிஞ்சிக்கிறதிலேகூட ஒரு எழுத்தாளனுக்கு நன்மையிருக்கு. இல்லாட்டி அப்படி ஒரு பாத்திரம் பிறந்திருக்குமா.?"

"வாழ்க்கையில் நாம் சந்திக்கிற பாத்திரங்கள்தானே இலக்கியங்களிலேயும் உண்டாகுது" என்று சந்திரன் சொன்னபோது, வேணு சிரித்தான். அவன் சிரிப்பதைக் கண்டு சந்திரன் பேச்சை நிறுத்தினான்.

'இவன் தப்பபிப்ராயத்தை எவ்விதம் மாற்றுவது' என்ற நினைப்பில் வேணு தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

"சந்துரு, நீ உன் கதையிலே எழுதியிருக்கியே, பணக்காரங்க நட்பு நிரந்தர நட்பு இல்லேன்னு... அந்த மாதிரி நம்ப சிநேகிதமும் ஆயிடக்கூடாதுன்னுதான் அன்னக்கி நான் அப்படி நடந்துக்கிட்டேன்..." என்று கூறவும், சந்திரன் அதை நம்ப முடியாதவன் போல் வேணுவின் கண்களைப் பார்த்தான்.

"இப்படி உட்கார், விளக்கமா சொல்றேன்" என்று தன் அருகிலிருந்த நாற்காலியை அவன் பக்கம் இழுத்துப்போட்டான் வேணு.

"எனக்குத் தொழில் முறையிலேயும், அந்தஸ்து ரீதியிலேயும் பலபேர் இருக்காங்க, நண்பர்கள்ங்கிற பேரிலே... அதெல்லாம் பயன்கருதிப் போடற வேஷம். வாழ்க்கையிலே நட்புங்கற ஒரு பயன் மட்டும் கருதி நட்புக் கொள்கிற நண்பன் ஒரு மனிதனுக்குக் கெடைக்கிறதுகூடப் பெரிய விஷயம். அப்படிப்பட்ட நண்பன் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். அப்படி நான் பலரை நெனைச்சிருக்கேன். அவங்க உதவின்னு வர்ற போதெல்லாம் நான் 'கடமைன்னு நெனச்சி உதவி செஞ்சேன்...

ஆனா, புதிய புதிய பிரச்னைகள் தோணிக்கிட்டே இருக்கிறதுதானே வாழ்க்கை? அந்த நியதி எனக்கும் உண்டுன்னு அவங்களுக்குத் தோணவே இல்லை; கடைசியிலே என் நட்பு ஏதோ ஒரு சமயம் அவங்களுக்குப் பயன்படாதபோது, அந்த நண்பர்கள் எல்லாரும் என்னை வெறுக்கிறவங்களா மாறிப்போனாங்க. இப்படி எல்லாரும் போக இறுதியில் எனக்கு மிஞ்சிய நண்பன், ஒரே நண்பன் நீதான்..

நீயும் ஒரு உதவின்னு வந்து நின்னவுடனே, எனக்கு அதெல்லாம் நினைவுக்கு வந்தது. அது தப்பில்லையே..." என்று வேணு கேட்கும்போது, அது உண்மைதான் என்பதுபோல் உதட்டைக் கடித்தவாறு தலை குனிந்தான் சந்திரன்.

"உன்னைப்பத்தி- ஒரு உயர்ந்த மனிதனின் உயிருக்குயிரான நட்பைப்பத்திப் பொறுப்போட யோசிச்சேன். சந்துரு! உன்னுடைய பிரச்னைகளை நீயேதான் சமாளிக்கணும்னு எனக்குத் தோணுச்சு. என்னுடைய நட்பு உன்னை அசட்டு மனிதனா ஆக்கிடக் கூடாது. மேலும், என்னைக்காவது ஒருநாள் நம்ம நட்பும் முறிஞ்சு போகுமோன்னு நான் பயந்தேன்.

நீ பேசும் லட்சியங்களுக்கு உகந்த வேலை இந்தச் சமூகத்தில் உனக்குக் கிடைக்க முடியாது. பெரிய விஷயங்களைப் பற்றிச் சமத்காரமாகவும் ஆவேசமாகவும் பேசறதிலேயே சுகமடைகிற இன்றைய தமிழ்நாட்டுச் சராசரி மனிதர்களில் நீயும் ஒருவனா ஆயிடக்கூடாது.. ஒரு கடமையும் பொறுப்புமில்லாதவன் உலகத்திலே எதையுமே சாதிக்க முடியாது. நாளடைவிலே நட்புக்குக்கூட லாயக்கில்லாதவனா அவன் மாறிடுவான். இல்லையா!"

இருவரும் சில விநாடிகள் மௌனமாயிருந்தனர். அவன் சொன்ன விஷயங்கள் பல உண்மைகளைத் தன்னுள் செலுத்தியிருப்பது போல் உணர்ந்த சந்திரன், தலையைச் சொறிந்தவாறு சிந்தனை வயப்பட்டான்.



"வாழ்க்கை ஒரு போராட்டம்னு சொன்னால் போதுமா? இந்த உலகத்திலே நீ போராடிச் சாதிக்க வேண்டிய காரியத்துக்கு நீ உன்னை நம்பாம, என்னை நம்பி ஓடி வந்தா அது சரியாகுமா? நீ இருக்கிற இடத்தில் நிலையாய் நிற்கணும். நிற்கப் பிரயத்தனப்படணும். அதுக்கு மேலேதான் நட்பு ! நட்பு ஒரு சுமையில்லேன்னு நீதான் சொல்லுவே!" என்று சிரித்தான் வேணு.

சந்திரனின் மனமும் லேசாகி இருந்தது.. வேணுவைப் பார்த்துப் புன்னகை புரிய வேண்டும் போலிருந்த போதிலும் வேறு ஏதோ ஓர் உணர்ச்சியில் சந்திரனின் உதடுகள் துடித்தன.

"எல்லா நண்பர்கள் கிட்டேயும் செய்த தப்பை உன் கிட்டேயும் நான் செய்ய விரும்பல்லே..." என்று சொல்லிக்கொண்டே, "நீ ரொம்பப் பிரியமா கேட்டியே அந்த ஸூட்" என்று அட்டைப் பெட்டியைத் திறந்து அவன் முன் வைத்தான் வேணு. "இப்ப இதோடுகூட உனக்கு எவ்வளவு பணம் வேணும்? சொல்லு" என்று பர்ஸைத் திறந்தான். எனக்கு ஒண்ணும் வேண்டாம் என்று சந்திரன் தயங்குவது கண்டு வேணு சிரித்தான்.

"ஏ, சந்துரு! நம்ப நட்புக்கு இதெல்லாம் ஆதாரம் இல்லை... ஒரு அடையாளம்தான். பணமும் பொருளும் ரொம்ப அல்பமான விஷயம்" என்று வேணு கூறும்போது தன்னை மீறிய சந்தோஷத்துடன் அவனைப் பார்த்த சந்திரன், அவனை நோக்கிக் கை நீட்டினான்.

வேணு தன் கையிலிருந்த பர்ஸைக் கீழே போட்டுவிட்டுச் சந்திரனின் கரத்தைப் பற்றிக் குலுக்கினான்.

அப்போது 'நட்புக்கு இவையெல்லாம் அடையாளமே தவிர ஆதாரம் அல்ல' என்று வேணு கூறியதற்கு ஒப்ப அந்த விலையுயர்ந்த ஸூட்டும், பணம் நிறைந்த பர்ஸும் அவர்கள் காலடியில் விழுந்து கிடந்தன.



XI_Std_Tamil_Unit_4.indd 92 29-01-2025 18:10:19

## ஜெயகாந்தன் படைப்புகளில் சில

| சிறுகதைத் தொகுப்பு | குறும்புதினங்கள் | புதினங்கள் |
|---|---|---|
| ❖ குருபீடம் | ❖ பிரளயம் | ❖ பாரீசுக்குப் போ! |
| ❖ யுகசந்தி | ❖ கைவிலங்கு | ❖ சுந்தர காண்டம் |
| ❖ ஒரு பிடி சோறு | ❖ ரிஷிமூலம் | ❖ உன்னைப் போல் ஒருவன் |
| ❖ உண்மை சுடும் | ❖ பிரம்மோபதேசம் | ❖ கங்கை எங்கே போகிறாள் |
| ❖ இனிப்பும் கரிப்பும் | ❖ யாருக்காக அழுதான்? | ❖ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் |
| ❖ தேவன் வருவாரா | ❖ கருணையினால் அல்ல | ❖ இன்னும் ஒரு பெண்ணின் கதை |
| ❖ புதிய வார்ப்புகள் | ❖ சினிமாவுக்குப் போன சித்தாளு | ❖ ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் |

**மொழி பெயர்ப்புகள்**

❖ வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம் )

❖ ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)

## ஜெயகாந்தன் – திரைப்படமான படைப்புகள்




### நூல்வெளி

'ஒரே நண்பன்' என்னும் இச்சிறுகதை ஜெயகாந்தன் சிறுகதைகள் (தொகுதி–2) தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டது. ஜெயகாந்தன் கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் என்னும் ஊரில் 1934 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் சிறுகதை, புதினம், கட்டுரை, கவிதை, எனப் பல வடிவங்களில் எழுதியுள்ளார். சாகித்திய அகாதெமி விருதையும் ஞானபீட விருதையும் பெற்ற இவருடைய படைப்புகள், பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

### கற்பவை கற்றபின்...

நட்பின் சிறப்புப் பற்றியும், உங்கள் நண்பனுக்குத் தகுந்த நேரத்தில் உதவுவதற்குக் கிடைத்த வாய்ப்புகள் பற்றியும் வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

இனிக்கும் இலக்கணம்

இயல் 4

# கலைச்சொல்லாக்கம்

(பள்ளியின் இணைய இதழுக்காக அகராதியியலர் செழியன் அவர்களுடன் மாணவர்கள் முத்து, தமிழ்க்கனல் ஆகியோர் நடத்திய நேர்காணல்)

முத்து : வணக்கம் ஐயா!

செழியன் : வணக்கம்.

முத்து : தங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

செழியன் : மகிழ்ச்சி.

தமிழ்க்கனல்: இப்பொழுதுள்ள பேச்சு வழக்கில் மக்களால் ஆங்கிலச்சொற்கள் மிகுதியாகக் கலந்து பேசப்பட்டு வருகின்றன. ஆனால், அதற்குரிய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும் வழக்கம் குறைந்து வருகிறது. இதற்கான காரணத்தைச் சொல்லுங்கள் ஐயா.

செழியன் : அப்படி முழுமையாய்ச் சொல்லிவிடமுடியாது. சான்றாக, 'cellphone' என்னும் ஆங்கிலச் சொல்லிற்குக் கைப்பேசி, செல்பேசி, அலைபேசி, திறன்பேசி போன்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாறான சொற்களை உருவாக்கிக் கொள்ளும் முறைமைக்குக் கலைச்சொல்லாக்கம் என்று பெயர். அறிவியலுக்கு ஏற்புடைய பல கலைச்சொற்கள் வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. சில கலைச்சொற்கள் பொருத்தமில்லாமல் உள்ளன. காலத்திற்கேற்ப வளரும் சில துறைகளில் கலைச்சொற்களின் தேவை மிகுதியாக இருக்கிறது. எனவே, நாம் கலைச்சொற்களை உருவாக்கும் பணியில் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

முத்து : கலைச்சொற்கள் என்றால் என்ன?

செழியன் : ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் **கலைச்சொற்கள்** என்கிறோம். ஒரு மொழி தன் வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு உருவாக்கிக் கொள்ளும்போது மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டு புதிய செழிப்பினைப் பெற்று மேலும் வளர்ச்சி பெறும். எடுத்துக்காட்டாக website, blog போன்றவை தகவல் தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள். இவற்றிற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களாக உள்ள இணையம், வலைப்பூ போன்றவை தகவல்தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஆகும். கலைச்சொற்கள் பெரும்பாலும் காரணப்பெயர்களாகவே இருக்கும்.

தமிழ்க்கனல் : அகராதியில், கலைச்சொற்கள் குறித்து அறிந்துகொள்ள வாய்ப்பு உள்ளதா?

செழியன் : பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம். ஆனால், கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும். கலைச்சொற்களுக்கென்றே தனி அகராதிகள் உருவாக்கப்படுகின்றன.

முத்து: கலைச்சொற்கள் பயன்படும் துறைகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

செழியன்: நம் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல்

முதலான துறைசார்ந்த கலைச்சொற்கள் இன்றைய அறிவியல் சூழலுக்கேற்பப் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்க்கனல்: அவ்வாறான கலைச்சொற்கள் சிலவற்றைச் சொல்லுங்கள்...

செழியன்: மருத்துவமனை (CLINIC), குருதிப்பிரிவு (BLOOD GROUP), மருந்தாளுநர் (PHARMACIST), ஊடுகதிர் (X-RAY), குடற்காய்ச்சல் (TYPHOID), களிம்பு (OINTMENT) முதலியவை மருத்துவக் கலைச்சொற்கள்; எழுதுசுவடி (NOTE BOOK), விடைச்சுவடி (ANSWER BOOK), பொதுக் குறிப்புச் சுவடி (ROUGH NOTE BOOK), விளக்கச்சுவடி (PROSPECTUS) போன்றவை கல்வி சார்ந்த கலைச்சொற்கள். இவ்வாறு துறை சார்ந்த கலைச்சொற்கள் ஏராளமாகத் தமிழில் உள்ளன. ஒவ்வொரு துறையிலும் உள்ள புதிய கலைச்சொற்களைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திக் கலைச்சொல் அகராதிகள் வெளியிடப்படுகின்றன.

முத்து: கலைச்சொல்லாக்கப் பணியின்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் எவையேனும் உள்ளனவா?

செழியன்: தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி தொடங்குவதற்குமுன் நாம் பின்வரும் விதிமுறைகள் சிலவற்றைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

- ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

தமிழ்க்கனல்: கலைச்சொல் உருவாக்கத்தில் மாணவர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும்?

செழியன்: நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் உருவாகிக் கொண்டிருக்கும் சூழலில், அதற்கான கலைச்சொல் ஆக்கங்களும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. பெரும்பாலும் அவை ஏட்டளவில் இருக்கின்றன. அக்கலைச் சொற்களை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். எடுத்துக்காட்டாக, இ-மெயில், ஸ்மார்ட்ஃபோன், விண்டோஸ் 10, 8G ஆகிய ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக மின்னஞ்சல், திறன்பேசி, பலகணி 10, 8ஆம் தலைமுறை போன்ற கலைச்சொற்கள் தமிழில் உள்ளன. இப்பணிக்கு இதழ்களும் ஊடகங்களும் துணைநிற்க வேண்டும்.

முத்து: புதிய கண்டுபிடிப்புகளுக்கான கலைச்சொற்களை எங்கிருந்து பெறலாம்?

செழியன்: இதழ்கள், மின்இதழ்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையத்தளம் போன்றவற்றிலிருந்து பெறமுடியும். தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் இருபதிற்கும் மேற்பட்ட துறைகளுக்குக் கலைச்சொற்களை வெளியிட்டுள்ளது. பள்ளியில் செயல்படும் கையெழுத்து இதழில் கலைச்சொற்களுக்கெனத் தனியிடம் ஒதுக்கி, மாணவர்களிடையே கலைச்சொற்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

தமிழ்க்கனல்: கலைச்சொற்கள் சிலவற்றை அறிமுகப்படுத்துங்கள் ஐயா....

செழியன்: அன்றாடம் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்கள்,

| | |
|---|---|
| Touch screen | தொடுதிரை |
| Bug | பிழை |
| Gazette | அரசிதழ் |
| Despatch | அனுப்புகை |
| Subsidy | நல்கை/ மானியம் |
| Ceiling | உச்சவரம்பு |
| Circular | சுற்றறிக்கை |

| | |
|---|---|
| Sub Junior | மிக இளையோர் |
| Super Senior | மீமூத்தோர் |
| Carrom | நாலாங்குழி ஆட்டம் |
| Sales Tax | விற்பனைவரி |
| Customer | வாடிக்கையாளர் |
| Consumer | நுகர்வோர் |
| Account | பற்று வரவுக் கணக்கு |
| Referee | நடுவர் |

மேலும், இவை போன்ற பலதுறைச் சொற்களையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

முத்து : தமிழில் கலைச்சொற்களின் இன்றியமையாமையைக் கூறுங்கள்…

செழியன்: உலகின் தொன்மையான மொழிகளுள் இன்றும் நிலைத்து நிற்கின்ற மொழி, தமிழ்மொழி. காலத்திற்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் மொழியே வாழும். மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப அறிவியல் ஆகியவற்றைத் தமிழ்வழியில் பயில, கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாக உள்ளது. தாய்மொழி வழியிலான சிந்தனை மட்டுமே புதிது புதிதான கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும். உலகின் எந்த மூலையில் எவ்வகையான கண்டுபிடிப்பு நிகழ்ந்தாலும் உடனுக்குடன் ஜப்பானியர்கள் தங்கள் மொழியில் புதிய சொல்லை உருவாக்கிவிடுவர். தாய்மொழி வழியில் ஜப்பானியர்கள் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பதால் அங்கே நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன. கலைச்சொல்லாக்கம் இல்லையென்றால் அவற்றை நாம் ஒலிபெயர்ப்புச் சொல்லாக மட்டுமே பயன்படுத்த முடியும். எனவே, கலைச்சொற்களை நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது இன்றியமையாதது.

தமிழ்க்கனல்: நீங்கள் கூறிய தகவல்களை அடிப்படையாகக்கொண்டு கலைச்சொல் அகராதியை உருவாக்கும் பணியை இன்றிலிருந்தே தொடங்குகிறோம். நன்றி ஐயா.

முத்து: கலைச்சொற்கள் தொடர்பான பல பயனுள்ள செய்திகளைப் பகிர்ந்துகொண்டமைக்கு நன்றி ஐயா..

அறிவியல் கலைச்சொற்களைத் தமிழாக்குவதில் உள்ள முறைகள் குறித்து அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

| | |
|---|---|
| பழந்தமிழிலக்கியச் சொல்லைப் பயன் படுத்துதல் | வலவன் (PILOT) |
| பேச்சுமொழிச் சொல்லைப் பயன்படுத்துதல் | அம்மை (MEASLES) |
| பிறமொழிச் சொல்லினைக் கடன்பெறல் | தசம முறை (Decimal) |
| புதுச்சொல் படைத்தல் | மூலக்கூறு (Molecule) |
| உலக வழக்கை ஏற்றுக் கொள்ளல் | எக்ஸ் கதிர் (X–ray) |
| பிறமொழித்துறைச் சொற்களை மொழி பெயர்த்தல் | ஒளிச்சேர்க்கை (Photosynthesis) |
| ஒலிபெயர்த்துப் பயன்படுத்தும் சொற்கள் | மீட்டர், ஓம் (Meter, Ohm) |
| உலக அளவிலான குறியீடுகள், சூத்திரங்கள் | $\Sigma$ $\sqrt{A}$ = $\pi r^2$ $H_2O$, Ca |

தமிழில் கலைச்சொற்களை உருவாக்கிடும்போது பழந்தமிழிலக்கியச் சொற்களையும் பேச்சுவழக்குச் சொற்களையும் புதிய சொற்களையும் இயன்றவரை பயன்படுத்தல் வேண்டும்.

கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடுவோர், பிறமொழிச்சொற்களை அப்படியே கையாள்வதையோ, ஒலிபெயர்ப்புச் சொற்களாக மாற்றுவதையோ, கடன்வாங்குவதையோ தவிர்த்தல் வேண்டும். நாம் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபடும்போது தமிழில் எண்ணற்ற புதிய சொற்களை உருவாக்குவதோடு படைப்புகள் சார்ந்த அறிவையும் பெறலாம்.

கற்பவை கற்றபின்...

மாணவர் ஒவ்வொருவரும் 25 கலைச்சொற்களைப் பொருளுடன் திரட்டி அகராதியாக்குக.

## இலக்கணத் தேர்ச்சிகொள்.

1. *கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.*

2. *கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை ?*

3. *பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.*
   School Education, Director, Chief Minister, Text Book, Horticulture, Escalator

4. *SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.*

தெரிந்து தெளிவோம்

ஒரு சொல்லை மொழிபெயர்க்கும்போதோ அல்லது புதிய சொல்லை உருவாக்கும்போதோ அச்சொல் அதே போன்ற வேறு பல சொற்களை உருவாக்க உதவ வேண்டும். எடுத்துக்காட்டாக, library என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நூலகம், நூல்நிலையம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன. இச்சொற்களில் நூலகம் என்னும் சொல்லே மேலும் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டது.

library – நூலகம், librarian – நூலகர், library science – நூலக அறிவியல்.

இன்றைய நிலையில் பலரும் கலைச்சொற்களை உருவாக்கிய வண்ணம் உள்ளனர். கற்றறிந்தோர், கற்றறியாதோர், கைவினைஞர்கள், பயிற்றுநர், மாணவர்கள், மகளிர், குழந்தைகள் எனப் பலரும் கலைச்சொற்களைத் தாமாகவே உருவாக்குகின்றனர். அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கும்போது பல்வேறு சொற்களை ஆள்கின்றனர். எடுத்துக்காட்டாக, Antibiotics – எதிர் உயிர்ப்பொருள், நுண்ணுயிர்க் கொல்லிகள், உயிர் எதிர் நச்சுகள், கேடுயிர்க் கொல்லிகள், நச்சுயிர்க் கொல்லிகள் எனப் பல்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இக்கலைச்சொற்கள் தமிழில் சொல்லாக்க வளர்ச்சியினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஆனால், கலைச்சொற்களைக் கற்பதிலும் அவற்றைப் புரிந்துகொள்வதிலும் துறைசார்ந்த நிலையில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. இவற்றைத் தவிர்க்க அச்சொற்களைத் தரப்படுத்திப் பயன்படுத்த வேண்டும். தரப்படுத்தும் பணிக்காகக் குழு ஒன்றை உருவாக்கலாம்.

'தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதத் தொடங்கிய பாரதி, Member என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லொன்றை உருவாக்க முனைந்தார்.

"மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம். அவயவி சரியான வார்த்தையில்லை. அங்கத்தான் கட்டிவராது. சபிகன் சரியான பதந்தான். ஆனால், பொதுஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன்; உறுப்பாளி? ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்! கடைசியாக மெம்பர் என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆர, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்லுகிறேன்."



XI_Std_Tamil_Unit_4.indd 97 29-01-2025 18:10:20

## தெரிந்து தெளிவோம்

# நிறுத்தக்குறிகள்

### காற்புள்ளி ( , )

பொருள்களைத் தனித்தனியாகக் குறிப்பிடும் இடங்கள், எச்சச் சொற்றொடர்கள், எடுத்துக்காட்டுகள், இணைப்புச்சொற்கள், விளி முதலிய இடங்களில் காற்புள்ளி இட வேண்டும்.

- அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்க்கைப்பேறு நான்கு.
- நாம் எழுதும்போது, பிழையற எழுத வேண்டும்.
- இனியன் நன்கு படித்தான், அதனால் தேர்ச்சி பெற்றான்.
- ஐயா, அம்மையீர்,
- சிறியவன் பெரியவன், செல்வன் ஏழை.

### அரைப்புள்ளி ( ; )

தொடர்நிலைத் தொடர்களிலும் ஒரு சொல்லுக்கு வேறுபட்ட பொருள் கூறும் இடங்களிலும் அரைப்புள்ளி இட வேண்டும்.

- வேலன் கடைக்குச் சென்றான்; பொருள்களை வாங்கினான்; வீடு திரும்பினான்.
- சீர் – மாறுபாடு இல்லாதது; அளவு; இயல்பான தன்மை; ஒழுங்கு; சமம்; நேர்த்தி; அழகு; சீதனம்; செய்யுளின் உறுப்பு

### முக்காற்புள்ளி ( : )

சிறுதலைப்பு, நூற்பகுதி எண், பெருங்கூட்டுத் தொடர் முதலிய இடங்களில் முக்காற்புள்ளி இட வேண்டும்.

- சார்பெழுத்து:
- பத்துப்பாட்டு 2:246
- எட்டுத்தொகை என்பன வருமாறு:

### முற்றுப்புள்ளி ( . )

தொடரின் இறுதி, முகவரி இறுதி, சொற்குறுக்கம், நாள் முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இட வேண்டும்.

- உருவுகண்டு எள்ளாமை வேண்டும்.
- தலைமையாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.
- தொல்.சொல்.58.
- 18/02/2018.

### வினாக்குறி ( ? )

ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இட வேண்டும்.

- அது என்ன? (முற்று)
- நீ வருகிறாயா? என்று கேட்டான். (நேர்கூற்றுத் தொடர்)

### வியப்புக்குறி ( ! )

வியப்புக்குறியும் விளிக்குறியும் ஒரே அடையாளக்குறி உடையன. வியப்புக்குறி, வியப்பிடைச் சொல்லுக்குப் பின்பும் நேர்கூற்று வியப்புத்தொடர் இறுதியிலும் அடுக்குச் சொற்களின் பின்னும் வியப்புக்குறி இட வேண்டும்.

- எவ்வளவு உயரமானது!
- என்னே தமிழின் பெருமை! என்றார் கவிஞர்.
- வா! வா! வா! போ! போ! போ!

### விளிக்குறி ( ! )

அண்மையில் இருப்பவரை அழைப்பதற்கும், தொலைவில் இருப்பவரை அழைப்பதற்கும் விளிக்குறி இட வேண்டும்.

- அவையீர் !
- தம்பி!

### மேற்கோள் ( ' ', " " )

ஒற்றை மேற்கோள், இரட்டை மேற்கோள் என இருவகைப்படும்.

### ஒற்றை மேற்கோள் ( ' ' )

ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறிக்கும் இடம், கட்டுரைப்பெயர், நூற்பெயர் குறிக்கும் இடம், பிறர் கூற்றுப்பகுதிகள் முதலான இடங்களில் ஒற்றை மேற்கோள் இட வேண்டும்.

- 'ஏ' என்று ஏளனம் செய்தான்.
- பேரறிஞர் அண்ணா 'செவ்வாழை' என்னும் சிறுகதை எழுதினார்.
- 'கம்பனும் மில்டனும்' என்னும் நூல் சிறந்த ஒப்பீட்டு நூல் ஆகும்.
- 'செவிச்செல்வம் சிறந்த செல்வம்' என்பர்.

### இரட்டை மேற்கோள் ( " " )

நேர்கூற்றுகளிலும் மேற்கோள்களிலும் இரட்டை மேற்கோள் இட வேண்டும்.

- "நான் படிக்கிறேன்" என்றான்.
- "ஒழுக்கமுடைமை குடிமை" என்றார்.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. ஏடு, சுவடி, பொத்தகம் முதலிய சொற்கள் தரும் பொருள் _______

   அ) நூல்    ஆ) ஓலைக்கற்றை    இ) எழுத்தாணி    ஈ) தாள்

2. சரியான விடையைத் தேர்க.

   அ) கல்வி அழகே அழகு – 1) புறநானூறு

   ஆ) இளமையில் கல் – 2) திருமந்திரம்

   இ) துணையாய் வருவது தூயநற்கல்வி – 3) ஆத்திசூடி

   ஈ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் – 4) திருக்குறள்

   – 5) நாலடியார்

   i) அ–2, ஆ–3, இ–4, ஈ–1    ii) அ–3, ஆ–4, இ–1 , ஈ–2

   iii) அ–5, ஆ–3, இ–2 , ஈ–1    iv) அ–4, ஆ–1, இ–2 , ஈ–5

3. பிள்ளைக்கூடம் கவிதை இடம்பெற்ற நூல் _______

   அ) வடக்கு வீதி    ஆ) கொடி விளக்கு    இ) தகப்பன் கொடி    ஈ) சுட்டுவிரல்

4. "விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
   வினாவாய் நீயே நிற்கின்றாய்" – என்று உரைப்பவர் _______

   அ) பிரமிள்    ஆ) அழகிய பெரியவன்

   இ) அப்துல் ரகுமான்    ஈ) இரா.மீனாட்சி

**குறுவினா**

1. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
2. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
3. "இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
   கோடையில் கொட்டும் பூக்களை
   எண்ணச் சொல்கிறார்கள்" – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
4. 'கருங்கல்' – புணர்ச்சி விதி கூறுக.
5. "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

**சிறுவினா**

1. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
2. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
3. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா–விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.
4. கல்வியால் நீ அடைந்த சிறப்புகளைப் பத்து வரிகளில் எடுத்துரைக்க.



XI_Std_Tamil_Unit_4.indd 99 29-01-2025 18:10:20

**நெடுவினா**

1. பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
2. 'ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நண்பன் என்பவன் பிரிக்க முடியாத அங்கமாவான்' என்பதை ஜெயகாந்தனின் 'ஒரே நண்பன்' சிறுகதைவழி விளக்குக.



## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**



ஜி.யு. போப்
(1820–1908)

### ஜி.யு. போப்

செந்தமிழ்ச் செம்மல் 'டாக்டர் ஜி.யு. போப்', 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை, கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாக இவர் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு. போப் ஆவார்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக:**

1. இலக்கணக்குறிப்பு எழுதுக. அ) பிறந்தார் ஆ) அருளிய
2. திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப் – விடைக்கேற்ற வினாவை எழுதுக.
3. பதிப்பித்தார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

   பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.



XI_Std_Tamil_Unit_4.indd 100 29-01-2025 18:10:20

**செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுக.**

| | |
|---|---|
| The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metamorphosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more.<br><br>Written by Abu Zayd Al Sirafi, traveler, 10th century.<br><br>- Foreign notices of South India by K.A. Neelakanda sastri | சீனாவுக்கென்று தனியாக மதங்கள் இல்லை. இந்தியாவின் மதத்தை (பௌத்தம்) அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிலைகளைத் தங்களுக்கு அறிமுகம் செய்தோர் இந்தியர்கள் என்று நம்பும் சீனர்கள், இந்தியர்களே தங்களின் மத ஆசிரியர்கள் என்றும் கருதுகின்றனர். இந்தியாவிலும் சீனாவிலும் மரணத்துக்குப் பின்னான மறுபிறப்பை நம்புகின்றனர். ஒரே மதக்கோட்பாடு இருந்தாலும், சீனர்களும் இந்தியர்களும் வெவ்வேறு தீர்மானங்களுக்கு வருகிறார்கள்.<br><br>இந்தியாவில் மருத்துவமும், தத்துவமும் நடைமுறையில் உள்ளன. அவர்களுக்குச் சமமாகச் சீனர்களும் மருத்துவத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். 'தீய்த்தல்' அவர்களது பிரதான சிகிச்சை முறை. சீனர்கள் வானியல் சாஸ்திரப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால், இந்த அறிவியலை இந்தியர்கள் இன்னும் அதிகமாய்ப் பயன்படுத்துகின்றனர். |

Religion -------------------- Medicine ----------------

Philosophy -------------------- Science ----------------- Idols ---------------

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கல்வி என்றால் என்ன? அது நூல்களைப் படிப்பதா? அல்லது அது பலவகையானதைக் குறித்த அறிவா? இரண்டும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனத்தின் ஆற்றலும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவும் வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்துவிடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவற்றையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது, இதைப் பொறுத்துத்தான் அமைகிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுதான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நாம் பெற வேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும். (சுவாமி விவேகானந்தர் – கல்வி)



XI_Std_Tamil_Unit_4.indd 101 29-01-2025 18:10:20

## இலக்கிய நயம் பாராட்டுக.

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்;*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்.*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்*

*– பாரதியார்*

## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக.



______________________

______________________

______________________

______________________

### விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

1. தனிமொழி – அறிவு ; ____________ – வண்ண மயில் ; பொதுமொழி – ____________
2. கார்காலம் – ____________; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை; ____________ – மார்கழி, தை
3. எழுத்து, சொல், ____________ , யாப்பு, ____________ .
4. எழுத்து , ____________ , சீர், தளை, ____________ , தொடை

### செய்து கற்போம்

அருகில் உள்ள மாற்றுத்திறனாளர் பள்ளிக்குக் களப்பயணம் சென்று, அம்மாணவர்கள் கற்கும் முறைகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடல் நிகழ்த்துக.



XI_Std_Tamil_Unit_4.indd 102 29-01-2025 18:10:20

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

(எ.கா.) கால்நடை – கால் நடை

கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக்கொண்டு போனார்கள்.

சிறிய தொலைவைக் கடக்கக் கால் நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

1. பிண்ணாக்கு –
   பிள்நாக்கு –
2. எட்டுவரை –
   எள்துவரை –
3. அறிவில்லாதவன் –
   அறிவில் ஆதவன் –
4. தங்கை –
   தம் கை –
5. வைகை –
   வை கை –
6. நஞ்சிருக்கும் –
   நஞ்சு இருக்கும் –

## நிற்க அதற்குத் தக

**கல்வி. நம்மைப் பண்படுத்த வேண்டும். நாம் பண்பட்டிருக்கிறோமா?**

| கல்வியின் விளைவு | என்ன செய்தீர்கள் / செய்வீர்கள் ? |
|---|---|
| பெரியவர்களுக்கு மதிப்பளித்தல் | |
| பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்தல் | |
| பொறுமையைக் கடைப்பிடித்தல் | |
| தன்னை அறிதல், தன்னம்பிக்கை வளர்த்தல் | |
| சமத்துவம் பேணுதல் | |
| உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் | |

**படிப்போம்; பயன்படுத்துவோம்!**

Education Committee – கல்விக்குழு

Infrastructure – உள்கட்டமைப்பு

Classical Language – செம்மொழி

Ancestor – மூதாதையர்

Value Education – மதிப்புக்கல்வி

Mental Ability – மன ஆற்றல்

**அறிவை விரிவு செய்**

- என் சரித்திரம் – உ.வே. சாமிநாதர்
- செம்மண் மடல்கள் – இரா. மீனாட்சி
- ஜெயகாந்தன் சிறுகதைகள் தொகுதி I,II – ஜெயகாந்தன்



XI_Std_Tamil_Unit_4.indd 103 29-01-2025 18:10:20

வாழ்வியல் இலக்கியம்

இயல் 4

# திருக்குறள்

## பொச்சாவாமை

1) *இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.*

தங்களின் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது, இவ்வாறு மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்க.

2) *உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்*
*உள்ளியது உள்ளப் பெறின்.*

எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டிருந்தால், எண்ணியதை அடைதல் எளியதே!

## குறிப்பறிதல்

3) *குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்தும் கொளல்.** 

முகக்குறிப்பில் அகக்குறிப்பை அறிபவரை ஏதாவது பொறுப்பைக் கொடுத்துத் துணையாக்கிக் கொள்க.

4) *பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்*
*வகைமை உணர்வார்ப் பெறின்.*

கண்ணின் குறிப்புகளை உணர வல்லவருக்கு, பிறருடைய பகைமையையும் நட்பையும் அவர்களது கண்ணே அறிவித்துவிடும்.

## படைமாட்சி

5) *மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு.*

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.

## பகைத்திறம் தெளிதல்

6) *பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்*
*நகையேயும் வேண்டற்பாற்று அன்று.*

பகை என்னும் பண்பற்ற தன்மையை ஒருவன் விளையாட்டுக்குக்கூட விரும்பக் கூடாது!



XI_Std_Tamil_Unit_4.indd 104 29-01-2025 18:10:20

7) *வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க*
*சொல்லேர் உழவர் பகை.**

வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது!

8) *இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து.**

சிறியதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்துவிடுக! முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே காயப்படுத்தும்.

*அணி : பிறிதுமொழிதல் அணி*

### மருந்து

9) *மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்.**

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

10) *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

*அணி : சொற்பொருள் பின்வரும் நிலையணி*

11) *உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்.*

நோயாளியின் வயதையும் நோயின் அளவையும் குளிர்காலம், வேனிற்காலம் முதலிய பருவங்களையும் அறிந்து மருத்துவர் செயல்படவேண்டும்

12) *உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து.*

நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவியாளர் – என்று மருத்துவம் நான்கு கூறுகளில் அடங்கும்.

### இரவச்சம்

13) *இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்.**

பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலை இருக்கும் எனில், அப்படி அந்நிலையை உருவாக்கியவன் அலைந்து கெடட்டும்.

14) *இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்.*

பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

*அணி : உருவக அணி*



XI_Std_Tamil_Unit_4.indd 105 29-01-2025 18:10:20

## பிறிது மொழிதல் அணி

**அணி விளக்கம்**

உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் பொருளைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.

**சான்று**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

**அணிப்பொருத்தம்**

முள்மரம் சிறிதாக இருக்கும்போதே அகற்றிவிட வேண்டும் என்பது உவமை, இது பகைவர்கள் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிட வேண்டும் என்ற பொருளைப் பெற வைப்பதால், இது, பிறிது மொழிதல் அணிக்குப் பொருத்தமாயிற்று.

## சொற்பொருள் பின்வருநிலை அணி

**அணி விளக்கம்**

செய்யுளில், வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, ஒரேபொருளையே தருவது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

**சான்று**

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

**அணிப்பொருத்தம்**

'நோய்' என்னும் சொல் 'பிணி' என்ற பொருளிலும் 'நாடி' என்ற சொல் 'ஆராய்ந்து' என்ற பொருளிலும் பலமுறை வந்துள்ளதால், இது, சொற்பொருள் பின்வருநிலை அணிக்குப் பொருத்தமாயிற்று.

## உருவக அணி

**அணி விளக்கம்**

உவமானம், உவமேயம் என்னும் வேறுபாடு இல்லாமல் இரண்டும் ஒன்றே எனத் தோன்றும்படி கூறுவது உருவக அணி ஆகும்.

**சான்று**

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**அணிப்பொருத்தம்**

'இரந்து வாழ்தல்' என்னும் பாதுகாப்பற்ற படகு, 'கொடாமை' என்னும் பாறைமீது மோதினால் உடைந்துவிடும். அவ்வாறு உவமானம், உவமேயம் என்னும் வேறுபாடு இல்லாமல் இரண்டும் ஒன்றே எனத் தோன்றும்படி கூறியிருப்பதால், இது, உருவக அணிக்குப் பொருத்தமாயிற்று.



XI_Std_Tamil_Unit_4.indd 106 29-01-2025 18:10:21

கற்பவை கற்றபின்...

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து



XI_Std_Tamil_Unit_4.indd 107 29-01-2025 18:10:21

3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து -------- நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை

ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை

ஈ) சொல்லேர் உழவரை

4. **பொருள் கூறுக.**

அ) ஏமம்

ஆ) மருந்துழைச் செல்வான்

5. **இலக்கணக்குறிப்பு எழுதுக.**

அ) கெடுக

ஆ) குறிப்புணர்வார்

## குறுவினா

1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?
3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிடவேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.
4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

## சிறுவினா

1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.
2. "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து" - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.
3. எண்ணியதை அடைதல் எப்போது எளிதாகும்? குறள் கருத்தை விளக்குக.
4. பகைத்திறம் தெளிதல் குறித்துத் திருக்குறள் கூறும் கருத்துகள் யாவை?

## நெடுவினா

1. வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.
2. மருந்து, மருத்துவர், மருத்துவம் குறித்துத் திருக்குறள் தரும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.



XI_Std_Tamil_Unit_4.indd 108 29-01-2025 18:10:21

இயல் 5

# நாளெல்லாம் வினைசெய்

*நாகரிகம், தொழில், வணிகம், ஆளுமை*

GWJMH



## கற்றல் நோக்கங்கள்

- நாள்குறிப்பு இலக்கியத்தின் இன்றியமையாமையை உணர்ந்து நாள்குறிப்பு எழுதுதல்.
- செய்யுளைக் கற்றுச் சமய நல்லிணக்கத்தைப் போற்றிப் பின்பற்றுதல்.
- சங்க இலக்கியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நாட்டுச் சிறப்பினை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுக் கற்றல்.
- பாலினச் சமத்துவத்தைப் புரிந்துகொண்டு சமூக வாழ்வியலில் நடைமுறைப்படுத்துதல் .
- ஆக்கப்பெயர்களின் இன்றியமையாமை, நடைமுறைத் தேவை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துதல்.

## பாடப்பகுதிகள்

- உரைநடை – ஆனந்தரங்கர் நாள்குறிப்பு
- செய்யுள் – சீறாப்புராணம்<br>பதிற்றுப்பத்து
- துணைப்பாடம் – செவ்வி
- இலக்கணம் – ஆக்கப்பெயர்கள்



XI_Std_Tamil_Unit_5.indd 109 29-01-2025 18:11:15

உரைநடை உலகம்

இயல் 5

# ஆனந்தரங்கர் நாள்குறிப்பு

**நுழையும்முன்**

பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவர்களில் முதன்மையானவர். அவருடைய நாள்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் புதுவை வரலாற்றினை அறிந்துகொள்ள நமக்குக் கிடைத்த அரிய அறிவுச் செல்வமாகும். புதுச்சேரியில் பிரஞ்சு ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவரின் வாழ்வின் நிகழ்வுகளோடு ஒன்றியிருப்பது ஓர் அரிய நிகழ்வு.

நாள்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் 'டைரி' என்று அழைப்பர். டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான 'டைஸ்' என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.

நாள்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப் பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். இச்சொல் 'ஒரு நாளுக்கான முடிவு' என்னும் பொருளைத் தரும்.

### ஆனந்தரங்கர்



ஆனந்தரங்கர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் 1709ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 30ஆம் நாள் சென்னையிலுள்ள பெரம்பூரில் பிறந்தார். பிரஞ்சுக் கிழக்கிந்தியக் குழுமத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் 'துய்ப்ளே' என்ற பிரஞ்சு ஆளுநரின் தலைமை மொழிபெயர்ப்பாளராகவும் இவர் பணியாற்றினார். இவருடைய நாள்குறிப்பு 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துகிறது; அக்காலத்திய பிரஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்று ஆவணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றது.

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரஞ்சு ஆளுநர் 'துய்ப்ளே' காலத்தில் தலைமை மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். வல்லாண்மை மிக்க பிரஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராக, மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார்.

ஆனந்தரங்கர், தம்முடைய நாள்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார்.

**ஆனந்தரங்கர் நாள்குறிப்புக் குறித்து உ. வே. சா.**

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.



XI_Std_Tamil_Unit_5.indd 110 29-01-2025 18:11:15

## நாள்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள்

ஆனந்தரங்கர் நாள்குறிப்பு, புதுவையிலும் தமிழகத்திலும் தென்னிந்தியாவிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

10.09.1736ஆம் நாள் குறிப்பு பிரஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றதை விளக்குகிறது. இந்த உரிமையைப் பெறுவதற்காக ஆளுநர் செலவழித்த பெருந்தொகையையும் ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.

பிரஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை 1746இல் கைப்பற்றினார். அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டார். இந்நிகழ்வில் நேரில் கண்டு உரைப்பது போல் ஆனந்தரங்கர் தம் நாள்குறிப்பில் கூறியுள்ளார்.

தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர்களுக்கு எதிராக பிரஞ்சுக்காரர்கள் நடத்திய

### தெரியுமா?

உலக நாள்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் 'இரண்டாம் சார்லஸ்' மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 – 1669) நாள்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761வரை நாள்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாள்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாள்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.



ஆனந்தரங்கரின் கையெழுத்து

படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாள்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

## நாள்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்

ஆனந்தரங்கரின் நாள்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை இவர் பதிவு செய்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளையும் இவருடைய நாள்குறிப்பு, பதிவு செய்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன. வீடுகளில் தொடர்ந்து திருடி வந்த கும்பல் ஒன்று பிடிபட்டபோது, அவர்களுள் தலைமைத் திருடனைக் கடைத்தெருவில் தூக்கில் தொங்கவிட்டனர். ஏனைய இருவருக்கும் இரண்டு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடிகளும் தரப்பட்டன.

## நாள்குறிப்பு வெளிப்படுத்தும் வணிகச் செய்திகள்

ஆனந்தரங்கர் நாள்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது. கணக்கு வரவுசெலவுப்



XI_Std_Tamil_Unit_5.indd 111 29-01-2025 18:11:16

பட்டியல் என அச்செய்திகள் நீண்டுள்ளன. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் 'அழகப்பன்' என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடைய கப்பல்களுக்கு ஆறு திங்கள் தேவைப்பட்டன. 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் 08.05.1738 அன்று புதுச்சேரியை அடைந்துள்ளது. கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சிலர், கழகத்தின் வர்த்தகர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர். துணிகள், வர்த்தகருக்கு விற்கப்பட்டபோது உரிய இரசீதுகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 100க்கு 320 என்ற விகிதத்தில் அவர்கள் ஆறு திங்களுக்குள் கழகத்திற்குப் பணத்தைச் செலுத்திவிடுவதாகவும் கையெழுத்திட்டுக் கொடுத்தனர்.

ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்

| | | |
|---|---|---|
| 480 காசு | – | ஒரு ரூபாய் |
| 60 காசு | – | 1 பணம் |
| 8 பணம் | – | 1 ரூபாய் |
| 24 பணம் | – | ஒரு வராகன் |
| 1 பொன் | – | 1/2 வராகன் |
| 1 வராகன் | – | 3 அல்லது 3.2 ரூபாய் |
| 1 மோகரி | – | 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 1 சக்கரம் | – | 1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம். |

## ஆனந்தரங்கரின் உணர்ச்சிப் பதிவுகள்

1745ஆம் ஆண்டு வீசிய பெருங்காற்று புதுச்சேரியைச் சூறையாடிய நிகழ்வு குறித்து,

> அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்றுகூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதிவரும் பதிவைப்போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர் .
>
> – வ.வே.சு.

"அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது. ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் விழுந்து போனதும், வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய், அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும், மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத்தெரு பிணநாற்றமாய் இருந்தது!" என்று மனம் நொந்து எழுதியுள்ளார். இப்பேரிடர் புதுச்சேரியில் நிகழ்ந்தபோது மக்கள் எல்லாரும் உணவும் நீரும் இன்றி வாடினர். அப்போது ஒழுகரையிலே கனகராயர் பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்.

இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் பெரிதும் தடைபட்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745ஆம் ஆண்டில் தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது. புதுச்சேரி வணிகம் முழுவதும் வீழ்ந்தது. ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் ஆளுநர் துன்பப்பட்டார். இந்நிலையில் 08.06.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,



XI_Std_Tamil_Unit_5.indd 112 29-01-2025 18:11:16

**ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில**

1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்

தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று நாள்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

## ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாள்குறிப்புகள்

அவருடைய இறுதிக்கால நாள்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன. 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்துகொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம் என்னும் ஊர் வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது. தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. 12.01.1761 அன்று பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்துகொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார்.

1736ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவுசெய்த ஆனந்தரங்கரின் நாள்குறிப்பு 1761ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது. புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறாமலேயே நாள்குறிப்பும் முடிந்துள்ளது. ஆனந்தரங்கர் நாள்குறிப்பு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை வரலாற்றறிஞர்தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.

அப்போது ஆளுநரிடம் ஆனந்தரங்கர், "இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே,என்னைக்காவலில்போடவிரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.

( தொகுதி 11 பக். 81–84 )

**கற்பவை கற்றபின்...**

1. உங்களது ஒரு வாரத்திய நிகழ்வுகளை நாள்குறிப்பில் பதிவு செய்க.
2. ஆனந்தரங்கர் நாள்குறிப்பு விவரிக்கும் நிகழ்வுகளைக் காலக்கோட்டில் அமைத்துக் காட்டுக.

## கவிதைப்பேழை

# இயல் 5

# சீறாப்புராணம்

*– உமறுப்புலவர்*




இசுலாமிய நெறியின் தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்று இலக்கியம் சீறாப்புராணம். இது தமிழ் இலக்கிய மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட தலைசிறந்த இசுலாமிய இலக்கியமாகும். பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள்வளம் நிறைந்த மதீனா நகரில் தானத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த பாங்கினைச் செலவியற் காண்டம் (ஹிஜிறத்துக் காண்டம்) காட்சிப்படுத்துகிறது.

## ஹிஜிறத்துக் காண்டம் – மதீனம் புக்க படலம்

ஹிஜிறத் என்ற அரபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள். மக்கா நகரத்தின் குறைசி இன மக்கள், நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவை விட்டு மதீனாவிற்கு வரவேண்டுமென்று மதீனா மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனா நகரத்திற்குத் தம் துணைவரான அபூபக்கர் முதலானோருடன் முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார். அந்நகரினைக் காப்பிய இலக்கண நெறி நின்று உமறுப்புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

### *மாளிகை நகரம்*

*வடவரை பொருவென மலிந்த மேனிலைக்*
*கடலென ஒலித்ததா வணத்தின் கம்பலைப்*
*புடவியை அளந்தன போன்று வீதிகள்*
*இடனற நெருங்கின மாடம் எங்குமே*

### *மனைநகரம்*

*சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்*
*புதுமலர்த் தெருத்தொறும் சிந்திப் பொங்கலால்*
*எதிர்பணிந்(து) இடுவிருந்து இனிதின் நல்கலால்*
*வதுவையின் மனையென இருந்த மாநகர்*

### *கொடை நகரம்*

*கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)*
*இலையெனா(து) அரும்பொருள் யாவும் எய்தலால்*
*மலைவிலா(து) அருளிய வள்ளி யோரினும்*
*தொலைவிலாப் பெரும்புகழ் படைத்த தொன்னகர்*

### *மாநகரம்*

*உறுபகை வறுமைநோய் ஓட ஓட்டிமேல்*
*குறைவற மனுமுறைக் கோன்(ந) டாத்திநீள்*
*நிறைதரு பெரும்புகழ் நிலைநி றுத்தியோர்*
*மறுவிலாத அரசென இருந்த மாநகர்*

### *பொன்னகரம்*

*தோரணத் தொடும் கொடிக்காடு துன்னலால்*
*வாரண மதமலை மலிந்து நிற்றலால்*
*காரணத் தொடும்வர வாறு காணலால்*
*பூரணப் புவியெனப் பொலிந்த பொன்னகர்*

### *ஒண்ணகரம்*

*தெண்டிரை ஆரமும் பூணுஞ் சிந்தலால்*
*விண்டுபற் பலபல மொழிவி ளம்பலால்*
*மண்டிய வளந்தலை மயங்க லால்மது*
*உண்டவர் எனமதர்த்(து) இருந்த ஒண்ணகர்*



XI_Std_Tamil_Unit_5.indd 114 29-01-2025 18:11:16

### செம்மை நகரம்

*தானமும் ஒழுக்கமும் தவமும் ஈகையும்*
*மானமும் பூத்ததிண் மறனும் வெற்றியும்*
*ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்*
*தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்.*

*– உமறுப்புலவர்*

### சொல்லும் பொருளும்

வரை – மலை; கம்பலை – பேரொலி; புடவி – உலகம்; எய்தல் – அடைதல்; துன்ன – நெருங்கிய; வாரணம் – யானை; பூரணம் – நிறைவு; நல்கல் – அளித்தல்; வதுவை – திருமணம்; கோன் – அரசன்; மறுவிலா – குற்றம் இல்லாத; தெண்டிரை – தெள்ளிய நீரலை; விண்டு – திறந்து; மண்டிய – நிறைந்த; தீன் – மார்க்கம்.

### பாடலின் பொருள்

மேருமலையினைப்போன்று மதீனா நகரின் மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடல் ஒலிபோன்று இருந்தது. மதீனா நகரின் வீதிகள் அண்டவெளியைப் போன்று பரந்திருந்தன. அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் விரும்பும் வண்ணம் பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை. அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு. அவ்வள்ளல்களுக்கு இணையான பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம்.

கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் நெருங்கிக் காடு போலக் காணப்பட்டன; மலைகள் போன்ற யானைகள் அங்கே நிறைந்திருந்தன; வழிகள் எல்லாம் ஒழுங்குடன் காணப்பட்டன; இவற்றால் முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது.

மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக்கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன; வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக்கிடந்தன; ஒவ்வொருவரையும் அழைத்துத் தரும் விருந்தானது இனிமையுடன் இருந்தது; இதனால் அந்நகர் திருமண வீட்டைப்போன்று பொலிவுடன் காட்சியளித்தது.

பகை, வறுமை, நோய் முதலானவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன. மேலும், குறைவில்லாத மானுட அறத்தைக் கொண்டு செங்கோல் ஆட்சி நடத்திப் புகழ் பெற்ற சிறந்த அரசைப்போலப் பொலிவுடன் இருந்தது மதீனா நகரம்.

அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறுவதுபோல, மதீனா நகரில் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். தேன் அருந்தியவர்கள் மயங்குவதுபோலப் பலவாறான பொருள்களைக் கொண்டு மயங்கித் திகழ்கிறது மதீனா நகரம்.

மதீனா நகரில் (மரத்தில்) தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன; திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன. 'தீன்' எனும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகராக மதீனா இருந்தது.



XI_Std_Tamil_Unit_5.indd 115 29-01-2025 18:11:16

## இலக்கணக்குறிப்பு

மலிந்த, மண்டிய, பூத்த, பொலிந்த – பெயரெச்சங்கள்; இடன் – ஈற்றுப் போலி; பெரும்புகழ், தெண்டிரை – பண்புத்தொகைகள்;

பொன்னகர் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை;

மாநகர், உறுபகை – உரிச்சொல் தொடர்கள்;

தானமும் ஒழுக்கமும், தவமும் ஈகையும் – எண்ணும்மைகள்

## பகுபத உறுப்பிலக்கணம்

**மலிந்த – மலி + த்(ந்) + த் + அ**

மலி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

**நெருங்கின – நெருங்கு + (இ) ன் + அ**

நெருங்கு – பகுதி, (இ) ன் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

**அரும்பொருள் – அருமை + பொருள்**

**விதி:** 'ஈறு போதல்' – அரு + பொருள்

**விதி:** 'இனமிகல்' – அரும்பொருள்.

**மனையென – மனை + என**

**விதி:** 'இ ஈ ஐ வழி யவ்வும்' – மனை + ய் + என

**விதி:** 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – மனையென.

### நூல்வெளி

இசுலாமியத் தமிழ் இலக்கியங்களுள் முதன்மையானதாக விளங்குவது சீறாப்புராணம். 'சீறா' என்பது சீறத் என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு 'வாழ்க்கை' என்பது பொருள். புராணம் – வரலாறு. நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் இந்நூலை வள்ளல் சீதக்காதி வேண்டுகோளுக்கு இணங்க உமறுப்புலவர் இயற்றினார் என்பர். இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக்காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் 5027 விருத்தப் பாடல்களையும் கொண்டது. நூலை முடிப்பதற்கு முன்பே உமறுப்புலவர் இயற்கை எய்திய காரணத்தால் 'பனு அகமது மரைக்காயர்' இதன் தொடர்ச்சியாக சின்னச்சீறா என்ற நூலைப் படைத்துள்ளார். உமறுப்புலவர் எட்டயபுரத்தின் அரசவைப் புலவர்; கடிகைமுத்துப் புலவரின் மாணவர். நபிகள் நாயகத்தின் மீது முதுமொழிமாலை என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. நீங்கள் வாழும் நகரத்தின் வரலாற்றுச் சிறப்புகளைத் திரட்டிப் படக் கட்டுரையாக்குக.
2. 'நான் பார்க்க விரும்பும் இடம்' என்னும் தலைப்பில் உங்களின் கருத்துகளைக் காரணங்களுடன் பதிவுசெய்க.



XI_Std_Tamil_Unit_5.indd 116 29-01-2025 18:11:16

கவிதைப்பேழை

இயல் 5

# பதிற்றுப்பத்து

*– குமட்டூர்க் கண்ணனார்*

## நுழையும்முன்

நாட்டில் வாழும் உயிர்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். அவ்வாழ்வு சிறக்க நாட்டின் அரசன் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். வள்ளுவர், "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு" என்று குறிப்பிடுகிறார்; பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு என்று அறிவுறுத்துகிறார்.

### பாடல் பின்னணி

உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவன் வடக்கே இமயமலைவரை படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று, இமயத்தில் வில்லினைப் பொறித்தவன்; தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன். கடம்பர்களை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கியவன். சேரலாதனின் நாடுகாத்தல் சிறப்பையும் கொடைச்சிறப்பையும் குமட்டூர்க் கண்ணனார் புகழ்வதாகப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் உள்ள இப்பாடல் அமைந்துள்ளது.

### நிரைய வெள்ளம்

*பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி*
*நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்*
*மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்*
*நீபுறம் தருதலின் நோய்இகந்து ஒரீஇய*
*யாணர்நன் னாடும் கண்டுமதி மருண்டனென்*

*மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது*
*ஈத்துக்கை தண்டாக் கைகடும் துப்பின்*
*புரைவயின் புரைவயின் பெரிய நல்கி*
*ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்*
*நெடியோன் அன்ன நல்லிசை*
*ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.* (15: 30–40)

*– குமட்டூர்க் கண்ணனார்.*





XI_Std_Tamil_Unit_5.indd 117 29-01-2025 18:11:17

**திணை : பாடாண்திணை**

பாடாண் திணையானது ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும். பாடப்படும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**துறை: செந்துறைப் பாடாண்பாட்டு**

செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

**வண்ணம் : ஒழுகு வண்ணம்**

வண்ணம் என்பது ஒலிநய (சந்தம்) வேறுபாடு ஆகும்.

ஒழுகு வண்ணம் என்பது ஒழுகிய ஓசையாற் செல்வதாகும்.

**தூக்கு: செந்தூக்கு**

தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும். செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரிய அடியின் இறுதி போன்றோ அமையும்.

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

**சொல்லும் பொருளும்**

பதி – நாடு; பிழைப்பு – வாழ்தல்; நிரையம் – நரகம்; ஒரீஇய – நோய் நீங்கிய; புரையோர் – சான்றோர்; யாணர் – புது வருவாய்; மருண்டெனன் – வியப்படைந்தேன்; மன்னுயிர் –நிலைபெற்றுள்ள உயிர்த்தொகுதி; தண்டா – ஓயாத; கடுந்துப்பு – மிகுவலிமை; ஏமம் – பாதுகாப்பு; ஒடியா – குறையா; நயந்து – விரும்பிய.

**எட்டுத்தொகை நூல்கள் குறித்த பழம்பாடல்**

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் மென்று
இத்திறத்த எட்டுத் தொகை

**முதல் 29 அடிகளின் கருத்துச் சுருக்கம்:** (சேரலாதனே! பகை நாட்டில் ஓராண்டுவரை தங்கிப் போர் செய்வாய். பகைவர்க்கு நரகத் துன்பத்தைத் தரும் உன் வீரர்கள் உன்னுடனே வெள்ளமென வருவர். பகைநாட்டில் நீ மூட்டிய தீயால் அந்நாட்டின் பழைய அழகு அழிந்தது. காய்ந்த வயல்களில் வீரர்கள் தங்கினர். இத்துன்பத்தை மறந்து உன்னை எதிர்த்து அழிந்த பகைவர் நாடுகளைக் கண்டு வந்தேன். பல வளங்களை உடைய உன் நாட்டில் தொடர்ச்சியான விழாக்களைக் கொண்டாடும் பழமையான ஊரில் உன் வெற்றி முரசு கொட்டுகிறது. நெடுஞ்சேரலாதனே! கலைஞர்கள் உன்னை வாழ்த்தி இசைக்கின்றனர்.)

**பாடலின் பொருள்**

சேரலாதனே! "உன் நாடு பகையால் துன்புறுதலை அறியாத, செழித்த வாழ்வையும் உண்மை பேசும் இயல்பையும் ஐம்புலன்களையும் அடக்கி வாழும் பண்பையும் கொண்டுள்ளது. அது, நரகத்தைச் சேர்வதைத் தவிர்க்க நற்செயல்களை விரும்பிச் செய்யும் சான்றோர் வாழும் சிறப்பு உடையது; அச்சான்றோர்களின் செயல்களைப் பின்பற்றி வாழ விரும்பும் சுற்றத்தார்கள் வாழ்கின்ற சிறப்பையும் கொண்டது. இங்கு வாழும் மக்கள், இதை விட்டு நீங்காமல் எக்காலமும் இந்நாட்டிலேயே நிலைத்து வாழ விரும்புகிறார்கள். பலரும் புகழும் இத்தகைய புகழை நீ பெற்றிருக்கிறாய். அதனால், நோய் முதலான துன்பங்கள் இல்லாமலும் புது வருவாயோடும் இயங்குகிறது உன் நாடு. இதன் வளம் கண்டு வியப்படைந்தேன்.

மண் அணுக்கள் செறிந்த இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் ஓயாது கொடை வழங்கும் கைகளை நீ கொண்டுள்ளாய். உயர்ந்த திருக்கோவில்களுக்குச் சிறப்பான பொருள்களை வழங்குகிறாய். மகிழ்ச்சி நிறைந்த விழாக்களால் கொண்டாடப்படும் திருமால் போல நீ விளங்குகிறாய். ஆதலால்,



XI_Std_Tamil_Unit_5.indd 118
29-01-2025 18:11:17

*குன்றாத வலிமை மிக்கவனே! உன் அரிய பண்புகளைக் காணவே இங்கே விரும்பி வந்தேன்."*

## இலக்கணக்குறிப்பு

துய்த்தல் – தொழிற்பெயர்; ஒரீஇய – சொல்லிசை அளபெடை; புகழ்பண்பு – வினைத்தொகை; நன்னாடு – பண்புத்தொகை; மருண்டனென் – தன்மை ஒருமை வினைமுற்று; ஒடியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## பகுபத உறுப்பிலக்கணம்

**மருண்டனென் – மருள்(ண்) + ட் + அன் + என்**

மருள் – பகுதி, 'ள்' 'ண்' ஆனது விகாரம்

ட் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை

என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**துய்த்தல் – துய் + த் + தல்**

துய் – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி

## புணர்ச்சி விதி

**மண்ணுடை – மண் + உடை**

**விதி:** 'தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – மண்ண் + உடை

**விதி:** 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – மண்ணுடை

**புறந்தருதல் – புறம் + தருதல்**

**விதி:** 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' – புறந்தருதல்.

### நூல்வெளி

எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் இது, பாடாண் திணையில் அமைந்துள்ளது. முதல் பத்துப் பாடல்களும் இறுதிப் பத்துப் பாடல்களும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் என்பவை இடம்பெற்றிருக்கின்றன; பாடலில் வரும் சிறந்த சொற்றொடர் அப்பாடலுக்குத் தலைப்பாகத் தரப்பட்டிருக்கிறது. பாடப்பகுதிப் பாடலுக்குச் சேரலாதனின் படைவீரர் பகைவர்முன் நிரையபாலரைப் போலப் (நரகத்து வீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் 'நிரைய வெள்ளம்' என்று தலைப்பு இடப்பட்டுள்ளது. பாடப்பகுதியான இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசாகப் பெற்றார்.

### கற்பவை கற்றபின்...

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" (738)

என்ற குறள்வழி நாட்டிற்கு அழகு சேர்ப்பன குறித்துக் கலந்துரையாடுக.



XI_Std_Tamil_Unit_5.indd 119 29-01-2025 18:11:17

# செவ்வி

– நர்த்தகி நடராஜ்




சிறுபான்மையிலும் சிறுபான்மையினராக வாழும் திருநங்கைகளுக்கு மட்டுமே இருக்கும் தடைக்கற்களையும்கூடப் படிக்கட்டுகளாக மாற்றலாம் என்று உலகுக்குக் காட்டியவரே நர்த்தகி நடராஜ். இவர், முத்தமிழ் வளர்த்த மதுரையில் பிறந்து தம் நாட்டியத் திறமையினால் உலகம் முழுவதும் எண்ணற்ற ரசிகர்களைப் பெற்றவர்; தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றால் நாட்டியக்கலையில் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்றவர்.

அமெரிக்காவில் ஒரு நடன நிகழ்ச்சிக்காகத் தமிழகத்தைச் சேர்ந்த பரதநாட்டியக் கலைஞர் ஒருவரை விழா ஏற்பாட்டாளர்கள் அழைத்திருந்தனர். வந்திறங்கியவரைப் பார்த்து அதிர்ந்த அவர்கள், இரண்டு வாரங்கள் நடைபெறுவதாக இருந்த நிகழ்ச்சியை ஒரே நாள் நிகழ்ச்சியாக மாற்றினர். காரணம் அறிந்த அந்தக் கலைஞர், மனக்கலக்கத்துடன் முதல்நாள் நிகழ்வில் கலந்துகொண்டார். மேடைக்குச் சென்றார்; நடனத்தைத் தொடங்கினார். அவருடைய கால் சலங்கை சப்தம் மேடையை நிறைக்க, அரங்கம் அமைதியானது.

கண்களில் நவரசம், கால்களில் துடிப்பு, உயிரோட்டமான உடல்மொழி என இதுவரையிலும் கண்டிராத ஒரு புதுமையான உலகுக்குப் பார்வையாளர்களை அவருடைய நடனம் விரல்பிடித்து அழைத்துச் சென்றது. அரங்கத்திலிருந்து எழுந்த கரவொலியில் அவருடைய கவலைகள் கரைந்தன. ஒரு நாளோடு முடிவதாக இருந்த அவருடைய நடன நிகழ்ச்சி, இரண்டு மாதங்கள் நீண்டது. அந்த நடனக் கலைஞர் நர்த்தகி நடராஜ்.

அவரைத்தான் நாம் நம்முடைய பள்ளி ஆண்டுமலருக்காக இன்றைக்கு நேர்காணல் செய்யப் போகிறோம். அவரைச் சந்திப்போமா?

**வணக்கம் நர்த்தகி. உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. உங்கள் இளமைப்பருவத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.**

நான் மதுரையில் உள்ள அனுப்பானடியைச் சேர்ந்தவள். என் தோழியின் பெயர் சக்தி. நானும் அவளும் ஒன்றாகவே நடனம் பயின்றோம். ஐந்து வயதில் தொடங்கிய எங்கள் நட்பு இன்றுவரையிலும் தொடர்கிறது.

என் முன்னேற்றத்தைத் தன் முன்னேற்றமாகக் கருதும் சக்தி இல்லையேல் நான் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியாது.

**நீங்கள் யாரிடம் நடனம் கற்றீர்கள்?**

இளமையில் வைஜெயந்தி மாலாவின் நடனத்தால் ஈர்க்கப்பட்டு, அவருடைய குருவான தஞ்சை கிட்டப்பாவிடம் பரதம் கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் சென்று அவரிடம் என் ஆசையைத் தெரிவித்தேன். தொடக்கத்தில் அவர் இசைவு தரவில்லை. ஓராண்டு விடாமுயற்சியுடன் போராடி இறுதியில் வெற்றி பெற்றேன்.

கிட்டப்பா என்னைத் தம் மகளாகவே ஏற்று, தம் இல்லத்திலேயே தங்க வைத்துப் பரதம் கற்றுக்கொடுத்தார். அவரே 'நர்த்தகி' என்று எனக்குப் பெயர் சூட்டினார்.



XI_Std_Tamil_Unit_5.indd 120 29-01-2025 18:11:17

**நீங்கள் பெண்மையை உணர்ந்ததால் பரதம் கற்றீர்களா? பரதம் கற்றதால் பெண்மையை உணர்ந்தீர்களா?**

இது ரெட்டைச்சடை மாதிரி. ஒன்றோடு ஒன்று பிணைந்தது. பெண்மையை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பரதம் இருந்தது. பரதத்தில் ஊறித் திளைத்தபோது பெண்மை புதிதாகப் பிறந்தது. பரதத்தில் பெண்மையை வெளிப்படுத்தும் நொடி இருக்கிறதே, அது வார்த்தைகளில் சொல்ல முடியாத உணர்வு. நதியலையில் விழுந்த இலைபோல, காற்றில் பறக்கும் இறகுபோல, மனம் அதன்போக்கில் செல்லும். எல்லாக் கட்டுகளையும் உடைத்தெறிந்த நிம்மதி அந்த வினாடியில் கிடைக்கும். ஒரு வகை ஆழ்ந்த மயக்கம். கனவுலகின் சஞ்சாரம். அந்த விநாடியில் உலகத்தையே மறந்து பறந்துகொண்டிருப்பேன்.

**நீங்கள் தொடக்கத்தில் ஆடத் தொடங்கியதில் இருந்து இப்போது ஏதேனும் மாற்றத்தை உணர்கிறீர்களா?**

என்னுடைய குழந்தைப் பருவத்திலேயே எனக்குள் மறைந்திருந்த பெண்மையைக் கண்டுகொண்டேன். எந்த மனத்தடையுமின்றி என்னை உணர்த்துவதற்கு நடனம் உதவி செய்தது. தொடக்கத்தில் திரைப்படங்களில் வரும் நடனம் என்னை ஈர்த்தது. அதைப் பார்த்து நான் நடனம் ஆடத் தொடங்கினேன்.



நிகழ்ச்சிக்காக ஆடத் தொடங்கியபோது ஒவ்வொரு நிகழ்வும் மூன்று மணி நேரம் எடுத்துக்கொள்ளும். இன்றுபோல் அல்லாமல் நாட்டியத்தைவிட அதன் உட்கூறுகளை அறிமுகம் செய்வதற்கு அதிக நேரமும் காலமும் ஆகும். சில சமயங்களில் நாட்டியத்திற்கான கருத்தை ராக தாளத்துடன் அறிமுகம் செய்வேன்.

**உங்களைப் போன்ற 'திருநங்கையர்' எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய நீங்கள், பரதம் ஆடிக்கொண்டிருக்கிறீர்களே?**

தொன்மை வாய்ந்த தமிழர் மரபில் பிறந்த நான் திருநங்கையருக்கான இடம் என்ன என்பதை அறிய நினைத்தேன். அதுவே இலக்கியத்தின் பக்கம் என்னைத் தள்ளியது. சங்க இலக்கியத்தில் இருந்து சிற்றிலக்கியங்கள் வரை ஆழ்ந்து படித்தேன். இன்று மட்டுமல்ல எல்லாக் காலகட்டத்திலும் திருநங்கையர் இருந்திருக்கின்றனர். தொல்காப்பியத்திலும் அதற்கான சான்று இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. எனவே, தமிழச்சி என்பதில் தாளாத பெருமை கொண்ட நான் பரதத்தின் பக்கம் திரும்பினேன். நம் கலையை நாம் ஆடவில்லையானால் வேறு யார் ஆடுவது? சங்க இலக்கியம் தொடங்கித் தற்போதைய நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயல்கிறேன். இதுவும் ஒரு வகை விழிப்புணர்வு ஆயுதம்தான்.

**வெகுசன மக்களின் நேரடித் தொடர்பில் இல்லாத கலைவடிவத்தை நிகழ்த்துகிறோம் என்ற எண்ணம் உங்களுக்கு எப்போதாவது வந்ததுண்டா?**

பரத நாட்டியத்தை வெகுசன மக்களின் கலை இல்லை என்பதை நான் முற்றிலும் மறுக்கிறேன். பரதம் என்ற சொல்லுக்கு வெறும் எழுபது வயதுதான் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பரத நாட்டியம் நிகழ்த்துபவர்களை ஒதுக்கிவிட்டு அவர்களை



XI_Std_Tamil_Unit_5.indd 121 29-01-2025 18:11:17

ஒரு சாரார் எனக் குறுக்கி வைத்தது நம்முடைய தவறு. கலையை எல்லாரும் நுகரவேண்டும். அட்லாண்டாவிலும் ஆண்டிபட்டியிலும் ஒரே மாதிரிதான் பரதம் நிகழ்த்துகிறேன். மக்களும் அதைச் சரியாக உள்வாங்கிக் கொள்கின்றனர்.

**உங்கள் அபிநயத்தில் வெளிப்படும் நுட்பமான முத்திரைகளை மக்கள் சரியான முறையில் உள்வாங்கிக் கொள்கின்றனரா?**

சமீபத்தில் ஜப்பானிலுள்ள ஒசாகா நகரத்திற்குச் சென்றிருந்தபோது திருவாசக, தேவாரப் பண்ணிசைப் பாடல்களைப் பரதமாக நிகழ்த்தினேன். அங்குத் தமிழர்களும் இல்லை; இந்தியர்களும் இல்லை; முழுக்க ஜப்பானியர்கள். அவர்களுக்குப் பரதம், தேவாரம், திருவாசகம் எதுவும் தெரியாது. ஆனால், அந்த அபிநயத்தில் அவர்கள் கண்கலங்கியதும் அங்கு நிலவிய மௌனமும் எழுந்த கரகோஷமும் என்னால் மறக்க முடியாதவை. எந்த அளவுக்குப் பரதத்தை அவர்கள் முழுமையாக உள்வாங்கினர் என்பதை நான் புரிந்துகொண்டேன்.

**உலகமயமாக்கலுக்குப்பின் தமிழகத்தில் பண்பாட்டு மாற்றம் நடந்திருப்பதை மறுக்க முடியாது. காப்பியம், புராணக் கதைகளை மையமாக வைத்து நீங்கள் பரதம் நிகழ்த்துகிறீர்கள். இதன்மூலம், இழந்த பண்பாட்டை மீட்க முடியும் என நினைக்கிறீர்களா?**



**நர்த்தகி நடராஜ் பெற்ற விருதுகள்**

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது, இந்திய அரசுத் தொலைக்காட்சியின் ஏ கிரேடு கலைஞர், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சிறந்த கலைஞர், தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம்.

நமக்கென்று பெரிய பண்பாட்டு மரபு இருக்கிறது. வாழ்வாங்கு வாழ்ந்தவர் நாம். நம் வேர்களை நாம் புறக்கணிக்கக் கூடாது. ஐரோப்பியப் பண்பாட்டில் ஊறித் திளைத்திருக்கும் நார்வேயில் நிகழ்ச்சி நடத்தும்போது திருக்குறளை மையமாக வைத்தே மாணவிகளுக்குப் பயிற்சி கொடுத்தேன். அந்த வினாடியிலிருந்து திருக்குறளை ஆர்வமாகப் படித்தனர். அது பற்றி அனைத்துத் தகவல்களையும் விரல்நுனிக்குக் கொண்டு வந்தனர். 'அடுத்த ஜென்மத்தில் நான் தமிழனாகப் பிறந்து திருக்குறள் படிக்க வேண்டும்' என்ற காந்தியின் ஆசையை, வரலாற்றிலிருந்து தோண்டி எடுத்திருந்தனர். கலையின் வழியாகப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும்.

**நீங்கள் மிகச்சிறந்த நாட்டியக்காரர் என்பதை அறிவோம். அது தவிர்த்து, உங்களுடைய ஆர்வம், விருப்பம் எத்துறைகளில் உள்ளன?**

நான் தமிழ்வழிக் கல்வி பயின்றவள். என்னுடைய ஆசிரியர்கள் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். உண்மையில் நான் ஒரு வழக்கறிஞர் ஆவதையே முழுமுதல் லட்சியமாகக் கொண்டிருந்தேன். இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு பல்வேறு தமிழ் இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன். நடனமும் வாசிப்புமே என்னை இன்னும் ஒரு குழந்தையாக வைத்திருக்கின்றன. தமிழ்



XI_Std_Tamil_Unit_5.indd 122 29-01-2025 18:11:17

இலக்கியத்தில் சங்கப் பாடல்கள், திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரம் ஆகியவற்றை நடனம் மூலம் பரப்புவதோடு இவ்விலக்கியங்களைப் பற்றித் தொடர்ந்து ஆய்வு செய்தும் வருகிறேன்.

**சோதனைகளை, துயரங்களை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?**

மற்ற மானுடரைவிட எல்லாச் சோதனைகளையும் இரண்டு மடங்கு அனுபவித்திருக்கிறேன். வலிதான் நான் கொடுத்த விலை. அகிலனின் 'தாமரை நெஞ்சம்' கதைநாயகி துக்கம் பொங்கி வரும்போதெல்லாம் ஒரு சொம்புத் தண்ணீர் குடிப்பாள். நான் ஒரு நாட்டியம் ஆடி விடுவேன். அது என் துயரைத் தீர்க்கும்.

**உங்களை நெகிழ வைக்கும் தருணம் என்று எதைக் கூறுவீர்கள்?**

நான் நடத்தும் வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம் வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவிகளை உருவாக்கியுள்ளேன். அம்மாவால் புறக்கணிக்கப்பட்ட என்னை இன்றைக்கு என் மாணவிகள் எல்லோரும் 'அம்மா' என்று அழைக்கும்போது எனக்குள் தாய்மை பெருக்கெடுக்கிறது. அதுவே என்னை நெகிழவும் மகிழவும் வைக்கும் தருணமாக உணர்கிறேன்.

*இன்று நர்த்தகி, தன்னுடைய நடனத் திறமையால் அமெரிக்கா, லண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்துத் தம் பரதத்தால் பல்லாயிரம் மேடைகளை அழகாக்கி வருகிறார். இவர்தாம் 'திருநங்கை' என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர். திருநங்கைகளுள் முதன்முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர் என்ற பல்வேறு முதல் சாதனைகளுக்குச் சொந்தக்காரரான நர்த்தகி நடராஜ் மேலும் பல உயரங்களை எட்ட நம் பள்ளியின் சார்பாக வாழ்த்துவோம்.*

சேலத்தைச் சேர்ந்த பிரித்திகா யாஷினி 2011ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அவர் தற்போது காவல்துறையில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார். இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் என்ற பெருமை இவரைச் சாரும்.

தமிழ்நாட்டில், கல்வித்துறையில் மூன்றாம் பாலினப் பிரிவு உருவாக்கப்பட்ட பின்பு பள்ளிப்படிப்பை முடித்த முதலாமவர் தாரிகா பானு. இவர், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூரில், காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் பாடப்பிரிவில் படித்தவர். 2017ஆம் ஆண்டு நடந்த மேல்நிலைப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற இவர், அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்றார்.



**கற்பவை கற்றபின்...**

பாலினச் சமத்துவம் என்பதன் விளக்கம் அறிக. இது குறித்த நும் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.



XI_Std_Tamil_Unit_5.indd 123 29-01-2025 18:11:17

இனிக்கும் இலக்கணம்

இயல் 5

# ஆக்கப்பெயர்கள்

உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. முன்னோர்கள் சில பொருள்களுக்குக் காரணம் கருதியும் சில பொருள்களுக்குக் காரணமின்றியும் பெயர் வைத்தனர். இலை, மண், கல், நாற்காலி, காற்றாடி எனப் பெயர்களை நினைவில் கொண்டுவரும்போது இவற்றுள் காரணத்தோடு வரும் பெயர்களை உணர்ந்துகொள்ள முடிகிறது. காலப்போக்கில் பொருளின் மாற்றத்தால் அவை பயன்படுத்தப்படும் நிலைமைக்கேற்றவாறு காரணப்பெயர்கள் சிலநேரங்களில் இடுகுறிப்பெயர்களாகி விடுகின்றன.

மரத்தால் செய்யப்பட்டுப் பின்புறம் சாய்ந்துகொள்ளவும் கைகளை வைத்துக்கொள்ள வசதியாகவும் நான்கு கால்களைக் கொண்ட இருக்கைக்கு நாற்காலி எனக் காரணம் கருதிப் பெயர் வைத்தனர்.

ஆனால்,இன்று நான்கு கால்கள் இல்லாத கணினி நாற்காலி சிலவற்றையும் நாற்காலி என்றே அழைக்கிறோம். ஒருகாலத்தில் காரணம் கருதி வழங்கப்பட்ட ஒரு பொருளுக்கான பெயர் இன்று இடுகுறியாக வழங்கப்படுகிறது.

காலச் சூழலுக்கேற்றவாறு நம் பயன்பாட்டிற்கெனப் பல்வேறு பெயர்களைப் புதியதாக ஆக்கிக்கொள்கிறோம். அவை இடுகுறியாகவும் இருக்கலாம்; காரணமாகவும் இருக்கலாம். இவ்வாறு, புதியதாக ஆக்கப்படும் சொல் ஆக்கப்பெயர் என அழைக்கப்படுகின்றது. 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பது பழமொழி. இதில் ஆத்திரம் கொண்ட ஒருவனைக் குறிப்பிட 'காரன்' என்னும் விகுதி சேர்த்து 'ஆத்திரக்காரன்' என்னும் சொல்லை உருவாக்குகிறோம்.

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் (Derivative noun) எனப்படும். இவ்வாறு பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.

**தமிழில் ஆக்கப்பெயர் விகுதிகள்**

காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம்

ஆக்கப் பெயர்களில் விகுதிகளே தனிச்சிறப்பு உடையன. தமிழ்ச்சொற்களோடு இவ்வகையான விகுதிகள் சேரும்போது எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகித் தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகின்றது. தமிழ்மொழியில் ஆக்கப்பெயர்கள் பேச்சு வழக்கிலேயே மிகுதியாக உள்ளன.

மலர்ந்த மலரைக்
கண்டு வாடினாள்
பூக்காரி

இத்துளிப்பாவில் பூ விற்கும் பெண், பூக்காரி என்று அழைக்கப்படுகிறார். மேலும், நெசவு செய்பவரை நெசவாளி/நெசவாளர் என்றும் உழைப்பவரை உழைப்பாளி/உழைப்பாளர் என்றும் அழைக்கின்ற ஆக்கப்பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன.



**தெரியுமா?**

வண்டிக்காரன், சினிமாக்காரன், மாட்டுக்காரன், வீட்டுக்காரன், ஆட்டோக்காரன் போன்ற சொற்கள் எல்லாம் காரன் விகுதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெயர்கள் என்பதை அறிவீர்களா?



XI_Std_Tamil_Unit_5.indd 124 29-01-2025 18:11:18

அறிவியல், திறமைசாலி, கோழைத்தனம், சமத்துவம், பெண்ணியம், பேச்சாளன், ஏற்றுமதி முதலான சொற்கள் ஆக்கப்பெயர்ச்சொற்களே என்பதை உணரவேண்டும். இச்சொற்களில் இயல், சாலி, தனம், துவம், இயம், ஆளன், மதி ஆகிய விகுதிகள் சேர்ந்து ஆக்கப் பெயராக்கப்பட்டுள்ளன.

**கண்டறிக:** குரங்காட்டி, வண்டியோட்டி, பழந்தின்னி, வாயாடி, குடித்தனம், நீதிமான் இச்சொற்களைப் பிரித்து ஆக்கப்பெயர் விகுதிகளைக் கண்டறிக.

ஆக்கப்பெயர்ச்சொற்களை ஈற்றில் நிற்கும் விகுதிகளைக் கொண்டு மூவகையாகப் பிரிக்கலாம். அவை

1. பெயருடன் சேரும் விகுதிகள்.
2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்.
3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்.

### 1. பெயருடன் சேரும் விகுதிகள் (காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர்)

| பெயர் + விகுதி | = ஆக்கப்பெயர் |
|---|---|
| வண்டி + காரன் | = வண்டிக்காரன் |
| சமையல் + காரர் | = சமையல்காரர் |
| வேலை + காரி | = வேலைக்காரி |
| பணி + ஆள் | = பணியாள் |
| ஆணை + ஆளர் | = ஆணையாளர் |
| குற்றம் + ஆளி | = குற்றவாளி |
| விண்ணப்பம் + தாரர் | = விண்ணப்பதாரர் |

காரன், காரி, காரர் ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆளுதல் என்னும் நான்கு பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| வீடு + காரன் – | வீட்டுக்காரன் – | உடைமை |
| தமிழ்நாடு + காரி – | தமிழ்நாட்டுக்காரி – | உரிமை |
| உறவு + காரர் – | உறவுக்காரர் – | உறவு |
| தோட்டம் + காரர் – | தோட்டக்காரர் – | தொழில் |

தொழிற்பெயர் விகுதிகளுடன் 'ஆளர்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து சொற்கள் உருவாகின்றன.

| தொழிற்பெயர் விகுதி | தொழிற்பெயர் | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| சி | ஆட்சி | ஆட்சியாளர் |
| அல் | செயல் | செயலாளர் |
| தி | செய்தி | செய்தியாளர் |
| மதி | இறக்குமதி | இறக்குமதியாளர் |
| வை | பார்வை | பார்வையாளர் |
| வு | தேர்வு | தேர்வாளர் |
| பு | அழைப்பு | அழைப்பாளர் |

'ஆளர்' 'ஆளி' முதலான விகுதிகள் இருபால் பொதுப்பெயர்களை உருவாக்கத் துணை நிற்கின்றன.

| ஆளர் | | | | |
|---|---|---|---|---|
| உதவி | + | ஆளர் | = | உதவியாளர் |
| காப்பு | + | ஆளர் | = | காப்பாளர் |
| மேல் | + | ஆளர் | = | மேலாளர் |
| கண்காணிப்பு | + | ஆளர் | = | கண்காணிப்பாளர் |
| தயாரிப்பு | + | ஆளர் | = | தயாரிப்பாளர் |

| ஆளி | | | | |
|---|---|---|---|---|
| நெசவு | + | ஆளி | = | நெசவாளி |
| முதல் | + | ஆளி | = | முதலாளி |
| தொழில் | + | ஆளி | = | தொழிலாளி |
| பயன் | + | ஆளி | = | பயனாளி |
| கூட்டு | + | ஆளி | = | கூட்டாளி |



XI_Std_Tamil_Unit_5.indd 125 29-01-2025 18:11:18

### 2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்

வினையடியுடன் 'மானம்' என்னும் விகுதி சேர்ந்து புதிய சொற்கள் உருவாகின்றன.

| வினை | | விகுதி | | ஆக்கப்பெயர் |
|---|---|---|---|---|
| அடை | + | மானம் | = | அடைமானம் |
| கட்டு | + | மானம் | = | கட்டுமானம் |
| தேய் | + | மானம் | = | தேய்மானம் |

### 3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

பெயருடன் சேர்ந்து வரும் விகுதிகள்.

| பெயர் | விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| அச்சு | அகம் | அச்சகம் |

வினையுடன் சேர்ந்து வரும் விகுதிகள்

| வினை | விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| பயில் | அகம் | பயிலகம் |

இவ்வாறு, தமிழில் எண்ணற்ற ஆக்கப் பெயர்ச்சொற்கள் விரவிக் கிடக்கின்றன. இவ்வகையான சொற்கள் நம் மொழிக்குப் புதிய புதிய சொற்களை உருவாக்குவதோடு நில்லாமல், மொழி காலந்தோறும் வளர்வதற்கும் துணைநிற்கின்றன.

**அறிக :**

இன்று வழக்கிலுள்ள ஆக்கப்பெயர்களைப் பட்டியலிடுக. அவை எவ்வெவ் விகுதி கொண்டு ஆக்கப்பட்டுள்ளன என்பதை ஆய்க.



**கற்பவை கற்றபின்...**

1. நீங்கள் வாழும் சூழலில் பயன்படுத்தப்படும் ஆக்கப்பெயர்களைப் பட்டியலிடுக.
2. படிப்பவர், படிப்பாளி இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்க.

## இலக்கணத் தேர்ச்சிகொள்.

**பயிற்சி 1**

கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக :

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கவேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

**பயிற்சி 2**

அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக :

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) – ________
2. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) – ________
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) – ________
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன் ? (தாரி) – ________



XI_Std_Tamil_Unit_5.indd 126 29-01-2025 18:11:18

# நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. பொருந்தாததைத் தேர்க.

அ) ஆனந்தரங்கர் எழுதிய நாள்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன

ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்

இ) ஆனந்தரங்கரின் நாள்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது

ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன

i) அ, ஆ　　ii) ஆ, இ　　iii) அ, இ　　iv) ஆ, ஈ

2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பைத் தேர்க.

அ) மொழிபெயர்ப்பாளர்

ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) பிரஞ்சு ஆளுநரின் தலைமை மொழிபெயர்ப்பாளர்

ஈ) உலக நாள்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

3. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி ; காரணம் தவறு　　ஆ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை　　ஈ) கூற்று தவறு ; காரணம் சரி

4. சரியானதைத் தேர்ந்தெடுக்க.

அ) வரை – மலை　ஆ) வதுவை – திருமணம்　இ) வாரணம் – யானை　ஈ) புடவி – கடல்

i) அ, ஆ, இ – சரி; ஈ–தவறு　　ii) ஆ, இ, ஈ – சரி; அ–தவறு

iii) அ, இ, ஈ – சரி; ஆ–தவறு　　iv) அ, ஆ, ஈ – சரி; இ–தவறு

5. சரியான தொடரைத் தெரிவு செய்க.

(அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

(ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

(இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

(ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

### குறுவினா

1. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
2. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
3. நெருங்கின, இரங்கி – உறுப்பிலக்கணம் தருக.
4. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்

   தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"

   – இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?
5. செந்துறைப் பாடாண்பாட்டு – துறை விளக்கம் எழுதுக.

### சிறுவினா

1. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" – யாது?
2. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" – உவமையைப் பொருளுடன் விளக்குக.
3. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
4. 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
5. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன – ஏன்?

### நெடுவினா

1. 'தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்' என்பதை நிறுவுக.
2. 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம்' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்துக் கட்டுரை எழுதுக.

## மொழியைஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

#### இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர் (1882 – 1954)



டி.கே. சி. (1882 – 1954)

"தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்கமுடியும்" எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி. கே. சி. யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப் பேசியது. அவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெயர்பெற்றது. டி. கே. சி. இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். தமிழ்க்கலைகள்,



XI_Std_Tamil_Unit_5.indd 128 29-01-2025 18:11:18

தமிழ்இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரமுள்ள புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி. கே. சி. ஏற்றிய இலக்கியஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.

### வினாக்களுக்கு விடையளிக்க.

1. அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள்வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
2. சொல்லச் சொல்ல, திளைப்பர் – இலக்கணக்குறிப்பு தருக.
3. ரசிகர் – தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை–ஆங்கிலக் கலைச்சொல் தருக.
4. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி விரும்பினார் – விடைக்கேற்ற வினா அமைக்க.
5. மேலவை, புத்துணர்வு – இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.

### தமிழாக்கம் தருக.

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!

### கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலேஊறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர்இடைமலர்ந்தசுகந்தமணமலரே
மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே
மென்காற்றில்விளைசுகமேசுகத்திலுறும்பயனே
ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்
ஆடுகின்றஅரசேஎன்அலங்கலணிந்தருளே.

### படித்துப்பார்த்துப் படைத்துக்காட்டுக.

**புத்தகத் திருவிழாவின் தொடக்க நிகழ்ச்சிக்கு வருகை தந்த சான்றோர் குறித்த அறிமுக உரை**

பேரன்பு கொண்டோரே! பேரறிவுச் செல்வமே பெருஞ்செல்வம் எனக் கருதி வந்திருக்கும் சான்றோரே! இளைய தலைமுறையே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



XI_Std_Tamil_Unit_5.indd 129 29-01-2025 18:11:18

புத்தக வாசிப்பை மூச்சுக்காற்றாய்ச் சுவாசித்து வாழ்கின்ற படிப்பாளர்களாகிய உங்கள் முன்பு படைப்பாளர் ஒருவரை, மிகச் சிறந்த பண்பாளரை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

சிறுவயது முதலாகத் தனக்குப் பெற்றோர்கள் அளித்த சில்லறைகளைச் சேகரித்து ஆண்டுதோறும் புத்தகம் வாங்கும் வழக்கத்தைக் கொண்டவர். புத்தகங்களோடு வாழ்ந்து வருபவர்; புத்தகத்தை வாங்குவதோடு மட்டுமல்லாமல் முழுமையாக அவற்றை வாசிப்பதும் குறிப்பெடுப்பதும் இளைய தலைமுறையினர்க்குத் தன்னம்பிக்கை அளிக்கும் கூட்டங்களில் பேசுவதும் எனப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருபவர்.

ஷேக்ஸ்பியர் என்னும் மாபெரும் படைப்பாளனின் பிறந்த நாளான ஏப்ரல் 23 உலகம் முழுவதும் புத்தகநாளாகக் கொண்டாடப்படுகிறது. அதற்குக் காரணம் அவரிடம் இருந்த வாசிப்புப் பழக்கமே ஆகும்.

அவ்வகையில் வாசிப்பையே தம் வாழ்க்கையாய்க் கொண்டிருக்கும் நம் சிறப்பு விருந்தினர் நமக்கெல்லாம் முன்மாதிரியானவர். அவர்வழியில் புத்தக வாசிப்பைத் தொடர்வோம்! புதியதோர் உலகம் படைப்போம்! வெல்வோம்!

**உங்கள் பகுதி நூலகத்தில் வாசகர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்க வருகைதரும் அறிஞர் ஒருவர் குறித்து அறிமுக உரை எழுதுக.**

### இலக்கியநயம் பாராட்டுக.

*செந்நெலும் கரும்பும் விளைந்தனவே – நல்ல*
*தேன்பொழி மலர்களும் விரிந்தனவே*
*இன்னலும் பசியும் போயொழிக – தேசம்*
*எழிலுடன் கூடியே நலமுறுக*

*பிரிவுகள் பேசியே பூசலிட்ட – பழம்*
*பேதமை தனைத்தள்ளி அனைவருமே*
*ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் – நம்முள்*
*ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்*

*தமிழன் திருநாள் பொங்கலென்றால் – அதில்*
*தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?*
*புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே – யாரும்*
*புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?*

*யாதும் ஊரெனச் சாற்றியதும் – மக்கள்*
*யாவரும் கேளிர் என்றதுவும்*
*மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் – இன்று*
*வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?*

– பெ. தூரன்



XI_Std_Tamil_Unit_5.indd 130 29-01-2025 18:11:18

### தொடர் மாற்றம்

1. மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)

2. தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத் தொடராக்குக)

3. என்னே! மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் சிற்பக் கலை. (செய்தித் தொடராக்குக)

4. நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன். (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)

## மொழியோடு விளையாடு

### கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




### எண்ணங்களை எழுத்தாக்குக.



______________________________

______________________________

______________________________

______________________________

______________________________



XI_Std_Tamil_Unit_5.indd 131 29-01-2025 18:11:18

**புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

1. எலியும் நுழையும் ; எழிலரசி கையும் நுழையும் – ---------------------
2. சிலம்பம் சுற்றலாம் ; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் – ------------------
3. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் – ---------------------
4. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் – ----------------
5. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே – ----------------
6. வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும் – ----------------

**செய்து கற்போம்**

நீங்கள் படித்துச் சுவைத்த ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் சார்ந்த ஐந்து பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.

**நிற்க அதற்குத் தக**

| நாகரிகம் | கடைப்பிடிப்போம் |
|---|---|
| கலைவாணன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைக்குச் சென்ற அவன் தாத்தா பை நிறையப் பொருள்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார்; சுமை தாங்காது உதவிக்கு அழைக்கிறார். தொலைக்காட்சியில் வைத்தகண் வாங்காமல் நிகழ்ச்சியொன்றினைப் பார்த்துக்கொண்டிருக்கும் அவன் என்ன செய்ய வேண்டும்? | |
| உங்களது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். முன்னறிவிப்பின்றி வந்திருக்கும் அவர் மிகவும் களைப்புடன் காணப்படுகிறார். நீங்கள் அவரை எவ்விதம் வரவேற்பீர்கள்? | |

**படிப்போம்; பயன்படுத்துவோம்!**

| | | | |
|---|---|---|---|
| Document | – ஆவணம் | Invasion | – படையெடுப்பு |
| Translator | – மொழிபெயர்ப்பாளர் | Culture | – பண்பாடு |
| Agreement | – ஒப்பந்தம் | Sailor | – மாலுமி |

**அறிவை விரிவு செய்**

- மறைக்கப்பட்ட இந்தியா – எஸ். இராமகிருஷ்ணன்
- நான் வித்யா– லிவிங் ஸ்மைல் வித்யா



XI_Std_Tamil_Unit_5.indd 132 29-01-2025 18:11:18

இயல் 6

# வையத் தலைமை கொள்

நாடு, அரசு, சமூகம், நிருவாகம்



## கற்றல் நோக்கங்கள்

- கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரையாக்கும் திறன் பெறல்.
- கவிதையில் வெளிப்படுத்தப்படும் புரட்சிக் கருத்துகளின் நயம் அறிந்து சுவைத்தல்.
- மீண்டெழும் ஒரு சமூகத்தின் மனவெழுச்சிகளைக் கவிதைகளாக வெளிப்படுத்தும் திறன் பெறுதல்.
- தமிழ்மொழியால் ஈர்க்கப்பட்டு, அதன் சிறப்புகளை உலகமெலாம் கொண்டுசென்ற அறிஞர்களின் அரும்பணிகளைப் போற்றல்.
- பிழையின்றி எழுதுவதற்கும் பிழைகளைத் திருத்தி எழுதுவதற்கும் பயிற்சி பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- உரைநடை – காற்றில் கலந்த பேரோசை
- செய்யுள் – புரட்சிக்கவி
  அதிசய மலர்
- துணைப்பாடம் – அயல்நாட்டவரின் அருந்தமிழ்ப் பணி
- இலக்கணம் – மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்



XI_Std_Tamil_Unit_6.indd 133 29-01-2025 18:11:57

## உரைநடை உலகம்

## இயல் 6

# காற்றில் கலந்த பேரோசை

– சுந்தர ராமசாமி



## நுழையும்முன்

ஒருமுறை திருவாங்கூர்ப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்கப் பள்ளி மாணவர்கள் குழுக்கள் அமைத்துச் செயல்பட்டனர். ஒரு குழுவினர் நாஞ்சில் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள 'தோவாளை' என்னும் இடத்திற்குச் சென்று பணியை மேற்கொண்டனர். அக்குழுவிற்குத் தலைவராக இருந்தார் ஜீவா; அரசியல் சிந்தனையிலும் பொதுவுடைமைச் சிந்தனையிலும் கூர்வாளாய் மெருகேற்றிக்கொண்டார். ஜீவா என்றழைக்கப்படும் ப.ஜீவானந்தம் தொடக்கத்தில் காந்தியவாதியாகவும் பிறகு சுயமரியாதை இயக்கப் போராளியாகவும் பொதுவுடைமை இயக்கத் தலைவராகவும் செயல்பட்டார்; சிறந்த தமிழ்ப் பற்றாளர்; எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தவர்.

நண்பர் ஒருவரிடம் 'ஜீவா மறைந்துவிட்டார்' என்றேன். 1963 ஜனவரி மாதம் பதினெட்டாம் தேதி, நண்பகல் வேளை. செய்தி, தபால் நிலையத்துக்கு வந்து ஒரு மணி நேரம்கூட ஆகியிருக்கவில்லை. 'ஆ!' என்று கூவி ஸ்தம்பித்து நின்ற நண்பர், இரண்டொரு நிமிஷங்களுக்குப்பின் 'கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதா?' என்று கேட்டார். 'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?' எனக் கேட்க எண்ணியவன், 'தெரியாது' என்ற சொல்லோடு நிறுத்திக்கொண்டேன்.

அரைமணி நேரத்திற்குப்பின் மற்றொரு நண்பர் காதில் இச்செய்தியைப் போட்டபோது, அவரிடமிருந்தும் அதே கேள்வி பிறந்தது ஆச்சரியத்தை அளித்தது. இருவரது வாயிலிருந்தும் ஒரே கேள்வி புறப்பட்டதைத் தற்செயலான காரியம் என எண்ணி மறந்துவிடுவதும் சுலபம்தான். ஆனால், நான் அவ்வாறு எண்ணவில்லை. அதற்குக் காரணமும் உண்டு.

### மேடையில் வாழ்ந்த மனிதர்

நண்பர்களைப் பொறுத்தவரையில் ஜனப்பிரளயத்தின் முன்னால் நின்று சங்கநாதம் எழுப்பிக் கொண்டிருக்கும்போதே, அண்டம் முட்ட எழுந்து நாற்றிசையிலும் அலையலையாய்ப் பரவும் அப்பேரோசையில் அவர் கலந்துவிடுவதே ஜீவாவின் முத்திரைகொண்ட மரணமாக இருக்கும் போலும். அப்போதுதான் நாடகத்தின் இறுதிக் காட்சி, முந்திய காட்சிகளுடன் பொருந்தி அமையும் போலும். மேடையில் வாழ்ந்த மனிதன், வாழ்ந்த இடத்தில்தானே மறைந்திருக்கவும் வேண்டும்? இவ்வாறு எண்ணுகிறது பேதை மனசு.

ஜீவா என்ற தொண்டன் தமது இறுதிமூச்சு நிற்பதுவரையிலும் கர்ஜித்துக்கொண்டுதான் இருந்திருப்பான் என்பதில் இவர்களுக்கு எத்தனை நம்பிக்கை! எனவேதான் 'மூச்சு நின்றுவிட்டது' என்று நான் சொன்னபோது 'பேச்சு நின்றபோதா?' எனத் திருப்பிக் கேட்கிறார்கள். எத்தனை அர்த்தபுஷ்டியான கேள்வி! ஜீவா தமது அரிய சேவையால் சர்வசாதாரண உள்ளங்களில்கூட எழுப்பியிருக்கும் சித்திரம்தான் எத்தனை ஜீவகளையுடன் காட்சி தருகிறது!

### நெஞ்சோடு வளர்ந்த கனவு

ஜீவா தமக்கென ஒரு தத்துவத்தைச் சிருஷ்டித்துக்கொண்டவர் அல்லர். அவர்,



XI_Std_Tamil_Unit_6.indd 134 29-01-2025 18:11:57

தாம் நம்பிய தத்துவத்தை, அச்சில் உயிரிழந்து கிடக்கும் அதன் சித்தாந்தக் கருத்துகளைத் தமது அரிய திறமையால், கலை நோக்கால், கற்பனையால் உயிர்பெறச் செய்து மனிதன்முன் படைத்தவர். மின்சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தவர் அவர்.

அவருடைய வாழ்வை, அதன் மையமான போக்கை எண்ணிப் பார்க்கையில் ஒரு கனவு, சிறு பிராயத்திலிருந்தே நெஞ்சோடு வளர்ந்த ஒரு கனவு, அவருக்கு இருந்திருக்கத்தான் வேண்டும் என்று தோன்றுகிறது. மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்கி இட்டுச் சென்று, அதிஉன்னதமான ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அது.

## கொள்கையும் நம்பிக்கையும்

'மனிதச் சிந்தனையே, கற்பனைக்கும் எட்டாத பேராற்றலே, நீ சிந்தித்தவற்றில் சிறந்தவற்றை என்னிடம் ஒரே ஒருமுறை கூறு. அதனை நான் எட்டுத் திசையிலும் பரப்பி மனித ஜாதியை நீ சொன்ன இடத்திற்கு அழைத்து வருகிறேன். சந்தேகப்படாதே. செய்துகாட்டுகிறேன். என்னைப் பயன்படுத்திக்கொள். முடிந்தமட்டும் என்னைப் பயன்படுத்திக்கொள். கைம்மாறு வேண்டாம். என்னை நீ பயன்படுத்திக்கொள்வதே நீ எனக்குத் தரும் கைம்மாறு'. இதுவே அவருடைய பிரார்த்தனை. இந்த அடிப்படையான மனோபாவத்திலிருந்து பிறந்தது அவருடைய கொள்கை; அவருடைய நம்பிக்கை.

## பேச்சு நடை

பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும். அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும். பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்கள் எத்தனையோ விதிகள் கூறும். ஜீவா அவற்றைக் காலடியில்போட்டு மிதித்தவர். அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.



நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்துகொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக்கொண்ட பேச்சுப்பாணி அது.

அதோடு, உழுது விதைத்தால் நல்ல அறுவடை காணவேண்டும் என்பதில் ஜீவாவுக்கு நிர்ப்பந்தமுண்டு. இந்தத் தேசத்தில் பேச்சு, அதற்குரிய பயனைத் தர வேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

## இரண்டு கைப்பிடி விசயம்

விசயத்தை வண்டி வண்டியாகக் குவித்துச் சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பல பிரசங்கிகளுக்குப் பொழுதுபோக்கு. ஜீவா இதற்கு எதிரி. ஒரு சில கருத்துகளை விரிவாகச் சொல்லிப் புரியவைத்துவிட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.

வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக்கொள்வார். மேடைமீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும்; பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்; குடை குடையாய் இறங்கி வரும்; மாலை மாலையாய் இறங்கிவரும்.



XI_Std_Tamil_Unit_6.indd 135 29-01-2025 18:11:58

## பசுமையான எண்ணங்கள்

பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது. இப்போது மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அது என்றும் காலியாகவே கிடக்கும்.

'நான் ஒரு பள்ளி மாணவன், படித்துக்கொண்டிருக்கிறேன், படித்துக் கொண்டே இருப்பேன்' என்ற எண்ணம் எப்போதும் அவர் மனசில் பசுமையாக இருந்தது போலிருக்கிறது. அவர் கரைத்துக் குடித்துவிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு கற்றுக்குட்டி அவரிடம் பேசினாலும் அதையும் காதுகொடுத்துக் கேட்பார். தமக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும் என்ற எளிய உண்மை எப்போதும் அவர் நினைவில் நிற்கும்.

## ஆற்றில் விழுந்த கிளை

ஆற்றில் ஒரு கிளையைப் போடுகிறோம். அது ஆற்றோடு செல்கிறது. நீரோட்டத்தில் சிக்கிக் கனவேகமாக ஓடுகிறது. சுழியில் அகப்பட்டுச் சுழல்கிறது. சில சமயம் கரையோடு ஒதுங்குகிறது. மீண்டும் ஓடுகிறது. ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சொரிமுத்து, ஆற்றில் கிளையைப் போட்டாற்போல் வாழ்ந்திருக்க வேண்டியவர்தான். ஆனால் அவரோ இயற்கையின் விதிகளை மறுத்து எதிர்நீச்சல் போடத் துணிந்தார். அவரை அறிஞர் என்கிறோம்; கற்றுக்கொடுக்க யாருமில்லை. பழந்தமிழ் இலக்கியத்தை யாரும் அவர் காதில் ஓதவில்லை. சொரிமுத்துவுக்கும் தலைவர் ஜீவாவுக்குமுள்ள இடைவெளி கொஞ்சம் தூரமல்ல. அதையொரு கணம் எண்ணிப் பார்த்தால், அவருடைய சாதனை தெரியவரும்.

'என் வாழ்வு என் கைகளில்' என்று நம்பியவர் அவர். அவருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கிறபோது அவருடைய நம்பிக்கை பலித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். கடவுளின் 'முன்னேற்பாடுகளை' முடிந்த மட்டும் அவர் தகர்த்து எறிந்துவிட்டார். நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்றுவிட்டது. எனினும், மரணம் இன்னும் கடவுளுக்குத்தான் சொந்தம். பேரோசை காற்றில் கலந்துவிட்டது.

('காற்றில் கலந்த பேரோசை' கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம்)

### நூல்வெளி

நாகர்கோவிலைச் சேர்ந்வர் சுந்தர ராமசாமி. இவர், நவீனத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர்; பசுவய்யா என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர்; ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள் உள்ளிட்ட சிறுகதைகளை எழுதியிருப்பதுடன் ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் ஆகிய முன்று புதினங்களையும் எழுதியுள்ளார். இவர், செம்மீன், தோட்டியின் மகன் ஆகிய புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். பாடப்பகுதியாக உள்ள இக்கட்டுரை, 1963இல் தாமரை இதழின் 'ஜீவா' பற்றிய சிறப்புமலரில் வெளியானது.

### கற்பவை கற்றபின்...

1. நான் விரும்பும் நாட்டிற்குழைத்த தலைவர் – மேடைப்பேச்சுக்கான கவியுரை உருவாக்குக.
2. ஜீவானந்தம் பற்றிய செய்திகளைத் திரட்டி வகுப்பறையில் படித்துக்காட்டுக.



XI_Std_Tamil_Unit_6.indd 136 29-01-2025 18:11:58

கவிதைப்பேழை

இயல் 6

# புரட்சிக்கவி

– பாரதிதாசன்



நுழையும்முன்

மக்களாட்சிக்கு முன்புவரை சட்டம், நிருவாகம், நீதி ஆகியவை அரசனிடமே குவிந்து இருந்தன. இந்நிலை சிறிது சிறிதாக மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டுத் தற்பொழுது மக்களாட்சிமுறை பல்வேறு நாடுகளில் மலர்ந்துள்ளது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக்கூறுகள். மக்களாட்சிச் சிந்தனைகளைப் பரப்பியதில் இலக்கியத்திற்கும் பெரும்பங்கு உண்டு. அரசு என்பது மக்களுக்கானதே என்று காலந்தோறும் இலக்கிய வடிவங்களின் மூலம் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

## முன்கதைச் சுருக்கம்

அரசன் ஒருவன் தன் மகள் அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையினைப் பயிற்றுவிக்க விரும்புகிறான். அதற்காக அமைச்சரிடம் கருத்துரை கேட்கிறான். அமைச்சர் உதாரன் பெயரை முன்மொழிந்து, 'அவன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' என்று கூறுகிறார். தன் மகள் ஏழைக்கவிஞரோடு காதல் வயப்பட்டுவிடுவாளோ என எண்ணி அரசன் தயங்குகிறான். அதைத் தவிர்க்க அமைச்சர் ஓர் உத்தியைக் கூறுகிறார்.

அதன்படி உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடம் கூறுகின்றனர். இதுபோலவே உதாரனிடம் அமுதவல்லி தொழுநோயாளி என்று தெரிவிக்கின்றனர். இருவருக்கும் இடையில் திரையிடப்படுகிறது. உதாரன், அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையைக் கற்றுத் தருகிறான்.

ஓர் இரவுப்பொழுதில் அழகிய நிலவினைக் கண்டு உதாரன் தன்னை மறந்து கவிதை ஒன்றைப் பாடுகிறான். பார்வையற்ற ஒருவன் நிலவின் அழகைக் கண்டு எவ்வாறு கவிபாட முடியும் என்று ஐயம்கொண்ட அமுதவல்லி திரையினை விலக்குகிறாள். அங்கு அழகிய ஆண்மகன் இருக்கக் கண்டு அவனை விரும்பத் தொடங்குகிறாள். உதாரனும் அழகான அமுதவல்லியைக் கண்டு விருப்பம் கொள்கிறான். இருவருக்கும் இடையே அன்பு மலர்கிறது.





XI_Std_Tamil_Unit_6.indd 137 29-01-2025 18:11:58

இவர்களின் விருப்பம் அரசனுக்குத் தெரியவருகிறது. இதனை விரும்பாத அரசன், உதாரனைக் குற்றவாளியாக்கி மரண தண்டனை விதிக்கிறான். அமுதவல்லி அதை எதிர்க்கிறாள். அதனால், சினம்கொண்ட மன்னன் இருவருக்கும் சேர்த்தே மரண தண்டனை விதிக்கிறான்.

கொலைக்களத்தில் கவிஞன் உதாரன் மக்கள்முன் பேசும் பகுதி பாடமாக இடம்பெற்றுள்ளது.

### கடைசிப் பேச்சு

*பேரன்பு கொண்டவரே, பெரியோ ரே,என்*
*பெற்றதாய் மாரே, நல்இளஞ்சிங் கங்காள்!*
*நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்*
*நிறைந்துபெருங் காடாக்கப் பெருவி லங்கு*
*நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்*
*நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்*
*போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்*
*புதுக்கியவர் யார்?அழகு நகர்உண் டாக்கி!*

*சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு*
*தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி*
*நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்*
*நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?*
*கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்*
*கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?*
*பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்*
*போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?**

பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்

*அரசனுக்கும் எனக்கும் ஒருவழக்குண் டாக*
*அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்ப தேதான்*
*சரியென்றேன்; ஒப்பவில்லை! இவளும் நானும்*
*சாவதென்றே தீர்ப்பளித்தான்; சாக வந்தோம்!*
*ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்*
*உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!*
*இருவர் இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்*
*இருப்பதுமெய் என்றெண்ணி இருக்கின் றீர்கள்!*

### மாசில்லாத உயர் தமிழ்

*'தமிழ்அறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்*
*தமிழ்க்கவிஎன் றெனை அவளும் காதலித்தாள்!*
*அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என் ஆவி*
*அழிவதற்குக் காரணமா யிருந்த தென்று*
*சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்*
*தாய் மொழிக்குப் பழிவந்தால் சகிப்ப துண்டோ?*
*உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில் லாத*
*உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!*

### மக்களுக்கே ஆளும் உரிமை

*அரசனுக்குப் பின்னிந்தத் தூய நாட்டை*
*ஆளுதற்குப் பிறந்தஒரு பெண்ணைக் கொல்ல*
*அரசனுக்கோ அதிகாரம் உங்க ளுக்கோ?*
*அவ்வரசன் சட்டத்தை அவம தித்தான்*
*சிரம் அறுத்தல் வேந்தனுக்குப்பொழுது போக்கும்*
*சிறியகதை! நமக்கெல்லாம் உயிரின் வாதை!*
*அரசன்மகள் தன்நாளில் குடிகட் கெல்லாம்*
*ஆளுரிமை பொதுவாக்க நினைத்தி ருந்தாள்!*

### ஆழ்க எந்தன் குருதி

*வாழியஎன் நன்னாடு பொன்னா டாக!*
*வாழியநற் பெருமக்கள் உரிமை வாய்ந்தே*
*வீழியபோய் மண்ணிடையே விண்வீழ் கொள்ளி*
*வீழ்வதுபோல் தனித்தாளும் கொடிய ஆட்சி!*
*ஏழையினேன் கடைசிமுறை வணக்கம் செய்தேன்!*
*என்பெரியீர், அன்னையீர், ஏகு கின்றேன்!*
*ஆழ்க என்றன் குருதியெலாம் அன்புநாட்டில்*
*ஆழ்க' என்றான்! தலை குனிந்தான் கத்தி யின்கீழ்!*

### கொலையாளி உயிர் தப்பல்

*படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து*
*பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்*
*அடிசோர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்*
*ஆவென்று கதறினாள்! 'அன்பு செய்தோர்*
*படிமீது வாழாரோ?' என்று சொல்லிப்*
*பதைபதைத்தாள்! இதுகேட்ட தேச மக்கள்*
*கொடிதென்றார்! கொடுவாளைப் பறித்தார்; அந்தக்*
*கொலையாளர் உயிர்தப்ப ஓட லானார்!*



XI_Std_Tamil_Unit_6.indd 138 29-01-2025 18:11:58

### செல்வமும் உரிமையும் மக்களுக்கே

*கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்!*
*காவலன்பால் தூதொன்று போகச் சொன்னார்;*
*'புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று*
*போய்உரைப்பாய்' என்றார்கள்! போகா முன்பே*
*செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்!*
*செல்வமெலாம் உரிமைஎலாம் நாட்டா ருக்கே*
*நவைஇன்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்!*
*நலிவில்லை! நலம்எல்லாம் வாய்ந்த தங்கே!*

– பாரதிதாசன்

## சொல்லும் பொருளும்

*கனிகள் - உலோகங்கள்; மணி - மாணிக்கம்; படிகம் - பளபளப்பான கல்; படி - உலகம்; மீட்சி - விடுதலை; நவை - குற்றம்.*

## இலக்கணக்குறிப்பு

*ஆழ்க, வாழிய - வியங்கோள் வினைமுற்றுகள்; அலைகடல் - வினைத்தொகை; கண்ணீர் வெள்ளம் - உருவகம்; பேரன்பு, நெடுங்குன்று - பண்புத்தொகைகள்; ஒழிதல் - தொழிற்பெயர்; உழுதுழுது - அடுக்குத்தொடர்.*

## பகுபத உறுப்பிலக்கணம்

**அழைத்தான் – அழை + த் + த் + ஆன்**

அழை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**வேண்டுகின்றேன் – வேண்டு + கின்று + ஏன்**

வேண்டு – பகுதி, கின்று – நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**ஆழ்க – ஆழ் + க**

ஆழ் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

**பறித்தார் – பறி + த் + த் + ஆர்**

பறி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

**நீரோடை – நீர் + ஓடை**

**விதி:** 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' – நீரோடை

**சிற்றூர் – சிறுமை+ ஊர்**

**விதி:** 'ஈறு போதல்' – சிறு + ஊர்

**விதி:** 'தன்னொற்றிரட்டல்' – சிற்று + ஊர்

**விதி:** 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' – சிற்ற் + ஊர்

**விதி:** 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' – சிற்றூர்

**கற்பிளந்து – கல் + பிளந்து**

**விதி:** 'ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும்' – கற்பிளந்து

**புவியாட்சி – புவி + ஆட்சி**

**விதி:** 'இ ஈ ஐ வழி யவ்வும்' – புவி + ய் + ஆட்சி

**விதி:** 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – புவியாட்சி.

### நூல்வெளி

வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் காவியத்தைத் தழுவி, தமிழில் 'புரட்சிக்கவி' எனப் பாரதிதாசன் 1937இல் எழுதினார். இவர் பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கனக. சுப்புரத்தினம் என்னும் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். இவர் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்படுகிறார்; குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம் ஆகிய காப்பியங்களையும் எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர்; 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தினார். இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தமது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு திருச்சியில் நிறுவியுள்ள பல்கலைக்கழகத்திற்கு, இவரது பெயரைச் சூட்டிச் சிறப்பித்துள்ளது.

### கற்பவை கற்றபின்...

1. மக்களாட்சியின் சிறப்பைப் பற்றிக் கலந்துரையாடல் செய்க.
2. பாரதிதாசனாரின் 'புரட்சிக்கவி' குறுங்காவியத்தை முழுமையாகப் படித்துச் சுவைத்து உங்கள் கருத்தைப் பதிவு செய்க.



XI_Std_Tamil_Unit_6.indd 139 29-01-2025 18:11:58

# அதிசய மலர்

– தமிழ்நதி

**நுழையும்முன்**

குண்டுமழை பொழிந்தது; நிலங்கள் அழிக்கப்பட்டன; மனிதர்கள் சிதறி ஓடினர். அழிக்கப்பட்ட தாய்மண்ணில் பூ ஒன்று மலர்கிறது. வண்டுகள் பூவைத் தேடி வருகின்றன. அந்தப் பூ நம்பிக்கைகளைத் தருகிறது. நாளை அங்கே பெருங்காடு உருவாகலாம்; பெருமழை பெய்யலாம். அந்தப் பூவின் புன்னகை, நாடு பற்றிய நம்பிக்கையைச் சிதறிய மனிதரிடையே பரப்புகிறது.

*இறுகிப் படிந்த துயரத்தோடும்*
*எஞ்சிய மனிதர்களோடும் மீண்டிருக்கிறோம்*

*ஞாபகத்தில் மட்டுமே மரங்கள் மீந்திருக்கும்*
*பொட்டல் வெளியில்*
*போரின் பின் பிறந்த குழந்தையென*
*முகையவிழ்ந்து சிரிக்கிறது*
*அதிசய மலரொன்று*

*ஆட்களற்ற பொழுதில் உலவிய*
*யானைகளின் எச்சத்திலிருந்து*
*எழுந்துஇருக்கலாம் இச்செடி*

*எவருடையவோ*
*சப்பாத்தின் பின்புறம்*
*விதையாக ஒட்டிக் கிடந்து*
*உயிர் தரித்திருக்கலாம்*

*பச்சையம் இழந்த சாம்பல் நிலத்தில்*
*மலரை அடையாளம் கண்டு*
*எங்கிருந்தோ வருகிறது*
*வண்ணத்துப்பூச்சியொன்று*
*பறவைகளும் வரக்கூடும் நாளை*

*இனி செடியிலிருந்து பெருகும் காடு*
*அது கொணரும் பெருமழை*

*அதிசய மலரின்*
*இதழ்களிலிருந்து தொடங்கும் புன்னகை*
*பேரூழி கடந்து பிழைத்திருக்கும் மனிதரிடை*
*பரவிச் செல்கிறது!*

*ஏதொன்றையேனும் பற்றிப் பிடிக்காமல்*
*எப்படித்தான் கடப்பது*

*– தமிழ்நதி*



**நூல்வெளி**



இக்கவிதை 'அதன் பிறகும் எஞ்சும்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது. இதைப் படைத்த தமிழ்நதி (கலைவாணி) ஈழத்தின் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்றவர்; தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வருகிறார்; நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது, மாயக்குதிரை, தங்கமயில் வாகனம் (சிறுகதைகள்), சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பனி (கவிதைகள்), கானல் வரி (குறுநாவல்), பார்த்தீனியம் (நாவல்) முதலிய பல்வேறு படைப்புகளைப் படைத்துள்ளார். புலம் பெயர்ந்து வாழும் இருப்புகளையும் வலிகளையும் சொல்லும் வலிமையான மொழி இவருடையது.

**கற்பவை கற்றபின்...**



போர்களுக்கு எதிரான குரல்களாக வெளிப்படும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படிக்க.



XI_Std_Tamil_Unit_6.indd 140 29-01-2025 18:11:59

விரிவானம்

# இயல் 6 அயல்நாட்டவரின் அருந்தமிழ்ப் பணி




இலக்கிய வளமும் இலக்கண ஆழமும் கொண்ட மொழிகளுள் ஒன்று தமிழ்மொழி. நம் மொழிக்கு காலந்தோறும் அளப்பரிய தொண்டுகளைச் செய்தவர்கள் பலர். இவர்களுள் சிலர் தமிழ்நாட்டிற்கு வருகைதந்து, காலத்தால் அழியாத தலைசிறந்த தமிழ்ப் பணிகளைச் செய்துள்ளனர். மேலும், அயலகத்தில் வாழும் நம் தமிழ் உறவுகளும் அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர்.

தமிழ்மொழியும் அதன் இலக்கியமும் தமிழ்நாட்டின் எல்லைக்கு அப்பாலும் பரந்து விரிந்துள்ளன. பழைமைமிக்க இலக்கியங்களான சங்கப் படைப்புகளில் இதற்கான சான்றுகளைக் காணமுடிகிறது. அயல்நாடுகளுடனான தமிழரின் தொடர்பைப் போலவே தமிழ்நாட்டுடனான அயல்நாட்டவர் தொடர்பும் தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்தது.

## ஐரோப்பியர் தொடர்பு

வரலாற்றுக் காலம்தொட்டே தமிழ்நாட்டுக்கும் ஐரோப்பாவுக்கும் தொடர்பிருந்தது. இத்தொடர்பு பொ.ஆ. (கி.பி.) 3ஆம் நூற்றாண்டுவரை நீடித்துப் பின் அறுந்துபோயிற்று. 16ஆம் நூற்றாண்டில் அத்தொடர்பு மீண்டும் ஏற்பட்டது. ஐரோப்பியர் தொடர்பால் அச்சகங்கள் நிறுவப்பட்டன.

## ஐரோப்பியரின் தமிழ்ப்பணிகள்

போர்ச்சுக்கீசியரான 'அண்ட்ரிக் அடிகளார் (HENRI HENRIQUES) தமிழிலே மொழிபெயர்த்த தம்பிரான் வணக்கம்' (1578) என்னும் நூல்தான் ஐரோப்பாவுக்கு வெளியே இந்திய மொழிகள், ஆசிய மொழிகள் அனைத்திற்கும் முன்பாக வெளிவந்த முதல் அச்சு நூல் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். இராபர்ட் டி நொபிலி தமிழிலேயே நூல்கள் எழுதினார்.

அச்சகங்களால் தமிழ் உரைநடை வளர்ச்சிபெறத் தொடங்கியது. அயலக அறிஞர்கள் உரைநடையில் பத்திபிரிப்பு, சொற்களுக்கு நடுவில் இடைவெளி, நிறுத்தக்குறிகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி, நவீன தமிழ் உரைநடை வளர்வதற்கு அடித்தளம் இட்டனர். தமிழ் இலக்கணம், தமிழ்ச் சுவடிகள், தமிழ் எண்கணிதம், அறிவியல்,சாத்திரங்கள் இவற்றையெல்லாம் சேகரிக்கும் பணிகளையும் ஐரோப்பியர் மேற்கொண்டனர்.

இத்தாலி நாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர் (CONSTANZA GIUSEPPE BESCHI) தமிழ்க்காப்பிய மரபைப் பின்பற்றித் தேம்பாவணியையும் திருக்காவலூர் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களையும் இயற்றினார். தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் முதலிய இலக்கண நூல்களையும் எழுதினார். அங்கதச் சுவையுடைய 'பரமார்த்த குரு கதை' இவரது படைப்பாகும். தமிழ் எழுத்துகளில் இவர் செய்த சீர்திருத்தம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

இத்தாலி நாட்டவரான இராபர்ட் டி நொபிலியின் தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியைத் தொடர்ந்து வீரமாமுனிவரின்



XI_Std_Tamil_Unit_6.indd 141 29-01-2025 18:11:59

**வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

சதுரகராதி வெளிவந்தது. அகராதிக்கலை மேலும் வளர பெப்ரிசியசு, இராட்லர், வின்சுலோ முதலிய அறிஞர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். பெப்ரிசியசு பழமொழிகளின் தொகுப்பையும் உருவாக்கியுள்ளார்.

ஜெர்மனியிலிருந்து வந்த பார்த்தலோமியோ சீகன் பால்கு (1682–1719) தரங்கம்பாடியில் தங்கி, பனை ஓலை யுகத்திலிருந்து தமிழ் நூல்களை மீட்டு அச்சு நூல்களை வெளியிட்டுப் பெருந்தொண்டு ஆற்றினார். நீதி வெண்பா, கொன்றை வேந்தன், உலக நீதி ஆகியவற்றை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். இவர் தமிழ்நாட்டுத் தெய்வங்கள், இலக்கியங்கள், பழக்கவழக்கங்கள் குறித்து ஜெர்மன் மொழியில் எழுதினார். இலத்தீன் மொழியில் தமிழ் இலக்கண நூலையும் (Grammatica Damulica 1716) இவர் எழுதியுள்ளார். துறைகள் பலவற்றிலும் தமிழ்நாடு செழித்தோங்கி வளர்ந்திருப்பதைத் தம் நூல்கள் வாயிலாக இவர் மேற்குலகிற்கு எடுத்துரைத்தார். இவர் ஒரு நாளின் மூன்றில் இரண்டு பகுதி நேரத்தைத் தமிழ் கற்றுக்கொள்ளச் செலவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயரான பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் (1777–1819) திருக்குறள் அறத்துப்பாலை மொழிபெயர்த்து விளக்கம் எழுதினார். முதல் 13 அதிகாரங்களுக்கு மிக விரிவாக 65 தமிழ் நூல்களை மேற்கோள் காட்டி ஆங்கிலத்தில் விளக்கம் தந்துள்ளார். திருவள்ளுவரின் திருவுருவம் பொறித்த தங்க நாணயங்களை வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. திராவிட மொழிக் குடும்பம் பற்றிய கருத்தாக்கத்தை முதன் முதலில் முன்வைத்தவர் இவரே. ஆங்கிலேயர் தமிழ் கற்பதற்குப் புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை நிறுவியவரும் இவரே.

எல்லீசைத் தொடர்ந்து அயர்லாந்து நாட்டவரான இராபர்ட் கால்டுவெல் மேற்கொண்ட 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வு' (1856), தென்னிந்தியாவில் வழங்கும் மொழிகள் தனி மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று எடுத்துரைத்தது. வடமொழிக் கலப்பின்றித் தமிழ் தனித்து இயங்குவது என்பதையும் இது உலகிற்கு உணர்த்தியது.

ஜி.யு.போப் (1820–1908) திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அரிஸ்டாட்டில்கூடச் சொல்லாத அறவுரைகள் வள்ளுவரால் கூறப்பட்டிருப்பதாக வியக்கிறார் போப். சிறந்த குறள்களை விளக்க வர்ஜில், தாந்தே, வேமன்னா முதலானோரின் கவிதைகளையும் மேற்கோளாகத் தந்திருக்கிறார்.

ஜெர்மனியில் பிறந்து 1814இல் சென்னைக்கு வந்த இரேனியஸ் 1832இல் தமிழின் முதல் அறிவியல் நூலை, 'பூமி சாஸ்திரம்' என்னும் பெயரில் வெளியிட்டார். மேலும், பூகோளம், சரித்திரம், இயற்கை, வான சாஸ்திரம், சூரிய மண்டலம், கால நூல், தர்க்கம் முதலான பாட நூல்கள் பலவற்றையும் தமிழில் எழுதி அளித்துள்ளார். தமிழின் முதல் கலைச் சொல்லாக்குநரும் இரேனியஸே ஆவார்.

செக் நாட்டவரான கமில் வாச்லவ் சுவெலபில் (1927–2009) தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றிய மொழியியல் வல்லுநர்களுள் ஒருவர். தமிழ்க் கடவுள்



XI_Std_Tamil_Unit_6.indd 142 29-01-2025 18:11:59

முருகப் பெருமானிடம் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகத் தான் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூலுக்கு 'தி ஸ்மைல் ஆஃப் முருகன்' என்று பெயரிட்டுள்ளார். தமிழ் நூல்களை ஆங்கிலம், செக், செர்மன் மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார். திராவிட மொழியியல், சங்க இலக்கியம், தமிழ் யாப்பு ஆகியன பற்றி ஆங்கிலத்திலும், தென்னிந்தியா பற்றி செக் மொழியிலும் புத்தகம் எழுதியுள்ளார்.

### இலங்கை நாட்டவர் தமிழ்ப்பணிகள்

நிலவியல் அடிப்படையில் தமிழகத்தோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்ட ஈழத்தில் தமிழ்மொழியும் தமிழ்இலக்கியமும் பல நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்துள்ளன. ஈழத்தின் தமிழ்ப்பணி வரலாறு, சங்கப்புலவரான பூதந்தேவனாரிலிருந்து தொடங்குகிறது.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் மாணவர்கள் தமிழில் பயிலப் பள்ளிகளை ஏற்படுத்தியதோடு, அப்பள்ளிகளுக்குத் தரமான நூல்களையும் அச்சிட்டுத் தந்தார். இலக்கிய, இலக்கணத்தை எளிதில் கற்க உதவும் வகையில் தாமே பல உரைநடை நூல்களை உருவாக்கினார். இதனால் அவர், 'தமிழ் உரைநடையின் தந்தை' என்று போற்றப்பட்டார்.

உ.வே.சா. அவர்களுக்கு முன்பு 1885 இல் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை, சேனாவரையர் உரையுடன் பதிப்பித்த பெருமை சி.வை. தாமோதரனாரைச் சாரும். இப்பதிப்பிற்கு முன்பே வீரசோழியம், இலக்கண விளக்கம், இறையனார் களவியலுரை போன்றவற்றைப் பதிப்பித்திருந்தார். கலித்தொகை, சீவகசிந்தாமணி உட்பட 11 நூல்களைப் பதிப்பித்தும், 6 நூல்களை எழுதியும் அருந்தொண்டு புரிந்தார்.

தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து சைமன் காசிச் செட்டி வெளியிட்ட ஆங்கில நூலான 'தமிழ் புளூடாக்' (1859), அ. சதாசிவனாரின் 'பாவலர் சரித்திர தீபிகம்' (1886) ஆகியவை குறிப்பிடத்தகுந்த இலக்கிய வரலாற்று முயற்சிகளாகும். இவற்றோடு 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களைத் தந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், '1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர்' என்னும் நூலை எழுதிய கனகசபை ஆகியோரின் பங்கு தமிழின் தரத்தினைப் பன்மடங்கு உயர்த்தியது.

ஈழத் துறவி விபுலாநந்தர் சமயம், இலக்கியம், இசை, அறிவியல், தத்துவம் என்று பல்துறைகளில் வித்தகராகத் திகழ்ந்தார். தமிழர்தம் தொன்மைமிக்க இசைக்கருவியாகிய யாழைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'யாழ்நூல்' இயற்றினார். தமிழ்நாடகத்தின் இலக்கணக் கூறுகளை ஒருங்கு திரட்டி 'மதங்க சூளாமணி' என்னும் நூலினையும் படைத்தார்.

தமிழகராதி ஒன்றைத் தொகுத்த நா. கதிரைவேலர், தமிழ்ச் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி தந்த சுவாமி ஞானப்பிரகாசர், உலகியல் விளக்கம் எழுதிய நவநீத கிருஷ்ண பாரதியார், தொல்காப்பியம் முழுமைக்கும் விளக்கக்குறிப்புகள் எழுதிப் பதிப்பித்த சி.கணேசனார் ஆகியோரும் போற்றத்தக்கவர்கள்.

தனிநாயகம் அடிகளார் திணை சார்ந்த தமிழ் இலக்கியங்களின் சிறப்பு குறித்தும் தமிழர்களின் உலகளாவிய பார்வை குறித்தும் உலக அரங்குகளில் சொற்பொழிவாற்றினார்; அவர் தெற்காசிய நாடுகளில் காணப்படும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிந்து உலகிற்கு உணர்த்தினார்; தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்திக் காட்டினார்; சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படவும் காரணமாக இருந்தார்.

தமிழ்ச் சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றை ஆராய்ந்து வரலாற்று நூல்களை வெளியிட்ட சோ.சிவபாதசுந்தரம் போன்றோரின் எழுத்துகள் திறனாய்வை வளர்த்தன. இலக்கியத் திறனாய்வுக்

கலைக்கு மெருகூட்டிய அறிஞர்களாக சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் போற்றப்படுகின்றனர். சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ.நுஃமான், அ. சண்முகதாஸ், மு.தளையசிங்கம் போன்றோரின் பங்களிப்பில் இத்துறை மேலும் வளர்ச்சி பெற்றது.

## பிற நாட்டவர் தமிழ்ப்பணிகள்

### மலேசியா

புத்திலக்கிய ஆய்வாளரான வே.சபாபதி 1995இல் 'விடுதலைக்குப் பிந்திய தமிழ் நாவல்கள்' நூலையும் தொடர்ந்து 1996இல் 'விடுதலைக்கு முந்திய தமிழ் நாவல்கள்' நூலையும் வெளியிட்டார். பழம்பெரும் எழுத்தாளரான மா. இராமையா 1996இல் 'மலேசியத் தமிழ் வரலாற்றுக் களஞ்சியம்' என்னும் அரிய வரலாற்று நூலை எழுதினார். மலேசியாவில் இதுவரையில் வெளியான கவிதைகளைத் தொகுத்து 1998இல் முரசு நெடுமாறன் 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்னும் நூலை வெளியிட்டார். மேற்கண்ட நான்கு நூல்களும் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமான நூல்களாக அமைந்தன.

கா.கலியபெருமாள் அதிக நூல்கள் எழுதியுள்ள தமிழ்ச் சிந்தனையாளர்களுள் ஒருவர். இவருடைய பதிப்பு முயற்சிகளின் முத்தாய்ப்பாக 1997இல் 'தமிழ்ப் பண்பாட்டுக் களஞ்சியம்' என்னும் பெருநூலைத் தொகுத்து வெளியிட்டார்.

### ஜப்பான்

ஜப்பானிய அறிஞரான சுசுமு ஓனோ (Susumu Ōno), ஜப்பானிய – தமிழ் மொழிகளுக்கு இடையிலான தொடர்புகள் குறித்து இலக்கிய, இலக்கண, கல்வெட்டு, நாட்டுப்புறவியல் சான்றுகளுடன் ஆராய்ந்து இருமொழி உறவை வெளிப்படுத்தினார். அவர் ஆற்றிய சிறப்பான முயற்சிகளைப் பாராட்டி, தமிழ்நாடு அரசால் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது' அவருக்கு வழங்கப்பட்டது.

### அமெரிக்கா

அமெரிக்காவின் கிரீன் ஹில்லில் பிறந்த சாமுவேல் பிஸ்க் கிரீன் (1822–1884) டாக்டர் கால்வின் கட்டரின் 'உறுப்பு அமைப்பு, உடலியல் மற்றும் உடல் தூய்மை' நூலைத் தமிழ்ப்படுத்தினார். தொடர்ந்து, பல புகழ்பெற்ற மருத்துவர்களின் நூல்களைத் தமிழாக்கம் செய்தார். இவ்வகையில் டாக்டர் கிரீனின் முன்னோடித் தமிழ்ப்பணி பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியது.

ஜார்ஜ் எல்.ஹார்ட் கலிஃபோர்னியா (பெர்க்லி) பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். சங்கப்பாடல்கள் ஒரு வீரியமான சமுதாயத்தைச் சித்தரிக்கின்றன; பாடல்களில் ஒரு சக்தி மிளிர்கிறது; வடமொழிப் பண்பாட்டிற்கு முந்தையவை அவை; புறநானூறு காட்டுவதுதான் உண்மையான அன்றைய இந்தியா என்றெல்லாம் அவர் ஆராய்ந்து உரைத்துள்ளார்.

தமிழின் சிறப்பை உணர்ந்து போற்றும் அயல்நாட்டவர் உலகெங்கும் உள்ளனர். தமிழ்ப்பண்பாட்டின் சிறப்பைக் கிரேக்க ரோமானிய பண்பாட்டோடு ஒப்பிட்டு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. தமிழ் இலக்கியங்களை அயல்மொழி இலக்கியங்களோடு ஒப்பிடுவதும் மொழிபெயர்ப்பதும் வளர்ந்துள்ளது. அயல்நாட்டவரின் தமிழ்ப்பணியால் தமிழ் உலகெங்கும் புகழ்பெற்று விளங்குகிறது.

**கற்பவை கற்றபின்...**

1. உங்கள் பள்ளி நூலகத்திலுள்ள அயல்நாட்டவரின் தமிழ் நூல்களைப் பட்டியலிடுக.
2. தமிழுக்குத் தொண்டாற்றிய அயலகத் தமிழர்களின் நிழற்படங்களைத் தொகுக்க.



XI_Std_Tamil_Unit_6.indd 144 29-01-2025 18:11:59

இயல் 6

# மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

மாணவர்கள் பள்ளியில் பயில்கின்றபோதே கூடுதல் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்திறன்கள் எதிர்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் அமையும். தமிழ்மொழியைக் கற்பதோடு நில்லாமல் தமிழ்சார்ந்த பிற பணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்நிலையில் அச்சுப்படித் திருத்தக் குறியீடுகளை அறிந்து பிழைத்திருத்தம் செய்யும் இப்பயிற்சியானது மாணவர்களின் வேலைவாய்ப்பிற்கு உதவும்.

நூல்களையோ, இதழ்களையோ வெளியிடும்போது பிழையின்றி அச்சிடவேண்டும். எழுத்துப்பிழைகள், தொடர்ப்பிழைகள், மயங்கொலிப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள் ஆகியவை நிறைந்த செய்திகள், படிப்போர்க்குத் தவறான கருத்தை அளித்து, குழப்பத்தில் ஆழ்த்திவிடும். எனவே, நூல்கள் அல்லது இதழ்களை அச்சிடுவதற்கு முன்னர் அச்சுப்படி திருத்துபவர் அப்பணியின்போது பிழைகளைத் திருத்துவதற்குப் பின்பற்றும் முறைகளையும் திருத்தக் குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

### அச்சுப்படி திருத்துபவரின் பணிகள்

- மூலப்படியில் (Original Copy) உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா? என்று ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.
- செய்தியின் உள்ளடக்கம், புள்ளிவிவரங்கள், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபட்டுள்ளனவா என்பதை மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் இன்றியமையாதது. ஏனெனில், புள்ளி விவரங்கள் மாறினால் செய்தியின் பொருளில் முரண்பாடு ஏற்படும்.
- அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.
- பிழை ஏற்பட்ட சொல்லின்மீது எழுதுதல் கூடாது. ஒரு வரியின் இடப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் இடப்பக்க ஓரமும் வலப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் வலப்பக்க ஓரமும் திருத்தம் தருதல் அச்சிடுவோர்க்குப் பயனுடையதாக அமையும்.
- பிழைகளை ஓரம்வரை கோடிழுத்துக் காட்டும்போது,மேலும்கீழும்உள்ளவரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
- ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.
- ஒரு சொல்லில் பிழைகள் பல இருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் வேண்டும்.
- எண்ணின் (Number) இடையில் பிழையிருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாகப் பிழையின்றி எழுதிக்காட்டுதல் நல்லது.
- அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டும். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.

### குறியீடுகள் இடுதல்

அச்சுப்படியில் இருக்கும் பிழைகளைத் திருத்த உலக அளவில் பொதுவான திருத்தக் குறியீடுகள் என்று சில உண்டு. அத்தகைய திருத்தக் குறியீடுகளை அச்சுப்படி



XI_Std_Tamil_Unit_6.indd 145 29-01-2025 18:11:59

திருத்துவோர் முதலில் படித்தறிதல் வேண்டும். பிழையிருக்கும் இடத்தில் ஒரு சிறுகோட்டினால் குறித்து, அந்த வரிக்கு நேராகப் பக்கத்தின் ஓரப்பகுதியில் (Margin) குறியீடுகளைப் பொருத்தமாக இட்டுப் பிழையின் திருத்தத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். ஒரே வரியில் பல தவறுகள் வந்தால் அவற்றை வரிசைப்படி பக்க ஓரத்தில் சிறுசாய்வான கோடிட்டுத் திருத்தத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

### எடுத்துக்காட்டு

பாரதியார் கேளிச்சித்திரத்தை /லி
ர/ விகடச்சித்திறம் என்று குரிப்பார். /றி

## திருத்தக் குறியீடுகளின் பிரிவுகள்

பிழைகள் உள்ள அச்சுப்படியைத் திருத்துவதற்குக் கையாளப்படும் திருத்தக் குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை:

1. பொதுவானவை (General)
2. நிறுத்தக் குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)
3. இடைவெளி தரவேண்டியவை (Spacing)
4. இணைக்க வேண்டியவை (Alignment)
5. எழுத்து வடிவம் (Type/Font) என்பவையாகும்.

### 1. பொதுவானவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| Dt | அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக. |
| ^ | சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க. |
| [ | புதிய பத்தி (New Paragraph) தொடங்குக. |

### எடுத்துக்காட்டு

• பாரதி தம்மைப் போலவே பிறரை/ /யும்
நேசிக்கும் பண்ப்பாளர் . /dt

### 2. நிறுத்தக் குறியீடுகள்

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| , / | கால் புள்ளியைச் சேர்க்கவும். |
| ;/ | அரைப் புள்ளியைச் சேர்க்கவும் |
| ./ | முற்றுப்புள்ளி இடவும். |
| ?/ | வினாக்குறி அடையாளம் இடவும். |
| !/ | வியப்புக் குறியைச் சேர்த்துக் கொள்ளவும். |
| :/ | முக்காற்புள்ளி சேர்க்கவும். |

### எடுத்துக்காட்டு

சங்ககாலத்தில் கற்பித்தல் பணியை
மன்றம் /சான்றோர் அவை / , / , /
அறங்கூர் அவையம் / சமணப்பள்ளி , /
போன்ற அமைப்புகள் செய்துள்ளன.

### 3. இடைவெளி தரவேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| ⁀ | சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும். இடைவெளி விட வேண்டாம். |
| # | பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக. |

### எடுத்துக்காட்டு

தமிழ்/இதழ்களில் தமிழ்/ஆண்டு /# /#
திங்கள், நாள் ஆகியவற்றை
முதன்⁀முதலாகக் குறித்தவர் பாரதியார். /⁀

### 4. இணைக்க வேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| ⊐ | இடப்பக்கம் தள்ளவும் |
| ⊏ | வலப் பக்கம் தள்ளவும் |
| ∽ | பத்திகளை இணைக்கவும் |
| ∨' | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
| ∨" | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |

### எடுத்துக்காட்டு

கல்வியின் சிறப்பை /கல்வி அழகே /∨'
அழகு/ என நாலடியார் கூறுகிறது. /∨'



XI_Std_Tamil_Unit_6.indd 146 29-01-2025 18:11:59

### 5. எழுத்து வடிவம்

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| Unbold | வழக்கமான எழுத்தில் மாற்றுக |
| Bold | தடித்த எழுத்தில் மாற்றுக |
| Trs | சொற்கள், எழுத்துகளை இடம் மாற்றுக |
| l.c. | எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக |

**எடுத்துக்காட்டு – 1**

(சிலப்பதிகாரம்)/ (மணிமேகலை)/ B/ B/ ஆகிய இரண்டும் தமிழ்மொழியில் தோன்றிய இரட்டைக்காப்பியங்கள்.

**எடுத்துக்காட்டு – 2**

உள்ளத்துள்ளது கவிதை – /இன்ப உருவெடுப்பது கவிதை trs/

| திருத்தக்குறியீடுகளின் | தமிழ்ப்பெயர்கள் |
|---|---|
| Apostrophe ( ' ) | – எழுத்துக்குறை |
| Semicolon ( ; ) | – அரைப்புள்ளி |
| Colon ( : ) | – முக்காற்புள்ளி |
| Colondash ( :– ) | – வரலாற்றுக்குறி |
| Ditto mark ( ,, ) | – மேற்படிக்குறி |
| Dash ( – ) | – இடைக்கோடு |
| Bar ( / ) | – வெட்டுக்கோடு |
| Brackets ( ( ) ) | – பிறைக்கோடு |
| Double Brackets ( { } ) | – இரட்டைப்பிறைக்கோடு |
| Large Brackets ( [ ] ) | – பகரஅடைப்பு |

**கற்பவை கற்றபின்...**



மெய்ப்புத் திருத்தங்களை அறிவது எத்துறையில் வேலைவாய்ப்புப்பெற உதவும்? – வகுப்பில் கலந்துரையாடுக.

### இலக்கணத் தேர்ச்சிகொள்

1. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக?
2. ஏற்ற இடங்களில் அச்சுத் திருத்தக்குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையைக் கீழ்க்காணும் பத்தியின் மூலம் அறிக.



அறிஞர் வாழ்வில் நகைச்சுவை

கவிஞர் கண்ணதாசன் கல்லூரி ஒன்றில் கவியறங்கத்தில் கலந்துகொண்டு கவிதை யை வாசிக்க ஆரம்பித்தார்ர். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது.அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடித்தது கரவொலி அடங்க வெகுநேரம் பிடித்தது கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன் சொன்னார் ."இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதை எழுத்துக்கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார் அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதியஅ கவிதையை அவரை வாசிக்கசொ சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என்கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக, சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதுதான் உண்மை என்று புரிகிறது".



XI_Std_Tamil_Unit_6.indd 147 29-01-2025 18:12:00



# நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக

1. 'ஜனப்பிரளயம் ' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க.

அ) மக்கள் அலை    ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம்    ஈ) மக்கள் அவை

2. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது

அ) நம்பிக்கை    ஆ) பெருமிதம்
இ) புகழ்    ஈ) அச்சம்

3. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' – யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம்    ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம்    ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

4. கூற்று : மாணவர்கள் பள்ளியில் பயில்கின்றபோதே கூடுதல் திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

காரணம் : இத்திறன்கள் எதிர்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

அ) கூற்று தவறு; காரணம் சரி    ஆ) கூற்று சரி ; காரணம் சரி
இ) கூற்று சரி ; காரணம் தவறு    ஈ) கூற்று தவறு ; காரணம் தவறு

5. பிழைத் திருத்தத்தில் **Dt** இக்குறியீடு உணர்த்தும் பொருள்

அ) ஒற்றை மேற்கோள் குறியிடுக    ஆ) தடித்த எழுத்தில் மாற்றுக
இ) சொற்களுக்கிடையே இடைவெளி தருக    ஈ) சொல்லையோ எழுத்தையோ நீக்குக

## குறுவினா

1. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
2. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?
3. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக்குறிப்புத் தருக.
4. " எங்கிருந்தோ வருகிறது

வண்ணத்துப் பூச்சியொன்று

பறவைகளும் வரக் கூடும் நாளை" – இவ்வரிகள் மூலம் தமிழ்நதி கூறும் செய்திகள் யாவை?

## சிறுவினா

1. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
2. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" – இடம்சுட்டிப் பொருள்விளக்கம் தருக.
3. பெருங்காடு, உழுதுழுது – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
4. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்தாகத் தமிழ்நதி கூறுகிறார்?



XI_Std_Tamil_Unit_6.indd 148    29-01-2025 18:12:00

### நெடுவினா

1. சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

2. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

3. தமிழ்மொழிக்கு அயல்நாட்டவர்கள் ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்துரைக்க.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள், நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார். பெரும்புலவர்கள், சுவாமிகளின் பாடல் திறத்தையும் உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். இளமையில் புலவரேறு பழனி தண்டபாணி சுவாமிகளைத் தேடிச் சென்று, தமிழறிவைப் பெற்ற இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றல் பெற்று வெண்பா, கலித்துறை இசைப்பாடல்களை இயற்றத் தொடங்கிவிட்டார். இரணியன், இராவணன், எமதருமன் ஆகிய வேடங்களில் நடித்துப் புகழடைந்தபோது அவருடைய வயது 24. வண்ணம், சந்தம் பாடுவதில் வல்லவராயிருந்த சுவாமிகளின் 'சந்தக்குழிப்புகளின்' சொற்சிலம்பங்களைக் கண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.



சங்கரதாசு சுவாமிகள்
(1867 – 1922)

சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்தக் குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி. கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். மேடை நாடகம் தரம் குன்றிய நிலையில், மதுரை வந்த சுவாமிகள், 1918இல், 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள். நாடகத்தின்மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத் துறைக் கலைஞர்கள், 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

1. தமிழ்ச்சொல்லாக்குக – சன்மார்க்கம், வித்துவ பால சபை

2. நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் <u>திகழ்ந்தவர்</u> சங்கரதாசு சுவாமிகள் – அடிக்கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.

3. ஈட்டினார் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.



XI_Std_Tamil_Unit_6.indd 149 29-01-2025 18:12:00

4. தன்னன்ன தானேன தன்னானே - இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.
(எ.கா.) இந்திய நாட்டினில் வாழ்வதையே
இன்பமாய்க் கருதிடல் வேண்டுமப்பா...

5. தமிழ் நாடகத் தலைமையாசிரியர் - சிறப்புப்பெயருக்கான காரணத்தை அளிக்க.

### தமிழாக்கம் தருக.

Balu: Hi, Good evening.

Velu: Hi Balu, Good evening.

Balu: Yesterday you were watching the Republic day function the whole day.

Velu: Yes, I was touched by one award ceremony.

Balu: Which award?

Velu: Param vir Chakra award, highest award for army personnel.

Balu: Why were you touched?

Velu: Most of the awards were received by the wives of soldiers posthumously.

Balu: Why? What do you mean by posthumous?

Velu: it means 'after death'. Many soldiers had laid down their lives protecting the border of our Motherland. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.

### மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

சான்று: எதிர்நீச்சல்

வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறவேண்டும்.

சொந்தக்காலில் நிற்றல்
தாளம் போடுதல்
மதில்மேல்பூனை
நிறைகுடம்
கைதூக்கிவிடுதல்
கண்ணாயிருத்தல்
அவசரக்குடுக்கை
முதலைக்கண்ணீர்
கானல்நீர்.

### இலக்கியநயம் பாராட்டுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

– நாமக்கல் கவிஞர்.

### படித்துச் சுவைக்க

பெட்டிக்கு வந்த பின்
எல்லாக் காய்களும் சமம்தான்
சதுரங்கக் காய்கள்.

– இஸ்ஸா

### வரைபடம் கொண்டு விவரிக்க.

நீங்கள் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து நகலகத்திற்கு வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழிகாட்டுங்கள்...



XI_Std_Tamil_Unit_6.indd 150 29-01-2025 18:12:00




## மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக.



### சொல்லெடுத்துத் தொடர் அமைக்க.

கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்தும் தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடர்கள் அமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்)

(எ–கா.) மாணவர்கள் வகுப்பறையினுள் நுண்கலைகளையும் கற்க வேண்டும்.



படித்துப்பார்த்துப் படைக்க.

| | | |
|---|---|---|
| *பத்தாவது தடவையாக<br>விழுந்தவனுக்கு<br>முத்தமிட்டுச் சொன்னது பூமி<br>'ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!'*<br>– ஈரோடு தமிழன்பன் | *எப்போதும் மத்தாப்பு<br>கொளுத்தி விளையாடுகிறது<br>மலையருவி*<br>– கழனியூரன் | ______<br>______<br>______ |

– ஹைக்கூ என்பதற்குத் தமிழில் 'துளிப்பா' என்று பொருளுண்டு தெரியுமா?

– கவிதைகளுக்குப் பொருத்தமாகத் தலைப்பிடுக.



## நிற்க அதற்குத் தக

*மனித இனம் கூடிவாழும் இயல்புடையது. நாம் அன்றாடம் பலருடன் பழகக்கூடிய இன்றைய சூழலில் ஏற்படக்கூடிய சிறிய சிக்கல்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?*

| சிக்கல் | தீர்வு |
|---|---|
| பக்கத்து வீட்டுக்காரர், மிகச் சத்தமாகப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கின்றார் | |
| நீங்கள் மட்டைப்பந்து போட்டியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் நேரத்தில் உங்கள் தங்கை தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். | |
| உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் உங்கள் வகுப்புத் தோழர், உங்கள் மேசை மீது உணவினை இறைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். | |
| நீங்கள் அடுத்தநாள் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் வகுப்புத் தோழர், பாடத்தில் ஏற்பட்ட ஐயம் தொடர்பாக உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கிறார். | |

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

Strategies – உத்திகள்

Equality – சமத்துவம்

Trade Union – தொழிற்சங்கம்

Pseudonym – புனைபெயர்

Multiple Personality – பன்முக ஆளுமை

### அறிவை விரிவு செய்

- ஜீவா – வாழ்க்கை வரலாறு – கே. பால தண்டாயுதம்.
- சொல்லாக்கம் அமைப்பும் ஆய்வும் – இலக்குவனார் மறைமலை



XI_Std_Tamil_Unit_6.indd 152 29-01-2025 18:12:01

### வாழ்த்துரை

நூல் எழுதியவரின் பெருமைகளையும் தமக்கும் நூலாசிரியருக்கும் இடையிலான தொடர்புகளையும் கூறி வாழ்த்துவதோடு நூலின் கருத்தையும் வாழ்த்தி அதைப் பலரும் படித்துப் பின்பற்ற வேண்டுமென வாழ்த்தி எழுதப்படுவது வாழ்த்துரை ஆகும்.

### அணிந்துரை

நூலாசிரியர் தம் நூலில் சொல்ல வந்த கருத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்? கருத்தை வெளிப்படுத்த அவர் எடுத்துக்கொண்டுள்ள உத்தி என்ன? இலக்கிய வடிவம் மற்றும் மொழிநடை எத்தகையது? படிப்பவரை எதை நோக்கித் தூண்டுகிறார்? தம் நூலில் புதிய கோட்பாடாக எதனை உருவாக்கியிருக்கிறார்? நூல் எழுதியதற்கான நோக்கத்தினை நிறைவு செய்துள்ளாரா? என்பனவற்றை வெளிப்படுத்த எழுதப்படுவது அணிந்துரை.

### முன்னுரை

நூலின் கருத்து, அது பற்றிய விளக்கம் குறித்து நூலின் ஆசிரியரால் எழுதப்படுவது முன்னுரை எனப்படும். நூலின் ஆசிரியர் தாம் எழுத எடுத்துக்கொண்ட கருத்தோடு, அதன் சமூகத் தேவையை விளக்குவார்; நூல் எழுதுவதற்கான தூண்டுதல் பற்றியும் குறிப்பிடுவார்; தமக்கும் முன்பு யாரெல்லாம் இது பற்றி எழுதினார்கள் என்பதையும் தாம் அதைவிட வேறுபட்டோ, மேம்பட்டோ எழுதுவது பற்றியும் கூறுவார்; நூல் எழுத மேற்கொண்ட செயல்பாடுகளையும் அதற்கு உதவியவர்கள் (பதிப்பித்தவர், அணிந்துரை மற்றும் வாழ்த்துரை வழங்கியவர், தட்டச்சு செய்தவர் உட்பட) பற்றியும் அதில் குறிப்பிடுவார். அவர்களுக்கு நன்றியும் தெரிவிப்பார்.

### நூல் திறனாய்வு (அ) விமரிசனம்

திறனாய்வு என்பது ஆசிரியரின் நோக்கம், படைப்பு, பிற படைப்புகளிடையே இவருக்கான இடம், படைப்பில் இவர் வகுத்துக் கொண்ட புதிய நெறி, நூலாசிரியர் பெற்றுள்ள தாக்கம், இவரது படைப்பு சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? நூலின் / படைப்பின் பயன் என்னவாக இருக்கும் என்ற நோக்கில் நூலினைக் கூர்ந்து நோக்கி எழுதப்படுவது நூல் திறனாய்வு (அ) விமரிசனம் எனப்படும். ஒரு திறனாய்வாளர், தம் கருத்திலிருந்தும் படிப்பறிவிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் இதை எழுதலாம்.

### நூல் மதிப்புரை

நூல் மதிப்புரை என்பது நூல் குறிப்பிடும் கருத்தோடு அது பற்றி வழங்கும் பல்வேறு செய்திகளை ஒப்பிட்டு, நூலாசிரியர் தம் நூலில் அக்கருத்தைத் தேர்ச்சிபட எவ்விதம் வெளிப்படுத்துகிறார் என்பதைக் குறிப்பிடுவதாகும். குறிப்பாக, நூல் மதிப்புரை என்பது நூல் பற்றிய விவரங்களை எடுத்துக்கூறி படிக்கத் தூண்டுவதாக அமைய வேண்டும்.

## நூல் மதிப்புரை அன்றும் இன்றும்

### பாஞ்சாலி சபதம்

இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம், பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றப் பெற்றது.

தர்மங்கள் நிறைந்த, ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொறாமையே உருவாக வந்த துரியோதனன் தனது தாய் மாமனாகிய சகுனியைக் கொண்டு பஞ்ச பாண்டவர்களில் மூத்தோனாகிய தர்மபுத்திரருடன், அவருடைய ராஜ்யத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு அவரையும் அவரது சகோதரர்களையும் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், சூதாடும்படி செய்விக்கின்ற பாகத்தை பிரஹ்ம ஸ்ரீ பாரதி அவர்கள் செய்யுள் எழுதியுள்ளார்.

பாரதியவர்களின் தமிழ் நடையைப் பற்றியும் செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம். ஆசிரியர் இப்புஸ்தகத்தின் ஒரு பிரதியை சென்னை கவர்னர் அவர்களுக்கு அனுப்பியிருந்ததாகவும் அவர் அதை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியருக்குக் கடிதம் எழுதியதாகவும் கேள்விப்படுகிறோம்.

பாஷாபிமானிகளும் தேசாபிமானிகளும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது. இதன் விலை அணா எட்டு, தபாற் செலவு வேறு. வேண்டியவர்கள் நமது ஆபீசுக்கேனும் அல்லது பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்கள், புதுச்சேரி யென்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

*'ஞான பாநு' மாதப்பத்திரிகை,*
*ஆசிரியர் எஸ். சுப்பிரமணிய சிவா,*
*சென்னை, நவம்பர் 1913.*

### நூல் மதிப்புரை

இருபதாம் நூற்றாண்டுச் சூழலில்தான் கம்பரின் இராமாயணம் இலக்கியம் எனத் தகுதி பெற்றதோடு ஆய்வுக்குரிய பெருநூலாகவும் கருதப்படுகிறது. இலக்கிய நோக்கில் கம்பர் நூல், எவ்வாறு காவியம் எனச் சிறக்கிறது? என்பதைப் பேராசிரியர் அ. பாண்டுரங்கன் மிக விரிவாக ஆராய்கிறார். வால்மீகியிலிருந்து கம்பர் வேறுபடும் இடங்களை விரிவாகத் தொகுத்து உரைக்கிறார். தண்டியின் பாவிகம் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இக்காப்பியத்தின் உள்ளுறையை, கவிக்குரலை நுட்பமாக எடுத்துரைக்கிறார். அரிஸ்டாட்டில் முதல் ஆபர் கிராம்பி வரையிலான காவியம் பற்றிய மேற்கத்தியர் கோட்பாடுகளையும் தண்டி முதல் வ.சுப. மாணிக்கம் வரையிலான நம்மவர்களின் கோட்பாடுகளையும் தக்க முறையில் பயன்படுத்திக் கம்பர் காவியத்தின் கட்டமைப்பு, பாத்திரப் படைப்பு, கவிக்குரல் முதலியவற்றைத் தெளிவுபடுத்துகிறார். இம்முறையில் சிறப்பான ஆய்வுநூல் என இந்நூலை மதிப்பிடலாம்.

கவித்துவ இயக்கத்தினுள் பக்தியும், புராணிகமும் பகுதிகளாவதைத் தவிர்க்க இயலுமா என்ற கேள்வியோடு கம்பர் காவிய ஆய்வை ஆழமாகத் தொடர்வதற்கு இடம் இருக்கிறது. வரலாற்றுச் சூழலிலிருந்து, இலக்கிய இரசனை ஆய்வை விலக்கிச் செய்ய முடியுமா என்பதும் கேள்வி. இந்தத் திசைகளில், கம்பர் காவிய ஆய்வை ஆசிரியர் தொடரவேண்டும்.

*'நிகழ்' – நூல் திறனாய்வுகள்*
*100; ஞானி, அறிவன்;*
*டிசம்பர் 2001*

# திருக்குறள்

எளிய உரை – டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

## 13. அடக்கம் உடைமை

1. *அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
   *ஆரிருள் உய்த்து விடும்.*
2. *காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்*
   *அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு.*
3. *செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து*
   *ஆற்றின் அடங்கப் பெறின்.*
4. *நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
   *மலையினும் மாணப் பெரிது.*
5. *எல்லார்க்கும் நன்றுஆம் பணிதல் அவருள்ளும்*
   *செல்வர்க்கே செல்வம் தகைத்து.*
6. *ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்*
   *எழுமையும் ஏமாப்பு உடைத்து.*
7. *யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
   *சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.*
8. *ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்*
   *நன்றுஆகா தாகி விடும்.*
9. *தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
   *நாவினால் சுட்ட வடு.*
10. *கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி*
    *அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.*

## 13. அடக்கம் உடைமை – எளிய உரை

1. அடக்கம் வீரருள் ஒருவனாக்கும்; அடங்காமை
   பேதைக் கூட்டத்தில் சேர்க்கும்.
2. அடக்கத்தை ஒரு குறிக்கோளாகப் போற்றுக;
   உயிர்க்கு அதனினும் முன்னேற்றம் இல்லை.
3. அறிவன அறிந்து முறையோடு அடங்கின்
   அதனை உலகம் தெரிந்து சிறப்பிக்கும்.
4. தரத்திலே குறையாது அடங்கியவன் தோற்றம்
   மலையினும் பார்வைக்குச் சிறந்தது.
5. எல்லார்க்கும் பணிவுடைமை வேண்டும்; அது
   செல்வர்க்கு இருப்பது இன்னும் செல்வமாம்.
6. ஒருபிறப்பில் ஆமைபோல் ஐம்பொறியும் அடக்கின்
   எழு பிறப்பிலும் சேமம் உண்டு.
7. எவற்றை அடக்காவிடினும் நாவை அடக்குக;
   அடக்காவிடின் சொற்குற்றப்பட்டு வருந்துவாய்.
8. ஒரு சொல்லிலேனும் தீமை நேருமாயின்
   எல்லா நன்மையும் கெடுதலாகி விடும்.
9. தீச்சுட்ட புண்ணோ உள்ளே ஆறிப்போம்;
   சுடுசொல்லோ வடுவாகி என்றும் ஆறாது.
10. உள்ளக் கொதிப்பை அடக்கிய வல்லவனைக்
    காண்பதற்கு அறம் காத்துக் கிடக்கும்.

## 22. ஒப்புரவறிதல்

1. *கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு*
   *என்ஆற்றும் கொல்லோ உலகு.*
2. *தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு*
   *வேளாண்மை செய்தல் பொருட்டு.*
3. *புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே*
   *ஒப்புரவின் நல்ல பிற.*
4. *ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
   *செத்தாருள் வைக்கப் படும்.*
5. *ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
   *பேரறி வாளன் திரு.*
6. *பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
   *நயன்உடை யான்கண் படின்.*
7. *மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
   *பெருந்தகை யான்கண் படின்.*
8. *இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்*
   *கடன்அறி காட்சி யவர்.*
9. *நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர*
   *செய்யாது அமைகலா வாறு.*
10. *ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃதொருவன்*
    *விற்றுக்கோள் தக்கது உடைத்து.*

## 22. ஒப்புரவறிதல் – எளிய உரை

1. கடமை கைம்மாறு எதிர்பார்ப்பதில்லை;
   உலகம் மழைக்கு என்ன செய்ய முடியும்?
2. மிக முயன்று சேர்த்த பொருளெல்லாம்
   உதவிபெறத் தக்கவர்க்கு உதவிசெய்தற்கே.
3. தேவர் உலகத்திலும் நம் உலகத்திலும்
   பொது நன்மையினும் சிறந்த செயல் இல்லை.
4. ஒத்த பொதுநலத்தை அறிந்தவனே வாழ்பவன்;
   அறியாதவன் செத்தவரைச் சேர்ந்தவன்.
5. நலம் விரும்பும் பேரறிஞனது செல்வம்
   ஊருணியில் நிறைந்த நீர் போலாகும்.
6. உலக அன்பு உடையவனிடம் செல்வம் இருப்பது
   பழமரம் ஊர்நடுவே பழுத்தது போன்றது.
7. பேரருளாளன் இடத்துச் செல்வம் இருப்பது
   யார்க்கும் கிடைக்கும் மருந்துமரம்போலும்.
8. ஊர்க்கடமையை அறிந்த அறிவுடையவர்
   வறுமைக்காலத்தும் பொதுநலம் குறையார்.
9. செய்யவேண்டியன செய்ய இயலாமையே
   நல்ல அன்பனுக்கு வறுமையாகும்.
10. பொது நன்மையினால் கேடு வருமென்றால்
    அக்கேடு விலைபோகும் மதிப்புடையது.



XI_Std_Tamil_Unit_6.indd 155 29-01-2025 18:12:01

## 24. புகழ்

1. *ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது*
   *ஊதியம் இல்லை உயிர்க்கு.*
2. *உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று*
   *ஈவார்மேல் நிற்கும் புகழ்.*
3. *ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
   *பொன்றாது நிற்பதுஒன்று இல்.*
4. *நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்*
   *போற்றாது புத்தேள் உலகு.*
5. *நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்*
   *வித்தகர்க்கு அல்லால் அரிது.*
6. *தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்*
   *தோன்றலின் தோன்றாமை நன்று.*
7. *புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை*
   *இகழ்வாரை நோவது எவன்?*
8. *வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்*
   *எச்சம் பெறாஅ விடின்.*
9. *வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா*
   *யாக்கை பொறுத்த நிலம்.*
10. *வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய*
    *வாழ்வாரே வாழா தவர்.*

## 24. புகழ் – எளிய உரை

1. வறியார்க்கு ஈக: புகழோடு வாழ்க;
   அதுவே உயிர்க்குச் சிறந்த ஊதியம்.
2. உலகில் பாராட்டுவார் பாராட்டுவன எல்லாம்
   வறியவர்க்கு ஈந்த வள்ளல்களின் புகழ்களே.
3. நிலையாத உலகத்து உயர்ந்த புகழ் தவிர
   எதுவும் அழியாது நிலைப்பதில்லை.
4. உலகில் நெடும்புகழ் ஈட்டிய மக்களையே
   வானுலகம் போற்றும்; தேவரைப் போற்றாது.
5. புகழின் பொருட்டு அழிதலும் சாதலும்
   அறிவுடையவர்க்கே இயலும்.
6. அவைக்கண் புகழ் நோக்கொடு தோன்றுக:
   அந்நோக்கம் இலாதார் தோன்றாமை நல்லது.
7. புகழில்லார் தம்மேல் வருத்தப்படாது தம்மை
   இகழ்வார்மேல் வருத்தப்படுவது ஏன்?
8. பின்நிலைக்கும் புகழை ஒருவன் பெறாவிடின்
   அவன்பிறப்பு உலகிற்கே ஒரு பழி.
9. புகழில்லா உடம்பைச் சுமப்பின்
   நல்ல நிலங்கூட வளங் குறையும்.
10. வசையின்றி வாழ்பவரே வாழ்பவர்;
    இசையின்றி இருப்பவரே இறந்தவர்.

## 27. தவம்

1. *உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை*
   *அற்றே தவத்திற்கு உரு.*
2. *தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை*
   *அஃதிலார் மேற்கொள் வது.*
3. *துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்*
   *மற்றை யவர்கள் தவம்?*
4. *ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்*
   *எண்ணின் தவத்தான் வரும்.*
5. *வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
   *ஈண்டு முயலப் படும்.*
6. *தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்*
   *அவஞ்செய்வார் ஆசையுள் பட்டு.*
7. *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
   *சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.*
8. *தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய*
   *மன்னுயிர் எல்லாம் தொழும்.*
9. *கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்*
   *ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.*
10. *இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்*
    *சிலர்பலர் நோலா தவர்.*

## 27. தவம் – எளிய உரை

1. தவத்தின் வடிவு தன்துன்பத்தைப் பொறுத்தல்,
   எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை.
2. தவக்கோலமும் தவமுடையவர்க்கே சிறப்பு:
   அதனைத் தவமிலாதார் கொள்வது பழிப்பு.
3. இல்லறத்தார் ஏன் தவஞ்செய்ய மறந்தனர்?
   துறவிக்கு உதவ வேண்டும் என்பதற்காகவா?
4. பகைவரை அழிக்கலாம், நண்பரை ஆக்கலாம்;
   இந்த ஆற்றல் நினைப்பின் தவத்தால் வரும்.
5. வேண்டுவன வேண்டியபடி பெறலாம்; ஆதலின்
   உரிய தவத்தை உடனே முயலுக.
6. தவஞ்செய்பவரே தங்காரியம் செய்பவர்;
   பிறர் ஆசையால் வீண்காரியம் செய்பவர்.
7. காய்ச்சக் காய்ச்சப் பொன் ஒளிமிகும்; துறவிக்குத்
   துன்பம் தாக்கத் தாக்க மெய்யறிவு மிகும்.
8. தன்னுயிர், தன்முனைப்பு இல்லாதவனை
   உலகத்து உயிரெல்லாம் வணங்கும்.
9. தவத்தின் ஆற்றல் கைகூடியவர்கட்கு
   யமனைத் தாண்டுதலும் இயலும்.
10. உலகில் வறியவர் பலர் ஏன்?
    முயலாதார் பலர்: முயல்வார் சிலர்.



XI_Std_Tamil_Unit_6.indd 156 29-01-2025 18:12:01

## 34. நிலையாமை

1. *நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
   *புல்லறி வாண்மை கடை.*
2. *கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்*
   *போக்கும் அதுவிளிந் தற்று.*
3. *அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
   *அற்குப ஆங்கே செயல்.*
4. *நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்*
   *வாள்அது உணர்வார்ப் பெறின்.*
5. *நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
   *மேற்சென்று செய்யப் படும்.*
6. *நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்*
   *பெருமை உடைத்துஇவ் வுலகு.*
7. *ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப*
   *கோடியும் அல்ல பல.*
8. *குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே*
   *உடம்பொடு உயிரிடை நட்பு.*
9. *உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
   *விழிப்பது போலும் பிறப்பு.*
10. *புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்*
    *துச்சில் இருந்த உயிர்க்கு?*

## 34. நிலையாமை – எளிய உரை

1. நிலையாத பொருள்களை நிலைக்கும் என்று கருதும் அறிவு மிகவும் கடையானது.
2. பெருஞ் செல்வம் வந்துபோவது நாடகத்துக்கு மக்கள் வருவது போவது போன்றது.
3. செல்வம் நிலைப்படாதது; அது கிடைத்தால் நிலைத்தவற்றை உடனே செய்து கொள்க.
4. காலம் உயிரறுக்கும் வாள்: நாளன்று: உணர்வார்க்கு உண்மை விளங்கும்.
5. நாச்சுருண்டு விக்கல் வருமுன்னே அறத்தைத் தானே முற்பட்டுச் செய்க.
6. நேற்று இருந்தான் இன்று இறந்தான் என்பதே இவ்வுலகத்தின் பேரியல்பு.
7. மறுகணம் இருப்பதை அறிய மாட்டாதவர் கட்டுகின்ற கோட்டைகள் எவ்வளவோ கோடி.
8. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு கூடுவிட்டுப் பறவை ஓடுவது போன்றது.
9. தூங்குவது போன்றது சாவு; தூங்கி விழிப்பது போன்றது பிறப்பு.
10. உடலில் ஒட்டுக் குடியிருக்கும் உயிர்க்கு நிலையான ஒரு வீடு கிடைக்க வில்லையோ?

## 35. துறவு

1. *யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
   *அதனின் அதனின் இலன்.*
2. *வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்*
   *ஈண்டுஇயற் பால பல.*
3. *அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
   *வேண்டிய எல்லாம் ஒருங்கு.*
4. *இயல்பாகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை*
   *மயலாகும் மற்றும் பெயர்த்து.*
5. *மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்*
   *உற்றார்க்கு உடம்பும் மிகை?*
6. *யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு*
   *உயர்ந்த உலகம் புகும்.*
7. *பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்*
   *பற்றி விடாஅ தவர்க்கு.*
8. *தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
   *வலைப்பட்டார் மற்றை யவர்.*
9. *பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று*
   *நிலையாமை காணப் படும்.*
10. *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
    *பற்றுக பற்று விடற்கு.*

## 35. துறவு – எளிய உரை

1. எந்தெந்தப் பொருளைத் துறந்தோமோ அந்தந்தப் பொருளால் துன்பம் இல்லை.
2. பொருள் உள்ளபோதே துறக்க: துறந்தால் இப்பிறப்பில் வரும் நலன்கள் பல.
3. ஐம்புல உணர்ச்சிகளை அடக்க வேண்டும்; எல்லாத் தேவையையும் விடுக்க வேண்டும்.
4. யாதும் இல்லாமையே தவத்தின் இயல்பு: ஏதும் இருப்பது ஆசையாகி விடும்.
5. பிறப்பற முயல்வார்க்கு உடலும் கூடாதெனின் பிறதொடர்பு பற்றி என்ன சொல்வது?
6. யான் எனது என்னும் கருவமற்றவன் தேவர்க்கும் எட்டா உயர்நிலையை அடைவான்.
7. பற்றுக்களை விடாது பிடித்துக் கொள்பவரைத் துன்பங்களும் விடாது பிடித்துக் கொள்ளும்.
8. முற்றத் துறந்தவரே வீடடைவார்; அங்ஙனம் துறவாதவர் பிறப்புவலையில் மயங்கி வீழ்வார்.
9. பற்று விட்டபோதுதான் பிறப்பு விடும்; விடாதபோது இறப்பும் பிறப்பும் வரும்.
10. பற்றில்லாத இறைவனைப் பிடித்துக் கொள்க: அப்பிடிப்பே உலகப்பற்றை விடுதற்கு வழி.

## 37. அவா அறுத்தல்

1. *அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்*
   *தவாஅப் பிறப்புஈனும் வித்து.*
2. *வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது*
   *வேண்டாமை வேண்ட வரும்.*
3. *வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
   *யாண்டும் அஃதுஒப்பது இல்.*
4. *தூஉய்மை என்பது அவாவின்மை மற்றுஅது*
   *வாஅய்மை வேண்ட வரும்.*
5. *அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்*
   *அற்றாக அற்றது இலர்.*
6. *அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை*
   *வஞ்சிப்பது ஓரும் அவா.*
7. *அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை*
   *தான்வேண்டும் ஆற்றான் வரும்.*
8. *அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அஃ து உண்டேல்*
   *தவாஅது மேன்மேல் வரும்.*
9. *இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்*
   *துன்பத்துள் துன்பம் கெடின்.*
10. *ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
    *பேரா இயற்கை தரும்.*

## 37. அவா அறுத்தல் – எளிய உரை

1. ஆசைதான் எவ்வுயிர்க்கும் என்றும்
   நெடும் பிறவி தரும் வித்து என்பர்.
2. ஒன்று விரும்பின் பிறவாமையை விரும்புக:
   விரும்பாமையை விரும்பின் அது கைகூடும்.
3. ஆசையின்மையே சிறந்த செல்வம்:
   அதுபோன்ற செல்வம் எங்கும் இல்லை.
4. மனத்தூய்மை என்பது ஆசையின்மையே:
   அத்தன்மை வாய்மையினால் வரும்.
5. ஆசைவிட்டவரே பற்று விட்டவர் ஆவார்;
   மற்றவர்கள் முடிவாகப் பற்று விட்டதில்லை.
6. ஆசை யாரையும் ஏய்த்து விடும் ஆதலின்
   அதற்கு அஞ்சி நடப்பதே அறம்.
7. ஆசையை முழுதும் அறுத்து விட்டால்
   நல்வினை நாம் விரும்பியபடி வரும்.
8. ஆசையில்லார்க்குத் துன்பம் இல்லை;
   அது உடையார்க்குத் துன்பம் வளரும்.
9. ஆசையாகிய பெருந்துன்பம் அகன்று விட்டால்
   இன்பம் வந்துகொண்டே இருக்கும்.
10. என்றும் நிரம்பாத ஆசையை நீக்கிவிடின்
    நீங்காத இன்பம் உடனே கிடைக்கும்.

## 48. வலி அறிதல்

1. *வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
   *துணைவலியும் தூக்கிச் செயல்.*
2. *ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்*
   *செல்வார்க்குச் செல்லாதது இல்.*
3. *உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி*
   *இடைக்கண் முரிந்தார் பலர்.*
4. *அமைந்தாங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை*
   *வியந்தான் விரைந்து கெடும்.*
5. *பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்*
   *சால மிகுத்துப் பெயின்.*
6. *நுனிக்கொம்பர் ஏறினார் அஃதுஇறந்து ஊக்கின்*
   *உயிர்க்குஇறுதி ஆகி விடும்.*
7. *ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்*
   *போற்றி வழங்கும் நெறி.*
8. *ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை*
   *போகுஆறு அகலாக் கடை.*
9. *அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
   *இல்லாகித் தோன்றாக் கெடும்.*
10. *உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை*
    *வளவரை வல்லைக் கெடும்.*

## 48. வலி அறிதல் – எளிய உரை

1. செயல், தான், பகைவன், துணைவன் என்ற
   எல்லா வன்மைகளையும் சீர்தூக்கிச் செய்க.
2. இயலும் செயலையும் அறிவையும் தெரிந்து
   நடப்பார்க்கு நடவாதது இல்லை.
3. ஆற்றல் அறியாது ஆர்வத்தால் செய்து
   இடையிலே நொடித்தவர் மிகப் பலர்.
4. அமைத்தபடி நடவாதவன் அளவறியாதவன்
   தன்னைப் புகழ்ந்தவன் சடுதியிற் கெடுவான்.
5. மயிலிறகையும் அளவுக்கு மிஞ்சி ஏற்றினால்
   பாரவண்டியும் அச்சு முறிந்து விடும்.
6. நுனிக்கொம்பில் ஏறியவர் மேலும் ஏறின்
   உயிர்க்கு முடிவுகாலம் வந்துவிடும்.
7. முறைப்படி பொருள்நிலை அறிந்து கொடுக்க:
   அதுவே மேன்மேலும் கொடுக்கும் நெறியாம்.
8. வருவாய் அளவாக இருப்பினும் கேடில்லை:
   செலவு மட்டும் விரிதல் கூடாது.
9. பொருள்நிலை அறிந்து வாழாதவன் வாழ்க்கை
   இருப்பதுபோல ஒன்றும் இராது.
10. உள்ள நிலை பாராது ஊர் நன்மை செய்தாலும்
    செல்வநிலை விரைவில் சீரழியும்.



XI_Std_Tamil_Unit_6.indd 158 29-01-2025 18:12:01

## 49. காலமறிதல்

1. *பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது.*

2. *பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்*
*தீராமை ஆர்க்கும் கயிறு.*

3. *அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்.*

4. *ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின்.*

5. *காலம் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலம் கருது பவர்.*

6. *ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்*
*தாக்கற்குப் பேரும் தகைத்து.*

7. *பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து*
*உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.*

8. *செறுநரைக் காணின் சுமக்க இறுவரை*
*காணின் கிழக்காம் தலை.*

9. *எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற்கு அரிய செயல்.*

10. *கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்*
*குத்துஒக்க சீர்த்த இடத்து.*

## 49. காலமறிதல் – எளிய உரை

1. காக்கை கோட்டானைப் பகலில் வென்றுவிடும்;
வேந்தர் வெல்லும் காலம் பார்க்க வேண்டும்.

2. காலம்பார்த்து ஏற்ப நடப்பது நிலையாகச்
செல்வத்தைக் கட்டும் கயிறாகும்.

3. ஆற்றலோடு காலமும் அறிந்து செய்யின்
செய்தற்கு அரியதென ஏதும் உண்டோ?

4. காலமும் இடமும் கணித்துச் செய்யின்
உலகமே வேண்டினும் கிடைக்கும்.

5. ஞாலம் முழுதும் ஆளக் கருதுபவர்
காலம் பார்த்துக் கலங்காது இருப்பர்.

6. ஊக்கம் உடையவன் ஒடுங்கி இருப்பது
சண்டைக்கடா பின்வாங்கும் குறிப்பாகும்.

7. அறிவுடையார் வெளிப்படக் கொதிப்படையார்:
காலம் பார்த்து உட்கொதிப்பு அடைவர்.

8. பகைவரைக் காணும்போது பணிக;
காலம் வந்தபோது அவர் கவிழ்வர்.

9. கிடைத்தற்கு அரியது கிடைத்தால் உடனே
செய்தற்கு அரியதைச் செய்து கொள்க.

10. ஒடுங்கிய காலத்துக் கொக்குப் போல்க:
சிறந்த காலத்து அதன் குத்துப் போல்க.

## 54. பொச்சாவாமை

1. *இறந்த வெகுளியின் தீதே சிறந்த*
*உவகை மகிழ்ச்சியின் சோர்வு.*

2. *பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை*
*நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.*

3. *பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து*
*எப்பால்நூ லோர்க்கும் துணிவு.*

4. *அச்ச முடையார்க்கு அரண்இல்லை ஆங்கில்லை*
*பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.*

5. *முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை*
*பின்ஊறு இரங்கி விடும்.*

6. *இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை*
*வாயின் அதுஒப்பது இல்.*

7. *அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்*
*கருவியால் போற்றிச் செயின்.*

8. *புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது*
*இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.*

9. *இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.*

10. *உள்ளிய எய்தல் எளிதுமன் மற்றும்தான்*
*உள்ளியது உள்ளப் பெறின்.*

## 54. பொச்சாவாமை – எளிய உரை

1. பெரிய மகிழ்ச்சிக்கிடையே காரியத்தை மறத்தல்
மிகுந்த சினத்தைக் காட்டிலும் தீது.

2. நாளும் வறுமை அறிவை அழிக்கும்;
நாளும் மறதி புகழை அழிக்கும்.

3. மறதி உடையார்க்குப் புகழ்வாழ்வு இல்லை;
இது எல்லா ஆசிரியர்க்கும் முடிந்த முடிவு.

4. மறதிவாய்ப் பட்டார்க்கு எந்நலமும் இல்லை;
அஞ்சிக் கிடப்பார்க்கு அரண் உண்டோ?

5. நினைவோடு முன்னே தடுக்காது மறந்தவன்
தன்பிழைக்குப் பின்னே வருந்தி இரங்குவான்.

6. மறவாத தன்மையைத் தவறாது பெற்றால்
அதுபோன்ற ஆற்றல் வேறில்லை.

7. மறவாத கருவி கொண்டு விழிப்போடு செய்தால்
முடியாத காரியம் என்பது யாதும் இல்லை.

8. புகழ்தரும் வினைகளை மதித்துச் செய்க:
செய்யாது விட்டவர்க்கு என்றும் வாழ்வில்லை.

9. நீ மகிழ்ச்சியிலே திளைத்திருக்கும் போது
அங்ஙனம் இருந்து கெட்டாரை எண்ணிப்பார்.

10. எண்ணியதை மறவாதே எண்ண முடிந்தால்
எண்ணியதை எளிதில் எய்திவிடலாம்.



XI_Std_Tamil_Unit_6.indd 159 29-01-2025 18:12:01

## 71. குறிப்பறிதல்

1. *கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையக்கு அணி.*
2. *ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்*
*தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.*
3. *குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்தும் கொளல்.*
4. *குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை*
*உறுப்புஓர் அனையரால் வேறு.*
5. *குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்*
*என்ன பயத்தவோ கண்.*
6. *அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கடுத்தது காட்டும் முகம்.*
7. *முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்.*
8. *முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி*
*உற்றது உணர்வார்ப் பெறின்.*
9. *பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்*
*வகைமை உணர்வார்ப் பெறின்.*
10. *நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணும்கால்*
*கண்அல்லது இல்லை பிற.*

## 71. குறிப்பறிதல் – எளிய உரை

1. கூறாமலே முகம்பார்த்துக் குறிப்பு அறிபவன்
உலகத்துக்கு என்றும் ஓர் அணியாவான்.
2. தெளிவாக உள்ளோட்டத்தை உணர்பவனைத்
தெய்வத்துக்கு நிகராக மதிக்க.
3. முகச்சாடையினால் உள்ளத்தை உணர்பவரை
எது கொடுத்தும் அவையில் அமர்த்திக்கொள்க.
4. குறிப்பைக் கூறாமலே அறிய வல்லவர்க்கும்
அறியாதவர்க்கும் உடம்பளவில் ஒற்றுமை.
5. முகங்கண்டு உள்ளம் காணவில்லை யாயின்
கண் என்ற உறுப்பின் பயன் என்ன?
6. முன்னுள்ள பொருளைக் கண்ணாடி காட்டும்;
உள் மிக்க உணர்ச்சியை முகம் காட்டும்.
7. மகிழ்வையும் வெறுப்பையும் முகம் முந்திக்காட்டும்;
முகம்போல் அறியுந்திறம் பிறிதிற்கு இல்லை.
8. நிகழ்வதை உள்ளத்தால் உணர்வார்க்கு முன்னே
முகம் பார்த்து நின்றால் போதுமே.
9. பகையா நட்பா என்பதைக் கண் சொல்லும்;
கண்ணின் கூறு தெரிந்தவர்கட்கு.
10. கூரிய அறிவுடையோம் என்பவர்க்கு
அளவுகோலாவது பிறர்கண்ணே வேறில்லை.

## 77. படைமாட்சி

1. *உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை.*
2. *உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்*
*தொல்படைக்கு அல்லால் அரிது.*
3. *ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை*
*நாகம் உயிர்ப்பக் கெடும்.*
4. *அழிவுஇன்று அறைபோகாது ஆகி வழிவந்த*
*வன்க ணதுவே படை.*
5. *கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்*
*ஆற்ற லதுவே படை.*
6. *மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு.*
7. *தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த*
*போர்தாங்கும் தன்மை அறிந்து.*
8. *அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை*
*படைத்தகையால் பாடு பெறும்.*
9. *சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்*
*இல்லாயின் வெல்லும் படை.*
10. *நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை*
*தலைமக்கள் இல்வழி இல்.*

## 77. படைமாட்சி – எளிய உரை

1. போருடல் பெற்றுப் புண்ணுக்கு அஞ்சாத
வெற்றிப்படை வேந்தன் செல்வத்திற் சிறந்தது.
2. கெடுதலான இடத்து அஞ்சாத உறதி
தூரத்தில் பழம்படைக்கே உண்டு.
3. எலிக்கூட்டம் கடல்போல் கத்தினால் என்ன?
ஒருபாம்பு சீறிய அளவில் ஓடிப்போமே.
4. அழியாதும் வஞ்சனைக்கு ஆளாகாதும்
வழிவழி வீரமுடையதுவே படை.
5. எமனே சினந்து வந்தாலும் ஒன்றுகூடி
எதிர்க்கும் வீரமுடையதுவே படை.
6. வீரம், மானம், சிறந்தநடை, தெளிவு
என்ற நான்கும் படைக்கு வேண்டியவை.
7. வந்த போரைத் தடுக்கும் முறையறிந்து
முற்படையைச் செலுத்துவதே சேனையாம்.
8. அழித்தலும் பொறுத்தலும் இல்லை எனினும்
சேனை தோற்றத்தால் சிறப்பு அடையும்.
9. இழிவும் நீங்காத மனக்கசப்பும் வறுமையும்
இல்லை யென்றால் படைவெல்லும்.
10. படையில் வீரர் பலர் இருந்தாலும்
நல்ல தலைவர் இல்லையெனின் பயனில்லை.



XI_Std_Tamil_Unit_6.indd 160 29-01-2025 18:12:01

## 88. பகைத்திறம் தெரிதல்

1. *பகைஎன்னும் பண்பு இலதனை ஒருவன்*
   *நகையேயும் வேண்டற்பாற்று அன்று.*
2. *வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க*
   *சொல்லேர் உழவர் பகை.*
3. *ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்*
   *பல்லார் பகைகொள் பவன்.*
4. *பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடை யாளன்*
   *தகைமைக்கண் தங்கிற்று உலகு.*
5. *தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்*
   *இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.*
6. *தேறினும் தேறா விடினும் அழிவின்கண்*
   *தேறான் பகாஅன் விடல்.*
7. *நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க*
   *மென்மை பகைவர் அகத்து.*
8. *வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்*
   *பகைவர்கண் பட்ட செருக்கு.*
9. *இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
   *கைகொல்லும் காழ்த்த இடத்து.*
10. *உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர்*
    *செம்மல் சிதைக்கலா தார்.*

## 88. பகைத்திறம் தெரிதல் – எளிய உரை

1. பகைக்கும் தீய குணத்தை யாரும்
   விளையாட்டாகவும் விரும்புதல் கூடாது.
2. வில்லுடைய வீரரைப் பகைத்துக் கொண்டாலும்
   சொல்லுடைய புலவரைப் பகைக்காதே.
3. தனியனாக இருந்து பலரைப் பகைப்பவன்
   பித்தனைக் காட்டிலும் இரங்கத்தக்கவன்.
4. பகைவனையும் நண்பனாகக்கருதும் உயர்ந்தவனது
   பெருந்தன்மையால் உலகம் வாழ்கின்றது.
5. தனக்கோ துணையில்லை; பகையோ இரண்டு;
   ஒரு பகையை நல்ல துணையாக்கிக் கொள்க.
6. தெளியினும் தெளியாவிடினும் துன்பநிலையில்
   நம்பி விடாதே பகைத்து விடாதே.
7. துன்பத்தை உணரா நண்பர்க்குச் சொல்லாதே;
   தன் குறைபாட்டைப் பகைவர் முன் காட்டாதே.
8. வகையாகத் தன்வலி பெருக்கிக் கொண்டால்
   மாற்றாரின் ஆணவம் தானே மறையும்.
9. முள்ளுடைய மரத்தை முளையிலே அழிக்க;
   முதிர்ந்துவிடின் வெட்டுவார் கை புண்படும்.
10. பகைப்பவரின் இறுமாப்பை அழிக்காதவர்
    பகைவர் மூச்சுவிட்டாற் போதும், அழிவர்.

## 95. மருந்து

1. *மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
   *வளிமுதலா எண்ணிய மூன்று.*
2. *மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
   *அற்றது போற்றி உணின்.*
3. *அற்றால் அளவுஅறிந்து உண்க அஃதுஉடம்பு*
   *பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.*
4. *அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல*
   *துய்க்க துவரப் பசித்து.*
5. *மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்*
   *ஊறுபாடு இல்லை உயிர்க்கு.*
6. *இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்*
   *கழிபே ரிரையான்கண் நோய்.*
7. *தீயளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்*
   *நோயளவு இன்றிப் படும்.*
8. *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
   *வாய்நாடி வாய்ப்பச் செயல்.*
9. *உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்*
   *கற்றான் கருதிச் செயல்.*
10. *உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று*
    *அப்பால்நாற் கூற்றே மருந்து.*

## 95. மருந்து – எளிய உரை

1. மருத்துவர் கூறும் வாத பித்த கபங்கள்
   கூடினாலும் குறைந்தாலும் நோய் தரும்.
2. முன் உண்டது செரித்தது பார்த்து உண்டால்
   உடம்புக்கு மருந்து எதுவும் வேண்டாம்.
3. செரித்தால் செரிமானம் பார்த்து உண்: அதுவே
   உடல்பெற்றவன் நெடுநாள் வாழும்நெறி.
4. செரித்தது பார்த்து அம்முறை பற்றி
   ஒத்துக்கொள்வதை நன்கு பசித்தபின் உண்க:
5. ஒத்துக்கொள்வதையும் அளவாக உண்டால்
   உயிர்க்கு யாதும் நோய் இல்லை.
6. கழிவறிந்து உண்பவனிடம் உடல்நலம் இருக்கும்;
   நிரம்பத்தின்னியிடம் நோய் குடிகொள்ளும்.
7. பசியளவு தெரியாமல் மிக உண்டால்
   நோய் அளவில்லாமல் வரும்.
8. நோயையும் காரணத்தையும் தீர்க்கும் வழியையும்
   மருத்துவன் அறிந்து வெற்றியாகச் செய்க.
9. நோயாளியின் நிலையையும் நோயின் நிலையையும்
   காலத்தையும் மருத்துவன் அறிந்து செய்க.
10. நோயாளி மருத்துவன் மருந்து துணையாளி
    என்ற நான்கும் மருத்துவத்தின் கூறுகள்.



XI_Std_Tamil_Unit_6.indd 161 29-01-2025 18:12:02

| 107. இரவச்சம் | 107. இரவச்சம் – எளிய உரை |
|---|---|
| 1. *கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும் இரவாமை கோடி உறும்.* | 1. ஒளிக்காது மகிழ்ந்து கொடுக்கும் அன்பரிடத்தும் ஒன்றுபோய்க் கேளாமை கோடி நல்லது. |
| 2. *இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகுஇயற்றி யான்.* | 2. பிச்சையாலும் வாழ ஏற்படுத்தி இருப்பின் படைத்தவன் கெட்டு அலைவானாக. |
| 3. *இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்டது இல்.* | 3. வறுமைத் துன்பத்தை வாங்கித் தீர்ப்பேன் என்பது பெரிய முரட்டுத்தனமாம். |
| 4. *இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக் காலும் இரவுஒல்லாச் சால்பு.* | 4. இல்லாத போதும் இரக்காத நிறைகுணம் வீடு நிறைந்த செல்வத் தன்மை உடையது. |
| 5. *தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது உண்ணலின் ஊங்குஇனிய தில்.* | 5. உழைப்பால் வந்தது கஞ்சித் தண்ணீராயினும் அதனை உண்பதுபோல் சுவை வேறில்லை. |
| 6. *ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்த தில்.* | 6. பசுவுக்குத் தண்ணீர் என்று கேட்டாலும் கேட்ட நாவிற்குப் பெருமை இல்லை. |
| 7. *இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின் கரப்பார் இரவன்மின் என்று.* | 7. கேட்டாலும் ஒளிப்பாரிடம் கேளாதீர் என்று இரப்பாரை எல்லாம் கேட்டுக் கொள்வேன். |
| 8. *இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும் பார்தாக்கப் பக்கு விடும்.* | 8. பிச்சை என்னும் துணையற்ற படகு ஒளிப்பாகிய பாறை மோதின் உடைந்துவிடும். |
| 9. *இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள உள்ளதூஉம் இன்றிக் கெடும்.* | 9. பிச்சையை நினைத்தால் மனம் குலையும்; மறைப்பதை நினைத்தால் மனம் சாகும். |
| 10. *கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர் சொல்லாடப் போஒம் உயிர்.* | 10. கேட்பவருக்குக் கேட்டளவில் போகும் உயிர் மறைப்பவருக்குப் போகாது எங்கிருக்கும். |



XI_Std_Tamil_Unit_6.indd 162 29-01-2025 18:12:02

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- நாள்தோறும் ஒரு திருக்குறளைப் பொருளுடன் பள்ளியின் தகவல்பலகையில் காட்சிப்படுத்தலாம்.
- திருக்குறள் ஒப்பித்தல் போட்டியை வகுப்புவாரியாக நடத்தலாம்.
- திருக்குறள் கலைவிழாக்கள், ஓவியக் கண்காட்சிகள், நாடக விழாக்கள், குறளின் பொருளை வாழ்வியல் அனுபவங்களோடு பொருத்துதல், குறளை இசையமைத்துப் பாடுதல் போன்ற நிகழ்வுகளைப் பள்ளிகளில் ஒருங்கிணைக்கலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகள் சொல்லலாம்; நாடகங்களை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து " வினாடி வினா" நடத்தலாம்.
- பள்ளி சார்ந்த அழைப்பிதழ்கள், பரிசுச் சான்றிதழ்களில் திருக்குறளை அச்சிட்டு வழங்கலாம்.
- உலகப் பொதுமறையாம் திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அன்று.



XI_Std_Tamil_Unit_6.indd 163 29-01-2025 18:12:02

# மேல்நிலை முதலாம் ஆண்டு – பொதுத் தமிழ்

## ஆக்கம்

### ஆலோசனைக் குழு

முனைவர் **இ. சுந்தரமூர்த்தி,**
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் **சி. சுப்பிரமணியன்,**
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் **கி. நாச்சிமுத்து,**
மேனாள் பேராசிரியர், மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் **வீ. அரசு,**
மேனாள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

### மேலாய்வாளர் குழு

முனைவர் சிற்பி **பாலசுப்பிரமணியம்,** மேனாள் தமிழியல்
துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

முனைவர் **மு. சுதந்திரமுத்து**
இணைப்பேராசிரியர், (ப.நி.), மாநிலக் கல்லூரி, சென்னை.

திரு **பிரபஞ்சன்,** எழுத்தாளர், புதுவை.

முனைவர் **பா. மதிவாணன்,** தமிழ்த்துறை தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

திரு. **மா. இராமகிருட்டினன்,** முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

### பாட வல்லுநர் குழு

முனைவர் **க. துரையரசன்,** தேர்வு நெறியாளர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

முனைவர் **யாழ் சு. சந்திரா,** இணைப்பேராசிரியர்,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை

முனைவர் **த. விஷ்ணுகுமரன்,** உதவிப் பேராசிரியர்,
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்

முனைவர் **கி. பார்த்திபராஜா,** உதவிப் பேராசிரியர்,
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்

முனைவர் **தி. குமார்,** உதவிப் பேராசிரியர்,
அரசு கலைக் கல்லூரி, சி. முட்லூர், சிதம்பரம்

முனைவர் **க. பலராமன்,** உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை.

முனைவர் **தி. இராஜரெத்தினம்,** ஆய்வாளர்,
பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, புதுச்சேரி

### பாடநூல் உருவாக்கக் குழு

திரு. **சி. இராஜன்,** முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கோவை.

திரு. **ஆ. டேவிட்,** முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராமநாதபுரம்.

முனைவர் **தி. பரமேசுவரி,** தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, மேலபுலம், வேலூர்.

திரு. **கோ. சுந்தர்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, திருநின்றவூர், திருவள்ளூர்.

திரு. **சு. சுந்தரராஜன்,** தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஜக்கல், திருவண்ணாமலை.

திரு. **அ. செந்தில்குமரன்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, செந்நீர்க்குப்பம், திருவள்ளூர்.

செல்வி **த. சாவித்ரி,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, முத்தூர், திருப்பூர்.

திரு. **பி. இராஜேஷ் கண்ணன்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, தும்பல், சேலம்.

திரு. **ரெ. மகேந்திரன்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஈசநத்தம், கரூர்.

திரு. **யூ. ஆசைமணி,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, அல்லிநகரம், சிவகங்கை.

திருமதி **சூ. லூர்துமேரி,** முதுநிலை ஆசிரியர்,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.

திரு. **சி. பார்த்திபன்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சோளிங்கர், வேலூர்.

திரு. **கோ. கலைச்செல்வன்,** முதுநிலை ஆசிரியர்,
எம்.ஆர்.ஜி. அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வி.சத்திரம், ஈரோடு.

திரு. **வெ. இராமகிருஷ்ணன்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, அரியலூர்.

முனைவர் **என். மைதிலி** தலைமை ஆசிரியர் (ஓய்வு)
எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அண்ணாநகர், சென்னை.

முனைவர் **இரா. ரமேஷ்,** முதுநிலை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, கண்ணாட்டு விளை, கன்னியாகுமரி.

## கலை மற்றும் வடிவமைப்புக் குழு

### வரைபடம்

**க.த. காந்திராஜன்,** ஆய்வு வளமையர்
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.

**பொ. வள்ளிநாயகம்,** ஓவிய ஆசிரியர்,
ஸ்ரீ மந்திரமூர்த்தி மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.

**மு. விசுவேசுவர ஆசிவேல் குமரன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம்.

**கா. புகழேந்தி,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

**அ. ஜேம்ஸ்பாண்ட்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, அரசர்குளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை.

**க. பாலசண்முகம்,** கோவை

**ஜேசுநாதன்,** ஓவியர், சென்னை

**க. சந்திவீரன்,** அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

**வெ. கார்த்திகேயன்,** அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

மாணவர்கள், அரசு கவின் கலைக்கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்

### நன்றி

ஓவியர்கள்
**மணியன் செல்வன்**
**ட்ராட்ஸ்கி மருது**
**கிருஷ்ணாகுறும்பர்** வெள்ளரிக்கோம்பை

### வரைகலை & வடிவமைப்பு

பழையவலம் **பா. இராமநாதன்,** சென்னை.
**சிவக்குமார்,** சென்னை

### In-House - QC

**கோபு ராசுவேல், ப அருண் காமராஜ்**
**ஜெரால்டு வில்சன், சி. பிரசாந்த்**
**மனோகர் இராதாகிருஷ்ணன்**

### அட்டை வடிவமைப்பு

**கதிர் ஆறுமுகம், சென்னை.**
**முன்அட்டை புகைப்படம் – சக்தி குமார், புதுக்கோட்டை**

### ஒருங்கிணைப்பு

**ரமேஷ் முனிசாமி**

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **நா. அருள்முருகன்,** இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6.

முனைவர். **ப. சரவணன்,** முதுகலை ஆசிரியர்,
சென்னை மேல்நிலைப் பள்ளி, அயனாவரம், சென்னை.

### ஒருங்கிணைப்பு

முனைவர் **க.சு. சங்கீதா,** உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

### பணிவாய்ப்பு வழிகாட்டல்

முனைவர் **தே. சங்கர சரவணன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

### கணினித் தொழில்நுட்பம்

திரு **இரவிக்குமார்,** விரிவுரையாளர்,
மா.க.ஆ.ப.நி, சென்னை.

செல்வி **த. ரேவதி,** பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

### ஒருங்கிணைப்பு உதவி & தட்டச்சர்

திருமதி **டி.தே. ஷர்மிளா,** பட்டதாரி ஆசிரியர்
அரசு மேனிலைப்பள்ளி, மோசூர், வேலூர்.

திருமதி. **ப. குமுதா,**
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



XI_Std_Tamil_Unit_6.indd 164 29-01-2025 18:12:02